**உள்ளே...**


| | | |
|---|---|---|
| 1. | ஒன்பதாவது திசை! | 5 |
| 2. | என் இனிய இன்னலே! | 103 |
| 3. | சொர்க்கத்தின் சாவி | 206 |


* * *

# ஒன்பதாவது திசை!

## 1

திருக்கருகாவூர் ரயில்வே ஸ்டேஷனில் பாசஞ்சர் ரயில் நின்ற பொழுது ராத்திரியும், சாயந்தரவேளையும் கைகோத்துக் கொண்டிருந்த ஏழு மணி. ரயிலின் கடைசி கம்பார்ட்மெண்டான லேடீஸ் கம்பார்ட்மெண்ட்டிலிருந்து கையில் ஒரு சின்ன சூட்கேஸோடு அந்த செம்மண் பிளாட்பாரத்தில் உதிர்ந்தாள் பூவிழி. ஸ்டேஷன் ஏதோ ஒரு ஹைதர் காலத்துச் சமாச்சாரம் போல் அரதப் பழசாய்த் தெரியும். அஸ்பெஸ்டாஸ் வேய்ந்த ஒரு சிறிய ஷெட்டுக்குள் புகை படிந்த ட்யூப் லைட் ஒன்று மங்கிப் போன வெளிச்சத்தோடு எரிந்து கொண்டிருந்தது.

பூவிழி ஸ்டேஷனின் நுழைவு வாயிலை நோக்கி மெல்ல நடை போட்டாள். இருபத்து மூன்று வயதுப் பூவிழி பத்துமணி நேர ரயில் பயணத்திலும் அழகாய்த் தெரிந்தாள். உடுத்தி யிருந்த வெளிர் மஞ்சள் புடவையும் அதே வண்ண ஜாக்கெட்டும் அவளுடைய உடம்பின் சந்தன நிறத்துக்கு ஒத்துப் போயிருந்தது.

அஸ்பெஸ்டாஸ் ஷெட்டுக்குக் கீழே நின்றிருந்த அந்த வயதான ஸ்டேஷன் மாஸ்டர் பச்சை விளக்கைக் காட்டி ரயிலை அனுப்பிவிட்டு, அவரே டிக்கெட் கலெக்டராகவும் மாறிப் பூவிழியின் கையில் இருந்த டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டார். தன்னுடைய அறையை நோக்கி நகர முயன்றவரை, "ஸார்..." என்று குரல் கொடுக்க, அவர் நின்றார்.

"என்னம்மா?"

"சித்தர்காடு இங்கிருந்து எவ்வளவு தூரம்?"

"ஏழு... கிலோ மீட்டர்."

"பஸ் இருக்குமா?"

ஸ்டேஷன் மாஸ்டர் தன் மணிக்கட்டை உயர்த்தி வாட்சைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார்.

"ரயில் லேட்டா வந்ததாலே ஆறே முக்கால் மணி பஸ் புறப்பட்டுப் போயிடுச்சு... இனி அடுத்த பஸ் எட்டே முக்கால் மணிக்குத்தான். அதுதான் கடைசி பஸ். இன்னும் ஒண்ணே முக்கால் மணி நேரம் வெயிட் பண்ணணுமே...!" சொன்னவர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கேட்டார்.

"உன்கூட வேற யாரும் வரலையாம்மா...?"

"இல்லை... நான் மட்டும்தான் வந்திருக்கேன்..."

"என்னம்மா... நீ... இப்படியா ஒரு பொண்ணு புறப்பட்டு வர்றது. துணைக்கு யாராவது கூட்டிக்கிட்டு வர வேண்டாம்?"

"அப்படி யாராவது இருந்திருந்தா கூட்டிட்டு வராமே இருந்து இருப்பேனா சார்...?" ஸ்டேஷன் மாஸ்டரிடம் சொல்ல நினைத்து மவுனமானாள் பூவிழி.



"உனக்கு எந்த ஊரம்மா...?"

"சுந்தரபாண்டியம்."

"சித்தர் காட்டில் யார் இருக்காங்க...?"

"எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர்."

"பேரு...?"

"சம்பத்..."

"சம்பத்தா...அவர் என்ன தொழில் பண்றார்?"

"பழங்கால ஓலைச் சுவடிகளை ஆராய்ச்சி பண்றதுக்காக சித்தர் காட்டில் ஒரு வீடு எடுத்துத் தங்கியிருக்கார்."

"சரியான அட்ரஸ் இருக்கா...?"

"இருக்கு... குடலூர் மாரியம்மன் கோயில் தெப்பக் குளத்துக்குப் பக்கத்து வீடு."

ஸ்டேஷன் மாஸ்டர் பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டுப் பூவிழியை ஏறிட்டார்.

"இதோ பாரம்மா... ஊர் முன்ன மாதிரி கிடையாது. எவன் நல்லவன் எவன் கெட்டவன்னு யாரையும் ஜட்ஜ் பண்ண முடியலை. சித்தர் காட்டுக்கு நீ போகணும்னா எட்டே முக்கால் மணி பஸ் வர்ற வரைக்கும் காத்துக்கிட்டிருக்கணும்..."

"ஆட்டோ எதுவும் கிடைக்காதா சார்?"

"இந்த ஊர்ல ஆட்டோ கிடையாது. குதிரை வண்டிதான்."

"அது போதும் சார்."

"வண்டிக்காரனுக யாரும் இந்த நேரத்துல கிடைக்க மாட்டாங்களேம்மா! சூரியன் மறைஞ்சுட்டா போதும்,

எல்லாரும் சாராயக் கடைக்குப் போயிடுவானுக. காலையில் எட்டு மணி பாசஞ்சர் ட்ரெயினுக்குத்தான் வண்டி கட்டிட்டு வருவானுக..."

"அப்படீன்னா எட்டே முக்கால் மணி பஸ் வர்ற வரைக்கும் வெயிட் பண்ணிட்டு இருக்க வேண்டியதுதானா...?"

"நீ அந்த பெஞ்ச்ல போய் உட்காரம்மா. நான் வண்டி ஏதாவது ஏற்பாடு பண்றேன்..."

பூவிழி ஒரு வேப்ப மரத்துக்குக் கீழே இருந்த சிமெண்ட் பெஞ்சில் போய் உட்கார்ந்து கொள்ள, ஸ்டேஷன் மாஸ்டர் ஆள் இல்லாத ப்ளாட்பாரத்தைப் பார்வையில் கழுவிப் பார்த்துவிட்டு, தொலைவில் குழாயடியில் குளித்துக் கொண்டிருந்த ஒருவனை நோக்கிக் குரல் கொடுத்தார்.

"டேய்... காளிச்சாமி..."

அந்த காளிச்சாமி பதிலுக்குக் குரல் கொடுத்தான்.

"அய்யா..."

"இந்நேரத்துக்கு என்னடா குளியலு...?"

"காத்தால குளிக்கலைங்கய்யா..."

"சரி... சீக்கிரமா குளிச்சிட்டு வா... ஒரு வேலை இருக்கு..."

"ரெண்டு நிமிஷத்துல வந்துடறேன்ய்யா..."

ஸ்டேஷன் மாஸ்டர் வெள்ளைக் கோட்டைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு பூவிழிக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்.

"என்னோட பொண்ணுக்கு உன்னோட வயசுதாம்மா இருக்கும். பெங்களூர்ல கட்டிக் கொடுத்திருக்கு. மாப்பிள்ளைக்கு ஒரு கம்ப்யூட்டர் கம்பெனியில் வேலை."



"சார்! உங்க பேரைத் தெரிஞ்சுக்கலாமா?"

"லட்சுமி நாராயணன்... இந்த எஸ்.எம். போஸ்டில் முப்பது வருஷம் குப்பை கொட்டியாச்சு. இன்னும் ரிடையர் மெண்ட்டுக்கு நாலு வருஷம் இருக்கு..."

"இந்த ஸ்டேஷன்ல எத்தனை வருஷமா இருக்கீங்க ஸார்?"

"ரெண்டரை வருஷமா..."

"உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கலாமா சார்?"

"கேளும்மா..."

"சித்தர்காடு கிராமத்தில் ஏடு பார்த்து... அதாவது பழங்கால ஓலைச் சுவடிகளைப் படிச்சு ஒருத்தர்க்குப் பலன் சொல்றது ரொம்பவும் பிரசித்தம் இல்லையா...?"

"ஆமா... அந்தக் கிராமத்தில் இருக்கிற பல பேர்க்கு அதுதான் தொழில். சிவகாசிக்குத் தீப்பெட்டி மாதிரி சித்தர் காட்டுக்கு ஓலைச் சுவடி."

"சார்... இதெல்லாம் உண்மையா?"

"எது...?"

"இந்தப் பழங்கால ஓலைச் சுவடிகளைப் பார்த்து ஒருத்தர்க்குப் பலன் சொல்றது."

ஸ்டேஷன் மாஸ்டர் புன்னகைத்தார். "கணக்கு வாத்தியார் சரியானவராக இருந்தால் அவர் சொல்லிக் கொடுக்கிற கணக்கும் சரியாயிருக்கும். இந்த ஏடு பார்க்கிற தொழிலில் சரியான கணக்கு வாத்தியார் யாரு... தப்பான கணக்கு வாத்தியார் யாருன்னு கண்டுபிடிக்கிறதுதான் கஷ்டம். எல்லாத் தொழில்களிலும் போலிகள் இருக்கிற மாதிரி இந்த ஏடு பார்க்கிற தொழிலிலும் போலிகள் இருக்காங்க...."

''அப்படின்னா ஓலைச் சுவடிகள் உண்மை. அதைப் பார்க்கிற ஆட்களில்தான் போலிகளும் உண்மைகளும் கலந்து இருக்காங்க?''

''ஆமா...''

''நீங்க ஏடு பார்த்து இருக்கீங்களா சார்?''

''ம்... இந்த ஊருக்கு வந்த புதுசுலேயே பார்த்துட்டேன். சித்தர் காட்டில் அம்பலவாண ஸ்வாமிகள்ன்னு ஒருத்தர். என்னோட கட்டை விரல் ரேகையைப் பார்த்துட்டு அஞ்சு நிமிஷத்துக்குள்ளே என்னோட ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டுபிடிச்சுப் படிக்க ஆரம்பிச்சுட்டார்.''

''அவர் சொன்னது சரியாய் இருந்ததா...?''

''சரியாய் இருந்தது. என்னோட பொண்ணுக்கு வெளி மாநிலத்தில்தான் மாப்பிள்ளை அமையும்ன்னு சொன்னார். அதே மாதிரி பெங்களூரில்தான் மாப்பிள்ளை அமைஞ்சுது. என்னோட ஐம்பத்து மூணாவது வயதில் என்னோட மனைவி உயிரோடு இருக்க மாட்டாள்னு சொன்னார். அவர் சொன்னது போலவே என்னுடைய 53 வயது முடிய பத்து நாள் இருக்கும் போது என்னுடைய மனைவி உயிரோடு இல்லை...''

''ஸாரி சார்...''

''இதுல ஸாரி சொல்ல என்னம்மா இருக்கு...? எல்லாரும் ஒரு நாளைக்குப் போய்ச் சேர வேண்டியவங்கதான். அவளுக்கு மொதல்ல பஸ் கிடைச்சிடுச்சு. போய்ச் சேர்ந்துட்டா! வீ... ஆர்... வெயிட்டிங் ஃபார் த நெக்ஸ்ட் பஸ்... என்னோட வாழ்க்கையில் ஏடுகள் சொன்ன ரெண்டு விஷயங்களும் நடந்து முடிந்தது.'' ஸ்டேஷன் மாஸ்டர் சிரித்துச் சொல்லிக் கொண்டிருக்கும்



போதே காளிச்சாமி குளித்து முடித்துப் பளிச்சென்ற வேஷ்டி சட்டையில் வந்தான்.

''அய்யா...''

''காளிச்சாமி! உனக்கு இப்போ வேற வேலை ஏதாவது இருக்கா...?''

''சொல்லுங்கய்யா... என்ன விஷயம்...?''

''இந்தப் பொண்ணு நம்ம ஊருக்குப் புதுசு. 'சித்தர்காடு' கிராமத்துக்குப் போகணுமாம். உன்னோட மாட்டு வண்டியில் கொண்டு போய் விட்டுட்டு வந்துடறியா...?''

''அய்யா...! வந்து...''

''என்ன காளிச்சாமி...?''

''உடனே கிளம்பணுமாய்யா?''

''ஏன்... என்ன விஷயம்...?''

''வண்டி பட்டறையில் இருக்கு... போய் ரெடி பண்ணிட்டு வர அரை மணி நேரம் பிடிக்கும்...''

''பரவாயில்லை... போய்க் கொண்டா...''

''அப்படின்னா சரிங்கய்யா...''

காளிச்சாமி கும்பிடு ஒன்றைப் போட்டுவிட்டு வேகமாய் நகர்ந்து போக, ஸ்டேஷன் மாஸ்டர் பூவிழியை ஏறிட்டார்.

''நீ வேணும்ன்னா என்னோட ரூம்ல வந்து உட்காரம்மா.''

''வேண்டாம் சார்... இங்கேயே காற்றோட்டமாயிருக்கு...''

''சரி...! ப்ளாஸ்க்ல காப்பி இருக்கு. சாப்ட்றியாம்மா...?''

''எனக்கு டீ காப்பி சாப்பிட்டுப் பழக்கம் இல்லை சார்...''

''நல்ல பொண்ணும்மா... நீ!''

''சார்! மறுபடியும் அந்த ஏடுகள் விஷயத்தைப் பத்தி பேசறதா நினைக்க வேண்டாம்... ஏடுகள் சொல்லியிருந்தபடி உங்க வாழ்க்கையில் நடந்த அந்த ரெண்டு சம்பவங்களும் ஏன் காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாய் இருக்கக் கூடாது...?''

ஸ்டேஷன் மாஸ்டர் சிரித்தார்.

'அதாவது நீ நம்பலை...?''

''அப்படியும் வெச்சுக்கலாம் சார்.''

''இதோ பாரம்மா...! என்னைப் பொறுத்தவரைக்கும் ஏடுகள் என்பது உண்மை. அதை முறைப்படி கையாளத் தெரிந்த நபர்கள்கிட்டே போனால்தான் உண்மையான பலன்கள் கிடைக்கும். உடம்பில் இருக்கிற நோய்கள் குணமாகணும்னா ஒரு ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் கிட்டே போற மாதிரிதான் இதுவும்.''

''நீங்க சித்தர் காட்டில் யார்கிட்டே 'ஏடு' பார்த்தீங்க சார்...?''

''அம்பலவாண ஸ்வாமிகள்.''

''அவரை நான் பார்க்க முடியுமா...?''

''தாராளமா பார்க்கலாமே... சித்தர் காடு கிராம எல்லையிலேயே அம்பலவாண ஸ்வாமிகளின் ஆஸ்ரமம் இருக்கு... ஸ்வாமிகள் கிட்டே என்னோட பேரைச் சொல்லம்மா... ஸ்பெஷலா கவனிச்சுக்குவார்.''

ஸ்டேஷன் மாஸ்டர் சொல்லிக் கொண்டிருந்த போது பக்கவாட்டில் அந்த உறுமல் சத்தம் கேட்டது.



''ர்ர்ர்ர்ர்ர்ர்...''

இருவரும் திரும்பினார்கள்.

பதினைந்து அடி தொலைவில் அந்தக் கறுப்பு நாய் நின்றிருந்தது. ஈறுகள் தெரியக் கூர்மையான பற்களைக் காட்டிக் கொண்டு பூவிழியையே உக்கிரமாய்ப் பார்த்தபடி உறுமியது.

''ர்ர்ர்ர்ர்ர்ர்ர்...''

ஸ்டேஷன் மாஸ்டர் சிநேகமாய் நாயைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

''டேய்... ப்ளாக்கி...! சும்மாயிரு...!''

நாய் ஸ்டேஷன் மாஸ்டரின் உத்தரவை அலட்சியப் படுத்திவிட்டு மீண்டும் பூவிழியைப் பார்த்து உறுமியது. இரண்டடி முன்னால் வந்தது.

''ர்ர்ர்ர்ர்ர்ர்...''

பூவிழி லேசாய் முகம் வியர்த்துப் போய் ஸ்டேஷன் மாஸ்டர்க்குப் பின்னால் ஒண்டிக் கொள்ள, அவர் நாயை விரட்டினார்.

''பிளாக்கி! நீ போகமாட்டே?'' சொன்னவர் கீழே குனிந்து கல் ஒன்றைப் பொறுக்கி நாயின் காலுக்குக் குறிவைத்து அடிக்க, அது சாதுர்யமாய் விலகி நின்று கொண்டு தீவிரமாய்க் குரைத்தது.

''ப்ளாக்கி யாரையும் பார்த்து இப்படிக் குரைக்காதே! இன்னிக்கு என்ன அதிசயமா குரைக்குது...?''

ஸ்டேஷன் மாஸ்டர் மறுபடியும் கல் ஒன்றைப் பொறுக்கி விட்டெறிந்தார். இந்தத் தடவை கல் நாயின் முன் காலைப் பதம்

பார்க்க, அது அந்த வலிக்காக ஒரு விநாடி கத்திவிட்டு மறுபடியும் பூவிழியைப் பார்த்து மூர்க்கமாகக் குரைக்க ஆரம்பித்தது. அவளை நெருங்கி வரவும் முயற்சித்தது.

ஸ்டேஷன் மாஸ்டர் பூவிழியிடம் வியப்பு பரவிய முகத்தோடு திரும்பினார். "இந்த நாய் கடந்த ரெண்டு வருஷ காலமா இந்த ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்துலதான் சுத்திக்கிட்டு திரியுது. ரொம்பவும் சாதுவான நாய். நரிக் குறவங்களைப் பார்த்தாக்கூட குரைக்காது. போட்டதைத் தின்னுட்டு எங்கேயாவது படுத்துக் கிடக்கும். இன்னிக்கு என்னமோ தெரியல்லேம்மா... உன்னைப் பார்த்துக் குரைக்குது. நீ அந்த சிக்னல் ரூமுக்குள்ளே போய் உட்காரம்மா. நான் நாயைத் துரத்திட்டு வர்றேன்..."

பூவிழி கையில் வைத்திருந்த சூட்கேஸோடு பக்கத்தில் இருந்த சிக்னல் ரூமை நோக்கிப் போக, ஸ்டேஷன் மாஸ்டர் வேலியோரமாய்க் கிடந்த ஒரு இரும்புக் குச்சியை எடுத்துக் கொண்டு நாயை நோக்கிப் போனார்.

பூவிழி வியர்த்த உடம்போடு சிக்னல் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள். இருதயம் படபடத்தது.

'நாய் ஏன் குரைக்கிறது...?'

தன் கையில் வைத்திருந்த சூட்கேஸைப் பயமாய்ப் பார்த்தாள். 'இந்த சூட்கேஸுக்குள் இருக்கும் மண்டை யோட்டை நாய் 'ஸ்மெல்' பண்ணியிருக்குமோ...?'

'இருக்கலாம்... நாய்களுக்குத்தான் மோப்ப சக்தி அதிகமாயிற்றே...!'



பூவிழி வெளியே எட்டிப் பார்த்தாள். ஸ்டேஷன் மாஸ்டர் நாயை விரட்டிக் கொண்டிருக்க... அது விடாமல் குரைத்தது.

சில விநாடி யோசனைக்குப் பின் பூவிழி தன் இடுப்பில் பத்திரப்படுத்தி வைத்திருந்த சாவியை எடுத்து சூட்கேஸைத் திறந்தாள்.

உள்ளே-

அடுக்கி வைத்திருந்த சேலைகளுக்கும் உள்ளாடை களுக்கும் நடுவில் ஒரு மனித மண்டையோடும் ஒரு பழங்கால ஓலைச் சுவடியும் தெரிந்தது.

அவசர அவசரமாய் அவைகளை இன்னும்நன்றாக உள்ளே தள்ளிய பூவிழி சேலைகளையும், உள்ளாடைகளையும் அதன் மேல் பரப்பி வைத்து சூட்கேஸை மூடினாள். பூட்டினாள். நாயின் குரைப்புச் சத்தம் வெளியே இன்னமும் கேட்டுக் கொண்டிருந்தது.

## 2

சென்னை. காலை பதினோரு மணி.

அமைச்சர் வள்ளல் பெருமான் பங்களாவில் அவருடைய ஏ.சி. கசியும் அறை. பளீர் வெள்ளையில் கதர் வேஷ்டியும் கதர் சர்ட்டும் அணிந்திருந்த அமைச்சருக்கு அறுபதைத் தாண்டிய வயது. ஐம்பது வயதில் விழ ஆரம்பித்த வழுக்கை கடந்த பத்து வருஷ காலத்தில் தன் பரப்பளவை விரிவு செய்திருந்த காரணத்தால் அமைச்சர் பெரிதாக விபூதிப் பட்டையைப் போட்டு நடுவே குங்குமப் பொட்டு வைத்திருந்தார். மூன்று வருஷ காலமாய்த் தமிழ் நாட்டின் அறநிலையத் துறை அமைச்சர்.

அமைச்சரின் பி.ஏ. நாகப்பன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த வள்ளல் பெருமான் நிமிர்ந்தார்.

"எங்கேய்யா போயிட்டே...?"

"இன்னிக்கு பொதுமக்கள் கிட்டேயிருந்து மனு வாங்கற நாள் ஸார். ஏகப்பட்ட கும்பல். எல்லாரையும் ஒழுங்கு படுத்திட்டு வர்றேன்."

"எத்தனை பேர் இருப்பாங்க...?"

"நூத்து அம்பதுக்குக் குறையாது சார்."

"பொதுமக்களா... கட்சிக்காரங்களா?"

"பொதுமக்கள் சார்... கட்சிக்காரங்க 50 பேர் தனியா நிக்கிறாங்க...அது தவிர..."

"சொல்லய்யா..."

"தமிழ்நாடு கோயில் பூசாரிகள் சங்கம், அர்ச்சகர்கள் சங்கத்தைச் சேர்ந்த இருபது பேர் உங்களைப் பார்த்துப் பேசறதுக்காக காலையில் ஒன்பது மணியிலிருந்து வெயிட் பண்றாங்க."

"என்ன விஷயம்ன்னு கேட்டியா...?"

"கேட்டேன் சார்... மண்டலக் கமிஷன் பரிந்துரை செய்தபடி போன மாசம் கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு அவங்களுக்குக் கிடைக்கலையாம். அதைப்பத்தி உங்ககிட்டே பேசணுமாம்..."

"என்கிட்டே பேசி என்னய்யா பிரயோஜனம்... அவங்க கிட்டே சி.எம்.மைப் போய்ப் பார்க்கச் சொல்லு..."



"சொன்னேன் சார்."

"என்ன சொன்னாங்க...?"

"சி.எம். கடவுள் நம்பிக்கையில்லாதவராம். நீங்க கடவுள் நம்பிக்கை உள்ளவராம். உங்ககிட்டே சொன்னாத்தான் காரியம் நடக்குமாம்." பி.ஏ. பேசிக் கொண்டிருக்கும் போதே கதவைத் தட்டிவிட்டுக் குடும்ப டாக்டர் சீனிவாசன் உள்ளே வந்தார். கையில் மெடிக்கல் கிட். வள்ளல் பெருமான் புன்னகைத்தார்... பெரிதாய்.

"வாங்க டாக்டர்." நாற்காலியைக் காட்ட, டாக்டர் உட்கார்ந்தபடியே கேட்டார்.

"பி.பி. மாத்திரை சாப்பிட்டீங்களா?"

"ம்... சாப்பிட்டேன்... டாக்டர்."

"சுகர் மாத்திரை?"

"ம்... எடுத்துகிட்டேன்..."

"மூட்டு வலிக்கு ஆயின்மெண்ட் போட்டுக்கிட்டீங்களா?"

"இனிமேத்தான் போட்டுக்கணும், டாக்டர்."

"காலையில் சாப்பிடறதுக்கு முன்னாடி ப்ரஷர் பார்த்தீங்களா...?"

"ம்... பார்த்தேன். நார்மல். சுகர் மட்டும் குறையலை."

"எவ்வளவு...?"

"முந்நூறு..."

"ரொம்ப அதிகம். நீங்க விருந்துகளுக்குப் போறதைத் தவிர்க்கணும்... அப்படியே போனாலும் ஸ்வீட் தலை மேல் கையை வைக்கவே கூடாது."

''டாக்டர் நான் ஸ்வீட்டைச் சாப்பிட்டு ஆறு மாசத்துக்கு மேல இருக்கும்... கடைசியா உங்க வீட்ல நடந்த ஃபங்ஷன் போது சாப்பிட்டது. அதுவும் உங்க பர்மிஷனோடு...''

பி.ஏ. நாகப்பன் குறுக்கிட்டார்.

''டாக்டர்! நான் ஒரு விஷயத்தைச் சொல்லலாமா?''

''என்ன...?''

''மினிஸ்டர் ராத்திரி நேரங்களில் சரியா தூங்கறதே கிடையாது. நான் எப்ப கண்ணை முழிச்சுப் பார்த்தாலும் அவரோட அறையில் லைட் எரிஞ்சுட்டு இருக்கும்...''

'அப்படியா?' என்கிற மாதிரி வள்ளல் பெருமானைப் பார்த்தார் டாக்டர். அமைச்சர் புன்னகைத்தார்.

''தூக்கம் வரலைன்னா என்ன பண்றது, டாக்டர்? கொஞ்ச நேரம் டி.வி. பார்ப்பேன். இல்லேன்னா ஆன்மீகம் சம்பந்தப் பட்ட புக்ஸ் படிச்சிட்டிருப்பேன்.''

''உங்களுக்கு ஏன் தூக்கம் வர்றதில்லை? தூக்கம் வரலைன்னா ஒரு 'ரெஸ்டிங்' மாத்திரை போட்டுக்க வேண்டியதுதானே...?''

''ஒரு மாத்திரையில்லை டாக்டர்... ரெண்டு மாத்திரை போட்டும் தூக்கம் வர்றது இல்லை... கடந்த ஆறு மாச காலமா டிபார்ட்மெண்ட்டில் ஏகப்பட்ட பிரச்னைகள். ஒவ்வொரு கோயிலிலும் ரெண்டு ஜாதி கோஷ்டிகள். இந்த ரெண்டு கோஷ்டிகளைச் சேர்ந்த தலைவர்களை வரவழைச்சுப் பேசி சமாதானப் படுத்தறதுக்குள்ளே எனக்கு பி.பி. ஏறிடும்.''

டாக்டர் சிரித்தார்.



''நீங்க ஒரு காரியம் பண்ணுங்க...''

''சொல்லுங்க...''

''ஒரு மாசம் இந்த அமைச்சர் போஸ்ட்டுக்கு 'டாட்டா' சொல்லிட்டு அமெரிக்காவில் இருக்கிற உங்க பையன் ரிஷியோடு ஜாலியா இருந்துட்டு வாங்களேன்.''

''அடுத்த வாரம் சட்டசபை கூடுது டாக்டர். எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுட்டு வரப்போறதா சொல்லிகிட்டு இருக்காங்க. இந்த நேரத்துல நான் சென்னையை விட்டு அசைய முடியாது.''

வள்ளல் பெருமான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டீபாயின் முனையில் உட்கார்ந்திருந்த நோகியா செல்போன் பச்சை நிறமாய் ஒளிர்ந்து கூப்பிட்டது.

பி.ஏ.வைப் பார்த்தார் அமைச்சர். ''செல்லை எடுத்து யார்ன்னு பாரய்யா... எவனாவது கழுத்தறுப்பு ஆசாமியா இருந்தா நான் முக்கியமான மீட்டிங்ல இருக்கேன்னு சொல்லிடு.''

தலையாட்டிய நாகப்பன் செல்போனை எடுத்துத் தன்னுடைய வலது காதுக்குப் பொருத்தினார்.

''எஸ்.''

''அமைச்சர் இருக்காரா?''

''நீங்க...?''

''நான் இந்திரபூபதி. ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டின் டைரக்டர்...''

''ஒரு நிமிஷம்...'' சொன்ன நாகப்பன், செல்போனை இரண்டு கைவிரல்களாலும் பொத்திக் கொண்டு, வள்ளல்

பெருமாளை ஏறிட்டார். "ஸார்! ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் டைரக்டர் இந்திர பூபதி பேசறார்..."

"கொண்டா..." செல்போனை வாங்கிக் காதுக்கு ஒற்றினார். உற்சாகமாய்க் குரல் கொடுத்தார்.

"சொல்லுங்க இந்திரபூபதி... என்ன விஷயம்?"

"சார்!" மறுமுனையில் இந்திரபூபதி ரகசியம் பேசுகிற தினுசில் கிசுகிசுத்தார். "ஒரு சந்தோஷமான விஷயம் சார்."

"என்ன...?"

"ஒரு வெள்ளை மயில் நம்ம கைக்குக் கிடைக்கப் போகுது."

## 3

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு...

ஸ்டேஷன் மாஸ்டர் சிக்னல் அறைக்குள் ஒரு சிரிப்போடு நுழைந்தார்.

"நாயைத் தொரத்திட்டேன்ம்மா."

பூவிழி சூட்கேஸோடு எழுந்தாள். "என்னால உங்களுக்கு ரொம்பவும் சிரமம் சார்..."

"இதில் என்னம்மா சிரமம்...? எனக்கு என்ன ஆச்சரியம்ன்னா இதுவரைக்கும் யாரையுமே பார்த்துக் குரைக்காத நாய் உன்னை மட்டும் பார்த்து ஏன் குரைக்கணும்...?"

"என்ன இருந்தாலும் நான் அந்நிய மனுஷிதானே?"



"அப்படி அந்நிய மனுஷங்களைப் பார்த்துக் குரைக்கிறதாகயிருந்தா இந்த ஸ்டேஷனுக்கு வர்ற எல்லாரையும் பார்த்துல்ல குரைக்கணும்?"

பூவிழி வலியப் புன்னகைத்தாள்.

"நாய்ப் புத்தி யார்க்கு சார் தெரியும்?"

"இப்ப சொன்னியே... இது சரியான வார்த்தை."

அறைக்கு வெளியே காளிச்சாமியின் குரல் கேட்டது.

"அய்யா...! வண்டி ரெடி...!"

இருவரும் வெளியே வந்தார்கள்.

காளிச்சாமி தலைக்கு முண்டாசு கட்டி, கையில் ஒரு தார்க்குச்சியை வைத்திருந்தான்.

"பொட்டியைக் கொண்டாங்கம்மா."

"பரவாயில்ல...நானே வெச்சுக்கறேன்."

"அட.... கொண்டாங்கம்மா..." வாங்கிக் கொண்ட காளிச்சாமி கேட்டான். "பொட்டி பூட்டியிருக்குல்ல...?"

"ம்..."

ஸ்டேஷனுக்கு வெளியே இருட்டில் அந்த மாட்டு வண்டி நின்றிருக்க, மூன்று பேரும் நடந்தார்கள்.

ஸ்டேஷன் மாஸ்டர் கேட்டார். "சித்தர் காட்டில் எத்தனை நாள் தங்கப் போறேம்மா...?"

"ரெண்டு நாள்."

"மறுபடியும் ஊருக்குப் போக ரயில்வே ஸ்டேஷனுக்கு வருவியா... இல்லை, பஸ்ல போயிடுவியா...?"

''அதை இன்னும் முடிவு பண்ணலை சார்.''

''என்னைக் கேட்டா ரயில் பயணம் வேண்டாம்னுதான் சொல்லுவேன். ஏன்னா இந்த மார்க்கத்துல ஓடற எல்லா ரயிலும் லேட்டுதான்.''

ஸ்டேஷனுக்கு வெளியே வந்தார்கள். அந்த மாட்டு வண்டி காத்துக் கொண்டிருந்தது. பூவிழி சூட்கேஸோடு வண்டிக்குள் ஏறி உட்கார ஸ்டேஷன் மாஸ்டர் காளிச்சாமியிடம் சொன்னார்.

''பத்திரமா ஓட்டிக்கிட்டுப் போடா. மாட்டை ரொம்பவும் விரட்டாதே...''

''சரிங்கய்யா...''

பூவிழி கூப்பிய கைகளோடு ஸ்டேஷன் மாஸ்டரை ஏறிட்டாள். ''சார்! நீங்க பண்ணின இந்த உதவியை நான் என்னிக்குமே மறக்க மாட்டேன்...''

''இதெல்லாம் ஒரு உதவியாம்மா...? நீ என்னோட பொண்ணு மாதிரி... போய்ட்டு வாம்மா...''

வண்டி கிளம்பியது.

ஒரு நிமிஷ நேரம் மட்டுமே வெளிச்சமாயிருந்த பாதை பின் இருட்டுக்குள் விழுந்துவிட வண்டி கரடு முரடான பாதையில் ஏற்ற இறக்கங்களோடு ஓடியது. ரோட்டின் இரண்டு பக்கமும் பனை மரங்கள் விடாப்பிடியாய் வர தூரத்தில் பென்சிலால் அவுட்லைன் போட்ட மாதிரி கோயில் கோபுரமும் அதன் உச்சியில் நீல நிற விளக்கும் ஒளிர்ந்தது.

''அதென்ன கோயில், காளிச்சாமி?''

''கர்ப்ப ரட்சாம்பிகை கோயிலம்மா...''



''பெரிய கோயில் மாதிரி தெரியுது...''

''ஆமாங்கம்மா... சக்தி வாய்ந்த அம்மன்... குழந்தை இல்லாதவங்க இந்தக் கோயிலுக்கு வந்துட்டுப் போனா அடுத்த வருஷம் சர்வ நிச்சயமா குழந்தை உண்டு. நீங்க பகல் நேரத்துல வந்திருந்தா கோயிலுக்குப் போய்ட்டுச் சித்தர் காட்டுக்குப் புறப்பட்டிருக்கலாம்...''

''திரும்பி வரும்போது பார்க்கலாம்...''

''அம்மா... உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா?''

''இல்லை...'' சொல்லிக் கொண்டே ரோட்டைத் திரும்பிப் பார்த்த பூவிழி லேசாய்த் திடுக்கிட்டாள்.

ரோட்டின் இருட்டில் நூறு மீட்டர் தொலைவில் இரண்டு பச்சை விழிகள் பாதரசம் போல் மின்னின. வேகமாய் நகர்ந்தன. பூவிழியின் முகம் திடுமென்று வியர்த்தது.

''கா...ளி...ச்...சா...மி...!''

''என்னங்கம்மா...?''

''ரோட்டைக் கொஞ்சம் திரும்பிப் பாரு.''

அவன் வண்டியின் வேகத்தைக் குறைத்துத் திரும்பிப் பார்த்தான். பார்வை ரோட்டின் இருட்டை ஊடுருவியது. அவனுடைய கண்களுக்கு எதுவும் புலப்படாமல் போகவே குழப்பமாய்ப் பூவிழியின் முகத்தை ஏறிட்டான்.

''ரோட்ல என்னம்மா இருக்கு...?''

பூவிழியின் இடது கை உயர்ந்து நூறு மீட்டர் தூரத்துக்கு அப்பால் அசையும் அந்த இரண்டு பச்சை நிற விழிகளைக் கலக்கத்தோடு காட்டியது.

"அ... அது... என்... என்ன...?"

காளிச்சாமி வண்டியை நிறுத்திவிட்டு அந்தப் பச்சை விழிகளையே உன்னிப்பாய்ப் பார்த்தான். விழிகள் இப்போது குதித்துக் குதித்து வந்தன.

"என்ன காளிச்சாமி அது...?"

"ஏதோ நாய் ஓடி வர்ற மாதிரி தெரியுதும்மா..."

"எ... எ... என்னது... நாயா...?"

"ஆமாம்மா..."

பச்சை விழிகள் இருட்டில் குதித்துக் குதித்து வேகமாய் வண்டியை நெருங்கிக் கொண்டிருந்தன.

பூவிழியின் முதுகுத் தண்டு வடம் உறைந்து போயிற்று.

## 4

சென்னையின் ஈஸ்ட் கோஸ்ட் கடற்கரைச் சாலையில் சிப்ரஸ் மரங்களுக்கும் தேக்கு மரங்களுக்கும் மத்தியில் டால்கம் பௌடரில் குளித்த மாதிரியான தினுசில் அந்த பங்களா உட்கார்ந்திருக்க, பங்களாவைச் சுற்றிலும் பச்சைப் புல் கம்பளம். கோட்டைக் கதவு மாதிரியான காம்பவுண்ட் கேட் அருகில் ரோமானிய சிப்பாயைப் போல் ஒரு கூர்க்கா.

தூரத்தில் காரின் மியூசிகல் ஹார்ன் ஒலி கேட்டதுமே கூர்க்காவிடம் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டது. அவனுடைய முதுகெலும்பு நிமிர்ந்தது. காம்பவுண்ட் கேட்டை அவசர அவசரமாய்த் திறந்து வைத்தான். அடுத்துச் சில விநாடிகளில் டாட்டா சியாரா ஒன்று கடல் வண்ணத்தில் மிதமான வேகத்தில் வந்து கேட்டுக்குள் நுழைந்து உள்ளே போய் நூறு மீட்டர் தூரம் கான்க்ரீட் ரோட்டில் வழுக்கி போர்டிகோவுக்குள் போய் நுழைந்தது.



காரினின்றும் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் டைரக்டர் இந்திரபூபதி தொப்பையும் வழுக்கையுமாய்க் கையில் ஒரு பெரிய சூட்கேஸோடு இறங்கினார். போர்டிகோபடிகளில் ஏற ஏற நாகப்பன் எதிர்கொண்டார்.

"வாங்க சார்..."

"அமைச்சர் ஃப்ரீயா இருக்காரா?"

"என்ன சார் இது... அவர் உங்களுக்காகத்தானே வெய்ட் பண்ணிட்டிருக்கார். வாங்க... வாங்க..."

இருவரும் உள்ளே போனார்கள். சென்ட்ரலைஸ்ட் ஏ.ஸி.யில் பங்களா ஒரு இன்ஸ்டன்ட் ஊட்டியாய் மாறியிருந்தது.

"சட்டசபை எப்ப கூடுது, நாகப்பன்?"

"அடுத்த வாரம் சார்..."

"எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவாங்க போலிருக்கே...?"

"கொண்டு வரட்டும். கவர்னர் நம்ம பக்கம் இருக்கும் போது அவங்களால் ஒண்ணையும் பண்ண முடியாது. எதிர்க்கட்சியில் இருக்கிற இருபது எம்.எல்.ஏ.க்கள் ஓட்டு எடுப்பு நடக்கும் போது ஆளும் கட்சிக்கு ஆதரவைக் கொடுக்கப் போறதா சொல்லியிருக்காங்க. அண்டர் க்ரௌண்ட்டுக்குள் இருக்கிற இந்த உண்மை சீஃப் மினிஸ்டர்க்கும் நம்ம அறநிலையத்துறை அமைச்சர்க்கும் மட்டும்தான் தெரியும்... சார்..."

இந்திரபூபதி சிரித்தார். ''இது மாதிரியான ராஜதந்திரம், சாணக்கியத்தனமெல்லாம் இல்லாமே, கடந்த பத்து வருஷமா ஆட்சி நடத்த முடியுமா என்ன...?''

மாடிப்படிகள் ஏறினார்கள்.

''சரியாகச் சொன்னீங்க சார்... தமிழ்நாட்டில் இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களில் பாதிப் பேர் கிராமத்துக்குக் கிளம்பிப் போய் விவசாயத்தைப் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க. இன்னும் மீதிப் பேர் தங்களை ஜனங்க மறந்துடக் கூடா தேங்கிறதுக்காக ஏதேதோ பரபரப்பா அறிக்கைகளை விட்டுக்கிட்டு பொழுதைப் போக்கிட்டிருக்காங்க...''

நீளமான மாடி வராந்தாவில் ஒரு நிமிஷ நேரம் நடந்து சாத்தப்பட்டிருந்த ஒரு அறைக் கதவுக்கு முன்பாய் நின்றார்கள்.

நாகப்பன் கதவை லேசாய்த் திறந்து எட்டிப் பார்த்துவிட்டு இந்திர பூபதியிடம் நிமிர்ந்தார்.

''மினிஸ்டர் சர்பத் சாப்பிட்டுக்கிட்டிருக்கார். உள்ளே போங்க... என்ன பார்க்கறீங்க... சர்பத்னா ஃபாரின் விஸ்கின்னு அர்த்தம்...''

இந்திரபூபதி பின்னந்தலையைச் சொறிந்தார். ''நேரம் காலம் தெரியாமே வந்துட்டேன் போலிருக்கே...?''

நாகப்பன் சிரித்தார். ''என்ன சொன்னீங்க... நேரம் காலம் தெரியாமே வந்துட்டீங்களா...? மினிஸ்டர் சர்பத் சாப்பிட்டாத்தான் ஸ்டெடியா இருப்பார். நாம சொல்றதையும் உன்னிப்பா கேட்டுக்குவார். தான் சொல்ல வேண்டியதையும் தெளிவா சொல்லுவார். உள்ளே போங்க சார்.''

இந்திரபூபதி தயக்கத்துடன் சூட்கேசோடு கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்.



நீளமான புனல் டம்ளரில் ஸ்காட்ச்சை சோடாவோடு கலந்து 'களகள'வென்று ஊற்றிக் கொண்டிருந்த அமைச்சர் வள்ளல்பெருமான் இந்திர பூபதியைப் பார்த்துவிட்டுக் கண்களில் சந்தோஷத்தைக் காட்டினார்.

''வாய்யா...''

இந்திரபூபதி பவ்யமாய் வள்ளல் பெருமானுக்கு முன்போய் நின்றார்.

''வணக்கம் சார்...''

''உட்கார்ய்யா...''

''பரவாயில்லை சார்... நிக்கறேன்...''

''யோவ்... நீ ப்யூன் கிடையாது. ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸர். ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டுக்கு டைரக்டர். உட்கார்ய்யா...''

இந்திரபூபதி அமைச்சருக்கு முன்பாய்ப் போடப்பட்டிருந்த ஒரு பி.வி.ஸி.யில் உட்கார்ந்தார்.

வள்ளல் பெருமான் ஸ்காட்ச் நிரம்பிய டம்ளரை இந்திர பூபதியின் பக்கமாய் நகர்த்தி வைத்தார்.

''ம்... சாப்பிடய்யா...''

''ஸாரி சார்...''

''எதுக்கு சாரி...?''

''இதெல்லாம் பழக்கமில்லை சார்.''

தலையை அண்ணாந்து வள்ளல் பெருமான் சிரித்தார்.

''எப்பயிருந்தய்யா புத்தனா மாறினே...?''

''விட்டு ரெண்டு வருஷமாச்சு ஸார்...''

''மதுவை விட்ட மாதிரி 'மாது'வையும் விட்டுட்டியா...?''

''அது வந்து...''

''அதை மட்டும் விடமாட்டியே...! புதுசா பாலக்காட்டுல ஒண்ணை செட் பண்ணியிருக்கியாமே...?''

''பத்திரிகையில வந்ததெல்லாம் பொய் சார்... எதையும் நம்பாதிங்க...''

''கல்யாண வயசுல உனக்கு ரெண்டு பொண்ணு இருக்கு... அதை ஞாபகம் வெச்சுகிட்டு பாலக்காட்டுக்குப் போ...''

இந்திரபூபதி தலையைக் குனிந்து கொண்டு தன்னுடைய பின்னந்தலை வழுக்கையைச் சொறிந்தார். வள்ளல் பெருமான் ஸ்காட்ச்சை வயிற்றுக்குள் இறக்கிக் கொண்டு தட்டில் வறுத்து வைத்திருந்த முந்திரிப் பருப்பில் இரண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். கர்ச்சீப்பால் வாயை ஒற்றிக் கொண்டவர் இந்திர பூபதியை ஏறிட்டார்.

''சரி... விஷயத்துக்கு வருவோம். வெள்ளை மயிலைக் கொண்டு வந்தியா...?''

''கொண்டு வந்திருக்கேன் சார்.''

''எடு...''

இந்திர பூபதி தன் கையோடு கொண்டு போயிருந்த சூட்கேஸை டீபாயின் மேல் வைத்து, சாவியின் உதவியால் அதன் 'லாக்'குகளை விடுவித்துத் திறந்தார்.

உள்ளே-



மான் தோலினாலான பை ஒன்று தெரிய, அதை எடுத்தார் இந்திரபூபதி. உள்ளே கையை நுழைத்து எதையோ ஜாக்கிரதையாய் இழுத்தார்.

பளீரென்ற பால் வெள்ளையில் ஒரு அடி நீளத்துக்கு அந்த மயில் சிலை வெளிப்பட்டது. அறைக்குள் ட்யூப்லைட் போட்ட மாதிரி வெளிச்சம் பரவியது. அமைச்சர் வள்ளல் பெருமானின் முகத்தில் பரவசம் ஜனித்தது.

இந்திரபூபதி வெள்ளை மயில் சிலையை அமைச்சரின் கையில் கொடுத்துக் கொண்டே சொன்னார்.

''ஸார்... இதுதான் சந்தனக் கருப்பனூர் கிராமத்தில் கனிமவள ஆராய்ச்சி செய்யறதுக்காக மலையடிவார நிலத்தைத் தோண்டிய போது கிடைத்த சந்திரகாந்தக் கல்லினால் செதுக்கப்பட்ட வெள்ளை மயில் சிலை. இது 2500 வருஷம் பழமை வாய்ந்த சந்திரகாந்தக் கல். நல்ல பவுர்ணமி வெளிச்சத்தில் இந்த வெள்ளை மயிலை வெச்சா ஒரு மணி நேரத்துக்குள்ளே ஒரிஜனல் மயிலோட நிறம் வந்துடும்...''

''நீ வெச்சுப் பார்த்தியா?''

''பார்த்தேன் சார்.''

''மயிலோட ஒரிஜினல் நிறம் வந்ததா?''

''வந்தது சார்... மயிலோட தோகைப் பகுதி நல்ல ப்ளு கலரில் மாறினதைப் பார்க்கப் பிரமிப்பாயிருந்தது சார்... ரியலி ஃபென்டாஸ்டிக். இந்த மயிலோட அழகைப் பார்க்க ரெண்டு கண்ணு போதாது சார்...''

''அதுக்காக எக்ஸ்ட்ரா கண்ணு வேணும்ன்னு கடவுள் கிட்டே அப்ளிகேஷனா போட முடியும்...?'' சொல்லிவிட்டுச்

சிரித்த வள்ளல் பெருமான் குரலைத் தாழ்த்திக் கொண்டு இந்திர பூபதியிடம் கேட்டார்.

''இந்தச் சிலை உன்னோட கைக்குக் கிடைச்சது வேற யார்க்கும் தெரியாதே...?''

''ஒருத்தர்க்கு மட்டும்தான் தெரியும்.''

''யார்க்கு...?''

''தோண்டும்போது பக்கத்தில் இருந்த சீஃப் என்ஜினியர் கோபாலகிருஷ்ணனுக்கு...''

''கோபாலகிருஷ்ணன் நம்ம ஆளு...! கவலையில்லை. வேறு யார்க்கும் தெரியாதே?''

''தெரியாது...''

''இந்த வெள்ளை மயிலைத் தவிர அந்த நிலத்தடியில் வேற எதுவும் கிடைக்கலையா...?''

''கிடைக்கலை ஸார்...''

''யோவ்... பொய் சொல்லாதே...!''

இந்திரபூபதி தன் இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டார். ''நான் எதுக்கு சார் பொய் சொல்றேன். இன்னிக்கு ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்டில் நான் ஒரு டைரக்டரா இருக்கேன்னா அதுக்குக் காரணம் நீங்கதான்...! இதுவரைக்கும் அரசாங்கத்துக்கும் சரி, ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்டுக்கும் சரி... தெரியாமே எத்தனையோ அரிய சிலைகளை உங்ககிட்டே கொண்டுவந்து கொடுத்து இருக்கேன். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சிலைகளை நீங்களும் வெளிநாட்டில் இருக்கிற உங்க பையன் ரிஷிமூலமா விற்று அந்த பணத்துல யார் யார்க்கு எவ்வளவு பங்குன்னு சரியா பிரிச்சுக் கொடுத்து...''



''யோவ்...! என்னய்யா போலீஸ்ல மாட்டிக்கிட்ட குற்றவாளி மாதிரி ஸ்டேட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருக்கே...!''

''இல்லை சார்...! என் மேல நீங்க சந்தேகப்பட்டதால இவ்வளவையும் சொல்றேன்... எனக்குத் தேவையான பணத்துக்கு மேலேயே நீங்க கொடுக்கும் போது நான் ஏன் சார் திருட்டுத்தனம் பண்றேன்...?''

''சரி... சரி... இந்த வெள்ளை மயிலோட எஸ்டிமேஷன் எவ்வளவு...?''

''ரெண்டரைக் கோடி சார்.''

''அந்த அளவுக்கு விலை போகுமா?''

''போகும் ஸார்... ஆயிரம் வருஷம் கல்லுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பு இருக்கு. இது 2500 வருஷக் கல்லு. அதுவும் சந்திரகாந்தக் கல்லு... பவுர்ணமி வெளிச்சத்தில் வெச்சு பார்ட்டிக்குக் காட்டணும். ரேட் பேசணும்... ஸார்...''

''அப்படீன்னா இந்த மாசத்துல ரெண்டரைக் கோடி வருமானம்ன்னு சொல்லு...''

''ஆமா ஸார்...'' இந்திரபூபதி தலையாட்டிக் கொண்டு இருக்கும் போதே அமைச்சர் வள்ளல்பெருமான் சட்டைப் பாக்கெட்டில் இடம்பிடித்து இருந்த செல்போன் எலக்ட்ரானிக் முனகலை வெளியிட்டது.

எடுத்து டிஸ்ப்ளேயில் நம்பர் பார்த்தவர்... மலர்ந்தார். அமெரிக்காவில் இருக்கும் அவருடைய மகன் ரிஷியின் நெம்பர் அது. உற்சாகமாய்க் குரல் கொடுத்தார்.

''ரிஷி...! எப்படி யிருக்கே...?''

"ஃபைன் டாடி..."

"நானே உன்னை செல்லில் காண்டாக்ட் பண்ணலாம்ன்னு இருந்தேன்."

"என்ன விஷயம் டாடி...?"

"ரெண்டரை கோடிக்கு ஒரு புதையல் கிடைச்சிருக்கு..."

"ஈஸிட்...?"

"ஆமா... அது ஒரு வெள்ளை மயில் சிலை. சந்திரகாந்தக் கல்லினால் ஆனது. பவுர்ணமி வெளிச்சத்தில் அந்த வெள்ளை மயில் சிலையை ஒரு மணி நேரம் வெச்சா போதும். ஒரு உண்மையான மயிலோட நிறம் எப்படியிருக்குமோ அப்படி மாறிடும்..."

"ஃபென்ட்டாஸ்டிக்...! என்ன எஸ்டிமேஷன்..."

"ரெண்டரைக்கோடி... பார்ட்டி ரெடியாயிருந்தா பேசி முடிச்சுடு... மொதல்ல மூணு கோடி ரூபாய் சொல்லு... பார்ட்டி விடாப்பிடியா பேரம் பேசினா ரெண்டரைக் கோடி வரைக்கும் இறங்கி வா..."

"ஓ.கே. டாடி... இதை நான் பார்த்துக்கிறேன். இப்போ நான் போன் பண்ணினது எதுக்காக தெரியுமா?"

"சொல்லு..."

"25 கோடிக்கு ஒரு பிசினஸ் பேசியிருக்கேன்..."

"எ.... எ... என்ன சொன்னே... இருபத்தஞ்சு கோடியா?"

"ஆமா... பார்ட்டிக்கு வேண்டியது ஒரு நவபாஷாணச் சிலை... உடனடியாய் வேணும். கிடைக்குமா...?"



"நவபாஷாணச் சிலையா...?"

"ஆமா..."

"சரி... நான் விசாரிச்சுட்டு உன்னை செல்லில் காண்டாக்ட் பண்றேன்..."

"டாடி... உங்க அரசியல் பிரச்னைகளில் இந்த நவபாஷாண மேட்டரை மறந்துடாதீங்க..."

வள்ளல்பெருமான் சிரித்தார். "எனக்கு அரசியலே இதுதான்டா. இதை என்னால மறக்க முடியுமா... நவபாஷாணச் சிலைக்கு ஏற்பாடு பண்ணிடுவோம்."

"முடியுமா டாடி...?"

"முடிஞ்சாச்சுன்னு வைச்சுக்க..."

"எப்படி டாடி...?"

"ராத்திரி உன்னை செல்லில் காண்டாக்ட் பண்ணும் போது சொல்றேன்..."

வள்ளல் பெருமான் செல்லை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு இந்திரபூபதியை ஏறிட்டார்.

"யோவ்! பையன் 25 கோடி ரூபாய்க்கு ஒரு பெரிய பிசினஸ் பேசியிருக்கான். வெளி நாட்ல இருக்கிற பார்ட்டிக்கு நவபாஷாணச் சிலை வேணுமாம். ஏற்பாடு பண்ண முடியுமா?"

இந்திரபூபதி தன் இடது கை விரல்களால் வழுக்கையைத் தடவினார்.

"என்னய்யா யோசனை...?"

''ஸார்...! நவபாஷாணச் சிலைங்கிறது ரொம்பவும் பெரிய விஷயம். மனிதனுக்கு வரக்கூடிய எல்லா நோய்களையும் தீர்க்கக் கூடிய சக்தி நவபாஷாணத்துக்கு இருக்கிறதுனால வெளிநாட்டில் அதற்கு மதிப்பு அதிகம். தமிழ்நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான பழமை வாய்ந்த கோயில்களில் ஒரு சில கோயில்களில் மட்டுமே அந்த நவபாஷாணச் சிலைகள் மூல கர்ப்பக் கிருகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கு... அது எந்த எந்தக் கோயில்ன்னு எனக்குத் தெரியாது.''

''வேற யார்க்குத் தெரியும்?''

''திருக்கருகாவூர் ஊர்க்குப் பக்கத்தில் சித்தர்காடுன்னு ஒரு கிராமம் இருக்கு ஸார்.''

''ஆமா... தெரியும். சொல்லு... நாடி ஜோதிடம் பார்க்கிற ஊர்தானே...?''

''ஆமா... ஸார்...! அந்த ஊர்ல நாடி ஜோதிடத்திலும், சித்த வைத்தியத்திலும் பெயர் போன அம்பலவாண ஸ்வாமிகள்னு ஒருத்தர் இருக்கார். எழுபது வயசு. ஆனா பார்த்தா அப்படித் தெரியாது. ஓலைச் சுவடிகளைப் பார்த்து எந்தெந்தக் கோயில்களில் நவபாஷாணச் சிலைகள் இருக்குன்னு சரியா சொல்லிடுவார்...''

''அவர்கிட்டே உதவிக்குப் போனா நம்ம பிசினஸ் விவகாரம் வெளியே வந்துருமேய்யா...!''

''வராது ஸார்...''

''எப்படி...?''

''அந்த அம்பலவாண ஸ்வாமிகள் எனக்குப் பார்ட்னர்.''

''பார்ட்னரா...! நீ என்னய்யா சொல்றே?''



''ஸார்... இந்த ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்டில நான் மேற்கொண்டிருக்கிற அகழ்வாராய்ச்சிகளுக்கெல்லாம் மறைமுகமாய் உதவி பண்றது அவர்தான்... எந்தக் கிராமத்துல எந்த இடத்துல எப்படித் தோண்டினா எது எது கிடைக்கும்ன்னு பழைய ஓலைச் சுவடிகளைப் பார்த்து 'டிப்ஸ்' கொடுக்கிறதே அவர்தான். இந்த வெள்ளை மயில் கிடைச்சதும் அவரோட உதவியால்தான்...! இதுவரைக்கும் ஆர்க்கியாலஜி டிபார்ட் மெண்ட் மூலமா தோண்டி எடுத்த சிலைகள் எல்லாமே அந்த அம்பலவாண ஸ்வாமிகளின் கைங்கர்யம்தான். நீங்க எனக்குத் தர்ற பணத்துல பாதிப் பணத்தை அவருக்குக் கொடுத்துடு வேன்.''

''நீ கில்லாடி ஆளய்யா! இப்படியொரு பார்ட்னர்ஷிப் இருக்கறதனாலதான் தோண்டிய இடத்துல சிலைகள் கிடைக்குதா?''

''ஆமா... ஸார்... அம்பலவாண ஸ்வாமிகள் ஏறக்குறைய ஒரு சித்தர் மாதிரிதான்.''

''சித்தர் மாதிரின்னு சொல்றே... அவருக்கு எதுக்கய்யா பணம்...?''

''ஸார்... இந்தப் பத்து வருஷ காலமாகத்தான் அவர் சித்தர். அதுக்கு முன்னாடி அவர் ஒரு சம்சாரி. மூணு ஒய்ஃப். அவுங்க மூலமா பிறந்த குழந்தைகள் பதினாலுபேர். அவரோட அப்பா லோகநாத ஸ்வாமிகள் உயிரோடு இருந்த வரைக்கும் அம்பலவாண ஸ்வாமிகள் தான்தோன்றித்தனமா ஊர் சுத்திக் கிட்டிருந்தார். அதுக்கப்புறம்தான் மனசு மாறி ஆன்மீகத்துக்குப் போய் ஓலைச் சுவடிகளைக் கையில் எடுத்தார்.''

வள்ளல் பெருமான் சில விநாடிகள் யோசித்து விட்டு இந்திர பூபதியை ஏறிட்டார்.

''சரி... அந்த அம்பலவாண ஸ்வாமிகளை நவபாஷாணச் சிலை விஷயமா என்னிக்குப் பார்க்கப் போறே?''

''பார்க்கப் போக வேண்டியது இல்லை...''

''பின்னே...?''

''அம்பலவாண ஸ்வாமிகளுக்கு செல்போன் இருக்கு... போன்லயே காண்டாக்ட் பண்ணி விஷயத்தைச் சொன்னா போதும். நவபாஷாணச் சிலைகள் எந்தெந்தக் கோயில்களில் இருக்குங்கிற லிஸ்ட்டைக் கொடுத்துடுவார்.''

''உடனே போன் பண்ணு...''

இந்திரபூபதி தன்னுடைய செல்போனை எடுத்து உயிர்ப்பித்தார்.

## 5

பூவிழி முதுகுத்தண்டு வடம் உறைந்து போய் இருட்டில் குதித்துக் குதித்து வரும் அந்தப் பச்சை நிற விழிகளையே பார்த்துக் கொண்டிருக்க, காளிச்சாமி வண்டியை ரோட்டோரமாய் ஒதுக்கி நிறுத்தினான்.

''அந்தக் கறுப்பு நாய்தான் மறுபடியும் வருது போலிருக்கம்மா.''

''அதுக்கு என் மேல என்ன கோபம்னு தெரியலை.''

''நாய்ப் புத்தி இப்படித்தாம்மா...! இருங்கம்மா... இன்னிக்கு அதோட காலை ஒடிக்கிறேன்!'' சொன்ன காளிச்சாமி ரோட்டோரமாய்க் கிடந்த பாதிச் செங்கல்லைக் கையில் எடுத்துக் கொண்டான்.



''வேண்டாம், காளிச்சாமி... விடு... அந்த வாயில்லா ஜீவனைப் போய் ஏன் அடிக்கணும்...?''

''அது வாயில்லா ஜீவன்தாம்மா... ஆனா கடிச்சு வெச்சா...?''

காளிச்சாமி கையில் கல்லுடன் திரும்பிப் பார்த்தான்.

பச்சை விழிகள் இருட்டில் தெரிந்தன. விழிகளில் இப்போது அசைவில்லை.

''நாய் அங்கேயே நின்னுடுச்சு போலிருக்கம்மா...''

''சரி... விடு... காளிச்சாமி.''

''இல்லேம்மா... நான் வண்டியை ஓட்ட ஆரம்பிச்சா அது மறுபடியும் பின்னாடியே ஓடிவரும்...''

''என்ன பண்ணப்போறே?''

''இருங்கம்மா... வர்றேன்...''

நாய் இருந்த திசை நோக்கி மெல்ல நடந்த காளிச்சாமி விருட்டென்று எதிர்பாராத ஒரு நேரத்தில் கல்லை விட்டெறிய அது அலறிக் கொண்டு இருட்டில் ஓடியது.

''இனி இந்தப் பக்கம் வந்தே... உனக்குக் கபால மோட்சம்தான். வண்டியைத் தொரத்திட்டா வர்றே?''

காளிச்சாமி இரைந்துவிட்டு வண்டியில் ஏறிக் கொண்டான். ''இனி அது வராதம்மா...''

வண்டி கிளம்பியது.

பூவிழி திரும்பி இருட்டைப் பார்த்தாள். விழிகள் தெரியவில்லை.

''காளிச்சாமி...''

''அம்மா...''

''சித்தர்காடு கிராமத்துக்கு எத்தனை மணிக்குப் போய்ச் சேர்வோம்?''

''ஏழு கிலோ மீட்டர் போகணும்மா... எப்படியும் முக்கால் மணி நேரமாயிடும்...''

''என்னால உனக்குக் கஷ்டம்...''

''இதில் என்னம்மா கஷ்டம்... ஒருத்தர்க்கு ஒத்தாசை பண்றதுலதான் சந்தோஷமே இருக்கு...''

வண்டி குறுகலான பாதையில் வேகம் பிடித்து ஓட, இரண்டு பக்கமும் வயல்வெளிகள் நெல் மணத்தோடு வந்தது.

''ஸ்டேஷன் மாஸ்டர் ரொம்பவும் நல்லவர் அம்மா!'' என்று ஆரம்பித்துக் காளிச்சாமி ஏதேதோ பேசிக் கொண்டு வர, பூவிழி அவன் பேச்சில் கவனம் பதியாமல் 'ம்' கொட்டிக் கொண்டே வந்தாள்.

சரியாய் நாற்பது நிமிஷம்.

'சித்தர்காடு ஊராட்சி ஒன்றியம் உங்களை வரவேற்கிறது' என்று சொன்ன சிமெண்ட் பலகை புளிய மரத்துக்குக் கீழே சாய்ந்து தெரிந்தது. கிராமம் ஒரு மயான அமைதியில் சிக்கியிருக்க - வெளிச்சப் புள்ளிகளோடு வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் தெரிந்தன. உயிரோடு இருந்த டீக்கடையில் ஆட்கள் யாரும் இல்லை.

காளிச்சாமி கேட்டான்.

''யார் வீட்டுக்கம்மா போகணும்?''



''அவரோட பேர் சம்பத். குடலூர் மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்துக்குப் பக்கத்துல வீடு...''

''மாரியம்மன் கோயிலா...?''

காளிச்சாமி வண்டியை விரட்டினான்.

வெளிச்சமான சந்துகளின் வழியே ஓடிய வண்டி பின் வேகம் குறைந்து ஒரு ஓரமாய் நின்றது.

''இதுதாம்மா... மாரியம்மன் கோயில் தெப்பக் குளம்.''

பூவிழி வண்டியினின்றும் கீழே இறங்கினாள். அந்தப் பெரிய தெப்பக் குளம் பிரமாண்டமாய் விரிந்து படிக்கட்டுகளோடு பார்வைக்குக் கிடைத்தது. இருட்டில் தண்ணீர் மின் விளக்குகளின் பிம்பங்களைப் பிரதிபலித்தது.

காளிச்சாமி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டான். ''தெப்பக்குளத்தைச் சுற்றி நிறைய வீடுகள் இருக்கு. இதுல நீங்க பார்க்க வந்தவரோட வீடு எதும்மா...?''

''யார்கிட்டயாவது விசாரி, காளிச்சாமி.''

''அவர் பேர் என்னம்மா?''

''சம்பத்...''

''விசாரிக்க வேண்டாம், பூவிழி... நானே வந்துட்டேன்.'' பின்பக்கம் ஒலித்த குரல் கேட்டுப் பூவிழி சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

அந்த இளைஞன் தெரிந்தான். நல்ல உயரம். ஒடிசலான உடம்பு. ஜிப்பா வேஷ்டி. தோளில் ஒரு ஜோல்னா பை. பூவிழி மலர்ந்தாள்.

"சம்பத்...!"

"என்ன பூவிழி திடீர்னு வந்து நிக்கறே?"

"வர வேண்டிய சூழ்நிலை. வந்துட்டேன்..."

"ட்ரெய்னா... பஸ்ஸா...?"

"ட்ரெய்ன்..."

"ஒரு டெலிகிராம் கொடுத்து இருக்கலாமே. நான் ரயிலடிக்கு வந்திருப்பேன் இல்லையா...?"

"டெலிகிராம் கொடுக்கணும்னு எனக்குத் தோணலை."

"சரி... வா... வீட்டுக்குப் போகலாம்..."

"வீடு எங்கே...?"

"பக்கம்தான்... ஒரு நிமிஷ நடை"

காளிச்சாமி கை குவித்தான். தன் மீசைக்குக் கீழே வெள்ளையாய்ச் சிரித்தான்.

"அம்மா...! அப்ப நான் கிளம்பட்டுங்களா?"

"இரு... காளிச்சாமி...!" சொன்ன பூவிழி தன் மார்புப் பகுதிக்குக் கையைக் கொண்டு போய் பர்ஸை எடுத்துப் பிரித்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்தாள்.

"இந்தா...!"

அவன் தயங்கினான். தலையைச் சொறிந்தான்.

"வெச்சுக்க, காளிச்சாமி."

"வேண்டாங்கம்மா..."



"ஏன் வேண்டாங்கிற...? எனக்காக வண்டியைக் கட்டிக்கிட்டு வந்திருக்கே... ஏழு கிலோ மீட்டர் தூரம்னா சும்மாவா...?"

காளிச்சாமி சிரித்தான். "நான் வாடகைக்கு வண்டி ஓட்டறவன் கிடையாதம்மா..."

"அதனாலென்ன... பணம் வாங்கிக்க..."

"பணம் வாங்கிட்டா நான் பண்ணின உதவிக்குப் புண்ணியம் கிடைக்காமே போயிடும். நான் வர்றேம்மா..." வண்டியில் தாவி ஏறிய காளிச்சாமி, சாட்டையைக் காற்றில் சொடுக்கி, "ஹை!" என்றான். மாடுகள் நகர்ந்தன.

வண்டி தெப்பக் குளத்தைக் கடந்து போனதும், சம்பத் பூவிழியிடம் திரும்பினான்.

"போலாமா...?"

"ம்..."

நடந்தார்கள்.

இருபதடி நடந்ததும் சம்பத் கேட்டான்.

"என்ன பூவிழி திடீர்னு புறப்பட்டு வந்திருக்கே? ஏதாவது விசேஷமா...?"

"பெரிய விசேஷம்..."

"என்ன...?"

"ஒன்பதாவது திசை ஓலைச் சுவடி கிடைச்சிடுச்சு..."

## 6

சென்னை.

அமைச்சர் வள்ளல்பெருமான் மறுபடியும் ஸ்காட்ச்சை டம்ளரில் வார்த்துக் கொண்டிருக்க, இந்திரபூபதி தன்னுடைய செல்போனில் அம்பலவாண சுவாமிகளின் செல்போன் எண்களைத் தட்டினார். இரண்டு தடவை முயற்சித்த பின்பு மூன்றாவது தடவை இணைப்புக் கிடைத்தது.

இந்திரபூபதி பவ்யமாய்க் குரல் கொடுத்தார்.

''வணக்கம் ஸ்வாமி...''

''யாரு...?''

''நான் இந்திரபூபதி...''

''தொல்பொருள் ஆராய்ச்சி டைரக்டரா...?''

''ஆமா ஸ்வாமி...''

''என்ன... வெள்ளை மயில் போக வேண்டிய இடத்துக்குப் போயாச்சா...?''

''பாதி வழியில் இருக்கு ஸ்வாமி. கூடிய சீக்கிரம் போக வேண்டிய இடத்துக்குப் பறந்து போயிடும்.''

''சந்தோஷம்! என்னோட பங்கு எப்போ வரும்...?''

''இந்த வாரத்துக்குள்ளே...''

''கண்டிப்பா வந்துடுமா...?''

''வந்துடும் ஸ்வாமி...''

''சரி... இப்ப எதுக்காகக் கூப்பிட்டே....?''



''தமிழ் நாட்ல நவபாஷாணச் சிலைகள் எந்தெந்தக் கோயில்களில் இருக்குன்னு தெரியணும், ஸ்வாமி...''

''என்ன... ஆஃபர் வந்திருக்கா...?''

''ஆமா ஸ்வாமி...''

''தர்றேன்...! ஆனா அந்த நவபாஷாணச் சிலைகளை யாரும் தொடக்கூட முடியாதே...!''

''ஏன் ஸ்வாமி...?''

''அந்த ஏழு நவபாஷாணச் சிலைகளும் கோயிலின் கர்ப்பக் கிருக மூல ஸ்தானத்தில் இருக்கு...''

இந்திரபூபதி சிரித்தார். ''ஸ்வாமி! அதைப் பத்தின கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம்... இன்னிக்கு கோயிலில் இருக்கிற சாமிகளைக் காட்டிலும் ஆளும் கட்சியில் இருக்கற ஆசாமிகள்தான் ரொம்பவும் பவர்ஃபுல்... நீங்க லிஸ்ட்டை மட்டும் கொடுங்க, ஸ்வாமி... மத்ததையெல்லாம் நாங்க பாத்துக்கறோம்...''

''சரி... இன்னிக்கு ராத்திரி ஒரு பத்து மணி சுமார்க்கு போன் பண்ணு... லிஸ்ட் தர்றேன்...''

''சரி, ஸ்வாமி...''

''அப்புறம்... ஒரு தகவல்...''

''சொல்லுங்க, ஸ்வாமி...''

''புதுசா ஒரு ஓலைச்சுவடி கிடைச்சிருக்கு. சேலத்துக்குப் பக்கத்துல சன்னாசி மலைன்னு ஒரு மலை. அந்த மலையடிவாரத்துல ஒரு கருப்பராயன் கோயில். சின்னக் கோயில். ஆயிரம் வருஷம் பழமை வாய்ந்ததுன்னு ஓலைச்சுவடி

சொல்லுது. வருஷத்துக்கு ரெண்டே ரெண்டு தடவை மட்டும் பூஜை நடக்கிற கோயில் அது. மற்றப்படி ஆள் நடமாட்டம் அறவே அற்ற பகுதி. அந்தக் கோயிலுக்குக் கீழே அரியவகை சிற்பங்கள் இருக்கலாம்ன்னு என்னோட மனசுக்குப் படுது...''

இந்திரபூபதி சிரித்தார்.

''உங்க மனசுக்குப் பட்டா அது சரியாத்தான் இருக்கும் ஸ்வாமி... நாளைக்கே டிபார்ட்மெண்ட்ல மீட்டிங் போட்டு ஃபைலை ஒப்பன் பண்ணிடறேன். அது என்ன மலை ஸ்வாமி...?''

''சன்னாசிமலை...! உனக்கு இன்னும் ரெண்டு நாள்ல எல்லா டிடெய்ல்ஸும் தர்றேன்...''

''ராத்திரி பத்து மணிக்கு...?''

''போன் பண்ணு.''

## 7

சைக்கிளைத் தள்ளியபடி நடந்து கொண்டிருந்த சம்பத் ஸ்தம்பித்து நின்றான்.

''என்ன சொன்னே பூவிழி... 'ஒன்பதாவது திசை' ஓலைச்சுவடி கிடைச்சிருக்கா...?''

''ம்...''

''எப்படி...?''

''நேத்தைக்குக் காலை பரண் மேலே ஏறிப் பித்தளைப் பாத்திரம் எடுக்கும் போது ஒரு பழைய துணி மூட்டை கிடைச்சது. அதைப் பிரிச்சுப் பார்த்தப்ப நிறைய ஓலைச்



சுவடிகள் இருந்தது. பொறுமையா ஒவ்வொண்ணையும் எடுத்துப் படிச்சுப் பார்த்தேன். அதுல ஒண்ணுதான் ஒன்பதாவது திசை ஓலைச் சுவடி.''

''அந்த ஓலைச் சுவடியைப் படிச்சுப் பார்த்தியா...?''

''பார்த்தேன்...''

''ஏதாவது புரிஞ்சுதா...?''

''பைத்தியம் ஏன் புடிக்கலைன்னு கேளு...''

''வார்த்தைகள் அவ்வளவு கஷ்டமாவா இருக்கு?''

''இல்லேன்னா உன்னைத் தேடிக்கிட்டு வருவேனா...?''

''ஊர்ல வேற யார்கிட்டேயாவது ஓலைச் சுவடியைக் காட்டினியா...?''

''இல்லை...''

''சரி... வா...! வீட்டுக்குப் போனதும் அந்த ஓலைச் சுவடியை நான் படிச்சுப் பாக்கிறேன். என்னோட சிற்றறிவுக்கு ஏதாவது பிடிபாடுதான்னு பார்க்கலாம்...''

மறுபடியும் நடந்தார்கள்.

சித்தர்காடு கிராமம் நிஷ்டையில் இருந்தது.

''ஏதாவது சாப்பிட்டியா பூவிழி...?''

''திருச்சியில் மத்தியானம் தயிர்ச்சாதம் சாப்பிட்டது.''

''வீட்ல ரொட்டியும் வாழைப் பழமும் இருக்கு. போதுமா...?''

''போதும்... போதும்...''

சந்து திரும்பும் இடத்தில் சம்பத்தின் வீடு இருந்தது. ஓட்டு வீடு. வாசலில் வேப்ப மரம்.

சைக்கிளைத் திண்ணையின் மேல் ஏற்றி நிறுத்திவிட்டு வீட்டைத் திறந்தான் சம்பத். பழங்காலப் பலாமரத்துக் கதவு க்றீச்சென்ற சத்தத்தோடு உள்ளே போயிற்று.

''வா... பூவிழி...''

பூவிழி நுழைந்தாள். சம்பத், பக்கத்துச் சுவர்க்கு கையைக் கொண்டுபோய் ஸ்விட்ச்சைத் தேய்க்க... ட்யூப் லைட் ஒன்று உயிர் பிடித்துக் கொண்டது.

வீட்டில் இரண்டே அறைகள்.

முதல் அறையில் மூட்டை மூட்டையாய் ஓலைச்சுவடிகள். இரண்டாவது அறை கட்டில், மேஜை என்று படுக்கையறையாய் மாறியிருந்தது.

''உட்கார், பூவிழி...''

''ஆராய்ச்சியெல்லாம் எப்படிப் போய்க்கிட்டிருக்கு?''

''ஏதோ போய்க்கிட்டிருக்கு...''

''ஏன் சலிச்சுக்கிறே...?''

''எம்.பில்.லில் டாக்டர் பட்டம் வாங்கறதுக்கு எவ்வளவோ துறைகள் இருக்கு. இந்த ஓலைச்சுவடிகளை ஆராய்ச்சி பண்ணி பட்டம் வாங்க நான் ஆசைப்பட்டது... எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பத்தான் எனக்குத் தெரியுது...''

''இதுல என்ன பிரச்னை...?''

''இந்த ஊர்ல ஓலைச்சுவடிகளைப் பத்தி தெரிஞ்சவங்க நிறையப் பேர் இருக்காங்க... யாரையாவது போய் அணுகி



ஏதாவது சந்தேகம் கேட்டா சரியான பதில் சொல்ல மாட்டேங்கறாங்க... அவங்க தொழிலுக்குப் போட்டியா நான் வந்துடுவேன்னு பயம். அம்பலவாண ஸ்வாமிகள் மட்டும்தான் என்னோட சந்தேகங்களுக்கு விளக்கம் கொடுப்பார். அவர் மட்டும் எனக்கு உதவியா இல்லைனா இந்த ஓலைச்சுவடி ஆராய்ச்சிக்கு ஒரு குட்பை சொல்லிட்டு சென்னை வந்திருப்பேன்...''

''சரி... சம்பத்...! மொதல்ல நான் கொண்டு வந்து இருக்கிற 'ஒன்பதாவது திசை' ஓலைச் சுவடியைப் படிச்சுப் பாரு.''

''எடு...''

பூவிழி சூட்கேஸைத் தரையில் வைத்துத் திறந்தாள். சேலைகளையும் மடித்து வைத்திருந்த உள்ளாடைகளையும் விலக்கி, அந்த ஓலைச் சுவடியை எடுக்க முயல, உள்ளேயிருந்த மண்டையோடு சம்பத்தின் பார்வைக்குக் கிடைக்க, அவன் முகம் வெளிறிப் போயிற்று.

''பூவிழி...''

''ம்...''

''அது என்ன...?''

''எது...?''

சூட்கேஸுக்குள் இருந்த அதைச் சம்பத் பயத்தோடு கைகாட்ட... பூவிழி புன்னகைத்தாள்.

''அதுவா...! மண்டையோடு...!''

''அதை எதுக்காக சூட்கேஸில் வெச்சிருக்கே...?''

''சம்பத்...! இது ஐந்நூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்த இடைக்காட்டுச் சித்தரின் மண்டையோடு. அவரோட சமாதி

இடிக்கப்பட்ட போது என்னோட அப்பா காசிபர் எடுத்துப் பூஜை பண்ணிட்டிருந்தார். அப்பா வெளியூர் புறப்பட்டுப் போகும் போதும் சூட்கேஸ்ல எடுத்து வெச்சுகிட்டுப் போவார். அவர் இறந்த பிறகு எனக்கும் அதே பழக்கம் வந்துடுச்சு.''

சம்பத்துக்குக் கோபம் வந்து இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டான்.

''இது என்ன பைத்தியக்காரத்தனம்...?''

''சம்பத்! இது உனக்குப் பைத்தியக்காரத்தனமாய்ப் படலாம். ஆனா இந்த மண்டையோடு என்னோட அப்பா கைக்குக் கிடைச்ச பின்னாடிதான் அவர் வாழ்க்கையில் சந்தோஷம் வந்தது. சக்தி வாய்ந்த ஒரு சித்தரோட மண்டையோடு இது.''

''பூவிழி! நீ படிச்ச பொண்ணு... இதை யெல்லாம் நம்பக் கூடாதுன்னு உனக்குத் தோணலையா...?''

''என்னோட அப்பாவையும் இப்படித்தான் நான் கேலி பண்ணிட்டிருந்தேன்... அது தப்புன்னு எனக்கும் ஒருநாள் புரிஞ்சுது. அதே மாதிரி உனக்கும் ஒரு நாள் புரியும்.''

''என்ன இருந்தாலும்...''

''இதோ பார், சம்பத்...! இந்த மண்டையோடு என்னோட அப்பாவின் பூஜைக்குரியது. அதைப் பத்தி விமர்சிக்க வேண்டாம். அப்பா இறக்கும் போது மரணப்படுக்கையில் திக்கித் திணறிச் சொல்லிட்டுப் போன ஒன்பதாவது திசை ஓலைச்சுவடி ஆறு மாசத்துக்கப்புறம் என்னோட கைக்கு கிடைச்சிருக்கு... அந்த ஓலைச் சுவடியில் இருக்கிற வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாமே அதை எடுத்துகிட்டு உன்கிட்டே வந்திருக்கேன். அதைப் படிச்சு எனக்கு விளக்கம் சொல்லு. இந்த மண்டையோட்டை மறந்துடு.''



சம்பத் சில விநாடிகள் வரை அந்த மண்டையோட்டைப் பார்த்துவிட்டுப் பூவிழியின் கையில் இருந்த ஓலைச்சுவடியை வாங்கினான்.

'ஒன்பதாவது திசை' என்ற வார்த்தை எழுத்தாணியால் கோணல் மாணலாய் எழுதப்பட்டிருக்க... அதற்குக் கீழே நான்கு வரிகள் தெரிந்தன. சம்பத்தின் பார்வை உன்னிப் பாகியது. லென்ஸைக் கண்களில் பொருத்தியவன் ஓலைச் சுவடியின் வார்த்தைகளை மனசுக்குள் படித்துப் பார்த்தான். எதுவும் புரியாமல் போகவே இரண்டாவது தடவையும் மனசுக்குள் படித்தான்.

''என்ன சம்பத்... ஏதாவது புரியுதா?''

''ஒண்ணும் புரியலை.''

''வாய்விட்டுப் படி...''

சம்பத் படித்தான்.

ககாசல டபை தர பவறர் கச சன்டன ததி

பகீறழே கபசத்டத படிறஆ கழ சம.

டஓ தருபஅறமா கவாசசை டயிதல் பதோறண் கடி சனாடல்

தசொபர் றண ககசர டங்தக பமற.

சம்பத் ஓலைச் சுவடியில் இருந்த வார்த்தைகளை வாய் விட்டுப் படித்துவிட்டுப் பூவிழியைக் குழப்பமாய்ப் பார்த்தான்.

''என்ன இது... கடைவாய்ப் பல்லெல்லாம் கழண்டு போற மாதிரி பாட்டு. ஒரு வார்த்தைகூட எனக்குப் புரியலையே!'' பெருமூச்சொன்றைவிட்ட பூவிழி தன் இரண்டு கைகளையும் தலைமேல் வைத்துக் கொண்டாள்.

''எத்தனையோ ஓலைச் சுவடிகளைப் படிச்சு ஆராய்ச்சி பண்ணிட்டிருக்கிற உனக்கே இது புரியலைன்னா எனக்கெப்படி புரியும்...? கொஞ்சம் முயற்சி பண்ணு.''

''முடியாது போலிருக்கே...''

''எடுத்த எடுப்பிலேயே முடியாதுன்னு எப்படி சொல்றே...?''

''பூவிழி! எந்த ஓலைச் சுவடியைப் படிச்சாலும் படிச்ச உடனேயே எனக்கு ரெண்டொரு வார்த்தைகளாவது புரியும். ஆனா இந்த ஓலைச்சுவடியைப் படிச்சா எதுவுமே புரியலை...''

''நாலைஞ்சு தடவை நிதானமா படிச்சுப் பாரு. ஏதாவது புரியும்...''

''சரி... நான் படிச்சுப் பார்த்துட்டிருக்கேன். நீ போய்ச் சாப்பிடு. அந்த மரப் பீரோவுக்குள்ளே ரொட்டியும், மலை வாழைப்பழமும் வெச்சிருக்கேன்.''

''நான் மொதல்ல ஃபேஸ் வாஷ் பண்ணணும், சம்பத். குளியலறை எங்கே யிருக்கு...?''

''இந்த ரூமையொட்டி பின்னாடி ஒரு சந்து இருக்கும். அந்த சந்துக்குள்ளே போனா குளியலறை. லெஃப்ட்ல ஸ்விட்ச் இருக்கும். போட்டுக்கோ...''

பூவிழி சூட்கேஸிலிருந்து டவலையும் சோப்பையும் எடுத்துக் கொண்டு குளியலறையை நோக்கிப் போனாள்.

சம்பத் மறுபடியும் அந்த ஓலைச்சுவடியைப் பார்த்தான். ஒரு பேப்பரையும், பேனாவையும் எடுத்துக் கொண்டு ஓலைச்சுவடி யில் இருந்த வார்த்தைகளை உன்னிப்பாய்ப் பார்த்து எழுதினான். பின் ஒவ்வொரு வார்த்தையாய் வாய்விட்டுப் படித்தான்.



கிட்டத்தட்ட அரை மணி நேரம்.

பூவிழி முகம் கழுவி வேறு சேலைக்கு மாறி பீரோவில் இருந்த ரொட்டியையும் மலைவாழைப் பழத்தையும் இரவு உணவாகச் சாப்பிட்டு முடித்து சம்பத்துக்கு எதிரே வந்து உட்கார்ந்தாள்.

''என்ன சம்பத்... ஏதாவது புரியுதா?''

''இல்லை...''

''ஒரு வார்த்தை கூடவா புரியலை...?''

''புரியலையே...! மண்டைக்குள்ளே இருக்கிற மூளை உருகிடும் போலிருக்கே...''

''சம்பத்! என்னோட அப்பா மரணப் படுக்கையில் இருந்தபோது உயிர் பிரியும் தறுவாயில் சொன்ன ஒன்பதாவது திசை ஓலைச்சுவடி ஆறுமாசத் தேடலுக்குப் பிறகு கையில் கிடைச்சிருக்கு. இந்த ஓலைச் சுவடியின் வாசகங்களில் ஏதோ ஒரு முக்கியமான விஷயம் இருக்கப் போய்த்தான் அப்பா இந்த ஓலைச் சுவடியைப் பத்தி சொல்லியிருக்கார். ஸோ... கொஞ்சம் சிரமம் எடுத்துகிட்டு முயற்சி பண்ணிப் பாருங்களேன்...''

''இல்லை, பூவிழி... இந்த ஓலைச் சுவடியை நான் ஆயிரம் தடவை படிச்சாலும் எனக்கு எதுவும் புரியப் போறது இல்லை.''

''அப்புறம் என்னதான் பண்றது...?''

''இந்த ஒன்பதாவது திசை ஓலைச் சுவடியில் எழுதியிருக்கக் கூடிய விஷயத்தைக் கிரகிக்கக் கூடிய சக்தி இந்த சித்தர் காட்டில் ஒருத்தர்க்குத்தான் உண்டு. அவர்கிட்டே போயிட வேண்டியதுதான்.''

''யார் அவர்...?''

''அம்பலவாண ஸ்வாமிகள்.''

## 8

ராத்திரி பதினோரு மணி.

சமீபத்திய தமிழ் சினிமாக்களில் பரபரப்பாய்ப் பேசப்பட்ட ஒரு நடிகையோடு படுக்கையைப் பகிர்ந்து கொண்டு ஜாலியான மூடில் இருந்த வள்ளல் பெருமானை அவருடைய செல்போன் இம்சித்துக் கூப்பிட்டது. நடிகையின் உடம்பிலிருந்து விலகித் தலை மாட்டில் இருந்த செல்போனை எடுத்து டிஸ்ப்ளேயில் கூப்பிடுவது யார் என்று பார்த்தார். இந்திர பூபதி.

நைட் கவுனுக்குள் நுழைந்து செல்போனோடு பாத்ரூமுக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டு பேசினார்.

''என்னய்யா... நேரம் காலம் தெரியாமே போன்?''

''ஸார்! அந்த நவபாஷாணச் சிலை விஷயமா அம்பலவாண ஸ்வாமிகள் கிட்டே பேசிட்டேன்...''

''என்ன சொன்னார்...?''

''லிஸ்ட் கொடுத்துட்டார். தமிழ் நாட்ல மொத்தம் ஏழு கோயில்களில் நவபாஷாணச் சிலைகள் இருக்கு.... அதுல மூணு கோயில்கள் சின்னக் கோயில்கள்.''

''எந்தெந்தக் கோயில்?''

''நாகப்பட்டினத்துக்குப் பக்கத்தில் திருக்கண்டிகையூர் முருகன் கோவில், கன்னியாகுமரிக்குப் பக்கத்தில் கழியூர் கிராமத்தில் சிவன் கோயில், வேதாரண்யத்துக்குப் பக்கத்தில் திருச்செவ்வேள் விஷ்ணு கோயில். இந்த மூணு கோயில் களிலும் உள்ள மூல விக்ரகங்கள் இரண்டரையடி உயரம் கொண்டவை.''



''சரி...! சிலைகளை எடுக்க முடியுமா...?''

''முடியும்...''

''எப்படி...?''

''இந்த மூணு கோயில்களுமே தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்துக்குச் சொந்தமானவை. சரியானபடி பராமரிப்பு இல்லாத கோயில்களும்கூட. தொல்பொருள் ஆராய்ச்சிக் கழக ஃபைல்களில் கோயில் சிலைகள் நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்டது என்கிற தகவல் இருந்தா அதை எடுத்துட்டு சாதாரணக் கல்லினால் உருவான சிலைகள்தான்னு எழுதி வெச்சுடலாம்...''

''பார்த்துப் பண்ணுய்யா... மாட்டிக்கப் போறோம்...''

''நீங்க அறநிலையத் துறை அமைச்சராயிருக்கும் போது என்ன ஸார் கவலை...? யாரும் பல்லு மேல நாக்கைப் போட்டு ஒரு வார்த்தைகூட பேச முடியாது. நீங்க மனசு வெச்சாத்தான் ஸார் அந்தக் கடவுளுக்கே கும்பாபிஷேகம் நடக்கும்.''

''யோவ்...! ஐஸ் வைக்கிறதுக்கு அளவு வேண்டாமா? எதையும் முன் எச்சரிக்கையோடு பண்றது நல்லது. சரி... எந்தக் கோயிலில் கை வைக்கலாம்?''

''கழியூர் கிராமம் சிவன் கோயிலில் ஸார்.''

''அந்தக் கோயிலை ஏன் செலக்ட் பண்ணினே?''

''கழியூர் ஒரு சின்னக் கிராமம் ஸார். மொத்த ஜனத் தொகையே ஐந்நூறுக்கும் கீழேதான். படிச்சவங்க யாரும் கிடையாது. தாழ்த்தப்பட்டவங்க அதிகம்...''

"என்னிக்கு வேலையை ஆரம்பிக்கப் போறே?"

"நாளைக்கே..."

"ரிஷிக்கு நான் தகவல் சொல்லிடட்டுமா?"

"சொல்லிடுங்க ஸார்..."

## 9

அந்த அதிகாலை வேளையிலேயே பூவிழி விழித்துக் கொண்டாள்.

ஜன்னல் கம்பிகளுக்கு அப்பால் சித்தர்காடு கிராமம் பனிப் புகையோடு விடிந்து கொண்டிருந்தது. பறவைகள் மரங்களில் சங்கீதம் பழகிக் கொண்டிருக்க, வயல் வேலைக்குப் போகும் பெண்கள் வரப்புகளில் தெரிந்தார்கள்.

"குட் மார்னிங் பூவிழி..." கையில் டீ டம்ளரோடு நெருங்கினான் சம்பத்.

"குட்மார்னிங்... சம்பத்.." டீயை வாங்கிக் கொண்டாள்.

"என்ன... கிராமத்து அழகை ரசிச்சிட்டு இருக்கியா?'

"ம்.. ராத்திரி பார்க்கும் போது சித்தர்காடு கிராமம் மனசுக்குப் பயமாயிருந்தது.."

"இப்போ..?"

"ரம்யமா யிருககு.."

சம்பத் சிரித்தான். "கிராமத்தோட... அழகை ரசிக்க இது நேரம் கிடையாது. இன்னும் அரை மணி நேரத்துக்குள்ளே நீ குளிச்சு ரெடியாகணும்.."



"எங்கே போகப் போறோம்?"

"அம்பலவாண ஸ்வாமிகளைப் பார்க்கப் போக வேண்டாமா?"

"இவ்வளவு காலையில் கிளம்பணுமா?"

"இந்த நேரத்தில் போனாத்தான் அவரை ஃப்ரீயா பார்க்க முடியும். எட்டு மணிக்கு மேலே போனா ஏடு பார்க்கிறதுக்காக வெளியூர் ஜனம் காத்துக்கிட்டு இருக்கும்."

"நிறையக் கூட்டம் வருமா?"

"தினசரி ஒரு நூறு பேர்க்கு குறையாது."

"அவர் சொன்னது பலிக்குதா?"

"பலிக்காமலா.. காரைப் போட்டுக்கிட்டு அத்தனை பேர் வர்றாங்க?"

"சரி! ரெடி பண்ணிகிட்டு உடனே கிளம்பலாம்."

பூவிழி அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் ரெடியாகி விட... இருவரும் கிளம்பினார்கள்.

அந்தக் குளிரிலும் மாரியம்மன் கோயில் தெப்பக் குளத்தில் சிலர் குளித்துக் கொண்டிருந்தார்கள். கோயில் கோபுரத்தைச் சுற்றிப் புறாக்கள் பறந்தன. ஒரு டீக்கடையில் சினிமா பாட்டு அலறிக் கொண்டிருக்க... வெளியே போட்டிருந்த பெஞ்சில் நான்கைந்து பெரிசுகள் தினத்தந்தியையும் தினமலரையும் புரட்டிக் கொண்டிருந்தது.

"சம்பத்!"

"சொல்லு..."

''அம்பலவாண ஸ்வாமிகளுக்கு இந்த 'ஒன்பதாவது திசை' ஓலைச் சுவடியில் உள்ள வார்த்தைகள் புரியுமா?''

''கண்டிப்பா அவர்க்குப் புரியும்ன்னு நினைக்கிறேன்.''

''ஒருவேளை புரியலைன்னா..?''

''இதோ பார், பூவிழி..! அம்பலவாண ஸ்வாமிகளுக்கு இப்போ எழுபது வயசு. தன்னோட இருபதாவது வயசிலிருந்தே ஓலைச்சுவடிகளை வாசிக்க ஆரம்பிச்சுட்டாராம். அதாவது ஐம்பது வருஷ கால அனுபவம். இதுவரைக்கும் லட்சக்கணக்கான ஓலைச் சுவடிகளைப் புரட்டிப் பார்த்துட்டதா சொல்லிக்கிறாங்க. நீ கொண்டு வந்திருக்கிற ஓலைச் சுவடி தானா பிரமாதம்...? ஓலைச் சுவடியை ஒரு தடவை படிச்சுப் பார்த்துட்டு ஸ்வாமிகள் 'கடகட'ன்னு அர்த்தத்தைச் சொல்லிடுவார்.''

மாரியம்மன் கோயிலைக் கடந்தார்கள்.

''சர்வ சித்தி மாரியம்மன் கோயில் இது. ஒவ்வொரு சித்திரை மாசத்திலும் ஊர் கூடிப் பண்டிகை எடுப்பாங்க... அன்னிக்கு இந்த தெப்பக் குளத்தைப் பார்க்கணும். ஜே ஜேன்னு ஒரே கூட்டமாயிருக்கும்.''

''ஸ்வாமிகளைப் பார்த்துட்டு வரும்போது கோயிலுக்குப் போலாமா?''

''தாராளமா போலாம்..''

சின்னச் சின்னச் சந்துகளைக் கடந்து பிரதான வீதிக்கு வந்தார்கள். வீதியில் நடமாட்டம் இல்லை. ஒரு பஸ் மட்டும் புழுதியோடு கடந்து போயிற்று.



''ரொம்ப தூரம் போகணுமா, சம்பத்?''

''இல்லே.. பக்கத்துலதான்... அந்தப் பனை மரம் தெரியுது பாரு..'

''ஆமா..''

''அதையொட்டி ஒரு மண் ரோடு போகும். அதுல அரை கிலோ மீட்டர் தூரம் நடந்தா போதும்.. அம்பலவாண ஸ்வாமிகளின் ஆஸ்ரமம் வந்துடும்..''

பூவிழி தன் மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்தாள். மணி 6.15.

வேகமாய் நடந்தார்கள்.

ஏறக்குறைய இருபது நிமிஷ நடை.

தென்னங் கீற்றுகளாலும் பனை மட்டைகளாலும் வேயப்பட்ட அந்த ஆஸ்ரமம் பார்வைக்குக் கிடைத்தது. சுற்றிலும் வேப்ப மரங்கள். தொலைதூர நீல நிற மலையில் மேகங்கள் பஞ்சுப் பொதிகளாய்த் திரண்டிருந்தன. ஆஸ்ரமத்தை ஒட்டியிருந்த தொழுவத்தில் பசு மாடுகள் தெரிந்தன.

'இடம் அற்புதமாயிருக்கு..'

ஆஸ்ரமத்தின் பிரதான கேட் திறந்திருக்க - உள்ளே நுழைந்தார்கள். க்வாலிஸ் கார் ஒன்று நின்றிருந்தது.

''பார்த்தியா பூவிழி! இந்நேரத்துக்கே ஏடு பார்க்க கஸ்டமர் வந்தாச்சு..''

பூவிழி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே பிரமிப்போடு நடந்தாள். கிணற்றடியில் குளித்துவிட்டு ஈர வேஷ்டியும்

அவிழ்ந்த குடுமியுமாக வந்து கொண்டிருந்த ஒரு நடுத்தர வயது நபர் சம்பத்தைப் பார்த்ததும் நின்றார்.

"என்ன சம்பத்... இவ்வளவு காலையில?"

"ஸ்வாமிகளைப் பார்க்கணும்.."

"இது..?"

"என்னோட காலேஜ் மேட் பட்டணத்திலிருந்து வந்திருக் காங்க.."

"கஸ்டமர் உள்ளே இருக்காங்க.. நீ வெயிட் பண்ணு. பார்த்துடலாம்.."

போய்விட்டார்.

வராந்தா திண்ணையில் வரிசையாய் காலிபெஞ்ச்கள் தெரிய சம்பத்தும் பூவிழியும் போய் உட்கார்ந்தார்கள்.

"யாரவர்?"

"இந்த ஆஸ்ரமத்தோட நிர்வாகி. பேரு பட்டுலிங்கம். கவர்ன்மெண்ட்ல நல்ல உத்தியோகத்தில் இருந்தார். ஸ்வாமிகள் மேல் இருக்கிற அஃபெக்ஷன் காரணமா உத்தியோகத்தை ராஜினாமா பண்ணிட்டு இங்கேயே வந்து தங்கிட்டார்."

பூவிழியின் பார்வை ஆஸ்ரமச் சுவர்களின் மேல் எழுதப் பட்டிருந்த வாசகங்களின் மேல் விழுந்தது.

போக ஞான சூத்திரம் - திருமந்திர ஞானம்.

ஞான பூஜா விதி - 100 சமாதி தீட்சை

பூரணானந்தர் சிவயோக சாரம், அஷ்டாங்க யோகம்.



அருணாசல குரு. நிஜானந்த போதம். மூலாதாரம்.

பூவிழி சம்பத்தை ஏறிட்டாள். "இதெல்லாம் என்ன...?"

"ஓலைச் சுவடிகளோட தொகுப்புகள்."

பூவிழியின் பார்வை அடுத்த சுவர்க்குப் போக, சுவரில் ஜடாமுடிகளோடு வரையப்பட்ட மனித உருவங்கள். கீழே பெயர்கள்.

அகஸ்தியர்

கும்பமுனி

புலந்தியர்

திருமூலர்

ஆவுடையார்

கடுவெளிச் சித்தர்.

பூவிழி எல்லாவற்றையும் பிரமிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பக்கத்து அறையிலிருந்து கம்பீரக் குரல் கேட்டது. அது ஒரு சித்தர் பாட்டு.

"போமடா வெளியொடே வெளிதான் சேரும்

புதுமையடா வாயுவொடே வாயுதான் சேரும்

ஊமடா தீயோடே தீதான் சேரும்

உத்தமனே அப்புடனே அப்புதான்சேரும்!"

பூவிழி கேட்டாள்.

"யார் பாடறது?"

''அம்பலவாண ஸ்வாமிகள்..''

''வயசு எழுபதுன்னு சொன்னே.. குரல் கோயில்ல மணியடிச்ச மாதிரி கணீர்ன்னு இருக்கு..''

''நீ அவரை நேர்ல பாரு.. அசந்து போவே!''

பாட்டு நின்று இப்போது பேச்சு கேட்டது. ஸ்வாமிகள் பேசிக் கொண்டிருந்தார்.

''நாள் ஒன்றுக்கு 2 லட்சத்து 16,000 நொடி.. 60 நொடி கொண்டது ஒரு விநாடி. 60 விநாடி கொண்டது ஒரு நாழிகை. 60 நாழிகை கொண்டது ஒரு நாள். 365 நாள் கொண்டது ஒரு வருடம். 21600 நாழிகை கொண்டது ஒரு வருடம். 21600ஐ 80 ஆல் பெருக்க கிரேதாயுகம். 60 ஆல் பெருக்க திரேதாயுகம். 40 ஆல் பெருக்க துவாபரயுகம். 20 ஆல் பெருக்க கலியுகம். யுகந்தோறும் சித்தர்கள் பிறந்து எழுதி வைத்த இந்த ஓலைச் சுவடிகள்..''

பூவிழி உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு மெல்ல எழுந்தாள். சம்பத் கேட்டான்.

''எங்கே போறே..?''

''ஸ்வாமிகள் அடுத்த அறையில்தானே இருக்கார்?''

'ஆமா..''

''எட்டிப் பார்க்கலாமா?''

''வேண்டாம். உட்காரு.. ஒரு கஸ்டமர் உள்ளே உட்கார்ந்து ஏடு பார்த்துக்கிட்டு இருக்கும் போது எட்டிப் பார்க்கிறது அநாகரீகம்.''

பூவிழி உட்கார்ந்தாள்.



''அந்த ஓலைச்சுவடியை எடு... ஸ்வாமிகள் கூப்பிடுகிற வரை படிச்சுப் பார்க்கலாம்.''

பூவிழி தான் கொண்டு போயிருந்த கைப்பையைப் பிரித்து உள்ளே வைத்திருந்த ஓலைச்சுவடியை எடுத்துக் கொடுத்தாள். சம்பத் லென்ஸைக் கண்களில் பொருத்திக் கொண்டு படித்தான். இரண்டு நிமிஷம் கழித்துப் பூவிழி கேட்டாள்.

''இப்ப ஏதாவது புரியுதா?''

''நேத்திக்கு ராத்திரி படிச்சதை விட இப்ப ரொம்பவும் குழப்பமாயிருக்கு... ஒரு வார்த்தை கூடப் புரியலை, பூவிழி...''

''ஸ்வாமிகள் என்ன சொல்றார்ன்னு பார்க்கலாம்.''

அரை மணி நேரத்துக்குப் பிறகு கஸ்டமர் வெளியே வந்தார். முகம் அவ்வளவு சந்தோஷமாக இல்லை.

சம்பத் பூவிழியோடு எழுந்து உள்ளே போனான். அறைக்குள் சாம்பிராணி வாசனை நிரம்பியிருக்க அம்பலவாண ஸ்வாமிகள் ஒரு பாயில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தார். தலை முடியும் தாடியும் பஞ்சு போல் நரைத்துப் போயிருக்க - நெற்றியில் குங்குமப் பொட்டு ஒரு ரூபாய் நாணய அளவுக்குப் பிசிறில்லாமல் பிரகாசித்தது.

''வணக்கம், ஸ்வாமி..''

தாடிக்குள் சிரித்தார் ஸ்வாமிகள்.

''வா தம்பி... எப்படி யிருக்கே?''

''நல்லா யிருக்கேன் ஸ்வாமி.''

''உன்னோட ஓலைச் சுவடி ஆராய்ச்சி யெல்லாம் எந்த அளவுல இருக்கு?''

''நல்லவிதமா பண்ணிட்டிருக்கேன் ஸ்வாமி. இன்னும் ஆறு மாசத்துக்குள்ளே தீஸிஸ் எழுதி யுனிவர்ஸிடியில் சப்மிட் பண்ணிடுவேன்.''

''ஏதாவது உதவி வேணும்ன்னா கேளு, தம்பி.''

''சரிங்க, ஸ்வாமி.''

''யாரிந்தப் பொண்ணு?''

''என்கூட பி.ஏ. வரைக்கும் படிச்ச பொண்ணு ஸ்வாமி. பேரு பூவிழி. ஊரு சுந்தரபாண்டியம்.''

''அப்படியா... என்னவிஷயம்... இவ்வளவு காலையிலே ரெண்டு பேரும் வந்திருக்கீங்க.''

''ஸ்வாமி! பூவிழிகிட்டே ஒரு பழங்காலச் சுவடி இருக்கு. அதுல என்ன எழுதியிருக்குன்னு புரியலை. வார்த்தைகள் கடினமாயிருக்கு. நான் படிச்சுப் பார்த்து எனக்கு ஒண்ணும் புரியாததினால்தான் உங்ககிட்டே பூவிழியைக் கூட்டிக்கிட்டு வந்தேன்.''

''எங்கே அந்தச் சுவடி?''

சம்பத் கையில் வைத்து இருந்த சுவடியை நீட்டினான். வாங்கிப் பார்த்த ஸ்வாமிகள் பிரத்யேக லென்ஸ் கண்ணாடி அணிந்து கொண்டு சுவடியை உயர்த்திப் பிடித்துப் படித்தார்.

''ஒன்பதாவது திசை!''

திகைத்தவராய்க் கேட்டார். ''திசைகள் எட்டுத்தானே! அதென்ன ஒன்பதாவது திசை..?''

பூவிழி குறுக்கிட்டுச் சொன்னாள். ''சுவடி அடையாளம் தெரியறதுக்காக என்னோட அப்பா வெச்ச பேர் அது.''



''அடையாளம் தெரியறதுக்காக வெச்ச பேரா?''

''ஆமா..''

''உன்னோட அப்பா யாரும்மா?''

''அவர் பேர் காசிபர். சுந்தரபாண்டியம் அனுசூயா தேவி கோயிலில் தலைமைப் பூசாரியாய் இருந்தார். ஆறு மாசத்துக்கு முன்னாடி திடீர்னு இறந்து போனார்.''

''பூசாரியாய் இருந்தவர்க்கும் ஓலைச் சுவடிக்கும் என்ன சம்பந்தம்..?''

''அப்பாவுக்குக் கோயில் மடப்பள்ளியைச் சுத்தம் பண்ணும் போது நூற்றுக் கணக்கான ஓலைச் சுவடிகள் கிடைச்சது. அந்த ஓலைச் சுவடிகளை யார்க்கும் தெரியாமே வீட்டுக்குக் கொண்டு வந்து படிச்சார். அதையெல்லாம் நான் பெரிசா எடுத்துக்கலை. நல்லா ஆரோக்கியமா இருந்த அப்பா ஒரு நாள் குளத்தில் குளிக்கப் போகும் போது வழுக்கி விழுந்தார். தலையில் அடிபட்டு ஸ்மரணை இல்லாமே போயிடுச்சு. ஹாஸ்பிடல்ல போய் அப்பாவைப் பார்த்தப்ப, உயிர் பிரியற நேரம். பக்கத்தில் இருந்த நர்ஸை வெளியே போகச் சொல்லிட்டு அப்பா என்னோட காதில் திக்கித் திணறி 'ஒன்பதாவது திசை' ஓலைச் சுவடி வீட்ல இருக்கு. எடுத்துப் படி'ன்னுசொன்னார். 'அதுல என்னப்பா இருக்கு?'ன்னு நான் கேட்டு, அவர் பதில் சொல்றதுக்குள்ளே உயிர் பிரிஞ்சுடுச்சு... அப்பாவோட காரியங்கள் எல்லாம் முடிஞ்ச பின்னாடி 'ஒன்பதாவது திசை' ஓலைச் சுவடியை வீட்ல தேடிப் பார்த்தேன். கிடைக்கல. நேத்திக் காலையில் பரண் மேல் ஏறிப் பித்தளைப் பாத்திரம் எடுத்தபோது அதுக்குள்ளே ஓலைச்சுவடிகள் இருந்தது. பொறுமையா ஒவ்வொரு சுவடியையும் எடுத்துப்

பார்த்தபோதுதான் இந்த 'ஒன்பதாவது திசை' சுவடி கிடைத்தது. படிச்சுப் பார்த்தேன். ஒண்ணும் புரியலை. டாக்டர் பட்டம் பெறுவதற்காக ஓலைச் சுவடிகளை ஆராய்ச்சி பண்ற சம்பத்தோட ஞாபகம் எனக்கு வந்தது. உடனே புறப்பட்டு வந்துட்டேன்.''

''உனக்கு மற்ற உறவுகள்?''

''அம்மா எப்பவோ இறந்துட்டாங்க.. கூடப் பொறந்தவங்களும் யாரும் இல்லை. நான் தனியாத்தான் இருக்கேன்.''

ஸ்வாமிகளின் பார்வை மறுபடியும் 'ஒன்பதாவது திசை' ஓலைச் சுவடியின் மேல் பதிந்தது.

சுவடியில் இருந்த நான்கு வரிகளையும் படித்த அவர் குழப்பமாய் நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

''வார்த்தைகள் ரொம்பவும் கடினமாய் இருக்கே! 5000 வருஷங்களுக்கு முந்தின ஓலைச்சுவடியாய் இருக்கலாம்ன்னு நினைக்கிறேன்..''

சம்பத் குறுக்கிட்டான்.

''ஸ்வாமி! கொஞ்சம் முயற்சி எடுத்துச் சுவடியைப் படிச்சுப் பார்த்து.. அதுல என்ன இருக்குன்னு சொன்னா பரவாயில்லை.. பூவிழியோட அப்பா காரணம் இல்லாமே இந்த ஓலைச் சுவடியைத் தனிமைப்படுத்தி 'ஒன்பதாவது திசை'ன்னு ஒருபேர் கொடுத்து இருக்க மாட்டார். பூவிழிக்கு உபயோகப்படுகிற மாதிரி அந்தச் சுவடியில் ஏதோ ஒரு விஷயம் இருக்கு. அது என்னான்னு தெரிஞ்சா பரவாயில்லை.''

ஸ்வாமிகள் புன்னகைத்தார்.



''நானும் எத்தனையோ சுவடிகளைப் பார்த்திருக்கேன். இது மாதிரியான ஒரு லிபியில் ஒரு சுவடியை நான் பார்த்தது இல்லை. நீயும் சுவடிகளை ஆராய்ச்சி பண்றவன்தானே! இது மாதிரியான சுவடியை நீ பார்த்திருக்கியா..?''

''இல்லை, ஸ்வாமி..''

''பின்னே எப்படி சுவடியைப் படிச்சு அர்த்தம் கண்டுபிடிக்க முடியும்..?''

பூவிழி குறுக்கிட்டாள்.

''ஸ்வாமி..! இந்த ஓலைச் சுவடி இன்னும் ரெண்டு நாள் உங்ககிட்டேயே இருக்கட்டும்.. நீங்க ஓய்வா இருக்கும்போது படிச்சுப் பார்த்தா பாடலுக்கு அர்த்தம் கிடைக்கலாம். உங்களுக்கே இந்தப் பாடலோட அர்த்தம் புரியலைன்னா நாங்க வேற யார்கிட்டே போக முடியும்..?''

ஸ்வாமிகள் ஆமோதிப்பாய்த் தலையாட்டினார். ''நீ சொல்றதும் சரிதாம்மா.. இந்த ஓலைச் சுவடி என்கிட்டயே இருக்கட்டும். நான் ஓய்வாயிருக்கும் போது திரும்பத் திரும்பப் படிச்சுப் பார்த்தா பாடலோட அர்த்தம் பிடிபடலாம். நாளைக் கழிச்சு மறுநாள் அமாவாசை. அன்னிக்கு சாயந்தரம் ஒரு ஆறு மணி சுமார்க்கு நீங்க ரெண்டு பேரும் வந்து என்னைப் பாருங்க.''

பூவிழியும், சம்பத்தும் எழுந்தார்கள்.

''அப்ப நாங்க புறப்படறோம், ஸ்வாமி..''

''போய்ட்டு வாங்க..''

இருவரும் கைகளைக் குவித்து விட்டு வெளியேறிப் போனதும், அம்பலவாண ஸ்வாமிகள் கையிலிருந்த ஓலைச்

சுவடியைப் பார்த்தார். பார்க்கப் பார்க்க அவர் உதடுகளில் ஒரு புன்னகை பிறந்து பெரிதாகியது.

நடைச் சத்தம் கேட்டது.

நிமிர்ந்தார்.

ஆஸ்ரம நிர்வாகி பட்டுலிங்கம் நின்றிருந்தார்.

''என்ன பட்டு..?''

''ஸ்வாமி! பூஜைக்கு எல்லாத்தையும் எடுத்து வெச்சுட்டேன்.''

''சம்பத்தும் அந்தப் பொண்ணும் போயிட்டாங்களா?''

''ம்...போய்ட்டாங்க, ஸ்வாமி.''

''அவங்க ரெண்டு பேரும் எதுக்காக வந்தாங்கன்னு தெரியுமா, பட்டு?''

''தெரியும்.. எல்லாத்தையும் பார்த்துட்டுத்தானே ஸ்வாமி இருக்கேன்.. அந்த ஓலைச் சுவடியில் இருக்கிற வாசகங்கள் அவ்வளவு கடினமான லிபியிலா இருக்கு, ஸ்வாமி?''

''இல்லை.... ரொம்பவும் சுலபமான லிபி.''

''பின்னே அர்த்தம் புரியலைன்னு சொன்னீங்களே, ஸ்வாமி.''

''அது அவங்களுக்காகச் சொன்னது..''

''அப்படீன்னா?''

''இந்த ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருக்கிற பாட்டலை முதல் தடவை படிச்சதுமே எனக்கு அதனுடைய சாராம்சம் புரிஞ்சு போச்சு..''



பட்டுலிங்கத்தின் கண்களில் வியப்பு அப்பிக் கொண்டது.

''ஸ்வாமி..!''

''இப்படி என் முன்னால் உட்கார், பட்டு..''

பட்டுலிங்கம் உட்கார்ந்தார். ஸ்வாமிகள் கையிலிருந்த அந்த ஓலைச் சுவடியை நீட்டினார்.

''சுவடியைப் பாரு... வாய்விட்டுப் படி..!''

அவர் பார்த்தார். வாய்விட்டுப் படித்தார்.

ககாசல டபை தர பவறா் கச சன்டன ததி

பகீறழே கபசத்டத படிறஆ கழ சம்.

டஒ தருப அறமா கவாசசை டயிதல் பதோறண் கடி சனாடல்

தசொபர் றண கசுசர டங்தக பம்ற.

''புரியுதா, பட்டு.''

''புரியலை, ஸ்வாமி.''

''சரி.. ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக்கோ..''

எடுத்துக் கொண்டார்.

''அந்த ஓலைச் சுவடியில் இருக்கிற பாட்டை அப்படியே அந்த பேப்பரில் எழுது.''

பட்டுலிங்கம் எழுதி முடித்தார்.

''இப்ப நான் சொல்றதை நல்லா கவனி.''

## 10

**சென்னை.**

அமைச்சர் வள்ளல் பெருமான் கோட்டைக்குப் புறப்பட்டுப் போகத் தயாராக இருந்தபோது அமெரிக்காவில் இருந்து மகன் ரிஷியிடம் இருந்து செல்போன் வந்தது.

''அப்பா! என்னாச்சு?''

''நவபாஷாணச் சிலைதானே..?''

'ஆமா..''

''சுழியூர் கிராமத்துக்கு இந்திரபூபதி புறப்பட்டுப் போயிருக்கார். கோயிலைப் புனருத்தாரணம் பண்ணப் போறதாகச் சொல்லித்தான் நவபாஷாணச் சிலையை எடுத்துட்டு வேற சிலையை வைக்க முடியும்.''

''பார்ட்டி பணத்தைக் கையில் வெச்சுகிட்டு அவசரப் படறாங்கப்பா.''

'அவங்க அவசரத்துக்கு நாம எதுவும் பண்ண முடியாது, ரிஷி...! இது டிபார்ட்மெண்ட் ஸ்டோர்க்குப் போய்ப் பொருள் வாங்கிட்டு வர்ற மாதிரி கிடையாது. நிறைய விஷயங்களை நாம க்ராஸ் பண்ணணும்.''

''சரி.. எப்பத்தான் சிலை கிடைக்கும்?''

''இன்னும் ஒரு வாரத்துக்கு மேலே ஆகும்.''

''கண்டிப்பாகச் சிலை கிடைக்குமா..?''

''இந்திரபூபதி ஒரு காரியத்துல இறங்கிட்டா அதுல தோல்வியே கிடையாது.''



''மறுபடியும் நான் எப்ப போன் பண்ணட்டும்?''

''நாளைக்கு ராத்திரி போன் பண்ணு. சிலை என்னிக்கு கிடைக்கும்னு கரெக்டா சொல்றேன்.''

''அப்பா.. இது மெகா பிசினஸ். சிலை கை மாறினா 25 கோடி ரூபாய். இதை மனசுல வெச்சுட்டு காரியத்தைப் பண்ணுங்க.''

'எனக்குத் தெரியாதா என்ன?'' செல்போனை அணைத்து ஜிப்பா பாக்கெட்டில் போட்டுக் கொண்ட வள்ளல் பெருமான் போர்டிகோவில் வந்து நின்ற காரைப் பார்த்ததும் மலர்ந்தார்.

இந்திரபூபதியின் கார்.

இந்திரபூபதி இறங்கி உள்ளே வந்தார்.

''வாய்யா.. உனக்கு ஆயுசு நூறு.. இப்பத்தான் உன்னைப் பத்தி பேசிட்டு செல்போனை ஆஃப் பண்ணினேன்.''

''ஸ...ஸார்...''

''என்னய்யா.. மூஞ்சியெல்லாம் ஒரு மாதிரியிருக்கு.. ஏதாவது பிரச்னையா?''

''பிரச்னைதான் ஸார்.''

''என்ன... சொல்லு..''

''சுழியூர் கிராமத்துக் கோயிலில் இருக்கிற நவபாஷாணச் சிலையை நாம எடுக்க முடியாது ஸார்..''

''ஏன்யா?''

''அந்தக் கிராமத்துல இருக்கிற ஒரு தொண்ணூறு வயசுக் கிழவனுக்குக் கோயிலில் இருக்கிற சிலை நவபாஷாணச் சிலைங்கிற உண்மை தெரிஞ்சிருக்கு. அவன் அந்த

உண்மையை எல்லார்க்கும் சொல்லப் போக, கிராமத்து ஜனங்க அந்தச் சிலைக்கு பூஜை புனஸ்காரங்களைப் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. சிலையை எடுத்து வெளியே வெச்ச பின்னாடியும் பூஜைகள் நிற்கல. போதாத குறைக்குப் பக்கத்துக் கிராம ஜனங்களும் சேர்ந்துட்டாங்க... திருவிழா வேற கொண்டாடப் போறாங்களாம்."

"சரியாப் போச்சு..! யாரய்யா அந்தக் கிழவன்? ஆரம்பத்திலேயே அவனைப் போட்டுத் தள்ள வேண்டாமா..?"

"சின்னக் கிராமம்தானே... ஒரு மணி நேரத்துக்குள்ளே விஷயம் பரவிடுச்சு.. ஸார்.."

"இப்ப என்னய்யா பண்றது... அந்த நவபாஷாணச் சிலை கைக்கு வருமா வராதா..?"

"வர்றது கஷ்டம் ஸார்.."

"யோவ்! 25 கோடி ரூபாய்க்கு ரேட் பேசியிருக்கோம். வெள்ளைத் தோல்காரன் பணத்தை ரெடியா வெச்சுகிட்டு காத்துகிட்டு இருக்கானாம்.நீ இப்ப வந்து சிலை கிடைக்கிறது கஷ்டம்னு சொன்னா எப்படிய்யா?"

"நிலைமை சரியில்லாத போது நான் என்ன ஸார் பண்ண முடியும்.."

"நீ என்ன பண்ணுவியோ.. ஏது பண்ணுவியோ... எனக்குத் தெரியாது. ஒரு வாரத்துக்குள்ளே சிலை இந்த டீபாய் மேல உட்கார்ந்துட்டு இருக்கணும்."

"சிலை இங்கே வரணும்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு ஸார்.."



"என்ன வழி?"

"கொஞ்சம் உயிர்ச் சேதம் அதிகமாகும்."

"கொஞ்சமென்ன.. அதிகமாகவே ஆகட்டும். சொல்லு.."

"சுழியூர் கிராமத்துல இருக்கிற ரெண்டு கோஷ்டி ஜனங்களுக்கு மத்தியில் இனப்பகை இருக்கு... நேத்திக்கு அந்த நவபாஷாணச் சிலைக்குப் பூஜை பண்ணும் போது யார் மொதல்ல பூஜை பண்றதுன்னு தகராறு வந்தது. சிலர் சிலையைத் தங்களோட பொறுப்பில் வெச்சுக்க ஆசைப்பட்டாங்க. அதுக்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவிச்சாங்க... நான்தான் ரெண்டு கோஷ்டியையும் சமாதானம் பண்ணி வெச்சேன்."

"நீ இப்போ என்ன சொல்ல வர்றே?"

"ரெண்டு கோஷ்டிக்கும் தெரியாம நாம சிலையை எடுத்துட்டு வந்துட்டா ரெண்டு கோஷ்டிகளும் அடிச்சுக்குவாங்க... தலைகள் உருளும். நாம போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணிட்டு வேடிக்கை பார்த்துகிட்டு இருக்கும் போதே நவபாஷாணச் சிலை வெளிநாட்டுக்குப் பறந்துடும்."

வள்ளல் பெருமான் புன்னகைத்தார். "யோவ்! உனக்கும் மூளை ஒர்க் பண்ணுதய்யா. நீ பேசாம உத்தியோகத்தை ராஜினாமா பண்ணிட்டு எலெக்ஷனுக்கு நில்லு. உன்னை மாதிரியான ஆட்கள்தான் சட்டசபைக்கும் பாராளுமன்றத்துக்கும் போகணும்."

"அப்படி ஒரு யோசனையும் என் மனசுக்குள்ளே இருக்கு ஸார்.."

## 11

அம்பலவாண சுவாமிகள் பட்டுலிங்கத்தைப் புன்னகை யோடு ஏறிட்டார்.

"இப்ப நான் சொல்லப் போறதை நல்லா கவனி. தமிழில் உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை?"

"பதினெட்டு ஸ்வாமி.."

"அது எத்தனை வகை..?"

"மூணு வகை. வல்லினம் இடையினம் மெல்லினம்.. ஸ்வாமி."

"வல்லின எழுத்துக்கள் எது எது?"

"க, ச, ட, த, ப, ற.."

"பட்டு! இந்த ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருக்கிற பாடல் உனக்குப் புரியணும்ன்னா இந்த க, ச, ட, த, ப, ற எழுத்துக்களைத்தான் உபயோகப்படுத்தணும்."

"புரியலையே, ஸ்வாமி!"

"புரிய வைக்கிறேன். பேப்பர்ல எழுதியிருக்கிற அந்த ஓலைச் சுவடிப் பாடலை மறுபடியும் ஒரு தடவை உன்னிப்பா பாரு. பாடலோட ஒவ்வொரு எழுத்துக்கும் முன்னாடி இந்த வல்லின எழுத்துக்களான க, ச, ட, த, ப, ற எழுத்துக்கள் இருக்கும். உதாரணத்துக்கு க கா ச ல இந்த எழுத்துக்களில் க, ச எழுத்துக்கள் இருக்கா..?"

"இருக்கு ஸ்வாமி.."



"அந்த க, ச ரெண்டு எழுத்துக்களையும் நீக்கிட்டா மீதி இருக்கிற எழுத்துக்கள் எது..?"

"கா, ல.."

"ரெண்டையும் சேர்த்துப் படி.."

"கால.."

"அதே மாதிரி இந்த ஓலைச் சுவடி பாடலில் இருக்கிற கசடதபற எழுத்துக்களை எடுத்துட்டு மீதி இருக்கிற எழுத்துக் களை மாத்திரம் படிச்சுப் பாரு.."

பட்டுலிங்கம் பிரமிப்போடு வாய்விட்டுப் படித்தார்.

கால பைரவர் சன்னதி

கீழே பத்தடி ஆழம்

ஒரு அமாவாசையில் தோண்டினால்

சொர்ணச் சுரங்கம்

"ஸ்வாமி.."

"பார்த்தியா... இதுதான்ஓலைச் சுவடி சொல்லும் செய்தி."

"இந்தக் கால பைரவர் சன்னதி எங்கே இருக்கு, ஸ்வாமி?"

"பூவிழியோட அப்பா காசிபர் சுந்தரபாண்டியம் என்கிற ஊரில் அனுசூயா தேவி கோயிலில் தலைமைப் பூசாரியாய் இருந்திருக்கார். அவர்தான் இந்த ஓலைச் சுவடியை ரகசியமா வெச்சிருந்து பார்க்கச் சொல்லிட்டு இறந்து போயிருக்கார். அந்த அனுசூயா தேவி கோயிலில்தான் ஓலைச்சுவடியில் குறிப்பிட்டு இருக்கிற கால பைரவர் சன்னதி இருக்கணும். நீ ஒரு காரியம் செய், பட்டு.."

"சொல்லுங்க, ஸ்வாமி.."

"நீ இப்பவே சுந்தரபாண்டியத்துக்குக் கிளம்பிப்போ. அந்த ஊர்ல ரெண்டு நாள் தங்கியிருந்து கோயிலைச் சுத்திப் பாரு. கோயிலில் கால பைரவர் சன்னதி எங்கேயிருக்கு.. பைரவர் பிரதிஷ்டை செய்யப்பட்டு எவ்வளவு வருஷம் இருக்கும்... கோயிலின் ஸ்தல வரலாறு என்ன.. இது மாதிரியான விஷயங்களை கலெக்ட் பண்ணிட்டு ராத்திரி பதினோரு மணிக்கு மேல் எனக்கு போன் பண்ணு.."

"சரி, ஸ்வாமி!"

பட்டுலிங்கம் கைகளைக் குவித்து விட்டு எழுந்தார்.

## 12

முதலமைச்சரின் அறைக்குள் பவ்யமாய் நுழைந்தார், வள்ளல் பெருமான்.

ஃபைல் ஒன்றைப் படிப்பதில் மும்முரமாய் இருந்த முதலமைச்சர் பரசுராம் ஏறிட்டுப் பார்க்க, வ.பெ. உடம்பை வில்லாய் வளைத்து, "வணக்கம் தலைவரே!" என்றார். சி.எம்.மின் கண்கள் கோபத்தில் ஜுவலித்தது.

"உட்காரய்யா.."

வள்ளல் பெருமான் உட்கார்ந்தார்.

"தலைவர்க்கு கோபம் போலிருக்கு."

"யோவ்! நீயெல்லாம் ஒரு மனுஷனா..! உனக்குப் போய் மந்திரி பதவி கொடுத்தேன் பாரு. என்னைச் சொல்லணும்.."



"தலைவரே! நான் என்ன தப்பு பண்ணிட்டேன்னு என்னைத் திட்டறீங்க..?"

"தப்பு ஒண்ணா ரெண்டா... பட்டியல் போட உட்கார்ந்தா 24 மணி நேரம் போதாதய்யா.."

"தலைவரே! பத்திரிகைகளில் வர்ற செய்திகளை வெச்சுகிட்டு நீங்க என் மேல அபாண்டமா பழி சுமத்தறது கொஞ்சம் கூட சரியில்லை."

"இதோ பார்... நீ ஓட்டுப் போட்ட ஜனங்களை ஏமாத்தலாம். என்னை ஏமாத்தலாம். ஆனா அந்த ஆண்டவனையே ஏமாத்த நினைக்கிற பாரு.. அதுதான் தப்பு."

"நான் அப்படி என்ன பண்ணிட்டேன், தலைவரே!"

"கோயில் சொத்துக்களையும், கோயிலில் இருக்கிற அரிய சிலைகளையும் பாதுகாக்கத்தான் உன்னை அறநிலையத்துறை அமைச்சராப் போட்டேன். ஆனா நீ கடத்தி, வெளிநாட்டில் இருக்கிற உன் மகன் ரிஷி மூலமா வித்துக் கோடிக் கணக்கில் பணத்தைப் பார்த்துக்கிட்டிருக்கே.."

"எல்லாம் பொய், தலைவரே..."

"எது பொய் எது உண்மைன்னு எனக்கு நல்லாவே தெரியும். இந்தா... இந்த பேப்பரில ஒரு கையெழுத்துப் போடு."

"இது என்ன, தலைவரே?"

"உன்னோட ராஜினாமா கடிதத்தை நானே டைப் பண்ணிட்டேன். கையெழுத்தைப் போட்டுட்டுப் போய்க்கிட்டே யிரு."

"தலைவரே..! கட்சிக்காக நான் எவ்வளவு உழைச்சு இருக்கேன்!"

''அந்த ஒரு காரணத்துக்காகத்தான் உன்னை உட்கார்த்தி வெச்சுப் பேசிகிட்டிருக்கேன்.. ம்... கையெழுத்தைப் போடு. ராத்திரியானா ஒருநடிகை, ஒரு ஸ்காட்ச் பாட்டில் இல்லாமே நீ எப்பவாவது தூங்கியிருப்பியா?''

''நம்ம அமைச்சரவையில் எந்த மந்திரிதான் ஒரு பொண்டாட்டியோடு யோக்யமா இருக்கான்?''

''இதோ பார்.. மத்தவங்களைப் பத்தி நீபேசாதே... கையெழுத்தைப் போடு.. போய்க்கிட்டே இரு.''

''எனக்கு ஒரு வாரம் டைம் கொடுங்க, தலைவரே! நானே ராஜினாமா லெட்டர் எழுதிக் கொடுத்துடறேன்..''

''எதுக்கு ஒரு வாரம் டைம்?''

''எனக்குச் சில பிரச்னைகள் இருக்கு. அதை சால்வ் பண்ணிக்க அவகாசம் வேண்டாமா?''

முதலமைச்சர் தன்னுடைய இடது கை சுட்டு விரலை உயர்த்தினார். ''சரி! உனக்குச் சரியா ஒரு வாரம் டைம். இன்னிக்குப் புதன் கிழமை. வர்ற புதன்கிழமை நீ மினிஸ்டர் போஸ்ட்டை ராஜினாமா பண்ணிடணும். பத்திரிகைக்காரங்க உன்னுடைய ராஜினாமாவுக்கான காரணத்தைக் கேட்டா கட்சிப் பணிக்காகன்னு சொல்லிடு.''

''தலைவரே..!''

''ஒண்ணும் பேசாதே... கிளம்பு..! நான் பார்க்க வேண்டிய ஃபைல்ஸ் நிறைய இருக்கு.''

வள்ளல் பெருமான் மனசில் எரிகிற கோப நெருப்போடு நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.



## 13

ராத்திரி பதினோரு மணி.

அம்பலவாண ஸ்வாமிகளின் செல்போன் விழித்துக் கொண்டு கத்த, ஸ்வாமிகள் எழுந்து உட்கார்ந்து செல்லைக் காதுக்குப் பொருத்தினார்.

''ஸ்வாமி! நான் பட்டு. சுந்தரபாண்டியத்திலிருந்து பேசறேன்.''

''சொல்லு. அனுசுயா தேவி கோயிலுக்குப் போனியா?''

''ம்.. போனேன்... ரொம்பவும் பழமையான கோயில். ஒரு காட்டுப் பகுதிக்குள்ளே இருக்கு. பூவிழியோட அப்பா அர்ச்சகராக இருந்த வரைக்கும் கோயிலுக்கு ஓரளவு கூட்டம் வந்ததாம். அவர் இறந்த பின்னாடி கோயிலைப் பராமரிக்க யாரும் இல்லாததினால கோயில் பாழடைஞ்சு கிடக்கு ஸ்வாமி! கோயிலுக்குக் கதவே இல்லைன்னா பார்த்துக்கோங்களேன்.''

''கோயிலுக்குள்ளே கால பைரவர் சன்னதி இருக்கா?''

''இருக்கு, ஸ்வாமி... கருங்கல்லால் கட்டப்பட்ட ஒரு அறைக்குள்ளே பைரவர் சிலை இருக்கு. சிதிலமான சிலை. பகல் நேரத்திலேயே உள்ளுக்குள் கரித்தூளை நிரப்பின மாதிரி இருட்டு.''

''ஜன நடமாட்டம்?''

''அறவே கிடையாது. எல்லாமே நமக்குச் சாதகமாயிருக்கு... ஸ்வாமி.. நீங்க சுந்தரபாண்டியத்துக்குப் புறப்பட்டு வந்தா காரியத்தை முடிச்சுகிட்டுப் போயிடலாம்.''

''பட்டு..! நீ ஒண்ணைப் புரிஞ்சுக்க.. இந்தக் காரியத்தில் நீயும் நானும் மட்டும் இறங்கறது அவ்வளவு புத்திசாலித்தனம் கிடையாது! இந்திரபூபதி கிட்டே சொல்லி அமைச்சர் வள்ளல் பெருமான் மூலமா ஏற்பாடு பண்ணினால் சுலபமாகச் சொர்ணச் சுரங்கம் கிடைக்கும். கிடைக்கிறதை வழக்கம் போல் பங்கு போட்டுக்கலாம்.''

''சொர்ணச் சுரங்க விஷயத்தை இந்திரபூபதி கிட்டே சொல்லிட்டீங்களா, ஸ்வாமி.''

''இனிமேத்தான் சொல்லணும்.''

''நான் சுந்தரபாண்டியத்திலேயே இருக்கட்டுமா?''

''வேண்டாம்.. திருநெல்வேலி போய் ஒரு லாட்ஜில் தங்கிக்க. நாளைக்குக் காலையில் போன் பண்ணு.''

''சரி..ஸ்வாமி!''

அம்பலவாண ஸ்வாமிகள் செல்போனை அணைத்துத் தலையணைக்குப் பக்கத்தில் வைத்த விநாடி-

ஜன்னலில் வெளிச்சம் அடித்தது.

ஸ்வாமிகள் எட்டிப் பார்த்தார்.

காரின் ஹெட்லைட் வெளிச்சம்.

திகைத்தார்.

'இந்நேரத்திற்கு யார் வருகிறார்கள்?'

குழப்பமாய் நடந்து போய்த் தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்து வெளியே பார்த்தார்.

லான்ஸர் கார் நின்றிருந்தது.



காரினின்றும் இந்திரபூபதி இறங்கி வாசற்படி நோக்கி வந்து கொண்டிருந்தார். ஸ்வாமிகள் போய் எதிர் கொண்டார்.

''வாங்க.. இந்திரபூபதி... என்ன இந்த நேரத்துல?''

''உங்ககிட்டே உதவிக்காக வந்திருக்கேன்... ஸ்வாமி!''

''உங்களுக்கு இல்லாத உதவியா...? நீங்க மொதல்ல உள்ளே வாங்க..''

ஸ்வாமிகள் உள்ளே போக, இந்திரபூபதி தொடர்ந்தார்.

''கார்ல வேற யார் இருக்காங்க?''

''யாரும் இல்லை... காரை நான்தான் ட்ரைவ் பண்ணிட்டு வந்தேன், ஸ்வாமி..''

''உட்கார்ங்க...'' ஸ்வாமிகள் படுக்கையறையில் இருந்த ஒரு நாற்காலியைக் காட்ட, இந்திரபூபதி உட்கார்ந்தார்.

''சொல்லுங்க... என்ன விஷயம்?''

இந்திரபூபதி சில விநாடிகள் தயங்கிவிட்டுச் சொன்னார். 'சுழியூர் கிராமத்துக் கோயிலில் இருந்த நவபாஷாணச் சிலையைக் கொண்டு வந்துட்டேன் ஸ்வாமி... கார் டிக்கியில் இருக்கு..''

ஸ்வாமிகள் திகைத்தார். இந்திரபூபதி தொடர்ந்தார்.

''இந்த விஷயம் கிராமத்தில் இருக்கிற யார்க்கும் தெரியாது. நாளைக்கு விடியும்போதுதான் விஷயம் வெளியே வரும். ஊர் ரெண்டு படும். தலைகள் உருளும். கிராமமே ரத்தக் களறியாகும்... ஸ்வாமி!''

''விஷயம் மினிஸ்டர்க்குத் தெரியுமா?''

''தெரியும்... செல்போன்ல சொல்லிட்டேன். அவர்தான் நவபாஷாணச் சிலையை உங்க பொறுப்பில் வெச்சுக்கச் சொன்னார்.''

''என்னோட பொறுப்பிலா..?''

''ஆமா ஸ்வாமி...! 25 கோடி ரூபாய் மதிப்புள்ள நவபாஷாணச் சிலையை உங்களைத் தவிர வேற யாரையும் நம்பி ஒப்படைக்க முடியாதே!''

ஸ்வாமிகள் பார்வையை ஒரு பக்கமாய் நிறுத்தித் தாடியை உருவிக் கொண்டு யோசிக்க... இந்திரபூபதி கேட்டார்.

''உங்க பொறுப்பில் சிலை இருக்கிறதால ஏதாவது பிரச்னையா, ஸ்வாமி?''

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. இன்னும் ரெண்டு நாளில் நீங்களும் நானும் வெளியூர்ப் பயணம் ஒண்ணை மேற்கொள்ள வேண்டியிருக்கு. அதைப்பத்தி நான் யோசனை பண்ணிக்கிட்டிருந்தேன்.''

இப்போது இந்திரபூபதியின் முகத்தில் திகைப்பு.

''நீங்களும் நானும் வெளியூர்ப் பயணம் போக வேண்டியிருக்குமா?''

''ஆமா..''

''எதுக்கு, ஸ்வாமி?''

அம்பலவாண ஸ்வாமிகள் ஒரு ஐந்து நிமிட நேரத்தை எடுத்துக் கொண்டு, பூவிழியைப் பற்றியும், அவள் கொண்டு வந்து கொடுத்த ஓலைச் சுவடியைப் பற்றியும், ஓலைச் சுவடியில் இருந்த 'சொர்ணச் சுரங்கம்' வாசகத்தைப் பற்றியும் சொல்லி முடித்தார்.



இந்திரபூபதியின் கண்களில் ஆசை சுடர் விட்டது.

''சொர்ணச் சுரங்கமா?''

''ம்..! கால பைரவர் சன்னதிக்குக் கீழே பத்தடி ஆழத்தில் சொர்ணச் சுரங்கம் இருக்குன்னு ஓலைச் சுவடி சொல்லுது.''

''உண்மையிலேயே சொர்ணச் சுரங்கம் இருக்குமா, ஸ்வாமி.''

''ஓலைச் சுவடிகள் பொய் சொல்லாது, இந்திரபூபதி. பூமிக்கடியில் புதைஞ்சு கிடக்கிற ஐஸ்வர்யங்கள் சித்தர்களின் மனக் கண்ணில் தெரியும் போது அவங்க ஓலைச் சுவடிகளில் பூடகமா எழுதி வெச்சிருவாங்க.. அந்த ஓலைச் சுவடிகளை மேலோட்டமா படிச்சா எதுவும் புரியாது. உன்னிப்பா படிச்சாத்தான் ஒவ்வொரு வார்த்தையும் புரியும்.''

''அந்த ஓலைச் சுவடியை நான் பார்க்கலாமா ஸ்வாமி?''

''தாராளமா...'' சொன்ன அம்பலவாண ஸ்வாமிகள் சுவரோரமாய் நிறுத்தப்பட்டிருந்த மரப் பீரோவுக்குப் போய் ஓலைச் சுவடியோடு வந்தார். இந்திரபூபதி வாங்கிப் பார்த்தார்.

''ரொம்பவும் பழைய சுவடி மாதிரி தெரியுது, ஸ்வாமி!''

''என்னோட கணக்குப்படி இது 2000 வருஷங்களுக்கு முந்தின ஓலைச் சுவடி.''

''எந்த ஊர், ஸ்வாமி?''

''சுந்தரபாண்டியம்.''

''சுவடி வாசகப்படி தங்கம் நிறைய இருக்குமா.. ஸ்வாமி?''

''சொர்ணச் சுரங்கம்ன்னு போட்டிருக்கே... ஏதாவது ஒரு மன்னர் காலத்து நகைகள் மண் தாழிகளுக்குள் குவியல் குவியலாய் இருக்கும்.''

''நாம என்னிக்கு சுந்தரபாண்டியம் போகணும்?''

''ஒரு அமாவாசையில் தோண்டணும்னு சுவடியில் போட்டிருக்கு. நாளைக் கழிச்சு மறுநாள் அமாவாசை. அன்னிக்கு ராத்திரி நீங்களும் நானும் சுந்தரபாண்டியம் அனுசுயாதேவி கோயிலுக்குப் போறோம். கால பைரவரின் சன்னதிக்குக் கீழே இருக்கிற கல்லை அகற்றிவிட்டுப் பத்தடி ஆழம் தோண்டி சொர்ணச் சுரங்கத்துக்குள்ளே நுழையறோம். இந்த விஷயத்தை அமைச்சர் வள்ளல் பெருமான்கிட்டே சொல்லிட்டா நமக்கு எந்தப் பிரச்னையும் வராமே அவர் பார்த்துக்குவார்.''

இந்திரபூபதி குரலைத் தாழ்த்திக் கொண்டார்.

''ஸ்வாமி! உங்ககிட்டே இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லணும்.''

''என்ன..?''

''வள்ளல் பெருமானோட மந்திரி பதவி ஆட்டம் கண்டுடுச்சு... அவரோட மந்திரி பதவிக்கு இன்னும் ஒரு வாரம்தான் ஆயுள்.''

''என்ன சொல்றீங்க?''

''வள்ளல் பெருமானோட நடவடிக்கைகள் சரியில்லைன்னு டோஸ் விட்ட சி.எம். அவரை ராஜினாமா பண்ணச் சொல்லிட்டாராம். வள்ளல் பெருமான் ஒரு வாரம் அவகாசம் கேட்டிருக்கார்.''

''அப்படின்னா இந்த ஒரு வார காலத்துக்குள்ளேநாம எல்லாக் காரியங்களையும் முடிச்சுக்கணும்..''



'ஆமா, ஸ்வாமி...! நவ பாஷாணச் சிலையை 25 கோடி ரூபாய்க்கு வாங்கிக்க வெளிநாட்டு பார்ட்டி ரெடியாயிருக்கு. சிலையைப் பார்க்கிறதுக்காக அமைச்சரோட மகன் ரிஷி நாளைக்குப் பார்ட்டியைக் கூட்டிகிட்டு இந்தியா வர்றான்..''

''எனக்குச் சேர வேண்டிய பங்கை மறந்துட வேண்டாம்.''

''உங்களை மறக்க முடியுமா, ஸ்வாமி! சுழியூரில் நவபாஷாணச் சிலை இருக்குன்னு சொன்னதே நீங்கதான்.''

''அந்த நினைப்பு இருந்தா போதும்.''

''சிலையை உள்ளே கொண்டு வந்துடலாமா, ஸ்வாமி?''

''ம்.. கொண்டு வாங்க.. நெல்லு கொட்டி வெச்சு இருக்கிற அறைக்குள்ளே பத்திரப்படுத்திக்கலாம்.''

இந்திரபூபதி காரின் டிக்கியில் இருக்கும் சிலையை எடுத்துக் கொண்டு வருவதற்காக வேகமாகப் போனார்.

## 14

''என்ன... இன்னுமா தூக்கம்?''

பூவிழியின் குரல் கேட்டுப் போர்வையை விலக்கினான் சம்பத்.

''விடிஞ்சிடுச்சா..?''

''மணி எவ்வளவு தெரியுமா, சம்பத்?''

''எவ்வளவு...? ஆறு இருக்குமா?''

''ஏழு மணி...'' சொன்ன பூவிழி ஒரு நாற்காலிக்குச் சாய்ந்தாள்.

''போய்க் குளியலை முடிச்சுட்டு வா, சம்பத். உப்புமா பண்ணியிருக்கேன். சாப்பிட்டுக் கிளம்பலாம்.''

''எங்கே?''

''மறந்துட்டியா...? அம்பலவாண ஸ்வாமிகள் ரெண்டுநாள் கழிச்சு வரச் சொன்னாரே..! ஓலைச்சுவடி பாடலுக்கு அர்த்தம் சொல்லப் போறதா சொல்லியிருக்காரே!''

''எனக்கு நம்பிக்கையில்லை, பூவிழி..''

''என்ன நம்பிக்கையில்லை?''

''ஸ்வாமிகளுக்கு அர்த்தம் தெரிஞ்சிருந்தா அன்னிக்கே சொல்லியிருப்பார்..''

''எனக்கு நம்பிக்கையிருக்கு.. சம்பத்! நீ போய் மொதல்ல குளிச்சுட்டு வா...''

''பூவிழி! நான் ஒண்ணு சொன்னா நீ கேட்கணும்..''

''என்ன..?''

''நீ கொண்டு வந்த ஒன்பதாவது திசை ஓலைச் சுவடியில் இருக்கிற பாட்டுக்கு ஸ்வாமிகளால் அர்த்தம் சொல்ல முடியலைன்னா நான் அந்த ஓலைச் சுவடியை எடுத்துக்கிட்டு வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் போகப் போறேன். அங்கே எனக்குத் தெரிஞ்ச நாதமுனின்னு ஒருத்தர் இருக்கார். அவர்கிட்டே கொடுத்துப் பார்க்கலாம்ன்னு இருக்கேன்.''

'அவர்க்கும் தெரியலைன்னா?''

''வைத்தீஸ்வரன் கோயில்ல ஓலைச் சுவடிகளைப் படிக்கிறதுல பாண்டித்யம் பெற்றவர்கள் நிறையப் பேர் இருக்காங்க... அவங்கள்ல யாராவது ஒருத்தர்க்கு 'ஒன்பதாவது



திசை' ஓலைச் சுவடியில் இருக்கிற பாடலுக்கு அர்த்தம் தெரியாமலா போயிடும்?''

''எப்படியோ... சம்பத்.. அந்த ஓலைச் சுவடியில் என்ன எழுதியிருக்குன்னு தெரிஞ்சா போதும். அப்பா சாகும்போது காரணம் இல்லாமே சொல்லியிருக்க மாட்டார்.''

''கவலைப்படாதே, பூவிழி... கண்டு பிடிச்சுடுவோம்..! அதுக்கு முன்னாடி நீ ஒரு காரியம் பண்ணணும்.''

''என்ன..?''

''உன்னோட சூட்கேஸுக்குள்ளே ஒரு பூஜைப் பொருள் மாதிரி வெச்சிருக்கிற அந்த சித்தர் காலத்து மண்டையோட்டை நீ டிஸ்போஸ் பண்ணிடணும்.''

''என்ன..?''

''இதோ பார், பூவிழி..! மூடநம்பிக்கைக்கும் ஒரு எல்லை இருக்கு..! உங்கப்பா சொன்னார்ங்கிற காரணத்துக்காக அதை சூட்கேஸ்ல வெச்சுக்கிட்டு ஊர் ஊரா திரியறது கொஞ்சம் கூட நல்லாயில்லை. இதே சித்தர் காட்டில் ஒரு நல்ல இடமாப் பார்த்துப் புதைச்சுடு.''

''எனக்குக் கல்யாணமாகிற வரைக்கும் இந்த மண்டை யோட்டைப் பத்திரமா பாதுகாத்து வெச்சிருக்கணும்னு அப்பா சொல்லியிருக்கார்.''

''சரி.. கல்யாணம் எப்போ?''

''அது நடக்கும்போது..''

''மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கியா?''

''அது கடவுளோட வேலை..''

"அந்தக் கடவுள் உனக்காக ஒரு மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கார் தெரியுமா?"

"எனக்குத் தெரியாதே.. யாரவர்?"

"பேரு சம்பத்... இப்போதைக்கு ஊரு சித்தர் காடு."

கண்களில் சந்தோஷம் மின்ன, பூவிழி அவனையே குறுகுறுவென்று பார்த்தாள்.

"நீ என்ன பார்க்கிறே?"

"நீ சொன்ன வார்த்தைகள் நிஜமா, சம்பத்?"

"எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. அடுத்த முகூர்த்தத்துல உனக்கும் எனக்கும் திருக்கருகாவூர் அம்மன் சன்னதியில் கல்யாணம். நீ என்ன சொல்றே..?"

"இதுல நான் சொல்ல என்ன இருக்கு? இனிமே நீ சொன்னபடிதான் எல்லாமே!"

சம்பத்தின் கைகளை நெகிழ்ச்சியோடு பற்றிக் கொண்டாள், பூவிழி.

## 15

அமைச்சர் வள்ளல் பெருமான் அந்தக் காலை வேளையிலேயே ரிசப்ஷன் அறையில் உட்கார்ந்து பாட்டிலைத் திறந்து வைத்துக் கொண்டு தாகசாந்தி செய்து கொண்டிருக்க... சன் டி.வி.யில் எட்டு மணிச் செய்தி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

'வணக்கம்! தலைப்புச் செய்திகள். சுழியூர் கிராமத்தில் பயங்கர இனக் கலவரம். 21 பேர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர்.



பிரதமர் இன்று அமெரிக்கா பயணம். பாகிஸ்தான் மீது சரமாரி புகார்.அரசு ஊழியர்கள் நாளை முதல் போராட்டம். பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ஸ்விஸ் வீராங்கனை வெற்றி."

வள்ளல் பெருமான் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

செய்தி தொடர்ந்தது. "கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுழியூர் கிராமத்தில் இன்று பயங்கர இனக் கலவரம் வெடித்தது. இந்தக் கலவரத்துக்குக் காரணம் ஒரு கோயில் சிலை என்று சொல்லப்படுகிறது. சுழியூரில் உள்ள புராதனக் கோயிலில் சிவன் சிலை நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்ட சிலை என்பதால் அந்தக் கோயில் தொல்பொருள் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்தக் கோயிலைத் தொல்பொருள் பாதுகாப்புத் துறையினர் புதுப்பிக்க முயற்சிகள் எடுத்தபோது கிராமத்தில் உள்ள இரண்டு இனத்தாரும் அதில் தீவிர அக்கறை காட்டினர். கோயிலில் உள்ள சிலைக்கு யார் முதலில் பூஜை செய்வது என்ற விஷயத்தில் ஆரம்பித்த தகராறு நாள்தோறும் வலுவடைந்து கொண்டே வந்தது. இந்த நிலைமையில் நேற்று இரவு சாமி சிலை காணாமல் போய்விட்டது. இரண்டு பிரிவினரில் யாரோ ஒரு பிரிவினர் சிலையை எடுத்துக் கொண்டு போய் விட்டதாகச் செய்தி பரவ - இன்று அதிகாலையில் கலவரம் வெடித்தது. இந்தக் கலவரத்தில் இருதரப்பையும் சேர்ந்தவர்கள் மொத்தம் 21 பேர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். இதில் 12 பேர் பெண்கள். கிராமத்தில் தொடர்ந்து பதட்டம் நிலவுவதால் அங்கே போலீஸ் படை குவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இரண்டு தமிழக அமைச்சர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளார்கள்."

செல்போன் கத்தியது.

ரிமோட் கண்ட்ரோலால் டி.வி.யை அணைத்துவிட்டு செல்போனை எடுத்துக் காதுக்குப் பொருத்தினார். மறுமுனையில் இந்திரபூபதி சிரிப்போடு கேட்டார்.

''டி.வி.யில் நியூஸ் போய்க்கிட்டிருக்கு. பார்த்துட்டு இருக்கீங்களா ஸார்..?''

''ம்..ம்..''

''மொத்தம் 21 பேர் அவுட். மனசுக்குக் கஷ்டமாத்தான் இருக்கு.. ஆனா 25 கோடியை நினைக்கும்போது சந்தோஷமாயிருக்கு ஸார்..''

''யோவ்! ஸ்வாமிகள் என்ன சொல்றார்?''

''நவபாஷாணச் சிலையை எடுத்துட்டுப் போக வெளிநாட்டு பார்ட்டி எப்ப வருவாங்கன்னு கேட்கிறார்?''

''இன்னிக்கு ராத்திரி ரிஷி சென்னைக்கு வந்துருவான். சிலையை வாங்கப் போற பார்ட்டி நாலு நாள் கழிச்சு மும்பை வருவாங்க. அதுக்கப்புறம் நாம கொடுக்கிற தகவலைப் பொறுத்து சென்னை வருவாங்க...''

''சிலை ஸ்வாமிகளோட ஆஸ்ரமத்திலேயே இருக்கட்டுமா? இல்லை... சென்னைக்குக் கொண்டு வந்துடட்டுமா ஸார்...''

''சிலை அங்கேயே இருக்கட்டும். வெளிநாட்டு பார்ட்டி மும்பை வந்த பின்னாடி முடிவு பண்ணிக்கலாம். அப்புறம் அந்த 'சொர்ணச் சுரங்கம்' மேட்டர் என்னாச்சு..? நாளைக்கு ராத்திரி சுந்தரபாண்டியம் அனுசூயா தேவி கோயிலுக்குப் போய் கால பைரவர் சன்னதியைத் தோண்டிப் பார்த்துடலாமா?''



''தோண்டிப் பார்த்துடலாம் ஸார்... அதுக்காக எலெக்ட்ரானிக் டிக்கிங் மெஷின் ஒண்ணை ஏற்பாடு பண்ணிட்டேன். மெஷின் பத்தே நிமிஷத்துல குழியைத் தோண்டிடும்.''

''யோவ்! அந்த ஓலைச் சுவடி மேட்டர் உண்மையாய் இருக்குமா?''

''என்ன ஸார் திடீர்னு சந்தேகம்?''

''எனக்கென்னவோ மனசுக்குள்ளே உறுத்தலாயிருக்கு. என்னோட பகுத்தறிவுக்கு இதெல்லாம் சரியாப்படலையா..''

''ஸார்.. உங்களுக்கு ஏற்கெனவே கடவுள் பக்தி கிடையாது. பொதுவா கடவுள் நம்பிக்கை இல்லாதவங்களுக்கு இந்த ஓலைச்சுவடி மேட்டர் எல்லாம் அபத்தமாத் தெரியும்.''

''ஸ்வாமிகள்... என்ன சொல்றார்?''

''இந்த ஓலைச்சுவடி விஷயத்தில் அவர் ரொம்பவும் ஸ்ட்ராங்காய் இருக்கார் ஸார். நிச்சயமா கால பைரவர் சன்னதிக்குக் கீழே சொர்ணச் சுரங்கம் இருக்கும்னு சொல்றார். அவர் இதுவரைக்கும் சொன்னது எதுவுமே தப்பாய்ப் போனதில்லை ஸார்..''

''சரி.. நானும் ரிஷியும் நாளைக்குக் காலையில் டாடா சுமோவில் புறப்பட்டுச் சித்தர்காட்டுக்கு வந்துடறோம். அங்கிருந்து எல்லோரும் ஒண்ணாவே சுந்தரபாண்டியம் அனுசூயா தேவி கோயிலுக்குப் போயிடலாம்.''

''ஸ்வாமிகள் கிட்டே நான் சொல்லிடறேன் ஸார்.''

''ஸ்வாமிகள் என்ன பண்றார்?''

''பூஜையில் இருக்கார். ஒரு பத்து நிமிஷத்துல வந்துடுவார் வந்ததும் உங்களுக்கு போன் பண்ணச் சொல்லட்டுமா ஸார்?''

''வேண்டாம்.. ராத்திரிக்குப் பேசிக்கலாம்..'' சொன்ன வள்ளல் பெருமான் செல்போனை அணைத்தார்.

## 16

சம்பத்தும் பூவிழியும் அம்பலவாண ஸ்வாமிகளின் ஆஸ்ரமத்துக்கு வந்தபோது வெளியே ஏழெட்டுக் கார்கள் நின்றிருக்க கஸ்டமர்கள் ஏடு பார்ப்பதற்காக பெஞ்சுகளில் காத்திருந்தார்கள்.

ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்துவிட்ட ஸ்வாமிகள் உள்ளே வரும்படி கையசைக்க... இருவரும் உள்ளே போனார்கள். அறை முழுக்க சாம்பிராணி மணத்தது.

''வணக்கம், ஸ்வாமி..!''

''உட்கார்ங்க..''

பாயில் உட்கார்ந்தார்கள்.

ஸ்வாமிகள் சில விநாடிகள் வரை தாடியைக் கோதிக் கொண்டிருந்து விட்டு, அந்த ஓலைச் சுவடியை எடுத்து அவர்களிடம் நீட்டினார்.

''இது வீட்டில் இருக்கக் கூடாத ஒரு ஓலைச் சுவடி.''

பூவிழி பதட்டமானாள்.

''ஏன் ஸ்வாமி..?''

''இந்த ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருக்கிற பாடல் துஷ்ட தேவதைகளைப் புகழ்வது போல் உள்ளது. நல்ல நிலையில் ஆரோக்கியமாக இருந்த உன்னோட அப்பா காசிபர் திடீர்னு செத்துப் போனதுக்குக் காரணம் இந்த ஓலைச்சுவடிதான்!''



பூவிழியின் கண்களில் கலக்கம். ஸ்வாமிகள் தொடர்ந்தார். ''இந்த ஓலைச் சுவடியில் உள்ள லிபி எனக்குப் புரியாததினால மாந்திரீக முறையில் ப்ரஸன்னம் போட்டுப் பார்த்தேன். அப்பதான் இந்த உண்மைகள் எல்லாம் தெரிஞ்சுது. இன்னமும் இந்த ஓலைச் சுவடியை நீ கையில் வெச்சிருந்தா இன்னும் பெரிய பெரிய இழப்புக்கள் எல்லாம் ஏற்படும். இத்தனை நாளும் இதை உன் வீட்டில் வெச்சிருந்த தோஷம் போகணும்னா இந்த ஓலைச் சுவடியை நெருப்பில் பொசுக்கி அதன் சாம்பலைக் குளத்துத் தண்ணியில் கரைச்சுடணும்.''

பூவிழி குறுக்கிட்டாள்.

''ஸ்வாமி!''

''சொல்லு..''

''வீட்ல எத்தனையோ ஓலைச் சுவடிகள் இருக்கும்போது இந்த ஓலைச் சுவடிக்கு மட்டும் அப்பா 'ஒன்பதாவது திசை'ன்னு ஏன் பெயர் வைக்கணும்..?''

ஸ்வாமிகள் புன்னகைத்தார். ''நீ கேட்ட இந்தக் கேள்விக்கும் ப்ரசன்னத்தில் பதில் கிடைச்சது. பொதுவா திசைகள் எட்டுதான். ஒன்பதாவது திசை என்று ஒன்று கிடையாது. இதன் பொருள் 'இல்லாத ஒன்றைத் தேடிப் போகாதே' என்பது. இது தப்பான விபரீதமான ஓலைச் சுவடி என்பதை எல்லோர்க்கும் புரிய வைக்கிறதுக்காகத்தான் உன்னோட அப்பா 'ஒன்பதாவது திசை'ன்னு பேரைக் கொடுத்திருக்கார்.''

ஸ்வமிகள் பேசி முடிக்க... அறையில் அரை நிமிஷநேரம் மௌனம் நிலவியது. பின் சம்பத் வாயைத் திறந்தான்.

''ஸ்வாமி! இந்த ஓலைச்சுவடியை நீங்களே நெருப்பில் பொசுக்கி அதனோட சாம்பலைக் கொடுங்க.. போகும்போது குளத்துல கரைச்சுடறோம்.''

பூவிழியை ஏறிட்டார் ஸ்வாமிகள்.

"நீ என்னம்மா சொல்றே?"

"அவர் சொன்னபடியே செய்யுங்க, ஸ்வாமி!"

"நல்லது.." சொன்ன ஸ்வாமிகள் தன் கையில் இருந்த ஓலைச் சுவடியை அருகில் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்குக்குக் கொண்டு போய் அதன் சுடரில் வைத்தார். காய்ந்து போயிருந்த ஓலைச் சுவடி கப்பென்று தீப்பிடித்துக் கொள்ள... படபடவென்று எரிந்தது. அதற்குக் கீழே காகிதத்தாள் ஒன்றை வைத்தார் ஸ்வாமிகள்.

ஒரு நிமிஷ நேரத்துக்குள் ஓலைச் சுவடி முழுவதுமாய் எரிந்து சாம்பலாகக் காகிதத்தில் உதிர்ந்தது. அதை அப்படியே மடித்துப் பொட்டலமாகக் கட்டிப் பூவிழியின் கையில் கொடுத்தார் ஸ்வாமிகள்.

'இன்றைய தினத்திலிருந்து உனக்கு எல்லாமே நல்லதாக நடக்கும். குளத்தில் இந்தச் சாம்பலைக் கரைச்சுட்டு அப்படியே திரும்பிப் பார்க்காமே கரையேறி மாரியம்மன் கோயிலுக்குப் போய்ட்டு வந்துரும்மா.."

"அப்படியே செய்கிறேன், ஸ்வாமி..."

"இன்னொரு முக்கியமான விஷயம். நீ இனிமே உன்னோட பழைய வீட்ல இருக்கிறது நல்லதில்லை. மேற்குப் பக்கமாய் இருக்கிற ஒரு ஊருக்குப் போய் வாடகை வீட்ல தங்கிக்க. அந்த வீடு வடக்குப் பார்த்து இருக்கிறது நல்லது."

"ஸ்வாமி..!" பூவிழி தயங்கினாள்.

"என்னம்மா..?"



"நானும் இவரும் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கோம். நீங்கதான் ஒரு நல்ல நாள் பார்த்துக் குறிச்சுக் கொடுக்கணும்."

"பேஷா!... உன்னோட ஜென்ம நட்சத்திரம் என்னம்மா?"

"ஆயில்யம்.."

"தம்பி! உன்னோட நட்சத்திரம்?"

"மிருகசீரிஷம்."

"அடுத்த மாசம் 14 ஆம் தேதி புதன்கிழமை முகூர்த்த நாள். கல்யாணத்தை நடத்திக்கலாமே.."

இருவரும் கும்பிட்டு விட்டு எழுந்தார்கள். "நாங்க வர்றோம், ஸ்வாமி."

அவர்கள் வெளியேறித் தலைகள் மறையும் வரைக்கும் மௌனமாய் இருந்த ஸ்வாமிகள் பின் பக்கத்து அறையைத் திரும்பிப் பார்த்து அங்கே நின்றிருந்த இந்திரபூபதியை நோக்கி ஒரு புன்னகையை வீசிவிட்டுக் கண்களைச் சிமிட்டினார்.

## 17

கோயில் குளத்தில் ஓலைச் சுவடியின் சாம்பலைக் கரைத்து விட்டு அருகில் இருந்த மாரியம்மன் கோயிலுக்குப் போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள் பூவிழியும் சம்பத்தும். பூவிழி அவனுடைய கையை மெல்லப் பற்றினாள்.

"சம்பத்.."

"ம்.."

''நான் இன்னிக்கே ஊருக்குக் கிளம்பறேன்..''

''இன்னிக்கேவா?''

''ம்..''

''என்ன அவசரம்?''

''ஸ்வாமிகள் என்ன சொன்னார்... நான் இப்போ குடியிருக்கிற வீட்டைக் காலி பண்ணிட்டு வேற வீட்டுக்குக் குடி போகணும்னு சொல்லலையா..?''

''அதுக்காக உடனடியா பண்ணிடறதா?''

''ஒரு விஷயம் நமக்கு நெகட்டிவ்வா இருக்கிறபட்சத்தில் அதை உடனடியா மாத்திக்கணும். அதைத் தள்ளிப் போடறது னால வேற பிரச்னைகளும் புதுசா முளைக்கலாம்.''

''ரெண்டு நாள் இருந்துட்டுப் போகலாமே?''

''இங்கே இருக்கிறதால என்ன பிரயோஜனம்..? ஊருக்குப் போனாலாவது வேறு வீடு பார்க்கிற முயற்சியை ஆரம்பிக்க லாம்!''

''வீடு எங்கே பார்க்கலாம்னு உத்தேசம்?''

''சுந்தர பாண்டியத்துக்குப் பக்கத்துல பூவாணின்னு ஒரு கிராமம் இருக்கு. அழகிய கிராமம். அங்கே பார்க்கலாம்னு இருக்கேன். வீடு பார்த்துட்டு உங்களுக்கு லெட்டர் போடறேன்.''

சம்பத் சிரித்தான். ''வீடு பார்க்க லேட் பண்ணிடாதே. அடுத்த மாசம் 14 ஆம் தேதி நம்ம கல்யாணம் வேற நடக்கணும். அதை மறந்திடாதே.''



'அதை மறக்க முடியுமா என்ன?'' சொன்ன பூவிழி சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, சம்பத்தின் தோள்ப்பட்டையைத் தன் தோள்ப்பட்டையால் மெல்ல இடித்தாள்.

## 18

''சொர்ணச் சுரங்கமா?''

வெளிநாட்டிலிருந்து திரும்பியிருந்த ரிஷி வள்ளல் பெருமான் சொன்னதைக் கேட்டுத் தன்னுடைய வாயையும் கண்களையும் அகலத் திறந்தான்.

''ஆமாடா..! ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருக்கிற உண்மையாம். நீயும் நானும் இன்னும் கொஞ்ச நேரத்துல சுந்தரபாண்டியத்துக்குக் கிளம்பறோம்..''

''அப்பா..! இந்த விஷயத்துக்கெல்லாம் நாம போகணுமா? இந்திரபூபதியும் ஸ்வாமிகளும் பட்டு லிங்கமும் போதாதா..''

''டேய்! முட்டாள் மாதிரி உளறாதே..! உனக்கும் எனக்கும் என்ன க்ரிமினல் புத்தி இருக்குமோ அதே மாதிரியான க்ரிமினல் புத்திதான் அந்த மூணு பேர்க்கும் இருக்கும். அந்தக் கோயிலின் கால பைரவர் சன்னதியைத் தோண்டும் போது ஸ்பாட்ல நாமும் இருக்கணும். அப்பத்தான் சொர்ணச் சுரங்கத்துக்குள்ளே என்னென்ன இருந்தது என்கிற உண்மை நமக்குத் தெரியும். நாம இப்போ ஸ்பாட்டுக்குப் போகலைன்னு வை. அந்த மூணு பேரும் பாதியை மறைச்சுடுவாங்க.. அந்த இந்திரபூபதி இருக்கானே... அவன் எமகாதகன்.''

''அப்பா..! ஒரு கோயிலுக்குள்ளே போய்ச் சன்னதியைத் தோண்டறதெல்லாம் ரிஸ்க்கான வேலை. ஊர்க்காரங்க யாராவது பார்த்துட்டா பெரிய பிரச்னையாயிடும்..''

''ரிஷி...! அதையெல்லாம் நான் யோசனை பண்ணாமே இருப்பேனா..? இந்த அனுசூயா தேவி கோயில் சுந்தர பாண்டியத்திலிருந்து மூணு மீட்டர் தள்ளி ஒரு காட்டுக்குள்ளே இருக்கிற கோயில். பகல் நேரத்திலேயே ஆள் நடமாட்டம் இல்லாத கோயில். ராத்திரியில் கேட்கணுமா...? எல்லாத் துக்கும் மேலா ஓலைச் சுவடியில் க்ளியர் ஸ்டேட்மெண்ட் மாதிரி எல்லாமே எழுதியிருக்கு. 'எலக்ட்ரானிக் டிக்கிங் மெஷினை வெச்சுகிட்டு பத்தடி ஆழம் தோண்டப் பத்து நிமிஷம் போதும்.''

''அப்பா.. நீங்க சொல்றதையெல்லாம் என்னால நம்பவும் முடியலை. நம்பாமே இருக்கவும் முடியலை.''

வள்ளல் பெருமான் சிரித்தார்.

''நம்பு...''

## 19

சுந்தரபாண்டியம்

இரவு மணி பத்து.

டாடா சுமோவை ரிஷி ஓட்டிக் கொண்டிருக்க, பின் சீட்டில் வள்ளல் பெருமான். இந்திரபூபதி, அம்பலவாண ஸ்வாமிகள், பட்டு லிங்கம் உட்கார்ந்திருந்தார்கள். டாடா சுமோ காட்டின் ஒழுங்கற்ற பாதையில் குதித்துக் குதித்து ஓடிக் கொண்டிருந்தது. ஹெட்லைட் வெளிச்சத்தில் காட்டில் மண்டியிருந்த இருட்டு சட்சட்டென்று கரைந்து பாதையைக் காட்டிக் கொண்டு போயிற்று.



''ஸ்வாமிகளே!'' வள்ளல் பெருமான் கூப்பிட்டார். ஸ்வாமிகள் திரும்பி என்ன என்பது போல் பார்த்தார்.

''நான் இன்னும் ரெண்டு நாள்ல மினிஸ்டர் போஸ்ட்டை ரிசைன் பண்ணப் போறேன்.''

''ம்.. இந்திரபூபதி சொன்னார்.''

''எனக்கு மேற்கொண்டு பதவி கிடைக்க வாய்ப்பு இருக்கா, ஸ்வாமி?''

''கவலைப்படாதீங்க. உங்க ஜாதகப்படி கோட்சார பலன் சரியில்லை. இன்னும் ஒரு வருஷம் போய்ட்டா இதே மந்திரி பதவி உங்களைத் தேடி வரும்.''

''உங்க வாக்கு பலிக்கட்டும், ஸ்வாமி..''

இந்திரபூபதி பட்டுலிங்கத்திடம் கேட்டார்.

''கோயிலுக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?''

''ஒரு கிலோ மீட்டர்..''

''ரோடு ரொம்பவும் மோசமாயிருக்கும் போலிருக்கே!''

''நேத்து நல்ல மழை. மண் ரோடு சேறாயிடுச்சு.'' பாதையில் குதித்துக் குதித்துப் போய்க் கொண்டிருந்த டாடா சுமோ படிப்படியாக வேகம் குறைந்து நின்றது.

''என்ன ரிஷி?''

''ரோட்டுக்குக் குறுக்கே மரம் விழுந்து கிடக்கு.''

''பெரிய மரமா?''

''சின்ன மரம்தான்..''

ரிஷி சொல்லிக் கொண்டே கீழே இறங்க முயல இடது பக்கம் பாதையின் இருட்டான புதரிலிருந்து அந்த உருவம் திடும்மென வெளிப்பட்டது. கையில் பளபளக்கும் நீளமான அரிவாள்.

ரிஷி விதிர்விதிர்த்துப் போய் ட்ரைவிங் சீட்டிலேயே உட்கார்ந்து கொள்ள, உருவம் பாய்ந்து ரிஷியின் கழுத்தில் கத்தியை வைத்துக் குரல் கொடுத்தது.

''யாரும் இருக்கிற இடத்தை விட்டு அசையக் கூடாது. அசைஞ்சா தலை உருளும்..''

எல்லோரும் கதி கலங்கிப் போய் உட்கார்ந்திருக்க... ஸ்வாமிகள் அந்த உருவத்தை உற்றுப் பார்த்து நெஞ்சு நிறைய அதிர்ச்சி வாங்கினார்.

''சம்பத்... நீயா?''

சம்பத் சிரித்தான். ''நான்தான், ஸ்வாமிகளே! உங்களுக்கெல்லாம் பாப விமோசனம் கொடுக்க வந்திருக்கேன்.''

''என்ன உளர்றே?''

''ஒரு நிமிஷம் ஸ்வாமி...'' சொன்ன சம்பத் தன் இடது கையை பேண்ட் பாக்கெட்டுக்குக் கொண்டு போய் 'ஸ்ப்ரேயர்' ஒன்றை எடுத்தான். கண்ணிமைக்கும் நேரத்துக்குள் ஸ்ப்ரேயரை உயர்த்தி ரிஷி, வள்ளல் பெருமான், இந்திரபூபதி, பட்டுலிங்கம் ஆகியோரின் முகங்களில் பீய்ச்சினான்.

பத்தே வினாடிகள்!

நான்கு பேரும் தலைகள் துவண்டு சரிந்தார்கள். ஸ்வாமிகள் முகம் வெளிறிப் போய் எழ முயல, அரிவாள் நீண்டு ஸ்வாமிகளின் கழுத்தை உரசியது.



''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்... ஸ்வாமி... அதுக்காகத்தான் மயக்க மருந்தை உங்க மேல ஸ்ப்ரே பண்ணலை. இவன் எங்கே இந்த நேரத்துல இங்கே வந்தான்னு யோசிக்கலாம். ஸ்வாமி! ரெண்டு நாட்களுக்கு முன்னாடி வரை எனக்கு எந்த உண்மையும் தெரியாது. நீங்க ஒரு பெரிய 'மகான்'னு மனசுக்குள்ளே நினைச்சுட்டிருந்தேன். ஆனா ரெண்டு நாளைக்கு முன்னாடி ராத்திரி ஆராய்ச்சி சம்பந்தமா திருக்கருகாவூர் போய்ட்டு சித்தர் காடு திரும்பிட்டிருந்தேன்... என்னோட பைக்ல உங்க ஆஸ்ரமத்துக்குப் பக்கத்துல வந்த போது பைக்கோட டயர் பஞ்சர் ஆயிடுச்சு. பைக்கை வீடு வரைக்கும் தள்ளிட்டுப் போக கஷ்டமாய் இருந்ததால் அதை உங்க ஆஸ்ரமத்துல வெச்சுட்டுப் போலாம்னு நினைச்சு ஆஸ்ரமத்துக்குள்ளே தள்ளிட்டு வந்தேன். உள்ளே கார் நின்னுட்டிருந்தது. உங்க அறைக்குள்ளே பேச்சுக் குரல் கேட்டது. பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திட்டு உங்க ரூமுக்குப் பக்கமா வந்தேன். நிஜமா நான் ஒட்டுக் கேட்கலை. ஆனா உங்க பேச்சுல பூவிழியோட பேரும் ஓலைச் சுவடியும் அடிபட்டதால அப்படியே மறைவா நின்னு ஒட்டுக் கேட்க ஆரம்பிச்சேன். நீங்க இந்திரபூபதியோடு பேசிக்கிட்டிருந்தீங்க. வெளியுலகத்துக்கு என்னென்ன உண்மைகள் தெரியக் கூடாதோ அந்த உண்மைகளை யெல்லாம் நான் கேட்டுட்டேன். சுழியூர் கலவரம், நவபாஷாணச் சிலை, சொர்ணச் சுரங்கம், இப்படி எல்லாமே என்னோட காதுக்குள்ளே போய் மூளையில் பதிவாயிடுச்சு..''

ஸ்வாமிகள் உடல் நடுங்க, கைகள் கூப்பினார்.

''சம்பத்! என்னை ஒண்ணும் பண்ணிடாதே! குறுக்கு வழியில் பணம் சேர்க்க ஆசைப்பட்டு இவங்க கூடச் சேர்ந்துட்டேன். இனிமே எந்தத் தப்பும் பண்ண மாட்டேன்.''

"ஸ்வாமி..! நீங்க கோடிக் கணக்குல பணம் சம்பாதிக்கிறதுக் காக சுழியூர் கிராமத்தில் அப்பாவி மக்கள் ஒருத்தரை யொருத்தர் வெட்டிக்கிட்டு 21 பேர் செத்துப் போயிருக்காங்க.. அதுல 12 பேர் பெண்கள். இந்தப் பாவத்துக்கு உங்க பதில் என்ன?"

"....."

"ஸ்வாமி..! முள்ளை முள்ளால் எடுக்கணும். 21 பேரோட மரணங்களுக்குச் சரியான பரிகாரம் நீங்க அஞ்சு பேரும் உயிர்த் தியாகம் பண்றதுதான் முறை. இங்கிருந்து அரைகிலோ மீட்டர் தூரத்துல 'யானை விழுங்கிக் குளம்' என்கிற பேர்ல ஒரு குளம் இருக்கு. அந்தக் குளத்துல இருக்கிற தண்ணீர் விஷத்தன்மை வாய்ந்தது. அதனால ஜனங்களும் சரி, மிருகங்களும் சரி, அந்தக் குளத்துப் பக்கம் போறதே கிடையாது. குளத்தோட ஆழம் எப்பவுமே அறுபதடி. இதுவரைக்கும் ரெண்டு யானைகள் அந்தக் குளத்துல விழுந்து இறந்திருக்கிறதாலே, அதுக்கு யானை விழுங்கிக் குளம்ன்னு பேர் வந்தது."

ஸ்வாமிகள் முகம் வியர்த்துப் போய்க் கலவர விழிகளோடு பார்த்துக் கொண்டிருக்க... சம்பத் தொடர்ந்தான்.

"அந்தக் குளத்துலதான் இந்த டாடா சுமோவோடு நீங்க அஞ்சு பேரும் ஜல சமாதியாகப் போறீங்க. பூமிக்குள்ளே புதையுண்ட அபூர்வச் சிலைகளை எடுத்து வெளிநாட்டவர்க்கு விற்றுப் பணத்தைக் கோடிக் கணக்கில் சம்பாதிச்ச நீங்க தண்ணீருக்குள்ளேயே புதையுண்டு போறதுதான் முறை."

'வே.. வேண்டாம்..!" என்று ஸ்வாமிகள் அலறியதைப் பொருட்படுத்தாமல் சம்பத் தொடர்ந்தான்.



"இன்னொரு முக்கியமான விஷயம், ஸ்வாமிகளே! நீங்க அஞ்சு பேரும் மோசடிப் பேர்வழிகள் என்கிற விஷயம் பூவிழிக்குத் தெரியாது. அதே மாதிரி கால பைரவரின் சன்னதிக்குக் கீழே பத்தடி ஆழத்தில் 'சொர்ணச் சுரங்கம்' இருக்கிற விஷயமும் அவளுக்குத் தெரியாது. நானும் சொல்லலை. நான் சொல்லாததுக்கு என்ன காரணம் தெரியுமா, ஸ்வாமிகளே? உழைத்துப் பொருள் சம்பாதித்து வாழ்க்கையை நடத்துவதில்தான் உண்மையான சந்தோஷம் இருக்கிறது என்று நினைப்பவன் நான். இலவசப் புதையல்களும், பொக்கிஷங் களும் எனக்கு வேண்டியதில்லை. அந்தச் சொர்ணச் சுரங்கம் கால காலத்துக்கும் கால பைரவரின் சன்னதிக்குக் கீழேயே இருக்கட்டும்."

சம்பத் சொல்லிக் கொண்டே ஸ்வாமிகள் எதிர்பாராத ஒரு விநாடியில் கையில் வைத்து இருந்த ஸ்ப்ரேயரை அழுத்தினான். மயக்க மருந்து ஸ்வாமிகளைத் தாக்க... அவர் உடனே கண் செருகினார். பத்து விநாடிகளுக்குள் தலை துவண்டார்.

சம்பத் ரிஷியை ட்ரைவிங் இருக்கையினின்றும் நகர்த்தி விட்டு உட்கார்ந்தான். சுமோவை ஸ்டார்ட் செய்யும் முன்னாக ரிஷியின் சர்ட் பாக்கெட்டில் நீட்டிக் கொண்டிருந்த செல்போனை எடுத்து அவசர போலீஸுக்கு டயல் செய்தான். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"அவசர போலீஸ்?"

"எஸ்..."

"ஸார்... ஒரு தகவல்.."

"என்ன?"

"சுழியூர் கிராமத்தில் காணாமல் போன நவபாஷாணச் சிவன் சிலை இப்போது சித்தர்காடு அம்பலவாண ஸ்வாமிகளின் ஆஸ்ரமத்தில் நெல் கொட்டி வைக்கும் அறையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை திருட்டில் சம்பந்தப்பட்ட அமைச்சர் வள்ளல் பெருமான், அவருடைய மகன் ரிஷி, அம்பலவாண ஸ்வாமிகள், அவருடைய உதவியாளர் பட்டுலிங்கம், தொல்பொருள் பாதுகாப்புத்துறை டைரக்டர் இந்திரபூபதி இந்த ஐந்து பேரும் போலீஸ் நடவடிக்கைக்குப் பயந்து தலைமறைவாகி விட்டார்கள். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கைது செய்ய வேண்டியது உங்க பொறுப்பு.."

"நீங்க யாரு..?"

"அஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை ஓட்டுப் போடுகிற ஒரு இளிச்சவாய் இந்தியக் குடிமகன் ஸார்."

படபடவென்று பேசிவிட்டு-செல்போனை அணைத்து ரிஷியின் பாக்கெட்டுக்குள் செருகியபடி சம்பத் டாடா சுமோவுக்கு உயிர் கொடுத்தான்.

'யானை விழுங்கி'க் குளத்தை நோக்கித் தன் மரண யாத்திரையைத் தொடங்கியது டாடா சுமோ!

★ ★ ★



# என் இனிய இன்னலே!

## 1

அகில இந்திய மெடிக்கல் சயின்ஸ் இன்ஸ்டிட்யூட் ஏற்பாடு செய்திருந்த செமினாரில் நூற்றுக் கணக்கான வழுக்கைத் தலைகள் வீடியோ வெளிச்சத்தில் மின்னிக் கொண்டிருக்க, மேடையின் மையத்தில் நின்று, தனக்கு முன்பாய் நீட்டிக் கொண்டிருந்த சிறிய எலக்ட்ரானிக் மைக்கில் சயன்டிஸ்ட் கௌரி சங்கர் தெளிவான ஆங்கிலத்தில் நிதானமாய்ப் பேசிக் கொண்டிருந்தார். நேரம் மாலை 6.45

"கடந்த 55 ஆண்டுகளில் இந்தியா மருத்துவத் துறையில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளபோதிலும், சர்வதேசத் தரத்துக்கு நாம் உயரவில்லை என்பதே உண்மை. நாம் இந்தத் துறையில் பின்தங்கியிருப்பதாக WHO எனப்படும் உலக சுகாதாரக் கழகமும் கூறியுள்ளது. இந்தியாவில் உள்ள மருத்துவ மேதைகள் அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்த 14 புதிய வகை மருந்துகளைச் சர்வதேச மருத்துவ கவுன்ஸில் நிராகரித்து விட்டதாகப் பத்திரிகைகள் கட்டம் போட்டுச் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஏன் இந்த அவல நிலைமை? இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

வருடத்துக்கு ரூ. 5000 கோடிகளை இந்தியா தன் மருத்துவ ஆய்வுகளுக்காகச் செலவழித்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும், சர்வதேச மருத்துவ ஆய்வு இதழ்களில் இந்திய மருத்துவ ஆய்வுகளுக்கு உரிய மரியாதையும் அங்கீகாரமும் கிடைக்காதது ஏன் என நிபுணர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். 1998 இல் அகில இந்திய மெடிக்கல் சயின்ஸ் இன்ஸ்டிட்யூட் 338 பரிசோதனை நடத்தி முடித்தது. 2001 வரை 133 பரிசோதனை முடிவுகளின்படி அறிக்கை வெளியிடப்படவில்லை... என்று இந்திய கம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் 2001 ஆகஸ்ட் அறிக்கையில் சாடியுள்ளார். இந்திய மருத்துவ விஞ்ஞானம் பல வகைகளிலும் பின்தங்கி இருப்பதற்குக் காரணங்கள் என்னென்ன என்பதை பீப்பிள் ஃபார் அனிமல்ஸ் என்ற அமைப்பைச் சேர்ந்த ஆராய்ச்சி வல்லுநர்கள் பாயிண்ட் பாயிண்ட்டாகச் சொல்லியுள்ளனர்."

கௌரிசங்கர் பேச்சை நிறுத்தி விட்டு மேஜையின் மேலிருந்த மினரல் வாட்டர் பாட்டிலை எடுத்து ஒரு வாய் நீரைத் தொண்டைக்குக் கொடுத்து விட்டுப் பேச்சைத் தொடர்ந்தார். கைகளில் வைத்து இருந்த கம்ப்யூட்டர் தாள்கள் மெல்லப் புரட்டப்பட்டன.

"ஏப்ரல் 14ஆம் தேதி உலக ஆராய்ச்சிக் கூடப் பிராணிகள் தினமாகக் கொண்டாடப்பட்டது. ஆராய்ச்சிக் கூடங்களில் பரிசோதனைக்காக உபயோகப்படுத்தப்படும் பிராணிகள் நோய்வாய்ப்படாமல் ஆரோக்கியமாக இருந்தால்தான் அவைகளை வைத்துச் சோதனைகளை வெற்றிகரமாய்ச் செய்ய முடியும். அந்த சோதனைகளின் அடிப்படையில் மருந்துகளைத் தயாரிக்க முடியும். ஆனால், தற்போது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கூடங்களில் பரிசோதனைக்காக உபயோகப்படுத்தப்படும் பிராணிகள் ஆரோக்கியமற்றதாக இருக்கிறது. பொதுவாகத் தெருக்களில் அலைந்து திரியும் பிராணிகளைப் பிடித்து வந்து சோதனைக்கு உட்படுத்துகிறார்கள். இதனால் பரிசோதனைகளின் முடிவில் நமக்கு நல்ல ரிப்போர்ட் கிடைப்பது இல்லை. அந்த ரிப்போர்ட்களை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்படும் மருந்துகள் சர்வதேசத் தரத்துக்கு ஈடு கொடுக்கும்படியாக இல்லை. மருத்துவத் துறையில் இந்தியா பின்னோக்கிப் போய்க் கொண்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்."



கௌரிசங்கர் கம்ப்யூட்டர் தாளைப் புரட்டுவதற்காகச் சில விநாடிகள் இடைவெளி விட்டபோது, முன் வரிசையில் இருந்த ஒரு வழுக்கைத் தலை எழுந்தது.

"இந்தியா இந்த மருத்துவத் துறையில் வெற்றி பெற்றுச் சர்வதேச அளவுக்கு உயர உங்களிடம் ஏதாவது வழிமுறைகள் உள்ளதா?"

கௌரிசங்கர் அந்த நபரைப் பார்த்துப் புன்னகைத்தார். "உள்ளது. அந்த வழிமுறைகளைத்தான் இப்போது படிக்கப் போகிறேன். இவைகளைச் செயல்படுத்தக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். செலவைப் பற்றி அரசாங்கம் பயப்பட்டால், நாம் சர்வதேச அளவுக்கு உயர முடியாது. நாம் இந்த மருத்துவத் துறையில் இன்னமும் எல்.கே.ஜி. அளவிலேயே இருக்கிறோம். உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் ரேபிஸ் எனப்படும் வெறி நாய்க்கடிக்கான தடுப்பு மருந்தை ஆட்டு மூளையிலிருந்து எடுக்கும் பழக்கத்தை இந்தியா மற்றும் துனிஷியா ஆகிய 2 நாடுகள் மட்டுமே இந்த 2003லும் கடைப்பிடித்து வருகின்றன. ஆட்டு மூளையிலிருந்து தடுப்பு மருந்தைத் தயாரிக்கும்

முறைக்குத் தடை விதித்து 20 ஆண்டுகள் ஆகின்றன. மற்ற நாடுகள் எல்லாம் திசு வளர்ப்பியல் முறையில் தடுப்பு மருந்துகளைத் தயாரித்துச் சர்வதேச மருந்து மார்க்கெட்டில் பெரிய பெரிய வெற்றிகளைப் பெற்றுள்ளன. உலக சுகாதார நிறுவனம் திசு வளர்ப்பியல் முறையில் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்கும்படி இந்தியாவை அறிவுறுத்தியுள்ளது. இப்போது தான் இந்திய அரசின் சுகாதார அமைச்சகம் ஆண்டுக்கு 35,000 லிட்டர் நியூரல் திசுவைப் பெறுவதற்காக ஒன்பது பயாலஜிக்கல் ப்ரொடக்ஷன் சென்டர்களை நிறுவியுள்ளது. இதன் மூலம் பிராணிகளைச் சித்ரவதை செய்யாமல் திசு வளர்ப்பு முறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சர்வ தேசத் தரத்துக்குச் சமமாக நம்மால் மருந்துகளைத் தயாரிக்க முடியும்.''

அரங்கில் மெலிதாய்க் கைதட்டல் எழுந்தது. அது அடங்கும் வரை காத்திருந்து கௌரி சங்கர் பேச்சைத் தொடர நினைத்தபோது...

தலை லேசாய்ச் சுற்றுவது போன்ற உணர்வு. கண்களுக்குள் ஒரு கொத்து இருட்டுப் பாய்ந்தது.

'எனக்கு என்னாயிற்று..?'

கௌரிசங்கர் யோசித்து அந்த அவஸ்தையிலிருந்து மீள்வதற்குள் முகம் குப்பென்று வியர்த்தது. மார்பு அடைத்துக் கொண்டு சுவாசிக்கத் திணறினார். மினரல் வாட்டர் பாட்டிலை எடுக்க முயன்றார். கைகள் நடுங்கின.

மேடையின் ஓரத்தில் நின்றிருந்த செமினார் அமைப்பாளர்கள் ஓடி வந்தார்கள்.

''ஸார்.. வாட் ஹேப்பெண்ட்?''



''தெ.. தெரி.. தெரியலை.. திடீர்ன்னு நெஞ்சை அடைக்குது.''

அவர்கள் பதட்டமாகி ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். ''ஸீம்ஸ்.. டு... பி.. ஹார்ட் அட்டாக்..''

''மே.. பி..''

''என்ன செய்யலாம்?''

''ஆம்புலன்ஸை அழைக்கலாம்..''

''வேண்டாம்..! அதற்கு அவகாசம் இல்லை. பக்கத்துத் தெருவில்தான் 'கெட்வெல்' ஹாஸ்பிடல். காரிலேயே கொண்டு போய்விடலாம்.''

அவர்கள் பதட்டமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் போதே கௌரிசங்கர் இரண்டு கைகளாலும் மார்பைப் பிடித்துக் கொண்டு அப்படியே மடங்கி உட்கார்ந்தார். செமினார் ஹால் மொத்தமும் பரபரப்படைந்தது. டெலிகேட்ஸ் அனைவரும் மேடையை நோக்கி ஓடிவர, செமினார் அமைப்பாளர்கள் கௌரிசங்கரைத் தூக்கிக் கொண்டு மேடையின் பின்பக்க வழியாக விரைந்து ஒரு க்வாலிஸ் கார்க்குள் ஏற்றினார்கள்.

''ட்ரைவர்...!'' அமைப்பாளர் ஒருவர் கத்தினார்.

''ஸார்..'' கொஞ்சம் தள்ளி சக ட்ரைவர் ஒருவரோடு அரட்டையடித்துக் கொண்டிருந்த அந்த நபர் ஓடி வந்தார்.

''பக்கத்துத் தெருவில் இருக்கிற 'கெட் வெல்' ஹாஸ்பிடலுக் குப் போகணும்.. சீக்கிரம்..''

ட்ரைவர் தன்னுடைய இருக்கையை நோக்கிப் போக செமினார் அமைப்பாளர்கள் இரண்டு பேர் கௌரிசங்கர்க்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

க்வாலிஸ் விரைந்தது. ரோட்டைத் தேய்த்துக் கொண்டு காற்றைச் சீய்த்தபடி பறந்தது. இரண்டே நிமிடம்!

கெட்வெல் ஹாஸ்பிடல் ஐந்து மாடிகளோடு வந்தது. ஐந்தாவது மாடியின் உச்சியில் ஊதா நிற நியான் போர்டு ஹாஸ்பிடலின் பெயரை ஆங்கிலத்திலும் தமிழிலும் சொன்னது.

ஸ்ட்ரெச்சர் வரவழைக்கப்பட்டுக் கௌரிசங்கர் மல்லாக்கக் கிடத்தப்பட்டார். ஐ.ஸி. யூனிட்டை நோக்கி ஸ்ட்ரெச்சர் உருண்டது. செமினார் அமைப்பாளர்கள் பின்னாலேயே ஓடினார்கள். கூடவே இரண்டு நர்ஸ்கள், இரண்டு ஆர்டலிகள்.

"சிஸ்டர்.. டாக்டர் யோகானந்த் இப்போ எங்கே இருக்கார்?"

"ஓ.பி. வார்டில் ஸார்.."

"அவரை உடனே ஐ.ஸி. யூனிட்டுக்கு வரவழைங்க. பேஷண்ட் ஒரு வி.ஐ.பி. இவரோட உயிர் காப்பாற்றப் படணும்."

"ஹார்ட் அட்டாக்கா ஸார்?"

"அப்படித்தான் தெரியுது.."

ஒரு நர்ஸ் ஸ்ட்ரெச்சரை விட்டு விலகி ஓ.பி. வார்டை நோக்கி ஓடினாள். பாதி வராந்தவைக் கடந்திருந்தபோது டாக்டர் யோகானந்த் பயிற்சி டாக்டர்களோடு பேசியபடி எதிர்ப்பட்டார். ஐம்பது வயது யோகானந்த் ஒரு இளைஞர் போல் தோற்றம் காட்டினார்.

நர்ஸ் மூச்சிரைத்தபடி அவர்க்கு முன்பாய் போய் நின்றாள்.

"டா.. டாக்டர்.."



யோகானந்த் அவளை ஏறிட்டார்.

"என்ன.. பிலோமினா.. ஏதாவது எமர்ஜென்சி கேஸா...?"

"ஆமா.. டாக்டர்..! பேஷண்ட் ஒரு வி.ஐ.பி. கார்டியாக் அரஸ்ட்.. கண்டிஷன் சீரியஸ்.. கான்ஷியஸ் சுத்தமாய் இல்லை."

யோகானந்த் உடம்பில் பதட்டம் பற்றிக் கொண்டது. கேட்டார். "பேஷண்ட் வி.ஐ.பி.யா?"

"எஸ்... டாக்டர்.."

"பேரு..?"

"கௌரிசங்கர்.."

"யூ.. மீன் சயன்டிஸ்ட்..?"

"ஆமா டாக்டர்.."

"ஐ.ஸி. யூனிட்டுக்குக் கொண்டு போயாச்சா?"

"கொண்டு போயாச்சு டாக்டர்."

யோகானந்த் பயிற்சி டாக்டர்களிடமிருந்து அவசரமாய் விடைபெற்றுக் கொண்டு நர்ஸ் பிலோமினாவோடு வேகமாய் நடைபோட்டார்.

"டாக்டர் சிவபுண்ணியமும், டாக்டர் அப்துல் ரஹீமும் ஐ.ஸி. யூனிட்டுக்குள்ளேதானே இருக்காங்க?"

"ஆமா டாக்டர்.."

யோகானந்த் வேகமாய் நடைபோட்டுக் கொண்டே நர்ஸ் பிலோமினாவிடம் சொன்னார்.

''சயன்டிஸ்ட் கௌரிசங்கர் இந்திய மருத்துவத் துறைக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம். அவரோட அயராத உழைப்பினால் கண்டுபிடிக்கப்பட்ட எத்தனையோ மருந்துகள் பல நோய்களை இல்லாமலே பண்ணியிருக்கு. அமெரிக்காவும், ஜப்பானும் டாலர்களைக் கோடிக்கணக்கில் குவித்து வைத்துக் கூப்பிட்டும் கௌரிசங்கர் அந்த நாடுகளுக்குப் பணியாற்றப் போகலை. 'நான் சுவாசிக்கிறது இந்தியக் காற்று. சாப்பிடுவது இந்த மண்ணில் விளைகிற உணவு. என்னுடைய மருத்துவம் சம்பந்தப்பட்ட அறிவும் உழைப்பும் இந்த இந்திய நாட்டுக்குத் தான் சொந்தம்,'ன்னு சொல்லிட்டார். அப்பேர்ப்பட்ட உத்தம மனிதரை அட் எனி காஸ்ட் நாம காப்பாத்தியாகணும்..''

பேசிக் கொண்டே வேகமாய் வராந்தாவில் நடை போட்ட யோகானந்தை அவருடைய கோட் பாக்கெட்டில் இருந்த செல்போன் மெலிதாய் முனகிக் கூப்பிட்டது. எடுத்து வலது காதுக்கு ஒட்ட வைத்தார்.

''எஸ்..''

''டாக்டர் யோகானந்த்..?'' ஒரு பெண் குரல் கேட்டது.

''எஸ்.. ஸ்பீக்கிங்...''

''டாக்டர்! என்னோட பெயர் கோப்பெருந்தேவி. உங்களுக்கு ஒரு தகவல் கொடுக்கிறதுக்காகத்தான் போன் பண்ணினேன்.''

''எ.. என்ன தகவல்..?''

''பெசன்ட் நகர் மின்சார மயானத்தில் நாளைக்குக் காலை பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணிக்குள் ஒரு பாடியை எரிக்க ரிசர்வ் பண்ணியிருக்கேன்.. அந்த எலெக்ட்ரிக் க்ரிமேஷன் சிறப்பாய் நடைபெற நீங்கதான் உதவி பண்ணணும்..''



யோகானந்த் திகைத்தார்.

''நான் என்ன உதவி பண்ணணும்..?''

''என்ன டாக்டர் இது..! டெட் பாடியை உங்க ஹாஸ்பிடலிலிருந்து நீங்கதானே மின்சார மயானத்துக்கு அனுப்பி வைக்கணும்..''

''எ.. எ.. என்னது! டெட் பாடியை நான் அனுப்பணுமா...? என்ன உளர்றே?''

''இது உளறல் இல்லை டாக்டர்.. அக்மார்க் உண்மை!''

''உண்மையா?''

''எஸ்..! உங்க ஹாஸ்பிடலில் இப்போ அட்மிட்டாயிருக்கிற இந்திய மருத்துவ மேதை சயன்டிஸ்ட் கௌரி சங்கர் உயிர் பிழைக்கக் கூடாது. அவர் சாகணும். டாக்டர்க்கு ஒரு பேஷண்ட் டைக் காப்பாத்தறது கஷ்டம். ஆனால் பேஷண்டோடே உயிரை எடுக்கிறது சுலபம்.. ஸோ.. கௌரி சங்கர் இன்னும் ஒரு மணி நேரத்துல உயிர் விடணும்... அதுக்கடுத்து ஒரு மணி நேரத்துக்குள்ளே அவர் ஹாஸ்பிடலை விட்டு டெட்பாடியா வெளியே வரணும்... நாளைக் காலையில் பத்து மணிக் கெல்லாம் பெசன்ட் நகர் மின்சார மயானத்துக்கு அவரோட டெட்பாடி வந்து சேரணும்.. இல்லேன்னா..''

யோகானந்த் காய்ந்து போன தொண்டையில் சிரமமாய் எச்சில் விழுங்கினார். ''இ.. ல்... லே...ன்..னா?''

''பின்னாடி நடக்கப் போகிற வேண்டாத விபரீத சம்பவங் களுக்காக நீங்க நிறைய வருத்தப்பட வேண்டியிருக்கும்..''

''என்ன மிரட்டறியா?''

"இது மிரட்டல் கிடையாது டாக்டர். என்னுடைய கோரிக்கை மனு. அதாவது சயன்டிஸ்ட் கௌரி சங்கரின் மரணத்துக்கான மனு. பெசன்ட் நகர் மின்சார மயானம் கௌரி சங்கர்க்காக நாளைக்குக் காலையில் பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணிவரைக்கும் காத்துக் கொண்டிருக்கும்."

யோகானந்த் ஆத்திரத்தில் குரல் எக்கிக் கத்தினார்.

"ஏய்..! நீ.. நீ..?"

"பேரை மறந்துட்டீங்களா டாக்டர்? நான் கோப்பெருந் தேவி. கோரிக்கை மனுவை நிறைவேத்துங்க.. டாக்டர், பக்கத்தில் இருக்கிற குப்பைக் கூடையில் போட்டுடாதீங்க."

யோகானந்த் திகைத்துக் கொண்டிருக்கும் போதே மறுமுனையில் ரிஸீவர் பெரிய சத்தத்தோடு கவிழ்ந்து படுத்துக் கொள்ளும் சத்தம் கேட்டது.

## 2

அண்ணா நகர் கிழக்கு.

ஏ.ஜே. க்ராஸ் ரோட்டில் மூன்றாவது பங்களா. சன் டி.வி.யில் இரவு எட்டு மணிக்கான நியூஸ் லோகோ இசை ஒலித்துக் கொண்டிருக்க - மஞ்சரி சமையற்கட்டில் சப்பாத்தி சுட்டுக் கொண்டிருந்தாள். கேஸ் அடுப்பில் சிக்கன் குழம்பு மசாலா வாசனையோடு கொதித்துக் கொண்டிருந்தது.

"ஏதாவது உதவி தேவையா?" லுங்கியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு திலகன் சமையலறைக்குள் நுழைந்தான்.

மஞ்சரி திரும்பிப் பார்த்து முறைத்தாள்.



"இங்கே எதுக்காக வந்தீங்க?"

"உனக்கு உதவி பண்ணத்தான்.."

"நீங்க என்ன உதவி பண்ணுவீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும்.. மொதல்ல இடத்தைக் காலி பண்ணுங்க. டைனிங் டேபிள்ல போய் நல்ல பிள்ளையா உட்காருங்க..! பத்தே நிமிஷம்.. சப்பாத்தி ரெடியாயிடும்."

திலகன் சிரித்தான். சிரித்துக் கொண்டே பக்கத்தில் வந்தான். "மஞ்சரி.."

"ம்.."

"எனக்கு டைனிங் டேபிள்ல தனியா உட்கார்ந்திருக்க போரடிக்குது... ஏதாவது வேலை கொடேன். இதே சமையற்கட்டில் ஒரு ஓரமாக உட்கார்ந்துகிட்டு உன்னோட முகத்தைப் பார்த்துக்கிட்டே அந்த வேலையைப் பார்க்கிறேன்."

"இதெல்லாம் பொம்பளைங்க வேலை."

"அப்படியா..?"

"ஆமா.. அப்படித்தான்.." சொல்லிக் கொண்டே திரும்ப முயன்றவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டான் திலகன். மஞ்சரி திமிறினாள். கொஞ்சலாய்க் கேட்டாள்.

"என்ன இது..?"

"இது ஆம்பிளைங்க வேலை."

"இப்ப நான் சமையல் பண்றதா... வேண்டாமா?"

"சமையலுக்குப் பத்து நிமிஷம் இடைவெளி கொடு.. வா, சோபாவில் போய் உட்கார்வோம்.. கொஞ்சம் பேசிக்கிட்டு இருப்போம்.."

"மணி எவ்வளவு தெரியுமா? எட்டு..!"

"இருக்கட்டுமே... எட்டரை மணிக்குப் போய்ச் சப்பாத்தி சுடு.." சொல்லிக் கொண்டே மஞ்சரியை ஹாலில் இருந்த சோபாவுக்கு இழுத்துக் கொண்டு போனான். மஞ்சரி திலகனுடைய முதுகில் குத்தினாள்.

"வர வர நீங்க ரொம்ப மோசம்... மொதல்ல போய் ஒரு நல்ல டாக்டரைப் பாருங்க."

"டாக்டர்கிட்டே போய் என்ன சொல்றது.?"

"கண்ட கண்ட நேரத்துல மூடு வருதுன்னு சொல்லுங்க."

"உடனே அவர் ப்ரிஸ்க்ரிப்ஷன் பேடை எடுத்து மருந்தோட பேரை மஞ்சரின்னு எழுதிக் கொடுப்பார். வேற எந்த ஒரு மருந்துக்கும் இந்த நோய் குணமாகாதே."

இருவரும் போய் சோபாவில் உட்கார்ந்தார்கள். திலகன் மஞ்சரியின் மடியில் சாய்ந்து கொண்டான்.

டி.வி.யில் நிர்மலா பெரியசாமி ஏற்ற இறக்கங்களோடு செய்தி வாசித்துக் கொண்டிருந்தார்.

"எல்லை தாண்டிய தீவிரவாதத்தைக் கைவிடும்வரை பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை கிடையாது. பிரதமர் கண்டிப்பு."

"மஞ்சரி.." திலகன் தன்னுடைய வலது கையை உயர்த்தி அவளுடைய கன்னத்தைத் தடவினான்.

"சொல்லுங்க.."

"நீ மட்டும் எப்படி அழகாயிருக்கே?"



"ஐஸ் வைக்கிறதுக்கு ஒரு அளவு வேண்டாமா?"

"இது ஐஸ் கிடையாது மஞ்சரி... நான் அடிக்கடி ஆச்சர்யப்பட்டுக் கொள்கிற விஷயம்.. நீ நாளுக்கு நாள் அழகாயிட்டு வர்றே."

மஞ்சரி பதில் சொல்லாமல் டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருக்க, திலகன் அவளுடைய தோளைத் தட்டினான்.

"நான் எவ்வளவு சீரியஸா பேசிக்கிட்டிருக்கேன். நீ இண்ட்ரஸ்டா டி.வி. பார்த்துக்கிட்டிருக்கே!"

"ந்யூஸைக் கவனியுங்க.."

"என்ன ந்யூஸ்?" திலகன் எழுந்து உட்கார்ந்து டி.வி.யைப் பார்க்க... நிர்மலா பெரியசாமி சொல்லிக் கொண்டிருந்தார்.

"இன்று மாலை அகில இந்திய மெடிக்கல் சயின்ஸ் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானி கௌரி சங்கர் அவர்கள் ஒரு கருத்தரங்கில் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென்று மயக்கமடைந்தார். உடனே அவர் சிகிச்சைக்காக அருகில் உள்ள கெட்வெல் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போகப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது."

நியூஸைக் கேட்ட திலகன் மஞ்சரியைப் பார்த்து ஏதோ சொல்ல முயன்ற விநாடி - பக்கத்து டீபாயில் இருந்த டெலிபோன் தன் தொண்டையைத் திறந்தது.

மஞ்சரி ரிஸீவரை எடுத்தாள். மெல்லக் குரல் கொடுத்தாள்.

"ஹலோ.."

"சித்தி.. நான் யமுனா பேசறேன்.."

''யமுனா.. நீயா.. எப்படி யிருக்கே?''

''ஃபைன்..''

''டெல்லியில் டான்ஸ் ப்ரோக்ராம் எப்படியிருந்தது?''

''அமர்க்களம்..! ஒவ்வொரு டான்ஸ் ஈவென்ட்டுக்கும் ஐந்து நிமிஷ நேரம் கைதட்டல் கிடைக்குதுன்னா பார்த்துக் குங்களேன். நிகழ்ச்சிக்கு வந்திருந்த டெல்லி முதலமைச்சர் ரெண்டு மணி நேரம் அசையாமே உட்கார்ந்து முழு டான்ஸ் ப்ரோக்ராமையும் ரசிச்சார். பிறகு மேடை ஏறி மைக்கைப் பிடிச்சவர் பாராட்டித் தள்ளிட்டார்.''

''சரி..! டெல்லியிலிருந்து நீ எப்ப புறப்படறே..?''

''இதோ கிளம்பிட்டேயிருக்கேன். ஒன்பது மணிக்கு ஃப்ளைட்... பன்னிரண்டு மணிக்கெல்லாம் வீட்ல இருப்பேன்... ஏர்போர்ட்டுக்கு கார் அனுப்ப வேண்டாம்... சித்தி. டாக்ஸி பிடிச்சு நானே வந்துடறேன்.''

''எதுக்காக மிட் நைட்ல வரணும்... நாளைக்குக் காலையில் ஏழு மணிக்கு ஃப்ளைட் இருக்கு.. அதுல வரலாமே..?''

''ஏழு மணி ஃப்ளைட் ஃபுல்.. சித்தி! ட்ரை பண்ணிப் பார்த்துட்டுத்தான் ராத்திரி ஒன்பது மணி ஃப்ளைட்ல புக் பண்ணினேன். அப்பா பக்கத்துல இருக்காரா சித்தி?''

''இல்லையே.. ஹாஸ்பிடலிலிருந்து இன்னிக்கு வீட்டுக்கு வர லேட்டாகும்ன்னு சொன்னார்.''

''பன்னிரண்டு மணிக்குள்ளே வந்துடுவாரா?''

''சொல்ல முடியாது... இன்னிக்கு ஒரு முக்கியமான ஆபரேஷன் இருக்குன்னு சொன்னார். லேட்டானா அங்கேயே தங்கிக்கிறதா சொல்லிட்டுப் போனார்.''



''சரி.. சித்தி! நான் ஹாஸ்பிடலுக்குப் போன் பண்ணிப் பேசிக்கிறேன்..'' மறுமுனையில் யமுனா ரிஸீவரை வைத்து விட, மஞ்சரி நெற்றியில் மின்னும் வியர்வையோடு திலகனைப் பார்த்தாள்.

''நீங்க இன்னிக்கு ராத்ரி இந்த வீட்ல தங்க முடியாது. டெல்லிக்குப் போன யமுனா ஒன்பது மணி ஃப்ளைட்டைப் பிடிச்சுப் பன்னிரண்டு மணிக்குள்ளே இங்கே வந்துடுவா..''

திலகன் கோபமாய் எழுந்தான். ''என்ன மஞ்சரி! திடீர்னு இப்படிச் சொன்னா எப்படி...? நான் எவ்வளவு ஆசையா வந்தேன்?''

''எனக்கு மட்டும் ஆசையில்லையா என்ன...? அப்பாவும் பொண்ணும் வீட்டில் இல்லாத இந்த ராத்திரியை முதல் ராத்திரியா நினைச்சுக் கொண்டாட எல்லா ஏற்பாடும் பண்ணி யிருந்தேன். எல்லாமே வீண்..!''

''இப்ப.. என்ன பண்றது... மஞ்சரி?''

''ஒண்ணும் பண்ண முடியாது. இன்னும் மூணு மணி நேரம்தான் இந்த வீட்ல நீங்க இருக்க முடியும்... பதினோரு மணிக்கெல்லாம் வெளியே போயிடணும்..''

''இது மாதிரியான ஒரு சந்தர்ப்பம் இனிமே வாய்க்குமா மஞ்சரி..?''

''வாய்க்காமே என்ன..? யமுனா கல்லூரியில் படிக்கிற பெண்.. எப்படியும் கல்ச்சுரல் டூர், எஜுகேஷனல் டூர்னு வெளியூர்களுக்குக் கிளம்பிப் போய்டுவா... என்னோட டாக்டர் புருஷனைப் பத்தி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது இல்லை. வாரத்துல நாலு நாள் ஹாஸ்பிடலிலேயே தங்கிவிடுவார்.''

திலகன் தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்துவிட்டு மஞ்சரியின் தோள் மேல் கையை வைத்தான்.

"இனி டயத்தை வேஸ்ட் பண்ணக் கூடாது. வா.. பெட்ரூமுக்குப் போயிடலாம்."

"சாப்பிட வேண்டாமா?"

"மொதல்ல நீ.. அப்புறம்தான் எனக்குச் சாப்பாடு.."

"நோ.. நோ... எனக்குப் பசிக்குது.. மொதல்ல சாப்பிடுவோம்.. கோழிக் குழம்பு ரெடி. சப்பாத்தி மாவையும் பிசைஞ்சாச்சு... பத்து நிமிஷத்துல சப்பாத்தி ரெடியாயிடும்.."

மஞ்சரி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மறுபடியும் டெலிபோன் குரல் கொடுத்தது.

"ஹலோ."

மறுமுனையில் டாக்டர் யோகானந்த் குரல் கொடுத்தார். "மஞ்சரி! டெல்லியிலிருந்து யமுனா போன் பண்ணியிருந் தாளா?"

"ஆமா..! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் போன் பண்ணிப் பேசினா... ராத்திரி ஒன்பது மணி ஃபிளைட்ல புறப்படறாளாம்.."

"எனக்கும் போன் பண்ணியிருந்தாள். நீ ஒரு காரியம் பண்ணு, மஞ்சரி.."

"என்ன... சொல்லுங்க..?"

"டெல்லியிலிருந்து ஒன்பது மணிக்குப் புறப்படற ஃப்ளைட் சென்னை ஏர்போர்ட்டுக்குப் பதினொன்றரை மணிக்கெல்லாம் வந்துவிடும். நீ காரை எடுத்துக்கிட்டு ஏர்போர்ட் போய் யமுனாவைக் கூட்டிக்கிட்டு வந்துடு."



"நான் ஏர்போர்ட்டுக்குப் போறதா..?"

"ஏன்.. போனா என்ன?"

"இல்லை, யமுனாவே ஏர்போர்ட்டிலிருந்து டாக்ஸி பிடிச்சு வந்துடறேன்னு சொன்னா.."

"அவ அப்படித்தான் சொல்லுவா.. நீ காரை எடுத்துட்டு ஏர்போர்ட்டுக்குப் போய் அவளைக் கூட்டிக்கிட்டு வந்துவிடு.."

"....."

"என்ன பேச்சையே காணோம்?"

"சரி.. போய்ட்டு வந்துடறேன்.. நீங்க வீட்டுக்கு எத்தனை மணிக்கு வருவீங்க..?"

"சொல்ல முடியாது. இன்னிக்கு நம்ம ஹாஸ்பிடல்ல ஒரு வி.ஐ.பி. அட்மிட் ஆகியிருக்கார். அவர்க்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டியிருக்கு.. நான் வீட்டுக்கு வரும்போது அநேகமாக விடிஞ்சிடும். யமுனா வீட்டுக்கு வந்ததும் எனக்கு போன் பண்ணிச் சொல்லு.."

"சரி.." மஞ்சரி எரிச்சலாய்ச் சொல்லி ரிஸீவரைச் சாத்தினாள். திலகன் அதற்குள் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து முதல் புகையை வெளியேற்றியபடி கேட்டான்.

"போன்ல யாரு.. உன்னோட கிழட்டுப் புருஷனா?"

"ஆமா.."

"என்ன சொல்றான்..?"

"நான் ஏர்போர்ட்டுக்குப் போய் அவரோட பொண்ணைக் கூட்டிக்கிட்டு வரணுமாம்.."

"நீ ஏர்போர்ட்டுக்குப் போகப் போறியா?"

"வேற வழி.. போய்த்தானே ஆகணும்..."

"ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு ராத்திரி பூராவும் உனக்குப் பக்கத்தில் இருக்கப் போறதை நினைச்சு ஏகப்பட்ட சந்தோஷத்தில் இருந்தேன். எல்லாமே ஸ்பாய்ல்ட்.. இனிமே இப்படியொரு சந்தர்ப்பம் அமையுமா என்ன?"

மஞ்சரி அவனுக்குப் பதில் சொல்ல முயன்ற விநாடி வாசலிலிருந்து காலிங் பெல் சத்தம் கேட்டது.

"டிடிங்.. டிடிங்.."

திலகனும் மஞ்சரியும் சரேலென்று திகைத்துப் போய் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

## 3

கெட்வெல் ஹாஸ்பிடல்.

டாக்டர் யோகானந்த் அறை.

யோகானந்துக்கு முன்பாய் போலீஸ் கமிஷனர் நவநீத கிருஷ்ணன், அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் சிவச்சந்திரன் ஆகியோர் கவலை முகங்களோடு உட்கார்ந்திருந்தார்கள்.

யோகானந்த் கையில் வைத்திருந்த கெமிக்கல் லேப் ரிப்போர்ட்டைக் காட்டி அழுத்தமான குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

"சயின்டிஸ்ட் கௌரிசங்கருக்கு வந்தது ஹார்ட் அட்டாக் கிடையாது. அவர் செமினாரில் பேசும்போது மினரல் வாட்டரைக் குடிச்சிருக்கார். அந்த மினரல் வாட்டரில் யாரோ



பாய்ஸனைக் கலந்து இருக்காங்க... அந்த பாய்ஸன் காட்டின வேலைதான் இது. சரியான நேரத்துல அவரை இங்கே கொண்டு வந்து ஹாஸ்பிடலைஸ் பண்ணினதால அவரோட உயிரைக் காப்பாத்த முடிஞ்சது. ஒரு அஞ்சு நிமிஷம் லேட்டாய்க் கொண்டு வந்து இருந்தாலும் அவரோட உயிரைக் காப்பாத்தியிருக்க முடியாது."

கமிஷனர் நவநீதகிருஷ்ணன் யோகானந்த்தின் கையில் இருந்த லேப் ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்துவிட்டு நெற்றிப் பரப்பில் கோத்திருந்த வியர்வையை ஆட்காட்டி விரலால் சுண்டினார்.

"டாக்டர்..! செமினாரில் கலந்துகிட்ட எல்லா டெலிகேட்ஸும் வெல்நோன் சயின்டிஸ்ட்ஸ். யாரையும் அவ்வளவு சுலபத்துல நெருங்கி ஃபார்மல் என்கொய்ரி கூட பண்ண முடியாது. உங்களுக்கு போன் பண்ணின அந்தப் பெண்ணோட பேர் என்னான்னு சொன்னீங்க?"

"கோப்பெருந்தேவி."

"இது அவளோட உண்மையான பெயராய் இருக்காது."

"மே.. பி. எனக்கும் அதே சந்தேகம்தான். அது ஒரு ஆணாக்கூட இருக்கலாம். மிமிக்ரி தெரிஞ்ச அவன் பெண் குரலில் பேசியிருக்கலாம்."

"கோப்பெருந்தேவியோட டிமாண்ட் என்ன?"

"ஹாஸ்பிடலில் அட்மிட்டாகி யிருந்த கௌரிசங்கர் குணமாகி வெளியே போகக் கூடாது. டெட்பாடியாத்தான் வெளியே வரணும்... நாளைக்குக் காலையில் பத்து மணிக்கெல்லாம் அவரோட டெட்பாடி பெசன்ட் நகர் மின்சார மயானத்தில் இருக்கணும். இல்லேன்னா பின்னாடி நடக்கப்

போகிற வேண்டாத விபரீத சம்பவங்களுக்கு நான் நிறைய வருத்தப்பட வேண்டியிருக்குமாம்..''

அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் சிவச்சந்திரன் தன் கையில் வைத்திருந்த ஒரு ஃபைலைப் பிரித்தார். ஃபேக்ஸில் வந்த சில தாள்களைப் புரட்டினார்.

''டாக்டர்..! மருத்துவ மேதை கௌரிசங்கர் பற்றிய சில குறிப்புகளை டெல்லி போலீஸ் சென்னை போலீஸுக்கு ஃபேக்ஸ் பண்ணியிருந்தாங்க.. அந்தக் குறிப்புகளைப் படிச்சுப் பார்த்தா கௌரிசங்கர்க்கு விரோதிகளே இருக்க முடியாதுன்னு தோணுது. கௌரிசங்கர் ஒண்டிக்கட்டை. அவர்க்கு ஃபேமிலியே கிடையாது. மருத்துவத் துறையில் ஏதாவது சாதிக்கணும் கிறதுக்காக கல்யாணம் பண்ணிக்கிறதைத் தள்ளிப் போட்டுட்டே வந்தார். அப்புறம் ஒரு கட்டத்தில் கல்யாணமே வேண்டாம்ன்னு சொல்லிட்டார். டெல்லி பிரஸிடென்ஸி அவென்யூவில் அரசாங்கம் கொடுத்த வீட்டில் வசிக்கிற கௌரிசங்கர்க்கு நண்பர்களே கிடையாது. நண்பர்கள் இருந்தால் பொன் போன்ற நேரம் காணாமல் போய்விடும் என்று சொல்வாராம். சென்னைக்கு வந்தால் அவர் சென்று பார்க்கக் கூடிய ஒரே மனிதர் மாணிக்கவாசகம். இந்த மாணிக்கவாசகம் ஐந்தாண்டுகளுக்கு முன்புவரை அகில இந்திய மெடிக்கல் சயின்ஸ் இன்ஸ்டிட்யூட்டுக்கு சேர்மனா இருந்தவர். கௌரிசங்கர் மாணிக்கவாசகத்தைத் தன் குருவாக நினைத்து அவர் விட்டுச் சென்ற மருத்துவ ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து கொண்டு இருக்கிறாராம்.''

''கௌரிசங்கர் கொலை செய்யப்படுவதால் யார்க்கு லாபம்.. என்கிற ரீதியில் கேஸை அணுகினால் விடை கிடைக்கலாம்..!''



அஸிஸ்டண்ட் கமிஷனர் சிவச்சந்திரன் பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை மூடிக் கொண்டே சொன்னார்.

''டாக்டர்..! மருத்துவ மேதை கௌரிசங்கர் ஒரு வருட காலமாகவே தன்னுடைய மருத்துவக் கண்டுபிடிப்புகளுக்காகப் பத்திரிகைகளாலும் டி.வி. மீடியாக்களாலும் அதிகம் புகழப்பட்டவர். இவர்க்கு 'பாரத ரத்னா' விருது கொடுக்கப்பட வேண்டும் என்று எல்லா அரசியல் கட்சிகளுமே ஒட்டு மொத்தமாய்க் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கின்றன. இவருடைய இந்த அபரிமிதமான புகழைச் சக விஞ்ஞானிகள் விரும்பாமல் இருக்கலாம். அவர்களில் யாராவது ஒருவர் கௌரிசங்கரைத் தீர்த்துக் கட்டத் திரைமறைவில் திட்டம் போட்டு இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கலாம்.''

''ஒரு விஞ்ஞானி கிரிமினலாக மாறுவாரா?''

''அவர் தெய்வம் கிடையாதே. மனிதன்தானே?''

''சரி...! அந்த மெடிக்கல் இன்ஸ்டிட்யூட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். இதில் எந்த விஞ்ஞானிக்குக் கௌரிசங்கரின் மேல் 'ப்ரொபஷனல் ஜெலஸி' இருக்கிறது என்பதை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?''

''சிரமமான காரியம்தான்! இருந்தாலும் ஊடுருவிப் பார்த்துவிட வேண்டியதுதான்!'' அஸிஸ்டண்ட் கமிஷனர் சிவச்சந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, டாக்டர் யோகானந்துக்கு முன்பாய் இருந்த இன்டர்காம் அவசரத் தொனியில் கூப்பிட்டது. ஒரு 'எக்ஸ்யூஸ் மீ'யைச் சொல்லி விட்டு ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்...''

மறுமுனையில் நர்ஸ் ஜெயந்தி பேசினாள்.

''டாக்டர்..! ஒரு எமர்ஜென்சி கேஸ்..''

''என்ன ஆக்ஸிடெண்டா?''

''ஆமா, டாக்டர்..''

''ஆணா... பெண்ணா..?''

''ஆண்..! யங் ஏஜ்..''

''கண்டிஷன்..?''

''ஸீரியஸ், டாக்டர். உடம்பு முழுக்க ரத்தம் வழிஞ்சு உறைஞ்சு போயிருக்கு... தலையில் ரத்தச் சகதி..''

''இதோ வர்றேன்..! டாக்டர் சிவ புண்ணியம் எந்த வார்டில் இருக்கார்?''

''ஆர்தோ..''

''டாக்டர் அப்துல் ரஹீம்..''

''லேபர் வார்டு..''

''ரெண்டு பேரையும் ஆபரேஷன் தியேட்டர்க்கு வரச் சொல்லிடு.''

''எஸ்.. டாக்டர்..''

யோகானந்த், கமிஷனர் நவநீதகிருஷ்ணனிடமும் அஸிஸ்டண்ட் கமிஷனர் சிவச்சந்திரனிடமும் சொல்லிக் கொண்டு, கேஷுவாலிட்டி வார்டை நோக்கிப் போனார்.

வேகமான சில நிமிஷ நடை.

கேஷுவாலிடி வந்தது.



ஒரு இளம் பெண் தலையில் அடித்துக் கொண்டு அழுது புலம்பிக் கொண்டிருக்க - ஸ்ட்ரெச்சரில் ஒரு இளைஞன் ரத்தத்தில் நனைந்து மல்லாந்து கிடந்தான். கண்ணிமைகள் பாதி செருகியிருக்க வாய் பிளந்து பல் வரிசையைக் காட்டியது.

அந்த இளம் பெண் டாக்டரைப் பார்த்ததும் அவருடைய கால்களில் விழுந்தாள்.

''அய்யா.. டாக்டரய்யா...! என் புருஷனை உயிரோடு காப்பாத்திக் கொடுங்கய்யா..''

''இதோ பாரம்மா...இங்கே அழுது ஆர்ப்பாட்டம் பண்ணக் கூடாது. அந்த பெஞ்சில் போய் கம்முன்னு உட்காரணும்...'' யோகானந்த் சொல்லி விட்டு நர்ஸிடம் திரும்பினார்.

''ஆக்ஸிடெண்ட் நடந்த விபரங்களைக் கேட்டுக்கிட்டியா?''

''கேட்டுக்கிட்டேன் டாக்டர்... இந்தப் பெண்ணோட பேரு அஞ்சலை. புருஷன் பேரு முத்துராஜ்... முத்துராஜ்க்கு காய்கறி மண்டியில் வேலை. லாரியில் லோடு ஏத்திட்டு கீழே இறங்கும் போது லாரி 'மூவ்' ஆயிடுச்சு. கீழே விழுந்ததில் தலையில் பலத்த அடி. போலீஸுக்குத் தகவல் கொடுத்துட்டு உடனே ஹாஸ்பிடலுக்குக் கொண்டு வந்துட்டாங்க...'' நர்ஸ் ஜெயந்தி சொல்லிக் கொண்டிருக்கும் போதே முத்துராஜ் இரண்டு ஆர்டலிகளால் ஆபரேஷன் தியேட்டரை நோக்கிக் கொண்டு போகப்பட்டான். டாக்டர் சிவபுண்ணியமும், டாக்டர் அப்துல் ரஹீமும் யோகானந்தை நெருங்கினார்கள்.

''டாக்டர்! ஆள் பிழைக்க மாட்டான் போலிருக்கு. ஹெவி ப்ளீடிங். உடம்புல இருக்கிற ரத்தம் முழுவதும் வெளியே வந்திருக்கும் போலிருக்கு..''

''பார்ப்போம்..''

மூன்று பேரும் ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந் தார்கள். வெளியே சிவப்பு விளக்கு எரியக் கதவு சாத்தப் பட்டது.

ஸ்ட்ரெச்சரில் இருந்த முத்துராஜை இரண்டு ஆர்டர்லிகள் எடுத்து மேஜையின் மேல் கிடத்திவிட்டு ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக் கொண்டு போய்விட, யோகானந்த் பஞ்சைக் கை நிறைய அள்ளி ஸ்பிரிட்டில் நனைத்துக் கொண்டே முத்துராஜை நெருங்கி அவன் முகத்தில் வழிந்திருந்த ரத்தக் கோடுகளைத் துடைத்தார். தலையின் எந்தப் பாகத்தில் காயம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்க முயன்ற விநாடி -

படுத்திருந்த முத்துராஜ் குபீரென்று எழுந்து உட்கார்ந்தான். இடுப்புப் பக்கம் கையைக் கொண்டு போய் எதையோ எடுத்தான். வலது கையின் விரல்களில் ரிவால்வர் முளைத் திருந்தது.

மூன்று டாக்டர்களும் திகைத்துப் போய் அப்படியே அயர்ந்து போய் நிற்க முத்துராஜ் புன்னகைத்தான்.

''ஸாரி, டாக்டர்ஸ்...! இது என்னோட உடம்பிலிருந்து வெளிப்பட்ட ரத்தம் இல்லை. விலைக்கு வாங்கப்பட்ட ஒரு யூனிட் ரத்தம் இது.'' முத்துராஜ் சொல்லிக் கொண்டே எதிர்பார்க்காத ஒரு விநாடியில் கையில் வைத்திருந்த ரிவால்வரை உயர்த்தி யோகானந்தின் நெற்றிப் பொட்டில் வைத்தான்.

''டாக்டர்! உங்க மூணு பேரையும் சுட்டுத் தள்ள எனக்கு மூணு விநாடி போதும். ஆனா எனக்கு வேண்டியது உங்களுடைய உயிர்கள் கிடையாது.''



யோகானந்த் வியர்த்து வழிந்து கொண்டு எச்சில் விழுங்கினார்.. ''உ..... உ.... உனக்கு எ.. எ.. என்ன வேணும்?''

முத்துராஜ் யோகானந்தின் நெற்றிப் பொட்டை ரிவால்வரால் மெல்லத் தட்டினான்.

''மொதல்ல வெளியே இருக்கிற என்னோட மனைவி அஞ்சலை உள்ளே வரணும்.''

## 4

மஞ்சரியும் திலகனும் வீட்டு வாசலில் எழுந்த காலிங் பெல் சத்தம் கேட்டுச் சில விநாடி நேரத்துக்குத் திகைத்த பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

''மஞ்சரி! யார் அது?''

''தெரியலையே...! யமுனா டெல்லியில் இருக்கிறா... என்னோட கணவர் ஹாஸ்பிடல்ல இருக்கார்..''

''ரிலேட்டிவ்ஸ் யாராவது இருக்கலாம்.''

''சரி..! நீங்க போய் ஸ்டோர் ரூமில் இருங்க. நான் யார்னு போய்ப் பார்க்கிறேன். நான் குரல் கொடுக்காமே நீங்க வெளியே வரக் கூடாது.''

மஞ்சரி சொல்லி விட்டு வாசல் கதவை நோக்கித் தயக்க நடை போட்டுக் கொண்டு போனாள்.

கதவை நெருங்கித் தாழ்ப்பாளின் மேல் கையை வைத்தாள். தாழ்ப்பாளை விலக்கும் முன்பாகக் கதவின் சாவித் துவாரத்தில் தன்னுடைய வலது கண்ணைப் பொருத்திப் பார்த்தாள்.

வாசற்படிகளில் யாரோ நின்றிருப்பது தெரிந்தது.

'யாரது?'

உற்றுப் பார்த்தாள் மஞ்சரி.

உருவம் பிடிபடவில்லை.

கதவின் தாழ்ப்பாளை விலக்கலாமா... வேண்டாமா?

காலிங் பெல் இரண்டாவது தடவையாய்க் கூப்பிட்டது.

''டிடிங்..!''

மஞ்சரி துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கதவைத் திறந்தாள்.

வெளியே

இருட்டில் ஒரு பெண் நின்றிருந்தாள். கையில் சூட்கேஸ். காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே தெருவில் ஒரு ஆட்டோ அவளுக்காக வெயிட்டிங்கில் இருப்பது தெரிந்தது. மஞ்சரி நெருங்கி அவளுடைய முகத்தைப் பார்த்தபடி கேட்டாள்.

''யார் வேணும்?''

அந்தப் பெண் இரண்டடி முன்னால் வந்தாள்.

''எக்ஸ்யூஸ்மீ..! உங்களை இந்த ராத்திரி வேளையில் தொந்தரவு படுத்தறதுக்காக மன்னிக்கணும். என் பேர் திரிவேணி. எதிர் வீட்ல இருக்கிற மிஸ்டர் மகாலிங்கத்துக்கு நான் கஸின் சிஸ்டர். கோழிக்கோட்டிலிருந்து வர்றேன். மகாலிங்கத்தோட வீடு பூட்டியிருக்கு. வீட்டைப் பார்த்தா ரொம்ப நாளா பூட்டிக் கிடந்திருக்கும் போல் தெரியுது. அதான் உங்ககிட்டே விபரம் கேட்டுகிட்டுப் போலாம்னு வந்தேன்.''



மஞ்சரி லேசாய் முகம் மலர்ந்தாள்.

''ஓ..! மகாலிங்கத்தோட கஸின் சிஸ்டரா நீங்க..? மகாலிங்கம் வெளிநாட்டுக்குப் போய் ஒரு மாசத்துக்கும் மேலே இருக்குமே!''

திரிவேணி தன் நெற்றியில் கை வைத்து ஆயாசப்பட்டாள். ''ஓ..! ஃபாரினுக்குப் போயிட்டாரா?''

''நியூ ஜெர்ஸியில் இருக்கும் அவரோட மகள் வீட்டுக்குப் போயிருக்கார். நீங்க ஒரு வரை செல்லில் காண்டாக்ட் பண்ணி விவரம் தெரிஞ்சுக்கிட்டு வந்து இருக்கலாமே!''

''நோ.. ப்ராப்ளம்! நான் சென்னைக்கு வேற ஒரு விஷயமா வந்தேன். அப்படியே அவரையும் பார்த்துட்டுப் போக நினைச்சேன். தட்ஸ் ஆல்... ஸாரி.. உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துட்டேன்.''

''இதெல்லாம் ஒரு தொந்தரவா..? உள்ளே வாங்களேன்.. காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம்..''

''தேங்க்ஸ்..! ஆட்டோ வெயிட்டிங்கில் இருக்கு. நான் கிளம்பறேன்.''

திரிவேணி மஞ்சரியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினாள். ஆட்டோவில் அவள் ஏறிப் புறப்பட்டுப் போகும் வரை பார்த்துக் கொண்டிருந்த மஞ்சரி கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள்.

திலகன் எதிர்ப்பட்டான்.

''மஞ்சரி..! யாரந்தப் பொண்ணு?''

''பார்த்துட்டீங்களா?''

"ம்.. மாடிக்குப் போய் ஜன்னல் வழியா பார்த்தேன்."

"அவ பேர் திரிவேணி..! கோழிக்கோட்டிலிருந்து எதிர் வீட்டு மகாலிங்கத்தைப் பார்க்க வந்திருக்கா, மகாலிங்கத்துக்கு கஸின் சிஸ்டராம்... அவரோட வீடு பூட்டியிருக்கிறதால இங்கே என்கொயர் பண்ணிட்டுப் போக வந்தாளாம்.."

திலகனின் முகம் இறுகியது. இடது கையின் ஆட்காட்டி விரல் யோசனையாய்த் தாடையைத் தேய்த்தது.

மஞ்சரி அவனுடைய தோளைத் தொட்டாள். "என்ன ஒரு மாதிரியாயிட்டீங்க?"

"அவ சொன்னதை நீ நம்பறியா?"

"ஏன்.. நீங்க நம்பலையா?"

"நம்பலை.."

"ஏன்..?"

"அவகிட்டே ஏதோ தப்பு இருக்கு.."

"தப்பா.. என்ன தப்பு?"

"சொல்லத் தெரியலை மஞ்சரி..! அவ நிச்சயமா எதிர் வீட்டு மகாலிங்கத்தைப் பார்க்க வரலை.. அதை மட்டும் என்னால சொல்ல முடியும்?"

"பின்னே..?"

"உன்னையும் என்னையும் வேவு பார்க்க வந்து இருக்கலாம்."

மஞ்சரி புன்னகைத்தாள். திலகன் திடுக்கிட்டான்.

"என்ன சிரிக்கிறே?"



"சிரிக்காமே என்ன பண்றது...? அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்ன்னு சொல்வாங்க. நீங்களும் நானும் தப்பு பண்றோம். அதனாலதான் எல்லாரையும் சந்தேகமா பார்க்கத் தோணுது."

"மஞ்சரி.. நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

"நீங்க ஒண்ணையும் சொல்ல வேண்டாம்... கண்டதையும் மனசுக்குள்ளே போட்டுக் குழப்பிக்காமே வந்து சாப்பிடுங்க."

மஞ்சரி சொல்லிவிட்டு டைனிங் டேபிளை நோக்கிப் போனாள். திலகன் அவளைப் பின் தொடராமல் மாடி ஜன்னலை நோக்கிப் போனான். ஜன்னலை நெருங்கிச் சாத்தியிருந்த ஜன்னல் கதவை மெல்லத் திறந்து ரோட்டை எட்டிப் பார்த்தான்.

ஆட்டோ ஒன்று ரோட்டோரத்தில் தெரிந்தது. திரிவேணி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அந்தப் பெண் ஆட்டோவில் ஏறாமல் பைனாகுலர் ஒன்றைக் கண்களில் பொருத்தி மஞ்சரியின் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 5

டாக்டர் யோகானந்த்தின் நெற்றிப் பொட்டில் மறுபடியும் ரிவால்வரால் தட்டினான் முத்துராஜ்.

"சொன்னது காதுல விழலையா.. டாக்டர்? என்னோட மனைவி அஞ்சலையை ஆபரேஷன் தியேட்டர்க்குள்ளே கூப்பிடுங்க.."

"உ...உ... உனக்கு என்ன வேணும்?"

''எனக்கு என்ன வேணும்கிறதை அஞ்சலை உள்ளே வந்ததும் சொல்லுவா.. ம்.. போய்க் கதவைத் திறங்க.''

யோகானந்த் ஆபரேஷன் தியேட்டரின் முகப்புக் கதவை நோக்கி மெதுவாய் நகர - முத்துராஜின் கையில் இருந்த ரிவால்வர் இப்போது டாக்டர்கள் சிவபுண்ணியத்தையும் அப்துல் ரஹீமையும் மாறி மாறிப் பார்த்தது.

''நீங்க ரெண்டு பேரும் மூச்சுக் காட்டாமே அந்த சுவரோரமாய்ப் போய் மண்டி போட்டு உட்கார்ங்க... நான் ஏதாவது கேட்டால் ஒழிய வாயைத் திறக்கக் கூடாது..''

இரண்டு டாக்டர்களும் அவனையே பார்த்துக் கொண்டு நின்றார்கள். முத்துராஜ் ரிவால்வரை உயர்த்தினான்.

''ம்.. போங்க.. பத்தே செகண்ட்ஸ்! அதுக்குள்ளே அந்த சுவரோர மூலைக்குப் போய் மண்டி போட்டு உட்காரணும். இல்லேன்னா இந்தத் துப்பாக்கியில் இருக்கிற ஆறு தோட்டாக்கள்ல ரெண்டு தோட்டா உங்க ரத்தத்தை ருசி பார்க்க உடம்புக்குள்ளே நுழையும்..''

சிவபுண்ணியமும், அப்துல் ரஹீமும் ஐந்தே விநாடிகளில் சுவர் மூலையை நெருங்கி மண்டி போட்டு உட்கார்ந்தார்கள்.

''இது புத்திசாலித்தனம்!'' சிரித்த முத்துராஜ் தன் கையில் இருந்த ரிவால்வரை யோகானந்த் நோக்கித் திருப்பினான்.

யோகானந்த் ஆபரேஷன் தியேட்டரின் முகப்புக் கதவைத் தொட்டு அதன் தாழ்ப்பாளை விலக்கினார். கதவைத் தள்ளினார்.

வெளியே -



அந்தப் பெண் அஞ்சலை மார்புக்குக் குறுக்கே கையைக் கட்டிக் கொண்டு ஒரு புன்னகையோடு நின்றிருந்தாள். கையில் ஒரு பை.

''என்ன டாக்டர்? நான் உள்ளே வரலாமா?''

யோகானந்த் அஞ்சலையை முறைக்க... அவள் அதைப் பொருட்படுத்தாமல் உள்ளே நுழைந்தாள்.

''டாக்டர்! இந்த முறைப்பையெல்லாம் கொஞ்ச நேரத்துக்கு மூட்டி கட்டிப் பரண் மேல் தூக்கிப் போட்டுற்றது பெட்டர். முத்துராஜ் கையில் இருக்கிற பிஸ்டலுக்கு இந்த முறைப் பெல்லாம் பிடிக்காது.''

ஆபரேஷன் தியேட்டர்க்குள் நுழைந்த அஞ்சலை கதவை மூடி லாக் செய்துவிட்டு முத்துராஜக்குப் பக்கத்தில் வந்தாள்.

''முத்துராஜ்..! டாக்டர்ஸோட ஒத்துழைப்பு எப்படி இருக்கு..?''

''இதுவரைக்கும் ஓ.கே...! இனிமேலும் ஓ.கே. சொல்கிற மாதிரி நடந்துக்குவாங்களான்னு பொறுத்திருந்துதான் பார்க்கணும்.''

யோகானந்த் கோபமாய்க் குரலை உயர்த்தினார்.

''உ.. உங்க... ரெண்டு பேர்க்கும் என்ன வேணும்?''

முத்துராஜ் சிரித்தான்.

''டாக்டர்..! நான் ஹாஸ்பிடலில் இருக்கிற பணத்தைக் கொள்ளையடிக்க வரலை... நீங்க எங்களுக்காக ஒரு சின்ன உதவி பண்ணினா போதும்..''

''எ.. என்ன உதவி?''

''ஐ.ஸி. யூனிட்டில் அட்மிட்டாகி யிருக்கிற சயன்டிஸ்ட். கௌரிசங்கரை எங்ககிட்ட ஒப்படைக்கணும்.''

''...''

யோகானந்த மௌனித்தார்.

''என்ன... பேச்சைக் காணோம்?''

''கௌரிசங்கர் இப்போ ஆபத்தான நிலைமையில் இருக்கிறார். அவர்க்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டி யிருக்கு.''

''அது எங்களுக்குத் தெரியும்.. அவர் உயிர் பிழைக்கிறதைப் பற்றி எங்களுக்குக் கவலை கிடையாது. அவரை எங்ககிட்டே ஒப்படைக்கணும்... ஹாஸ்பிட்டலுக்குப் பின் பக்கம் எங்களு டைய ஆம்புலன்ஸ் வேன் ஒண்ணு நின்னுட்டிருக்கு... அந்த ஆம்புலன்ஸ் வேனுக்கு அவரைக் கொண்டு போகணும்..''

''நோ.. அது முடியாத காரியம்..''

''ஏன் முடியாது..?''

''முடியாதுன்னா முடியாதுதான்... நீ எங்க மூணு பேரையும் சுட்டுத் தள்ளினாலும் சரிதான்.'' யோகானந்த் குரலை உயர்த்திச் சொல்ல... முத்துராஜ் புன்னகைத்தான்.

''ஓ.. உயிர்த் தியாகமா..? சயன்டிஸ்ட் கௌரிசங்கரைக் காப்பாத்தறதுக்காக நீங்க மூணு பேரும் உயிர் விடறது சரிதான். ஆனா இந்த ஹாஸ்பிட்டலில் இருக்கிற எல்லாரையும் சாகடிக்க நினைக்கிறது எந்த வகையில் நியாயம்?''

யோகானந்த் திகைத்தார்.

''நீ என்ன சொல்றே?''



முத்துராஜ் அஞ்சலையைப் பார்க்க, அவள் தன் கையோடு கொண்டு போயிருந்த பையைப் பிரித்து ஒரு பிளாஸ்டிக் கவர்க்குள் பத்திரப்படுத்தி வைத்து இருந்த அதை எடுத்து மேஜையின் மேல் வைத்தாள்.

முத்துராஜ் யோகானந்தின் தோள்ப் பட்டையை ரிவால்வரி னால் தட்டினான்.

''டாக்டர்..! அது என்னான்னு தெரியுதா? ஆர்.டி.எக்ஸ். டைனமைட். எடை ஐந்து கிலோ. இது வெடிச்சா நூறு மீட்டர் தூரத்துக்கு ஒண்ணுமே இருக்காது. அஞ்சலை கிட்டே ரிமோட் கண்ட்ரோல் இருக்கு. பட்டனை அழுத்தி விட்டா போதும். நாளைக்கு இந்தியாவில் இருக்கிற எல்லா நியூஸ் பேப்பர் களுக்கும் உங்க ஹாஸ்பிடல்தான் தலைப்புச் செய்தி..''

யோகானந்தின் முகம் வெளிறிப் போக... அவருடைய பார்வை ஆர்.டி.எக்ஸ். வெடிகுண்டு மீதும், அஞ்சலையின் கையில் இருந்த ரிமோட் கண்ட்ரோல் மீதும் மாறிமாறிப் பயமாய்ப் பார்த்தது.

அஞ்சலை சொன்னாள். ''டாக்டர்! இது வெறும் பயமுறுத்தல் கிடையாது. எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற நீங்க அடம் பிடிச்சா எல்லாரும் ஒட்டு மொத்தமா மேலே போக வேண்டியதுதான். உங்க உயிர்களைப் பற்றி நீங்க எப்படி கவலைப்படலையோ அதே மாதிரிதான் நாங்களும் எங்க உயிர்களைப் பற்றி கவலைப்படாமே வந்திருக்கோம். மேஜை மேல் சாதுவாய் உட்கார்ந்திருக்கிற இது டம்மி டைனமைட் கிடையாது. மல்ட்டி எக்ஸ்போஸிவ்ஸ். ஒரு மினி அணு குண்டுன்னே சொல்லலாம். நூறு மீட்டர் சுற்றளவு தூரத்துக்கு எது இருந்தாலும் அது சாம்பல்தான்.''

அஞ்சலை பேச்சை நிறுத்த - முத்துராஜ் தொடர்ந்தான்.

"இப்ப என்ன சொல்றீங்க டாக்டர்.. சயன்டிஸ்ட் கௌரிசங்கரை எங்க கிட்டே ஒப்படைக்கிறீங்களா.. இல்லை... ரிமோட் கண்ட்ரோலுக்கு வேலை கொடுக்கட்டுமா..?"

யோகானந்த் ஒன்றும் பேசாமல் வியர்வை வழிகிற முகத்தோடு நின்றிருக்க, முத்துராஜின் குரலில் கோபம் சேர்ந்து கொண்டது.

"இந்த மௌன விரதமெல்லாம் எனக்குப் பிடிக்காது. டாக்டர்..! உடனடியா எனக்குப் பதில் வேணும்."

யோகானந்த் சில வினாடிகள் யோசித்துவிட்டு நிமிர்ந்தார்.

"இதோ பார்..! சயன்டிஸ்ட் கௌரிசங்கரை ஐ.ஸி. யூனிட்டிலிருந்து வெளியே கொண்டு வர்றது அவ்வளவு சுலபம் இல்லை."

"ஏன்? என்ன காரணம்?"

"ஐ.ஸி. யூனிட்டுக்கு முன்னாடி போலீஸ் இருக்காங்க."

"இது ஒரு காரணமா, டாக்டர்...? நான் சொல்றபடி கேட்டீங்கன்னா கௌரிசங்கரை வெளியே கொண்டு வந்துடலாம்.."

"எப்படி?" யோகானந்த் திகைப்பாய்க் கேட்க - முத்துராஜ் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொல்ல ஆரம்பித்தான்.

## 6

ஆட்டோவுக்குப் பக்கத்தில் நின்று பைனாகுலர் வழியாக மஞ்சரியின் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்த, அந்தப்



பெண் திரிவேணியைப் பார்வையில் வாங்கியதும் திலகன் துணுக்குற்றுப் போய்ச் சமையலறையை நோக்கி நடந்தான். உடம்பில் பதட்டம் பரவிக் குரல் நடுக்கத்துடன் வெளியே வந்தது.

"ம.. ஞ்.. ச..ரி.."

ஸ்டவ்விலிருந்து பாத்திரம் ஒன்றை இறக்கிக் கொண்டிருந்த மஞ்சரி திரும்பினாள்.

"என்னங்க?"

"நான் சொன்னது உண்மையாயிடுச்சு... அந்தத் திரிவேணிகிட்டே ஏதோ தப்பு இருக்கும்னு சொன்னேனா இல்லையா?"

"சொன்னீங்க.."

"வந்து பாரு.. ஆட்டோவுக்குப் பக்கத்துல நின்னுகிட்டு பைனாகுலர் வழியா இந்த வீட்டையே பார்த்துகிட்டு இருக்கா.."

"நிஜமாவா?"

"ம்.. வந்து பாரு.." மஞ்சரியின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போய் மாடி ஜன்னலுக்குப் பக்கத்தில் நிறுத்தினான் திலகன்.

"ம்.. பாரு.."

மஞ்சரி எட்டிப் பார்த்தாள்.

தெரு வெறிச்சோடிப் போயிருந்தது.

"யாரையும் காணோமே?"

''என்னது... யாரையும் காணோமா...?'' திகைப்பாய்க் கேட்டுக் கொண்டே ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த திலகன் முகம் மாறினான்.

''அதுக்குள்ளே போயிட்டா போலிருக்கு..''

''இதோ பாருங்க.. அவ யாராகவோ இருந்துட்டுப் போகட்டும்..! வீணாக உங்க மனசைப் போட்டுக் குழப்பிக்க வேண்டாம். போய் டைனிங் டேபிள்ல உட்கார்ங்க... நான் சூடா சப்பாத்தி போட்டுகிட்டு வர்றேன்.''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம் மஞ்சரி. நான் கிளம்பறேன்..''

''என்னது... கிளம்பறீங்களா?''

''ஆமா.. அந்த திரிவேணியை ஃபாலோ பண்ணி அவ யாரு என்னன்னு தெரிஞ்சுக்காதவரைக்கும் என்னோட மனசுக்கு நிம்மதி கிடையாது.''

''இது வேண்டாத வேலை.''

''இல்லை, மஞ்சரி.. இது உடனடியாகப் பார்க்க வேண்டிய வேலை..! நான் வர்றேன்.. இந்த ஏரியாவை விட்டு அவ ரொம்ப தூரத்துக்குப் போயிருக்க மாட்டா.. ஆட்டோ நம்பரையும் நோட் பண்ணி வெச்சுகிட்டேன்.''

திலகன் சொல்லிக் கொண்டே மாடிப்படிகளில் வேகமாய் இறங்கி - வீட்டை விட்டு வெளியேறி - ரோட்டின் எதிர்ப் பக்கத்தில் ஒரு மரத்துக்குப் பின்னால் மறைவாய் நிறுத்தியிருந்த தன்னுடைய பைக்கை உதைத்து உயிரூட்டிக் கொண்டான். இருட்டை ஹெட்லைட் வெளிச்சம் துரத்தியடிக்க, பைக் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது.



'இந்த ஏரியாவைத் தாண்டியிருக்க முடியாது ஆட்டோ. எப்படியும் ஒரு பத்து நிமிஷத்துக்குள் மடக்கி விடலாம்.'

பைக்கின் வேகத்தை அதிகப்படுத்தினான் திலகன்.

நீளமான அந்த நெடுஞ்சாலையிலும் அதன் பக்கவாட்டுக் கிளை ரோடுகளிலும் பைக்கை விரட்டிப் பார்வையைத் துரத்திப் பார்த்தான்.

ஆட்டோ பார்வைக்குக் கிடைக்கவில்லை.

'அதற்குள் ஆட்டோ எப்படி மறைந்தது?'

திலகன் பதினைந்து நிமிஷ நேரம் தேடியலைந்து விட்டு ஒரு பெட்டிக் கடைக்கு முன்பாய் பைக்கை நிறுத்தினான். வில்ஸ் ஃபில்டர் ஒரு பாக்கெட் வாங்கி சிகரெட்டொன்றை உருவி உதட்டுக்குக் கொடுத்து லைட்டரில் பற்ற வைத்துக் கொண்டான். புகையைக் காற்று மண்டலத்துக்குக் கொடுத்துக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான்.

கொஞ்சம் தொலைவில் இருட்டான ஒரு சந்துக்குள் பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் தெரிந்தது. கூடவே குழப்பமான பேச்சுச் சத்தம். யாரோ யாரையோ திட்டிக் கொண்டிருந்தார்கள்.

திலகன் பெட்டிக் கடைக்காரரிடம் கேட்டான்.

''அங்கே என்ன நடக்குது..?''

''அதுவா ஸார்...! அது பொன்னம்மா இட்லிக் கடை ஸார்.. ராத்திரி இந்நேரம் ஆனாப் போதும்.. இந்த ஏரியாவில் இருக்கிற எல்லா ஆட்டோ டிரைவர்களும் தண்ணியைப் போட்டுக்கிட்டு பொன்னம்மா இட்லிக் கடைக்கு வந்துடு வாங்க.. சாப்பிட்டு முடிஞ்சு போகிற வரைக்கும் ரகளைதான்..''

பெட்டிக் கடைக்காரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே திலகன் அந்த இருட்டான சந்தை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டான்.

மூன்று நிமிஷ நடை.

அந்த சந்து வந்தது. குறுகலாக இருந்தாலும் ஒரு கார் போய் வரக் கூடிய அளவுக்கு வசதியாய்த் தெரிந்தது. திலகன் சந்துக்குள் நுழைந்தான். காற்றில் அடர்த்தியான மூத்திர நாற்றம். மூக்கைப் பிடித்துக் கொண்டு பத்து விநாடி நடந்து அந்தப் பகுதியைக் கடந்ததும், நுரையீரல் இயல்பாய் சுவாசிக்க ஆரம்பித்தது.

புகைந்து கொண்டிருந்த பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் நான்கைந்து ஆட்டோக்கள் ஓரமாய் நிறுத்தப்பட்டுத் தெரிய... ரோட்டில் போடப்பட்டிருந்த பெஞ்சுகளில் உட்கார்ந்து ஆட்டோ டிரைவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆஃப்பாயில் முட்டை தோசைக் கல்லில் மணக்க பொன்னம்மா என்கிற அந்தக் கிழவி வாயில் அதக்கிக் கொண்ட புகையிலை யோடு அங்கே வேலை செய்பவர்களை விரட்டிக் கொண்டிருந்தாள்.

"டேய்.. பரமசிவம்..! இந்த ஆஃப்பாயில் முட்டையைக் கொண்டு போய் முருகேசுக்குக் குடு.. புரோட்டா யார் கேட்டாங்க?"

"காளியண்ணன்.."

"சாதாவா... பட்டரான்னு கேளு.."

"கேட்டுட்டு வர்றேன்.."

திலகன் அங்கு நின்றிருந்த ஆட்டோக்களில் திரிவேணி வந்த ஆட்டோவைத் தேடினான்.



கிடைக்கவில்லை.

மெல்ல நடந்து போய் ஒரு காலியான பெஞ்சில் உட்கார்ந்தான். பக்கத்தில் இருந்த ஒரு ஆட்டோ ட்ரைவர் திலகனை ஒரு போதைப் பார்வை பார்த்துவிட்டு சாம்பாரை இட்லியின் தலையில் ஊற்றிக் குளிப்பாட்டினார். பையன் பக்கத்தில் வந்து நின்றான்.

"ஸார்க்கு என்ன..?"

"ரெண்டு இட்லி.."

"சைடு டிஷ் கோழியா.. மட்டனா ஸார்?"

"மட்டன்.."

பையன் நகர்ந்து போய்விட, திலகன் பக்கத்தில் இட்லியை வதம் செய்து கொண்டிருந்த ஆட்டோ ட்ரைவரிடம் கேட்டான்.

"ராமசாமி வந்துட்டுப் போயிட்டாரா?"

வாய்க்குள் திணிக்கப்பட்ட இட்லியோடு ஆ.டி. திலகனைப் பார்த்தார்.

"ராமசாமியா..யாரது?"

"ஆட்டோ டிரைவர் ராமசாமிங்க.. ஆட்டோவோட ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் கூட டி.என். 41பி 7887."

இட்லியை விழுங்கிவிட்டு யோசித்தார். "நம்பர் என்ன சொன்னீங்க...?"

"டி.என். 41பி 7887. ஆட்டோவுக்குப் பின்னாடி கூட ஒரு வாசகம் இப்படி எழுதியிருக்கும். 'தாயின் மனதை மகிழ்ச்சியாய் வைத்து இருப்பவர் கோயில்களுக்குப் போக வேண்டியது இல்லை.'

'அது ராமசாமி வண்டி இல்லீங்க... மருதாசலம் வண்டி..''

''ஆமா.. ஆமா... மருதாசலம்....! பேரை மறந்துட்டேன்... மருதாசலம் வந்துட்டுப் போய்ட்டாரா?''

''தெரியலையே..! சப்ளை பண்ற பையனைக் கேட்டா தெரியும். டேய் வேலு..!''

''என்னண்ணே...?''

பார்சல் செக்ஷனிலிருந்து பன்னிரண்டு வயதுச் சிறுவன் வேலு குரல் கொடுத்தான்.

''மருதாசலம் வந்துட்டுப் போய்ட்டாரா?''

''இன்னும் இல்லை.. இப்ப வர்ற நேரம்தாண்ணே!''

திலகன் அந்த ஆட்டோ ட்ரைவர் மருதாசலத்துக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.

## 7

முத்துராஜ் குரலைத் தாழ்த்திக் கொண்டு யோகானந்திடம் குனிந்தான்.

''டாக்டர்..! ஐ.ஸி. யூனிட்டுக்குக் கொண்டு வரப்படுகிற பேஷண்ட்ஸ் நீங்க கொடுக்கிற ட்ரீட்மெண்ட் பலனளிக்காமே இறந்துட்டா அவங்க உடல்களை எந்த வழியா வெளியே கொண்டு போவீங்க...?''

''அது.. வந்து.. வந்து..''

''நானே சொல்றேன்...! ஹாஸ்பிடலில் இருக்கிற பிற பேஷண்ட்களுக்கோ மத்தவங்களுக்கோ தெரியாமே



இருக்கிறதுக்காக ஐ.ஸி. யூனிட்டுக்குப் பின்பக்கம் இருக்கிற ஒரு ரகசிய வழியை உபயோகப்படுத்தி இறந்த உடல்களை ஆம்புலன்ஸுக்குக் கொண்டு போயிடுவீங்க, இல்லையா?''

''ஆ..ஆமா..'' வியர்த்துப் போயிருந்த முகத்தை ஒற்றிக் கொண்டார் யோகானந்த்.

''இப்பவும் அந்த ரகசிய வழியை உபயோகப்படுத்தித்தான் கௌரி சங்கரை வெளியே கொண்டு வந்து எங்களுக்குச் சொந்தமான ஆம்புலன்ஸில் ஏத்தறீங்க..!''

''...''

யோகானந்த் நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

''டாக்டர்! என்ன யோசனை?''

''ஒண்ணுமில்லை..''

''இன்னும் பதினஞ்சு நிமிஷத்துக்குள்ளே கௌரிசங்கர் எங்களுடைய ஆம்புலன்ஸ் வேனுக்குள்ளே இருக்கணும்... அஞ்சலையைக் கூப்பிட்டுகிட்டு ஐ.ஸி. யூனிட்டுக்குப் போங்க.. கௌரி சங்கரை ஸ்ட்ரெச்சர்ல படுக்க வெச்சு ஐ.ஸி. யூனிட் ரகசிய வழியாய் ஹாஸ்பிட்டலுக்குப் பின் பக்கம் நாங்க நிறுத்தி வெச்சிருக்கிற ஆம்புலன்ஸ் வேனுக்குக் கொண்டு போயி டுங்க..''

''யாராவது பார்த்துட்டா...?''

''யாரும் பார்க்கக் கூடாது. இந்த ஹாஸ்பிட்டலுக்கு சீஃப் டாக்டரே நீங்கதான்! நீங்க நினைச்சா எந்த ஒரு காரியத்தையும் கமுக்கமா பண்ணி முடிக்கலாம். கௌரி சங்கரைக் காப்பாத்த நினைச்சு என்னையும் அஞ்சலையையும் நீங்க காட்டிக் கொடுக்க முயற்சி பண்ணினா... எல்லாரும் ஒட்டுமொத்தமா டைனமைட்டுக்குப் பலியாக வேண்டியதுதான்..''

''வேண்டாம்..''

''வேண்டாம்ன்னா உடனே அஞ்சலையைக் கூட்டிகிட்டு கிளம்புங்க... கௌரிசங்கர் ஆம்புலன்ஸுக்குள் போனதும் அஞ்சலை தன்கிட்டே இருக்கிற செல்போன் மூலமா எனக்குத் தகவல் கொடுப்பா.. அதுக்கப்புறம்தான் உங்க எல்லோர்க்கும் விடுதலை.''

யோகானந்த் உதட்டைக் கடித்துக் கொண்டு இறுக்கமான முகத்தோடு நிற்க, அஞ்சலை அவருடைய தோளைத் தொட்டாள்.

''போலாமா, டாக்டர்?''

யோகானந்த் தலை குனிந்தபடி ஆபரேஷன் தியேட்டரின் கதவை நோக்கி நடந்தார். அஞ்சலை பின் தொடர்ந்தாள்.

## 8

திலகன் அந்த இட்லிக் கடையில் அரைமணி நேரத்தைக் கழித்திருந்தபோது அந்த ஆட்டோ வந்து நின்றது.

TN 41-B.7887

ஆட்டோவுக்குப் பின்னால் வெள்ளை பெயிண்ட்டில் எழுதப்பட்ட அந்த வாசகம் தெரிந்தது.

'தாயின் மனதை மகிழ்ச்சியாய் வைத்து இருப்பவன் கோயில்களுக்குப் போக வேண்டியது இல்லை.'

டிரைவர் மருதாசலம் நடுத்தர வயதைத் தாண்டிக் காதோரங்களிலும், ஷேவ் செய்யப்படாத தாடையிலும் கணிசமாய் நரை வாங்கியிருந்தான். வெற்றிலைக் கறைப் பற்கள்.



''டேய்... வேலு.. சூடா என்ன இருக்கு?''

''எல்லாமே இன்னிக்கு.. சூடா இருக்குண்ணே... ஆப்பமும் ஆட்டுக்கால் பாயாவும் கொண்டு வரட்டுமா?''

''டேய்... இன்னிக்கு அமாவாசை.. நான் -வெஜ் எதுவும் பக்கத்துல கூட வரக் கூடாது.''

''சரிண்ணே.. ஆப்பமும் வெஜிடபிள் குருமாவும் கொண்டு வர்றேன்.''

''சீக்கிரமா கொண்டு வா.. சென்ட்ரலுக்குப் போகணும்..''

மருதாசலம் சொல்லிக் கொண்டே ஸ்டூலில் கிடந்த அந்த மாலை நேரத் தினசரியை எடுத்துப் பிரித்து வைத்துக் கொள்ள... திலகன் அவனுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தான். அக்கம் பக்கம் பார்த்து விட்டு மெல்லிய குரலில் கேட்டான்.

''நீங்கதான் மருதாசலமா?''

அவன் பேப்பரை மடித்தான்.

''ஆமா..''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்.''

மருதாசலம் தன் கையில் இருந்த பேப்பரை ஸ்டூலின் மேல் போட்டுவிட்டு, 'என்ன விஷயம்?' என்பது போல் பார்த்தான்.

திலகன் தயக்கமாய்ப் பேச்சை ஆரம்பித்தான்.

''இன்னிக்கு ராத்திரி எட்டு மணி சுமாருக்கு உங்க ஆட்டோவில் ஒரு இளம் பெண் பயணம் பண்ணினாளா?''

அவன் யோசித்துவிட்டு, ''ஆமா...'' என்றான்.

''அந்தப் பொண்ணு யார்ன்னு தெரியுமா?''

"தெரியாது. அவங்க ஒரு பாசஞ்சர். அவ்வளவுதான். ஒரு அட்ரஸைத் தேடிக்கிட்டு வந்தாங்க."

"கிடைச்சதா?"

"இல்லை... அந்த அட்ரஸில் இருக்கிறவங்க ஃபாரின் போயிட்டதாக எதிர் வீட்ல சொன்னாங்க.."

"அந்தப் பெண்ணை எங்கே இறக்கி விட்டீங்கன்னு சொல்ல முடியுமா?"

மருதாசலம் இப்போது திலகனைச் சந்தேகமாய்ப் பார்த்தான். "நீங்க யார் ஸார்... அந்தப் பெண்ணுக்கு என்ன வேணும்?"

"தப்பா நினைச்சுக்காதீங்க மருதாசலம்.. அந்தப் பொண்ணு என் ஃபிரண்ட்டோட சிஸ்டர். பேர் திரிவேணி. சொந்த ஊர் ஹைதராபாத். திடீர்னு அந்தப் பொண்ணை இந்த ஊர்ல உங்க ஆட்டோவில் பார்த்ததும் எனக்கு ஆச்சர்யம்.. ஒரு பெட்டிக்கடைக்குப் பக்கத்துல நின்னுட்டிருந்த நான் உங்க ஆட்டோவைக் கைதட்டிக் கூப்பிட்டேன். ஆனா நான் கை தட்டின சத்தம் உங்களுக்குக் கேட்கலை. ஆட்டோவுக்குப் பின்னாடி எழுதியிருந்த வாசகத்தையும், ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரையும் நோட் பண்ணிக்கிட்டு பக்கத்துல இருக்கிற ஆட்டோ ஸ்டாண்டுக்குப் போய் விசாரிச்சேன். அங்கேயிருந்த ஒரு ஆட்டோ டிரைவர்தான் உங்க பேரைச் சொன்னார். இந்த இட்லிக் கடைக்கும் வருவீங்கன்னு சொன்னார்."

மருதாசலத்தின் முகத்தில் இப்போதுதான் ஒரு நம்பகத் தன்மை தெரிந்தது. மெல்லச் சிரித்தான்.

"ஓ..! அப்படியா விஷயம்..?"



கடைப் பையன் ஆப்பத்தையும் வெஜிடபிள் குருமாவையும் ஒரு பிளேட்டில் வைத்துவிட்டுப் போனான்.

"நீங்க சாப்பிட்டீங்களா ஸார்.."

மருதாசலம் ஆப்பத்தின் மேல் கையை வைத்துக் கொண்டே சொன்னான். "ஸார்..! நீங்கள் சொல்ற அந்தப் பொண்ணு நந்தனம் லேடீஸ் ஹாஸ்டலில் ஸ்டே பண்ணியிருக்கு..! நான்தான் இறக்கி விட்டுட்டு வந்தேன்."

"நந்தனம் லேடீஸ் ஹாஸ்டலா?"

"ஆமா ஸார்.."

"சர்ச்சுக்குப் பக்கத்தில் இருக்கிற அந்த ஹாஸ்டல்தானே?"

"அதேதான் ஸார்.."

"ரொம்ப நன்றி, மருதாசலம்... நான் ஹாஸ்டலுக்குப் போய் அந்தப் பொண்ணைப் பார்த்துக்கிறேன்."

திலகன் எழுந்தான். மருதாசலம் ஆப்பத்தைப் பிய்த்து வெஜிடபிள் குருமாவில் தோய்த்துக் கொண்டிருக்க, வேக நடைபோட்ட திலகன் குறுகலான சந்தைக் கடந்து பைக்குக்கு வந்தான். செல்போனை எடுத்து எண்களைத் தட்டினான். இணைப்புக் கிடைக்க பேசினான்.

"மஞ்சரி.."

"என்ன... அந்தப் பொண்ணை ட்ரேஸ் பண்ணிட்டீங்களா?"

"பண்ணிட்டேன்.."

"எப்படி...?"

திலகன் அரை நிமிஷ நேரத்தில் விபரத்தைச் சொல்லி முடிக்க ... மஞ்சரி வியப்புக்குப் போனாள், சிரித்தாள்.

''நீங்க போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் இருக்க வேண்டிய ஆளு..!''

''மஞ்சரி! உனக்குப் பயமாயில்லையா?''

''எதுக்குப் பயம்?''

''ராத்திரி நேரத்துல ஒருத்தி உன்னோட வீட்டுக்கு வந்து வேவு பார்த்துட்டுப் போயிருக்கா!''

''அவ வேவு பார்த்தான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''மஞ்சரி..! நீ என்ன இவ்வளவு அலட்சியமா பேசறே! உனக்கும் எனக்கும் இருக்கிற தகாத உறவு பத்தி அந்தப் பொண்ணுக்குத் தெரிஞ்சிருக்கு... அதுதான் வேவு பார்க்க வந்திருக்கா..''

''நான் அப்படி நினைக்கலை..''

''கையில் பைனாகுலர் வெச்சிருந்தாளே..! உன்னோட வீட்டைப் பார்த்தாளே.''

''ஓ.கே. திலகன்..! உங்களுக்கு அந்தப் பொண்ணு மேல சந்தேகம்?''

''ஆமா..''

''சரி! என்ன பண்ணப் போறீங்க?''

''ஹாஸ்டலுக்குப் போய் அவகிட்டயே நேரிடையா பேசப் போறேன்.''

''எப்ப போறீங்க?''

''இப்பவே..!''



''திலகன்..! கொஞ்சம் பொறுங்க.. இந்தப் பிரச்சினையை இவ்வளவு வேகமா டீல் பண்ணாதீங்க..''

''ஸாரி மஞ்சரி... நாம வசிக்கிற வீட்ல பாம்பைப் பார்த்துட்டா எப்படி நிம்மதியா இருக்க முடியாதோ, அதே மாதிரியான நிலைமைதான் எனக்கும். அந்த திரிவேணியைப் பார்த்துப் பேசிட்டு மறுபடியும் உனக்கு போன் பண்றேன்... நீ யமுனாவைக் கூட்டிட்டு வர ஏர்போட்டுக்கு எத்தனை மணிக்குக் கிளம்பிப் போவே?''

''பத்தரை மணிக்கு..''

''அதுக்குள்ளே உனக்கு போன் பண்றேன்..'' செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்ட திலகன், பைக்கில் பரவி கிக்கரை உதைத்தான். அது உயிர் பெற்றுப் புகை மூச்சு விட்டது. கியரை மாற்றி ஆக்ஸிலேட்டரை முறுக்க பைக் பறந்தது.

இருபது நிமிடப் பயணத்தில் நந்தனம் லேடீஸ் ஹாஸ்டல் வெளிச்ச ஜன்னல்களுடன் வந்தது.

'ஒர்க்கிங் விமன் ஹாஸ்டல் - நந்தனம்' என்று சொன்ன பெயர்ப் பலகைக்குக் கீழே பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான் திலகன்.

ரிசப்ஷன் கௌண்டரில் ஒரு வயதான பெண். 'பார்வையாளர்கள் இங்கே காத்து இருக்கவும்' என்ற அறிவிப்பு போர்டுக்குப் பக்கத்தில் தெரிந்தாள். திலகனைப் பார்த்ததும் புருவங்களை உயர்த்தினாள்.

''யார் வேணும்?''

''உங்க ஹாஸ்டலில் தங்கியிருக்கிற திரிவேணியைப் பார்க்கணும்.''

''நீங்க?''

''அவளோட கஸின் பிரதர்.''

''என்ன விஷயமாய்ப் பேசணும்?''

''சம் ஃபேமிலி மேட்டர்..''

''போய் அந்த நாற்காலியில் உட்காருங்க. நான் திரிவேணிக்குத் தகவல் சொல்லி விடறேன்.''

''தேங்க்யூ...'' திலகன் சொல்லி விட்டு அந்த அறையின் ஓரத்தில் போடப்பட்டிருந்த பாலிவினைல் நாற்காலிகளை நோக்கிப் போய் ஒன்றில் சாய்ந்தான். எண்ணம் ஓடியது.

வரப் போகிற திரிவேணியிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிக்கலாம்?

''எதுக்காக இந்த வேவு வேலை?'' என்று நேரிடையாகவே கேட்டு விடலாமா?

அதுதான் சரி.. அவளை யோசிக்க விடக் கூடாது!

திலகன் காத்திருந்தான்.

சரியாய் ஐந்து நிமிஷத்துக்குப் பின்...

இரட்டை நாடி சரீரத்தில் ஒரு நடுத்தர வயதுப் பெண் உயர்த்திப் போட்ட கொண்டையோடு ரிசப்ஷனுக்குள் நுழைந்து திலகனை நெருங்கி நின்றாள், கேட்டாள்.

''நீங்களா என்னைப் பார்க்க வந்திருக்கீங்க?''

''இல்லையே..! நான் திரிவேணியைப் பார்க்க வந்திருக்கேன்.''

''நான்தான் திரிவேணி...''



திலகனுக்குள் அதிர்ச்சி பாளம் பாளமாய் வெடித்தாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தான்.

''ஸாரி.. நான் பார்க்க வந்தது என்னோட கஸின் சிஸ்டர் திரிவேணியை! ஷீ ஈஸ் ட்வெண்ட்டி ஃபைவ் இயர்ஸ் ஓல்டு.''

ரிசப்ஷன் கௌண்டரில் உட்கார்ந்திருந்த அந்த வயதான அம்மாள் குரல் கொடுத்தாள்.

''இந்த ஹாஸ்டலில் இருக்கிற ஒரே ஒரு திரிவேணி இவங்க தான். அந்தப் பெயரில் வேறு யாரும் இங்கு கிடையாதே!''

திலகன் முகம் குறுகிப் போய் நிற்க, அந்த அம்மாள் தொடர்ந்தாள். ''சென்னையில் எத்தனை ஹாஸ்டல்ஸ் இருக்கு. நீங்க சொல்ற உங்க கஸின் திரிவேணி வேற ஏதாவது லேடீஸ் ஹாஸ்டலில் ஸ்டே பண்ணியிருக்கலாம்.''

''நந்தனத்தில் வேற ஏதாவது லேடீஸ் ஹாஸ்டல் இருக்கா?''

''இல்லை... இது ஒண்ணுதான்.. பை... த... பை.. உங்க கஸின் சிஸ்டர் திரிவேணி எங்கே வேலை பார்க்கிறாங்கன்னு சொல்லுங்க.. அதை வெச்சு, அவ யார்ன்னு கண்டுபிடிக்க ட்ரை பண்ணலாம்.''

''அது.. வந்து.. வந்து..'' ஒரு சில வினாடிகளுக்குத் திணறிய திலகன் பிறகு சமாளித்துக் கொண்டு சரளமாகப் பொய் ஒன்றை அவிழ்த்து விட்டான். ''திரிவேணி ஏதோ ஒரு தனியார் கம்பெனியில் ஒர்க் பண்றதாய்ச் சொன்னா. அது என்ன கம்பெனின்னு இப்போ ஞாபகம் இல்லை. ஓ.கே. மேடம்! நான் வேற ஹாஸ்டல்களுக்குப் போய் என்கொயர் பண்ணிப் பார்த்துக்கிறேன். ஸாரி ஃபார் தி டிஸ்டர்பன்ஸ்...''

திலகன் ஹாஸ்டலை விட்டு வெளியே வந்து பைக்கில் கிளம்பி ரோட்டுக்கு வந்ததும் செல்போனுக்கு உயிர் கொடுத்து மஞ்சரியைக் கூப்பிட்டான்.

"மஞ்சரி.."

மறுமுனையில் மஞ்சரி லேசாய்ப் படபடத்தாள்.

"என்னாச்சு திலகன்... திரிவேணியைப் பார்த்தீங்களா?"

"இல்லை.."

"ஏன்..?"

"அவ அந்த ஹாஸ்டலிலேயே இல்லை!"

"என்ன சொல்றீங்க..?"

"உண்மையைச் சொல்லிகிட்டு இருக்கேன். நந்தனம் ஹாஸ்டலில் போய் விசாரிச்சேன். திரிவேணி என்கிற பெயரில் நடுத்தர வயது தாண்டிய பெண் ஒருத்தி மட்டும் இருந்தா."

"அப்படின்னா ஆட்டோ டிரைவர் சொன்னது பொய்யா?"

"இருக்கலாம்."

"இப்ப என்ன செய்யப் போறீங்க?"

"மறுபடியும் அந்த ஆட்டோ டிரைவரைப் பார்க்கப் போறேன்."

"பார்த்து..?"

"பொய் சொன்னியான்னு கேட்கப் போறேன்.."

"திலகன்.."

"என்ன..?"

"திரிவேணி விவகாரத்தை விட்டுடுங்க.. பின்னாடி பார்த்துக்கலாம்."



"மஞ்சரி..! திரிவேணி ஒரு விபரீதம். அவளை நாம கார்னர் பண்ணியே ஆகணும்.. இல்லேன்னா நாளைக்கு அவளால வரப் போகிற பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாது."

"இதெல்லாம் எனக்கு நல்லதா படலை. வேலியில் போகிற ஓணானை எடுத்துக் காதுல விட்டுக்கிட்ட கதையாயிடும்.."

திலகன் சிரித்தான். "ஓணானை எடுத்துக் காதுல விட்டுக் கறது முட்டாளோட வேலை. அந்த ஓணானையே இல்லாமே பண்றதுதான் இந்த திலகனோட வேலை.." சொல்லிவிட்டு செல்போனை அணைத்து திலகன் அதைச் சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு பைக்கின் வேகத்தை அதிகரித்தான்.

## 9

ஆபரேஷன் தியேட்டர்க்குள் டாக்டர்கள் சிவபுண்ணியமும், அப்துல் ரஹீமும் மூச்சடைத்துப் போய் மூலையில் உட்கார்ந்திருக்க - முத்துராஜ் மேஜையின் மேல் ஏறி உட்கார்ந்து கையில் ரிமோட் கண்ட்ரோலைப் பிடித்திருந்தான்.

தியேட்டர்க்குள் நீளமான மௌனம்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு - முத்துராஜின் செல்போன் முனகியது. எடுத்தான்.

அஞ்சலை பேசினாள்.

"ஐ.ஸி. யூனிட்டில் இருந்து கௌரிசங்கரை நம்முடைய ஆம்புலன்ஸுக்குக் கொண்டு போயிட்டேன்."

"டாக்டர் யோகானந்த் ஏதாவது முரண்டு பிடிச்சாரா?"

''கொஞ்சம் முரண்டு பிடித்தார். அப்புறம் நான் மிரட்டினதும் ஒத்துழைப்புக் கொடுத்தார்.''

''கிழவன் சாமானியப்பட்ட ஆள் கிடையாது. அவர்கிட்டே கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கிறது நல்லது. அவரும் இப்ப ஆம்புலன்ஸில்தானே இருக்கார்..?''

''ஆமா..''

''நாம ரெண்டு பேரும் நம்ம இருப்பிடம் போய்ச் சேர்கிற வரைக்கும் டாக்டர் யோகானந்த்தான் பிணையக் கைதி.''

''நீ சீக்கிரம் தியேட்டரை விட்டு வெளியே வா முத்துராஜ். போலீஸ் உஷாராயிட்டா நாம தப்பிக்க முடியாது. தியேட்டரில் இருக்கிற ரெண்டு டாக்டர்களையும் கட்டிப் போட்டு வாயில் பிளாஸ்டர் ஒட்டிட்டு வந்திடு.''

''இதோ கிளம்பிட்டேன்...'' செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்ட முத்துராஜ் அஞ்சலை விட்டுப் போயிருந்த பையைப் பிரித்து அந்த நைலான் கயிற்றுச் சுருளையும் பிளாஸ்டர் ரோலையும் எடுத்தான். முதலில் அப்துல் ரஹீமையும் பிறகு சிவபுண்ணியத்தையும் அங்கிருந்த நாற்காலிகளில் இறுக்கமாய்க் கட்டிப் போட்டு இரண்டு பேர்களின் வாய்களையும் பிளாஸ்டரால் ஒட்டினான்.

தன்னுடைய பொருள்களை யெல்லாம் எடுத்துக் கைப் பைக்குள் போட்டுக் கொண்டவன் மெதுவாக நடைபோட்டு தியேட்டரின் வெளிப்பக்கக் கதவை மெல்லத் திறந்து தலையை மட்டும் கொஞ்சமாய் நீட்டி எட்டிப் பார்த்தான்.

வராந்தாவில் யாரும் இல்லை.

'ஆபரேஷன் உள்ளே நடந்து கொண்டு இருக்கிறது' என்பதற்கு அடையாளமாய்ச் சிவப்பு விளக்கை எரிய விட்டுக்



கதவைச் சாத்தித் தாழிட்ட முத்துராஜ் வெகு இயல்பாய் வராந்தாவில் நடைபோட்டான்.

வராந்தாவில் யாரும் இல்லை.

சில நிமிட வேக நடையில் ஹாஸ்பிடலின் பின் பக்கம் வந்தான். திட்டுத் திட்டாய் இருட்டு தெரிய, அந்த இருட்டில் மறைந்து மறைந்து நடந்து காம்பௌண்ட் சுவரைத் தொட்டு அதன் மேல் எம்பி எட்டிப் பார்த்தான்.

ஹாஸ்பிடலுக்குப் பின் பக்கம் இருந்த தெருவில் அந்த ஆம்புலன்ஸ் வேன் தெரிந்தது. ஏறிக் குதித்தான். ஆஸ்பத்திரியின் கழிவுகள் கொட்டப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டி வயிற்றைப் புரட்டும் அளவுக்கு நாறியது. முத்துராஜ் சத்தமில்லாமல் ஓடிப்போய் ஆம்புலன்ஸ் வேனைத் தொட்டான்.

''அஞ்சலை..''

வேனின் கதவு திறந்தது. அஞ்சலை தெரிந்தாள்.

''உள்ளே வா முத்துராஜ்..''

வேனுக்குத் தாவினான். கதவு உடனே சாத்தப்பட்டு வேன் ஹெட் லைட் வெளிச்சத்தோடு வேகமாகக் கிளம்பியது.

வேனின் உள்ளே நிர்மாணிக்கப்பட்டிருந்த படுக்கையில் கௌரி சங்கர் மல்லாந்து தெரிந்தார். உடம்பில் சலனம் இல்லை.

க்ளுகோஸ் துளித் துளியாய் உள்ளே போய்க் கொண்டிருந்தது. அஞ்சலையின் கையில் இருந்த துப்பாக்கிக்குப் பயந்து வேனின் மூலையில் குத்துக் காலிட்டு உட்கார்ந்திருந்த யோகானந்தின் தோளைத் தட்டினான் முத்துராஜ்.

"டாக்டர்..! நாங்க எங்க இருப்பிடம் போய்ச் சேர்கிற வரைக்கும் நீங்க அந்த இடத்தை விட்டு அசையக் கூடாது. எங்களுக்கு எதிரா நீங்க ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போடக் கூடாது. மீறி ஏதாவது பண்ணீங்கன்னா உங்க உடம்பைத் துப்பாக்கியால் சல்லடை போட்டு ரோட்டோரமா எறிஞ்சுட்டுப் போயிடுவோம்.."

டாக்டர் யோகானந்த் அவர்களைப் பார்த்துப் பய எச்சில் விழுங்கிக் கொண்டிருக்க, வேன் போக்குவரத்தற்ற சாலைகளில் எய்த அம்பாய்ப் பறந்து கிலோ மீட்டர்களைக் கடந்து கொண்டிருந்தது.

## 10

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் அந்த ராத்திரி வேளையிலும் ஒரு கல்யாண மண்டபம் மாதிரி கலகலப்பாய் இருந்தது.

ஸ்டேஷனுக்கு வெளியே ஆட்டோ ரிக்ஷாக்கள் பயணிகளை எதிர்பார்த்து வரிசையாக நின்று கொண்டிருக்க - கால் டாக்ஸிகள் ஓரமாய்த் தெரிந்தன. சோடியம் வேப்பர் விளக்கு வெளிச்சத்தில் மங்காத்தா விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்த மருதாசலத்தைச் சக டிரைவர் ஒருவர் கூப்பிட்டார்.

"மருதாசலம்..!"

"என்ன பாய்..?"

"உன்னைய கேட்டுக்கினு ஒருத்தர் வந்திருக்கார்."

"யாரு..?"



"வந்து பாரு.."

மருதாசலம் மங்காத்தாவைப் பாதியில் விட்டுவிட்டு எழுந்து வந்தான்.

"அதோ...! அவருதான்.." பாய் சொல்லி விட்டு சவாரியைப் பிடிக்கப் போய் விட மருதாசலம் பாய் காட்டிய திசையைப் பார்த்தான்.

பைக்குக்குச் சாய்ந்தபடி திலகன் தெரிந்தான். மருதாசலம் முகம் நிறைய ஆச்சரியப்பட்டுக் கொண்டு அவனை நெருங்கினான்.

"என்ன ஸார்... ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் இட்லிக் கடையில் பார்த்தோம். மறுபடியும் என்னைத் தேடி வந்துட்டீங்க... என்ன விஷயம் ஸார்..?"

"எனக்கு உண்மை வேணும்."

"உண்மையா.. என்ன உண்மை.. ஸார்?"

"அந்தப் பொண்ணை நந்தனம் லேடீஸ் ஹாஸ்டல்லதானே இறக்கி விட்டே..?"

"ஆமா..ஸார்.."

"ஹாஸ்டல்ல போய் விசாரிச்சேன். அந்தப் பொண்ணு அங்க இல்லை."

"என்னது... அங்க இல்லையா?"

"இல்லை.."

"சரி.. அந்தப் பொண்ணு அங்க இல்லைன்னா அதுக்கு நான் என்ன ஸார் பண்ணட்டும்.?"

திலகன் தன் சட்டைப் பாக்கெட்டுக்குள் கையை விட்டு நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து மருதாசலத்தின் கையில் திணித்தான். அவன் திகைத்தான்.

''இது எதுக்கு ஸார்...?''

''உண்மையைச் சொல்றதுக்காக..''

''என்ன ஸார் இது..! அந்தப் பொண்ணு விஷயத்துல நான் ஏதோ பொய் சொல்லிட்ட மாதிரி பணத்தை நீட்டறீங்க... நான் சொன்னதுதான் உண்மை ஸார்... பணமெல்லாம் வேண்டாம். வெச்சுக்குங்க..''

''அப்படின்னா நீ பொய் சொல்லலை..?''

''இல்லை..'' தலையாட்டிய மருதாசலம் தொடர்ந்து சொன்னான். ''ஸார்! நீங்க சொல்றதைப் பார்த்தா அந்தப் பொண்ணு ஒரு ஏமாத்துப் பேர்வழியா இருப்பா போலிருக்கு... ஹாஸ்டல்ல தங்கியிருக்கிற மாதிரி பாவ்லா காட்டிட்டு வேற பக்கம் போயிட்டா.. நீங்க கவலைப்படாதீங்க ஸார். அந்த பார்ட்டி மறுபடியும் என்னோட பார்வையில் படாமே போகாது. பட்டதுன்னு வையுங்க.. நான் மடக்கிடறேன். உங்களுக்கு செல்போன் இருக்கா ஸார்..?''

''இருக்கு..''

''நெம்பர் கொடுத்துட்டுப் போங்க ஸார்.. ரெண்டே நாள்ல நான் உங்களுக்குத் தகவல் தர்றேன்.''

திலகன் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு துண்டு பேப்பரை எடுத்துத் தன்னுடைய செல்போன் நெம்பரை எழுதி அதோடு ஐந்நூறு ரூபாய் நோட்டையும் வைத்து நீட்டினான்.

''பணம் எதுக்கு ஸார்?''



''பரவாயில்லை.. வெச்சுக்க.''

''ஸாரி.. ஸார்... ஒவ்வொரு காசையும் நான் உழைச்சுச் சம்பாதிக்கத்தான் விரும்பறேன். இந்த எக்ஸ்ட்ரா லக்கேஜ் எல்லாம் எனக்கு வேண்டாம் ஸார்.. போய்ட்டு வாங்க.. அந்தப் பொண்ணைப் பார்த்தவுடனே நான் உங்களுக்குத் தகவல் தர்றேன்.''

செல்போன் நெம்பர் எழுதப்பட்ட துண்டுச் சீட்டை மட்டும் எடுத்துக் கொண்டு பணத்தைத் திலகனிடமே நீட்டினான் மருதாசலம்.

''வரட்டுமா ஸார்..! மங்காத்தா விளையாட்டு பாதியிலேயே நிக்குது.''

மருதாசலம் கிளம்பிப் போய்விட - திலகன் அவனையே வியப்பாய்ப் பார்க்க - செல்போன் கூப்பிட்டது.

எடுத்தான்.

மறுமுனையில் மஞ்சரி.

படபடப்பாய்ப் பேசினாள். ''திலகன்! இப்போ எங்கே இருக்கீங்க?''

''சென்ட்ரல் ஸ்டேஷனில்..''

''எதுக்கு... அந்த ஆட்டோ டிரைவரைப் பார்க்கவா?''

''ஆமா..''

''பார்த்துட்டீங்களா..?''

''ம்..''

''என்ன சொல்றான்..?''

"திரிவேணியை நந்தனம் லேடீஸ் ஹாஸ்டலின் வாசலில்தான் இறக்கி விட்டானாம். டிரைவரைப் பார்த்தா பொய் சொல்கிற ஆள் மாதிரி தெரியலை. பணம் கொடுத்தேன். வேண்டாம்னுட்டான். அந்தப் பொண்ணைப் பார்த்தா தகவல் தர்றேன்னு சொல்லியிருக்கான். செல்போன் நெம்பர் கொடுத்திருக்கேன்."

"சரி.. உடனே புறப்பட்டு வீட்டுக்கு வாங்க."

"வீட்டுக்கு வர்றதா...? சரியாப் போச்சு.. யமுனா இன்னும் கொஞ்ச நேரத்துல வீட்டுக்கு வந்துடுவா.. அவ டெல்லியிலிருந்து வர்றதை மறந்துட்டியா?"

"யமுனா இன்னிக்கு ராத்திரி வரமாட்டா.. டெல்லி டூ சென்னை ஃப்ளைட் கான்ஸல். ஏதோ டெக்னிகல் ப்ராப்ளமாம். விடிகாலை நாலு மணிக்குத்தான் ஃப்ளைட் கிளம்புமாம். யமுனா சென்னை வந்து சேரக் காலை ஏழு மணி ஆயிடும்... ஸோ இந்த ராத்திரியை நாம வீணாக்க வேண்டாம். உடனே புறப்பட்டு வாங்க."

"ம.. ஞ்.. ச.. ரி.."

"என்ன..?"

"அந்த திரிவேணி யார்ன்னு மனசுக்குள்ளே ஒரே உறுத்தலாயிருக்கு.."

"அவளை நினைச்சு ஏன் பயப்படறீங்க?"

"பயம் இல்லை. ஒரு முன் எச்சரிக்கைதான்.."

"நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாமே மொதல்ல வீட்டுக்கு வாங்க.. இன்னிக்கு சந்தோஷமாயிருப்போம்.."



"மஞ்சரி..! நான் என்ன சொல்ல வர்றேன்னா.."

"நீங்க ஒண்ணையும் சொல்ல வேண்டாம். இப்ப வீட்டுக்கு வரப் போறீங்களா... இல்லையா..?"

திலகன் சில விநாடிகள் தயங்கிவிட்டு மெல்லிய குரலில் சொன்னான்.

"வ.. வ.. வர்றேன்.."

## 11

ஆம்புலன்ஸ் வேன் கிட்டத்தட்ட இருபது நிமிஷ நேரம் பயணம் செய்து பின் ஒரு இருட்டான இடத்தில் தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.

முத்துராஜ் அஞ்சலையை ஏறிட்டான்.

"டாக்டரை அனுப்பிடலாமா?"

"ம்.."

"அந்த இஞ்செக்ஷனை எடு.."

அஞ்சலை ஆம்புலன்ஸில் கப்போர்டு மாதிரியிருந்த பகுதிக்குப் போய் அந்த இஞ்செக்ஷன் ஊசி மருந்தைக் கொண்டு வந்தாள். யோகானந்த் பயத்தோடு பார்க்க முத்துராஜ் சிரித்தான்.

"பயப்படாதீங்க டாக்டர்... இந்த இஞ்செக்ஷன் மருந்து உயிரைப் பறிக்கக் கூடிய மருந்து இல்லை. மயக்க மருந்துதான். இந்த மருந்து உடம்புக்குள்ளே போன நிமிஷத்திலிருந்து எட்டு மணி நேரம் வரைக்கும் நீங்க மரக்கட்டைதான். எட்டு மணி

நேரம் கழிச்சுத்தான் உங்களுக்குச் சுய உணர்வே வரும். அதுவரைக்கும் சாலையோரப் பூங்கா சிமெண்ட் பெஞ்சில் படுத்துக்க வேண்டியிருக்கும். பார்க் பெஞ்சில் ஒருத்தர் படுத்துட்டிருந்தா யார்க்கும் எந்த சந்தேகமும் வராது.."

முத்துராஜ் இஞ்செக்ஷனோடு யோகானந்தை நெருங்க அவர் மிரண்டு போய் எழுந்தார்.

"வே.. வேண்டாம்.. எனக்கு.. இ.. இஞ்செக்ஷன் வேண்டாம்.."

"என்னது..! இஞ்செக்ஷன் வேண்டாமா..? அப்படீன்னா இந்த துப்பாக்கியில் இருக்கிற தோட்டாக்களை உங்க மார்பிலும் வயித்திலும் வாங்கிகிட்டு செத்துப் போயிடறீங்களா... டாக்டர்? அஞ்சலை! அந்த பிஸ்டலை எடு.."

அஞ்சலை பிஸ்டலை எடுத்துக் கொடுத்தாள். முத்துராஜ் அதை வாங்கிக் கொண்டே சொன்னான்.

"டாக்டர்! உங்களுக்கு ரெண்டு சாய்ஸ் இருக்கு. இஞ்செக்ஷனைப் போட்டுக்கிறதாயிருந்தா உங்க புஜத்தைக் காட்டுங்க. துப்பாக்கித் தோட்டாக்களை வாங்கிக்கிறதா யிருந்தா மார்பைக் காட்டுங்க.. ரெண்டுல உங்களுக்கு எது சௌகரியம்...?"

யோகானந்த் தயங்கித் தயங்கித் தன் வலது புஜத்தைக் காட்டினார். முத்துராஜ் சிரித்தான்.

"இது புத்திசாலித்தனம்!" சொன்னவன் டாக்டரை நெருங்கி அவருடைய தோளைப் பற்றி ஊசியைச் செருகினான்.

சரியாய் ஒரு நிமிஷம்!



யோகானந்த் கண்கள் செருகித் தலையை ஒரு பக்கமாய்ச் சாய்ந்து தளர்ந்தார்.

"அஞ்சலை!"

"ம்..!"

"டாக்டரோட கால்மாட்டைப் பிடி. கொண்டு போய்ச் சாலையோரப் பூங்கா சிமெண்ட் திட்டில் படுக்க வெச்சுட்டுப் போயிடலாம். இனி எட்டு மணி நேரத்துக்கு இவர் மரக்கட்டைதான். எடுத்து நெருப்புல போட்டாக் கூட கத்த மாட்டார்."

யோகானந்தின் தலைமாட்டை முத்துராஜ் பிடித்துக் கொள்ள... அஞ்சலை அவருடைய கால்களைப் பிடித்துக் கொண்டாள். ஆம்புலன்ஸுக்கு வெளியே கொண்டு வந்தார்கள். சாலையோரப் பூங்கா இருட்டில் மரங்களோடு அசைந்தது. நடந்தார்கள்.

பத்தடி நடப்பதற்குள் அஞ்சலைக்கு மூச்சிரைத்தது.

"யாராவது பார்த்துடப் போறாங்க முத்துராஜ்.."

"பகலிலேயே ஆள் நடமாட்டம் இல்லாத ஏரியா இது. ராத்திரியில் யார் வரப் போறாங்க..?"

கேட் இல்லாத பூங்காவுக்குள் நுழைந்தார்கள். நான்கைந்து சிமெண்ட் பெஞ்சுகள் காலியாய்த் தெரிய... ஒன்றில் யோகானந்தைப் படுக்க வைத்தார்கள்.

அவர் பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்துக் கொண்ட முத்துராஜ், சலனமற்றுக் கிடந்த டாக்டரின் கன்னத்தைத் தட்டினான்.

"நல்லா ரெஸ்ட் எடுங்க டாக்டர்... குட் நைட்.."

## 12

திலகன் பைக்கை ரோட்டின் எதிர்ப்புறத்தில் இருந்த ஒரு மரத்துக்குப் பின்னால் மறைவாய் நிறுத்தி விட்டு மஞ்சரியின் பங்களாவுக்குள் நுழைந்தான். நேரம் 11.05. இருட்டில் மெல்ல நடந்து அழைப்பு மணிக்கு வேலை கொடுப்பதற்கு முன்பாகவே கதவு திறந்தது. மஞ்சரி நின்றிருந்தாள்.

''உங்களை எதிர்பார்த்துத்தான் காத்துக்கிட்டு இருந்தேன்.''

திலகன் உள்ளே நுழைந்து கொண்டே பெருமூச்சு விட்டான். ''மஞ்சரி! உனக்குப் பயமாவே இல்லையா?''

''எதுக்குப் பயம்.?''

''அந்த திரிவேணி!''

''அவளை நீங்க மறக்க மாட்டீங்களா..?''

''எப்படி மறக்க முடியும்...? அவளாலே ஏதோ ஒரு பிரச்சினை வரப் போகுதுன்னு என் மனசுக்குள்ளே ஒரு பட்சி சொல்லிட்டேயிருக்கு..''

''இதோ பாருங்க திலகன்... அந்த திரிவேணியை இன்னிக்கு ராத்திரி மறந்துடுங்க. நாளைக்குக் காலையிலிருந்து ரெண்டு பேரும் சேர்ந்து கவலைப் படலாம். அவ யார்னு கண்டுபிடிக்கிற முயற்சியில் ரெண்டு பேரும் இறங்கலாம்..''

இரண்டு பேரும் படுக்கையறைக்குள் நுழைந்தார்கள். டெலிபோன் கத்திக் கொண்டிருந்தது. மஞ்சரி போய் எடுத்தாள்.

''ஹலோ...''

''சித்தி! நான் யமுனா..''



''சொல்லு, யமுனா.''

''ஃப்ளைட் லேட்டானதைப் பத்தி அப்பாவுக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டீங்களா?''

''அப்பாவோட செல்லுக்கு ட்ரை பண்ணினேன். நோ ரெஸ்பான்ஸ். ஹாஸ்பிடல் போனுக்கு ட்ரை பண்ணினால் அப்பா ஆபரேஷன் தியேட்டரில் இருக்கிறதா நர்ஸ் சொன்னாள்.''

''டெல்லியிலிருந்து அப்பாவுக்கு நானும் ட்ரை பண்ணினேன். லைன் கிடைக்கலை.''

''உனக்கு இனி ஃப்ளைட் விடிகாலை நாலு மணிக்குத் தானே?''

''ஆமா சித்தி..!''

''உன்னோட ஃப்ளைட் லேட்டானதைப் பத்தி அப்பாவுக்கு நான் போன் பண்ணிச் சொல்லிடறேன்... காலையில் ஏழு மணிக்கெல்லாம் உன்னை ரிஸீவ் பண்ண ஏர்போர்ட்டுக்கு வந்துடுவேன்..''

''நீங்க ஏர்போர்ட்டுக்கு வரவேண்டாம் சித்தி. நானே ஒரு டாக்ஸி பிடிச்சு வீட்டுக்கு வந்துடறேன்..''

''ஏன்.. நான் வந்தா என்ன..?''

''உங்களுக்கு எதுக்கு சித்தி சிரமம்...? ஏர்போர்ட்டுக்கு வரணும்னா நீங்க வீட்டை விட்டு ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடியே கிளம்பணும்.''

மஞ்சரி சிரித்தாள்.

''நான் ஏர்போர்ட்டுக்கு வரலைன்னா உங்க அப்பா என்னை ஒரு வழி பண்ணிடுவார்... நான் வர்றேன்.''

"சித்தி! சொன்னா கேளுங்க.."

"நோ.. நோ..! நான் ஏர்போர்ட்டுக்கு வர்றேன். உனக்காக லெளஞ்சில் வெயிட் பண்ணிக்கிட்டிருப்பேன்.."

ஐந்து விநாடி நேரம் மௌனம் காத்த யமுனா பின் மெல்லிய குரலில் கேட்டாள். "சித்தி.! நம் வீட்ல இப்ப வேற யாராவது இருக்காங்களா?"

மஞ்சரி உஷாரானாள்.

"இ.. இ.. இல்லை...! எ... எதுக்.. காக.. கேட்டே?"

"இல்லை.. யாரோ... இருமின மாதிரி இருந்தது."

"அது.. அது.. வந்து பக்கத்து வீட்டு வாட்ச் மேன்."

"ஓ.கே.. சித்தி..?! நாளைக்குக் காலையில் ஏர்போர்ட்டில் பார்ப்போம்..." யமுனா பேசிவிட்டு ரிஸீவரை வைத்துவிட, வியர்த்துப் போனாள் மஞ்சரி. படுக்கையில் சாய்ந்து படுத்திருந்த திலகன் அவளை வியப்பாய்ப் பார்த்தான்.

"என்ன மஞ்சரி! திடீர்ன்னு வேர்த்து வழியறே?"

"சரியான பாம்புக் காது."

"யார்க்கு..?"

"யமுனாவுக்குத்தான். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீங்க லேசா இருமினதை டெலிபோனிலேயே அப்ஸெர்வ் பண்ணிட்டா.. வீட்ல யாராவது இருக்காங்களா சித்தின்னு கேக்கிறா.."

"கில்லாடிதான்...! நீ என்ன சொன்னே?"

"பக்கத்து வீட்டு வாட்ச் மேன் இருமினதா சொன்னேன்.."



திலகன் சிரித்தான்.

"நீ அவளை விடக் கில்லாடி..! வா.. இப்படி வந்து பக்கத்துல உட்கார்.."

"ம்.. நான் ரெடி.."

மஞ்சரி கட்டிலுக்குக் கீழே குனிந்து அங்கே மறைவாய் வைக்கப்பட்டிருந்த அந்த வெளிநாட்டு விஸ்கி பாட்டிலைக் கையில் எடுத்தாள்.

அதே விநாடி -

வாசலில் காலிங் பெல் வீறிட்டது.

திலகனும் மஞ்சரியும் சட்டென்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கலக்கமானார்கள்.

## 13

கெட்வெல் ஹாஸ்பிடல்.

நேரம் நள்ளிரவு பன்னிரண்டு மணியைத் தாண்டியிருக்க போலீஸ் கமிஷனர் நவநீதகிருஷ்ணனின் கார் ஹாஸ்பிடலின் போர்டிகோவிற்கு வேகமாய் நுழைந்து நின்றது.

நவநீதகிருஷ்ணன் காரினின்றும் இறங்க - அசிஸ்டண்ட் கமிஷனர் சிவச்சந்திரன் எதிர் கொண்டார்.

கோபத்தில் பொரிந்தார் கமிஷனர்.

"கௌரிசங்கர்க்கு ஆபத்து இருக்குன்னு தெரிஞ்சும் எப்படி அவரைக் கோட்டை விட்டீங்க..?"

''ஸாரி.. ஸார்... அவசர சிகிச்சைப் பிரிவுக்கு வந்த ஒரு ஆணும் பெண்ணும் ரொம்பவும் சாமர்த்தியமாக இந்தக் கடத்தல் நாடகத்தை நடத்தியிருக்காங்க. ஆபரேஷன் தியேட்டர்க்குள்ளே போனதும், யோகானந்த், சிவ புண்ணியம், அப்துல் ரஹீம் இந்த மூணு டாக்டர்களிடமும் வெடிகுண்டைக் காட்டிக் காரியத்தைச் சாதிச்சிருக்கான். டாக்டர் யோகானந்தைப் பிணைக் கைதியா ஆம்புலன்ஸ் வேனிலேயே கூட்டிக்கிட்டுப் போயிருக்கான். டாக்டர்கள் சிவபுண்ணியத்தையும் அப்துல் ரஹீமையும் ஆப்ரேஷன் தியேட்டர்க்குள்ளேயே கட்டிப் போட்டிருந்ததால விஷயம் வெளியே தெரியவேயில்லை. இருபது நிமிஷத்துக்கு முந்திதான் ஒரு ஜூனியர் டாக்டர்க்கு சந்தேகம் ஏற்பட்டு ஆபரேஷன் தியேட்டர்க்குப் போய்ப் பார்த்திருக்கார்.''

''டாக்டர்கள் சிவபுண்ணியமும், அப்துல் ரஹீமும் இப்போ எப்படியிருக்காங்க..?''

''இன்னும் அதிர்ச்சியிலிருந்து அவங்க மீளவே இல்லை ஸார். சிவ புண்ணியத்துக்கு ப்ளட் ப்ரஷர் அதிகமாகி ஐ.ஸி. யூனிட்ல படுத்து ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டிருக்கார்.''

''டாக்டர் யோகானந்த்தைப் பற்றி ஏதாவது தகவல் கிடைச்சதா..?''

''இதுவரைக்கும் இல்லை ஸார்.. போலீஸ் பேட்ரோலிங் வேன்கள் சிட்டி பூராவும் சுத்திக்கிட்டிருக்கு..''

இருவரும் 'டாக்டர்ஸ்' என்று பெயர்ப் பலகை தொங்கிய அறைக்குள் நுழைந்தார்கள்.

டாக்டர் அப்துல் ரஹீமும், வேறு சில ஜூனியர் டாக்டர்களும் கவலை முகங்களோடு உட்கார்ந்திருந்தார்கள்.



கமிஷனரைப் பார்த்ததும் ஒரு சின்னப் பரபரப்பு அரும்பியது. அப்துல் ரஹீமுக்கு எதிரே உட்கார்ந்திருந்தார் நவநீத கிருஷ்ணன்.

''டாக்டர்! நீங்க சொல்லப் போகிற விபரங்களை வெச்சுத்தான் கௌரிசங்கரையும் யோகானந்தையும் மீட்க முடியும். அவசர சிகிச்சைக்கு வந்த ஆள் எப்படியிருந்தான்..?''

''இளைஞன் ஸார்... பேர் முத்துராஜ்... அவனோடு வந்த பெண்ணும் இளம் பெண்தான். பேர் அஞ்சலை..''

''டைனமைட் வெச்சிருந்தாளா?''

''ஆமா..''

''அவங்க ஆபரேஷன் தியேட்டர்க்குள்ளே இருந்தபோது வெளியேயிருந்து அவங்களுக்கு போன் வந்ததா?''

''வரலை..''

''அவங்க ரெண்டு பேர்களோட முகங்களும் உங்களுக்கு நல்லா ஞாபகம் இருக்கா..?''

''இருக்கு..! ஆனா..''

''ஆனா என்ன..? சொல்லுங்க டாக்டர்.''

''அது அவங்களோட உண்மை முகங்கள் கிடையாது..''

''எஸ்.. தங்களோட உண்மையான முகங்கள் அடையாளம் தெரிஞ்சுக்கக் கூடாதேங்கிறதுக்காக, மூக்கு, காது, பல் வரிசையைச் செயற்கை உறுப்புகளைப் பயன்படுத்தி மாத்தி யிருக்காங்க.. தலைமுடி கூட விக்குதான்..''

''அப்படின்னா... அடையாளம் சொல்லியும் பிரயோஜன மில்லைன்னு சொல்றீங்க?''

''ஆமா..''

நவநீதகிருஷ்ணன் நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

## 14

நெற்குப்பை போலீஸ் ஸ்டேஷன்.

விடியற்காலை மூன்று மணி.

இன்ஸ்பெக்டர் கங்காதரன் கள்ளச்சாராய வேட்டையை முடித்துக் கொண்டு ஸ்டேஷனுக்குத் திரும்பி நாற்காலிக்குச் சாய்ந்து சற்று ஓய்வு எடுக்கலாம் என்று நினைத்தபோது - ஸ்டேஷன் வாசலில் கரும்பு ஏற்றிய அந்த லாரி வந்து நின்றது.

டிரைவர் கீழே குதித்து ஸ்டேஷனுக்குள் வேகவேகமாய் வந்தான். ''ஸார்..''

கங்காதரன் நிமிர்ந்தார்.

''என்ன...?''

டிரைவர் படபடத்தான். ''இங்கே யிருந்து ரெண்டு கிலோ மீட்டர் தள்ளி யிருக்கிற பைபாஸ் ரோடு சாலையோரப் பூங்காவுக்குள்ளே பெரியவர் ஒருவர் மயங்கிக் கிடந்தார் ஸார். பார்க்கிறதுக்கு டீஸண்டா இருந்தார். அப்படியே விட்டுட்டு வர மனசில்லை சார். அதான் எடுத்து லாரி கேபினுக்குள்ளே போட்டுகிட்டு வந்துட்டேன்.''

கங்காதரன் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார். ''பெரியவரா?''

''ஆமா ஸார்..''



''வயசு எவ்வளவு இருக்கும்?''

''அம்பதிலிருந்து அம்பத்தஞ்சுக்குள்ளே இருக்கும் ஸார்.''

''உடம்புல காயம் ஏதாவது இருக்கா?''

''இல்லை, ஸார்..''

''வா..! பார்க்கலாம்.''

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்த இன்ஸ்பெக்டர் லாரியை நோக்கி வேகமாய்ப் போனார். லாரிக்குப் பக்கத்தில் நின்றிருந்த க்ளீனர் இன்ஸ்பெக்டர்க்கு விஷ் செய்து விட்டு ஒதுங்கி நின்றான்.

லாரிக்குள் ஏறி நின்று கேபினுக்குள் எட்டிப் பார்த்தார்.

கேபினுக்குள் மல்லாந்து கிடந்த டாக்டர் யோகானந்தைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்து கொண்ட இன்ஸ்பெக்டர் கங்காதரன் பதட்டமாய் லாரியினின்றும் கீழே குதித்தார்.

டிரைவரை ஏறிட்டார்.

''உம் பேர் என்ன?''

''அய்யப்பன் ஸார்..''

''நீ எனக்கு ஒரு உதவி பண்ணு..''

''சொல்லுங்க ஸார்..''

''இதே ரோட்ல ஒரு கிலோ மீட்டர் தூரம் போனால் ஹாஸ்பிடல் ஒண்ணு வரும். பேரு வள்ளலார் ஹாஸ்பிடல். லாரியைக் கொண்டு போய் அங்கே நிறுத்து. நான் ஜீப்பில் பின்னாடி வந்துடறேன்..''

''சரி ஸார்...'' சொன்ன டிரைவர் அய்யப்பன் லாரியின் கேபினுக்குள் பாய்ந்து ஏற- கங்காதரன் ஸ்டேஷனுக்குக் கொஞ்சம் தள்ளி நின்ற ஜீப்பை நோக்கி ஓடினார்.

## 15

காலை ஆறரை மணி.

போலீஸ் கமிஷனர் அலுவலகத்தின் கண்ட்ரோல் ரூம். மேஜையின் மேல் பல வண்ணங்களில் இருந்த டெலிபோன்களில் ஒன்று தொண்டையைத் திறந்து கத்த ஆரம்பித்தது. கப் அண்ட் சாஸரில் டீ குடித்துக் கொண்டிருந்த கண்ட்ரோல் ஆபீஸர் ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்..''

''கண்ட்ரோல் ரூம்..?''

''ஆமா..''

''ஸார்.. நான் அண்ணா நகர் கிழக்கு ஏ.ஜே. க்ராஸ் ரோட்டிலிருந்து பேசறேன்..''

''சொல்லுங்க..''

''என்னோட பேரு ராஜாராமன். ஏ.ஜே. க்ராஸ் ரோட்டில் டாக்டர் யோகானந்த் வீட்டுக்குப் பக்கத்து வீட்ல இருக்கேன். நான் ஒரு ஆடிட்டர்..''

''டாக்டர் யோகானந்த் வீட்டுக்குப் பக்கத்து வீடா..?''

''ஆமா..ஸார்..''

''என்ன விஷயம்... சொல்லுங்க.''



''நான் வழக்கமா காலையில் என்னோட வீட்டு மொட்டை மாடியில் வாக் பண்றது வழக்கம். இன்னிக்கும் அப்படி வாக் பண்ணிட்டிருக்கும் போது டாக்டர் யோகானந்த் வீட்டைப் பார்த்தேன். என்னோட வீட்டு மொட்டை மாடியிலிருந்து பார்த்தா டாக்டரோட வீட்டு நூலக அறையும் பின் பக்க வராந்தாவும் நல்லாத் தெரியும். டாக்டரோட வீடு காலை நேரத்துல கொஞ்சம் கலகலப்பாயிருக்கும். ஆனா இன்னிக்கு வீடு அப்படியில்லை. வீட்டில் ஒரு மயான அமைதி. நான் டாக்டரோட வீட்டு நூலக அறையை உன்னிப்பாய்ப் பார்த்தேன். அந்த அறைக்குள்ளே யாரோ விழுந்து கிடக்கிற மாதிரி தெரியுது.''

''யாரோ விழுந்து கிடக்கிற மாதிரியா?''

''ஆமா ஸார்..''

''நீங்க டாக்டர் வீட்டுக்குப் போய் என்ன ஏதுன்னு பார்க்கலையா?''

''போனேன் ஸார்... கேட் பூட்டியிருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தேன். போர்டிகோவில் வரிசையா வைக்கப்பட்டிருந்த ரோஜா தொட்டிகள் உருண்டு கிடந்தது. வீட்டுக்குள்ளே ஏதோ விபரீதம் நடந்திருக்குன்னு என் மனசுக்குப் பட்டதால்தான் கண்ட்ரோல் ரூமுக்கு போன் பண்ணினேன். போலீஸ் வந்து பார்த்தா பரவாயில்லைன்னு என் மனசுக்குப் படுது ஸார்..''

''உங்க பேர் என்ன சொன்னீங்க?''

''ராஜாராமன். ஏ.ஜி. ஆபீசில் ஆடிட்டராயிருக்கேன்.''

''டாக்டர் யோகானந்த் வீட்டுக்கு இப்போ போலீஸ் வரும்.. நீங்க உங்க வீட்டு வாசலில் வெயிட் பண்ணுங்க, ராஜாராமன்...''

கண்ட்ரோல் ஆபீஸர் ரிசீவரை வைத்துவிட்டுப் பக்கத்தில் இருந்த வயர்லெஸ்ஸை உசுப்பிக் கொண்டார். முக்கியமான போலீஸ் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்க ஆரம்பித்தார்.

அடுத்த பத்தாவது நிமிடம்..

அண்ணாநகர் கிழக்கு போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இரண்டு ஜீப்கள் யோகானந்த் வீட்டை நோக்கிப் புயலாய்ப் புறப்பட்டுச் சென்றன.

## 16

போலீஸ் கமிஷனர் நவநீதகிருஷ்ணன் டாக்டர் குண சேகருக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தார். இடம்: வள்ளலார் ஹாஸ்பிடல். நேரம், காலை 6.45.

டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தார்.

'யோகானந்த் கடுமையான மயக்கத்தில் இருப்பதற்குக் காரணம் அவர்க்குப் போடப்பட்ட இஞ்செக்ஷன்தான். அது ஒரு வீரியம் மிக்க இஞ்செக்ஷன் மருந்து. மருந்தின் பெயர் ஜோல்டான். இருதயத்தைத் தவிர உடம்பில் இருக்கும் மற்ற எல்லா உறுப்புகளையும் ஸ்தம்பிக்க வைக்கக் கூடியது இந்த ஜோல்டான். எட்டு மணி நேர மயக்கத்துக்குப் பின்தான் லேசாய் சுய உணர்வு வரும். அப்படியே சுய உணர்வு வந்தாலும் கோர்வையாய் ஒரு வாக்கியம் பேச முடியாது. மூளை இயல்பான நிலைக்கு வர மேலும் ஒரு எட்டு மணி நேரம் பிடிக்கும்.''

''டாக்டர் யோகானந்த் உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே?''



''நோ.. நோ..! யோகானந்த் ஆழமான மயக்கத்தில் இருக்கிறாரே தவிர, மற்றப்படி அவருக்கு உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. இன்னும் இரண்டு மணி நேரத்தில் அவர்க்குச் சுய உணர்வு வந்துவிடும். நீங்கள் அவரோடு பேசிப் பார்க்கலாம்.''

''யோகானந்த் உடம்பில் ஏதாவது காயம் இருந்ததா டாக்டர்?''

''ஒரு சின்ன நகக் கீறல் கூட இல்லை. ஜோல்டான் இஞ்செக்ஷன் போட்டு சாலையோரப் பூங்காவில் அவரைப் படுக்கவைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவ்வளவுதான்..''

நவநீதகிருஷ்ணன் மேற்கொண்டு பேசும் முன்பு அஸிஸ் டண்ட் போலீஸ் கமிஷனர் சிவச்சந்திரன் கையில் செல்போனோடு வேக வேகமாய் வந்தார்.

''ஸார்..''

''என்ன சிவச்சந்திரன்?''

''கண்ட்ரோல் ரூமிலிருந்து ஒரு மெஸேஜ் சார்... சி.ஓ. லைனில் இருக்கிறார்.''

''கொடுங்க..'' நவநீதகிருஷ்ணன் செல்போனை வாங்கிக் காதுக்குக் கொடுத்தார்.

''எஸ்..''

மறுமுனையில் சி.ஓ. பேசினார். ''ஸார்! கிழக்கு அண்ணா நகரில் இருக்கும் டாக்டர் யோகானந்த் வீட்டில் ஏதோ ஒரு விபரீதம் நடந்திருக்கு.''

கமிஷனரின் நெற்றி சுருங்கியது.

"விபரீதமா..? என்ன விபரீதம்..?"

"தெரியலை ஸார்... பக்கத்து வீட்டுக்காரர் போன் பண்ணிச் சொன்னார். அவர் தன்னோட வீட்டு மொட்டை மாடியில் நடை பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது டாக்டர் யோகானந்த்தின் வீட்டைப் பார்த்திருக்கார். டாக்டரோட வீடு மயான அமைதி யோடு இருந்ததாகவும், அவரோட நூலக அறையில் யாரோ விழுந்து கிடக்கிறதாகவும் சொன்னார்.."

கமிஷனர் பதட்டமானார்.

"போன் எப்போ வந்தது..?"

"பதினஞ்சி நிமிஷத்துக்கு முன்னாடி ஸார்.."

"போலீஸ் ஸ்பாட்டுக்குப் போயாச்சா...?"

"போய்ட்டிருக்காங்க ஸார்.."

"சரி..! நான் புறப்பட்டு வர்றேன்..." செல்போனை அணைத்த நவநீதகிருஷ்ணன் அஸிஸ்டண்ட் கமிஷனரை ஏறிட்டார்.

"மிஸ்டர் சிவச்சந்திரன்.."

"ஸார்.."

"நான் டாக்டர் யோகானந்த் வீட்டுக்குப் போகிறேன். நீங்க இங்கே இருந்து யோகானந்துக்குச் சுய உணர்வு வந்ததும் அவர் கிட்டே நிதானமா பேசி என்ன நடந்ததுங்கிறதை வாக்குமூலமா வாங்குங்க..."

"எஸ்..ஸார்.."

நவநீதகிருஷ்ணன் டாக்டர் குணசேகரிடம் விடை பெற்றுக் கொண்டு ஹாஸ்பிடலுக்கு வெளியே இருந்த ஜீப்புக்கு வந்தார்.



ஜீப் டிரைவர் காளி கமிஷனர் வந்த வேகத்தைப் பார்த்துவிட்டு இக்னீஷியனை உசுப்ப, அவர் ஏறி உட்கார்ந்தார், சொன்னார்.

"அண்ணா நகர் கிழக்கு, ஏ.ஜே. க்ராஸ் ரோடு, முப்பது நிமிஷத்தில் ஸ்பாட்ல இருக்கணும், காளி."

"எஸ்... ஸார்."

ஜீப் உண்மையிலேயே இறக்கைகளைக் கட்டிக் கொண்ட மாதிரிப் பறந்தது. சரியாய் இருபத்தைந்து நிமிஷம்.

ஜீப் அண்ணா நகர் கிழக்கு ஏ.ஜே. க்ராஸ் ரோட்டில் நுழைந்தது. டாக்டர் யோகானந்த் வீட்டுக்கு முன்பாய் இரண்டு போலீஸ் ஜீப்கள் நின்றிருக்க, அந்த தெரு ஜனங்கள் மொட்டை மாடிகளில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஜீப் வீட்டுக்கு முன்பாய்ப் போய் நின்றது. நவநீத கிருஷ்ணன் கீழே இறங்க – இன்ஸ்பெக்டர் லட்சுமணன் சல்யூட்டோடு எதிர்கொண்டார்.

"என்னாச்சு லட்சுமணன்?"

"மர்டர் ஸார்.."

"மர்டரா..? கொலை செய்யப்பட்டது யாரு..? கமிஷனரின் தலையில் இருந்த தொப்பி அதிர்ச்சியில் கீழே இறங்கி அவருடைய கக்கத்துக்கு வந்தது.

இன்ஸ்பெக்டர் லட்சுமணன் தெரிவித்தார்.

"இரட்டைக் கொலை ஸார்.. டாக்டர் யோகானந்தின் இரண்டாவது மனைவி மஞ்சரியும், அடையாளம் தெரியாத இன்னொரு இளைஞனும் கொலை செய்யப்பட்டிருக்காங்க ஸார்.."

நவநீதகிருஷ்ணன் உள்ளே நடந்தார். ஃபாரன்ஸிக் அதிகாரிகள் பங்களா முழுவதும் பரவி சீன் ஆஃப் க்ரைம் பார்த்துக் கொண்டிருக்க, வரவழைக்கப்பட்ட நாய் ஹீரோ காம்பௌண்ட் சுவரோரமாய் மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தது. பத்திரிகை நிருபர்கள் ஹாலில் காத்திருந்தார்கள்.

கமிஷனரை லட்சுமணன் ஹாலை யொட்டிய மாடிப் படிகளின் வழியாக நூலக அறைக்குக் கூட்டிப் போனார்.

"அதுக்குள்ளே பத்திரிகை நிருபர்களுக்கு விஷயம் எப்படித் தெரிஞ்சுது..?"

"இதே தெருவில் பத்திரிகை நிருபர் ஒருவர் குடியிருக்கார் ஸார்.."

நூலக அறைக்குள் நுழைந்தார்கள்.

அறை முழுவதும் ரத்தம் சிதறி உறைந்து போயிருக்க... அறையின் இடது பக்க மூலையில் மஞ்சரி மார்பில் ரத்தப் பொத்தலோடு மல்லாந்து விழுந்திருக்க - அறையின் வலது பக்க மூலையில் திலகன் முதுகில் உறைந்து போன ரத்தத்துடன் ஒருக்களித்து விழுந்திருந்தான்.

நவநீதகிருஷ்ணன் சில விநாடிகளுக்கு அந்த இரண்டு உடல்களையும் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு லட்சுமணனிடம் திரும்பினார்.

"ஒரு டாக்டரை வரவழைச்சு ஸ்பாட் ரிப்போர்ட் வாங்கினீங்களா?"

"வாங்கிட்டேன் ஸார்.." சட்டைப் பாக்கெட்டில் மடித்து வைத்திருந்த டாக்டரின் ரிப்போர்ட்டை எடுத்து நீட்டினார் லட்சுமணன். நவநீதகிருஷ்ணன் வாங்கிப் பார்த்தார்.



* துப்பாக்கியால் சுடப்பட்டு மரணம்

* மார்பிலும் நுரையீரலிலும் தோட்டாக்கள் பாய்ந்து இருப்பதால் ரத்தம் அதிக அளவில் வெளியேறி உடனடி மரணம்.

* நேற்று இரவு 11 மணியில் இருந்து 12.00 மணிக்குள் சம்பவம் நடந்து இருக்க வேண்டும்.

* கொலையான நேரத்தில் இரண்டு பேரும் மது அருந்தியிருக்க வேண்டும்.

* தோட்டாக்கள் ஏற்படுத்திய காயங்களைத் தவிர வேறு காயங்கள் உடம்பில் இல்லை.

ரிப்போர்ட்டைப் படித்து முடித்த நவநீதகிருஷ்ணன், லட்சுமணனை ஏறிட்டார்.

'இந்த இளைஞர் யார்னு தெரியலையா?"

"தெரியலை ஸார்."

"பேண்ட் சர்ட் செக் பண்ணீங்களா?"

"பண்ணினேன் ஸார்... ஒரு துண்டு பேப்பர் கூட கிடைக்கலை. இந்த இளைஞனைப் பற்றிய எந்த தகவலும் போலீஸுக்குக் கிடைக்கக் கூடாதுங்கிறதுக்காக கொலையாளி இளைஞனின் பாக்கெட்டில் இருந்த எல்லாத்தையும் எடுத்துட்டுப் போயிருக்கலாம் ஸார்."

"சயின்டிஸ்ட் கௌரிசங்கர் கடத்தப்பட்டதுக்கும் இந்தக் கொலைக்கும் ஏதாவது ஒரு வகையில் சம்பந்தம் இருக்கும்னு நினைக்கிறேன்."

"எனக்கும் அந்த சந்தேகம்தான் ஸார்.."

"வீட்ல எத்தனை வேலைக்காரங்க?"

"வேலைக்காரங்களே இல்லை ஸார். இந்த வீட்ல யார் வேலைக்கு வந்தாலும் ரெண்டு மூணு மாசத்துக்கு மேலே நிலைக்க மாட்டாங்களாம். அக்கம் பக்கத்துல விசாரிச்சபோது கிடைச்ச தகவல் ஸார் இது."

"காரணம் கேட்டீங்களா?"

"கேட்டேன் ஸார். மஞ்சரி ஒரு 'அரகண்ட் லேடி'ங்கிறது பலரோட அபிப்ராயம்."

நவநீதகிருஷ்ணன் மேலும் ஏதோ கேட்க நினைத்த விநாடி நூலக அறையின் கப்போர்டில் இருந்த டெலிபோன் குரல் கொடுத்தது.

ரிஸீவரை எடுக்க முயன்ற லட்சுமணனைக் கையமர்த்திய கமிஷனர் தான் போய் எடுத்தார். காதுக்கு ரிஸீவரைக் கொடுத்தவர் 'ஹலோ' சொல்லாமல் மௌனம் காக்க -

மறுமுனையில் ஒரு பெண் குரல் கேட்டது.

"ஹலோ."

"..."

"ஹலோ..."

நவநீதகிருஷ்ணன் குரல் கொடுத்தார்.

"யாரு...?" மறுமுனையில் பெண் குரல் திகைத்த மாதிரி கேட்டது. "அது டாக்டர் யோகானந்த் வீடுதானே?"

"ஆமா.."



"அவர் வீட்ல இல்லையா..?"

"இல்லை..."

"மஞ்சரி.."

"இல்லை.. நீங்க யாரு?"

"நான் யமுனா.. டாக்டர் யோகானந்த்தோட டாட்டர். மஞ்சரி என்னோட சித்தி.. பை.. த.. பை.. எங்க வீட்டு போன்ல பேசிட்டிருக்கிற நீங்க யாரு..?"

"போலீஸ் கமிஷனர்.."

யமுனா மறுமுனையில் திகைப்பது தெரிந்தது.

"போலீஸ் கமிஷனரா?"

"எஸ்.."

"நீங்க எதுக்காக எங்க வீட்ல....? அப்பாவுக்கு நீங்க ஃப்ரெண்டா.."

"இல்லை.."

"பின்னே..?"

"இதோ பாரம்மா, யமுனா.. நீ இப்போ எங்கேயிருந்து பேசிட்டிருக்கேன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"சென்னை ஏர்போர்ட்டிலிருந்து.."

"எங்கேயாவது வெளிநாடு போயிருந்தியா?"

"இல்லை.. டெல்லி போயிருந்தேன்.."

"எதுக்கு?"

"ஒரு கல்சுரல் ப்ரோக்ராம். இன்னிக்குத்தான் ரிடர்ன். சித்தி ஏர்போர்ட்டுக்கு வர்றதா சொல்லியிருந்தாங்க. வரலை. அதுதான் ஏர்போர்ட் லௌஞ்சிலிருந்து போன் பண்ணிட்டிருக்கேன்.."

"சரி.. நீ நேர்ல வாம்மா.."

"ஸார்! வீட்ல ஏதாவது ப்ராப்ளம்?"

"எஸ்."

"என்ன ப்ராப்ளம்?"

"டெலிபோன்ல எதுவும் வேண்டாம்.. நீ வீட்டுக்கு வாம்மா.. பேசிக்கலாம்."

"ஸ.. ஸார்.."

"டோன்ட் கெட் டென்ஷன்... கம் இன் பர்ஸன்.." நவநீதகிருஷ்ணன் சொல்லி விட்டு ரிஸீவரை வைத்தார். அதே விநாடி ஃபாரன்ஸிக் ஆபீஸர் ஒருவர் மெதுவாய்ப் பக்கத்தில் வந்து நின்றார். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு கூப்பிட்டார்.

"ஸார்..!"

"சொல்லுங்க..'

"இறந்து கிடக்கிற இந்த இளைஞன் யார்ன்னு தெரிஞ்சுடுச்சு ஸார்.."

"யாரு?"

"பேரு திலகன்.."

"இந்த லாக்கெட்டைப் பாருங்க ஸார்!" தங்க செயினில் கோர்க்கப்பட்டிருந்த ஒரு லாக்கெட்டைக் காட்டினார் ஃபாரன்ஸிக் ஆபீஸர்.



கமிஷனர் அந்த லாக்கெட்டை வாங்கிப் பிரித்தார். லாக்கெட்டின் ஒரு பக்கம் மஞ்சரியின் போட்டோவும் இன்னொரு பக்கம் திலகனின் போட்டோவும் தெரிந்தது. போட்டோக்களின் அடியில் 'ஐ லவ் யூ மஞ்சரி' என்ற வாசகமும், 'ஐ லவ் யூ திலகன்' என்ற வாசகமும் பளிச்சென்று கண்களுக்குச் சிக்கியது.

கமிஷனர் பெருமூச்சு விட்டபடி ஃபாரன்ஸிக் ஆபீஸரைப் பார்த்தார்.

"இல்லீகல் காண்டாக்ட்.."

"எஸ்..ஸார்.."

"இந்தச் செயினை எங்கேயிருந்து எடுத்தீங்க..?"

"இந்த பீரோக்குள்ளிருந்து ஸார்.."

மறுபடியும் டெலிபோன் கூப்பிட்டது.

ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"ஸார்! நான் யமுனா."

"என்ன... சொல்லும்மா.."

"வீட்ல என்ன ப்ராப்ளம்.. ஸார்.. அப்பாவுக்கு ஏதாவது..?"

"இதோ பாரம்மா, யமுனா.. டெலிபோன்ல எதையும் பேச முடியாது. ப்ளீஸ் கம் இன் பர்ஸன்...! போன் பண்ணி டயத்தை வேஸ்ட் பண்ணிகிட்டு இருக்காதே.." சொல்லிவிட்டு ரிஸீவரை வேகமாய் வைத்தார் கமிஷனர்.

## 17

யமுனா இடிந்து போய் பாலிவினைல் நாற்காலிக்குச் சாய்ந்திருந்தாள். அழகான முகம் வெளிறிப் போய்க் கண்களில் நீர். சீராகச் சுவாசிக்கச் சிரமப்பட்டாள். உடம்பு தன்னிச்சையாய் ஒரு நடுக்கத்துக்கு உட்பட்டிருந்தது.

அவளுக்கு எதிரே உட்கார்ந்திருந்த கமிஷனர் குரலை வெகுவாய்த் தாழ்த்திக் கொண்டு கேட்டார்.

''யார் இந்த திலகன்..?''

''தெரியாது ஸார்..''

''நிஜமாவே உனக்குத் தெரியாதா?''

''தெரியாது ஸார். சித்தி இவ்வளவு பெரிய துரோகத்தைப் பண்ணுவான்னு நான் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை சார்...''

''யமுனா..! இந்த மஞ்சரி - திலகன் விவகாரத்தோடு சயன்டிஸ்ட் கௌரிசங்கர் கடத்தப்பட்ட விவகாரமும் 'லிங்க்' ஆகியிருக்கு. ஸோ.. இது வெறும் இல்லீகல் காண்டாக்ட் மட்டும் கிடையாது. இந்தக் கொலைகளுக்குப் பின்னாடி ஒரு பெரிய சதித் திட்டம் இருக்கு..''

''ஸார்..! நீங்க பேசறது எதுவுமே எனக்குப் புரியலை. நான் மொதல்ல அப்பாவைப் பார்க்கணும்..''

''உன்னோட அப்பாவை இப்போ நீ போய்ப் பார்க்கிறதால ஒரு பிரயோஜனமும் இல்லை. அவர்க்கு இன்னும் மயக்கம் தெளியலை. கிட்டத்தட்ட கோமா ஸ்டேஜ். ரெண்டு மணி நேரம் கழிச்சுத்தான் அவர்க்குச் சுய உணர்வு திரும்பும்.



அப்படியே அவர்க்குச் சுய உணர்வு திரும்பினாலும் அவரால் தெளிவாகப் பேச முடியாது. பேசணும்ன்னா இன்னும் எட்டு மணி நேரம் போகணும்ன்னு டாக்டர்ஸ் தீர்க்கமா சொல்லி யிருக்காங்க..''

யமுனாவின் கண்களில் நீர் பெருகியது. துடைக்கக் கூடத் தோன்றாமல் கமிஷனரை ஏறிட்டாள்.

''ஸார்! எங்க ஃபேமிலியையே ஒழிச்சுக் கட்ட யாரோ முயற்சி பண்ணியிருக்காங்க..''

சொல்லி விட்டு இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு விம்மி அழுதாள் யமுனா.

## 18

வள்ளலார் ஹாஸ்பிடல்.

மாலை ஆறு மணிக்கு மேல்தான் டாக்டர் யோகானந்த்துக்கு நினைவு திரும்பியது. கட்டிலைச் சுற்றிலும் அரை வட்டம் போட்டுக் கொண்டு யமுனா, போலீஸ் கமிஷனர் நவநீதகிருஷ்ணன், டாக்டர் குணசேகர், அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் சிவச்சந்திரன் நின்றிருந்தார்கள்.

''அ.. அப்பா..'' யமுனா அழுது கொண்டே அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டாள்.

யோகானந்த் கண்கள் சோர, மகளைப் பார்த்தார். பேச வாய் திறந்த போது மூச்சிரைத்தது.

''நீ.. நீ.. எப்பம்மா.,. டெல்லியிலிருந்து வந்தே?''

''இன்னிக்கு காலைலதாம்பா..''

யோகானந்த்தின் பார்வை சுற்றிலும் அலைந்தது. யமுனா குனிந்து கேட்டாள்.

"என்னப்பா.. பார்க்கிறீங்க?"

"சி.. சி.. சித்தி எங்கேம்மா?"

யமுனா என்ன பதில் சொல்வது என்ற திகைப்பில் பேசத் திணற... டாக்டர் குணசேகர் குறுக்கிட்டார்.

"உங்க மனைவிக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லை. வீட்ல ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருக்காங்க.. உங்களைச் சாயந்தரமா வந்து பார்ப்பாங்க.."

யோகானந்த் திடுக்கிட்டவராய் எழ முயன்றார்.

"ம..ம.. மஞ்சரிக்கு உடம்பு ச... சரியில்லையா...? ய..மு.. னா?"

"அப்பா.."

"சி.. சி.. சித்திக்கு.. என்ன.. உடம்பு?"

"ஒண்ணுமில்லேப்பா..! உங்களை யாரோ ரெண்டு பேர் கடத்திட்டாங்கன்னு ராத்திரி நியூஸ் கேள்விப்பட்டதும் அப்படியே மயங்கி விழுந்துட்டாங்க. டாக்டர் வந்து பார்த்தாங்க. ரத்த அழுத்தம் அதிகமாயிருக்குன்னு சொல்லி இஞ்செக்ஷன் போட்டார். இன்னிக்கு பூராவும் ரெஸ்ட் எடுத்தா உடம்பு சரியாயிருக்கும்னு சொல்லியிருக்கார். சாயந்தரம் உங்களைப் பார்க்க சித்தி வருவாங்கப்பா..."

யமுனா அழுகையை அடக்கிக் கொண்டு சொல்ல, கமிஷனர் நவநீதகிருஷ்ணன் ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டு யோகானந்த்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.



"டாக்டர்..! உங்களைப் பிணையக் கைதியா வெச்சு சயன்டிஸ்ட் கௌரிசங்கரைக் கடத்திக்கிட்டுப் போனவங்க தங்களுடைய உருவ அமைப்புகளை மாத்திக்கிட்டு இருந்ததா டாக்டர் அப்துல் ரஹீம் சொன்னார். அது உண்மையா?"

யோகானந்த் சோர்வாய் யோசித்துவிட்டுக் காய்ந்துபோன உதடுகளை அசைத்தார்.

"உண்மைதான்! அந்த இளைஞனோட முகமும் அந்தப் பெண்ணோட முகமும் இயல்பாகவேயில்லை. முத்துராஜ், அஞ்சலை என்கிற பெயர்கள் கூடப் பொய்யாய் இருக்கலாம்."

"கௌரி சங்கர் ஐ.ஸி. யூனிட்டிலிருந்து பின்பக்க வழியா ஆம்புலன்ஸுக்குக் கொண்டு போகப்பட்டபோது கௌரி சங்கர்க்கு சுயநினைவு இருந்ததா டாக்டர்?"

"லேசா இருந்தது. அடிக்கடி கண்ணைத் திறந்து பார்த்தார். ரெண்டு மூணு தடவை இருமினார்."

"டாக்டர்! உங்களுக்குத் திலகன் என்கிற பேர்ல யாரையாவது தெரியுமா?"

"ம்.. தெரியும்."

"யாரது?"

"என்னுடைய மனைவி மஞ்சரிக்கு உறவு. அதாவது அண்ணன் உறவு. மஞ்சரி அறிமுகப்படுத்தி வெச்சா.."

"மஞ்சரிக்கு அண்ணன் திலகனா?"

"ஆமா..! ஏன், எதுக்காக இப்ப இந்தக் கேள்வி?"

"ஒண்ணுமில்லே... நேத்து ராத்திரி ரயில்வே ஸ்டேஷனில் ஒரு இளைஞனைச் சந்தேக கேஸில் பிடிச்சோம். அவனை யாரு

என்னான்னு விசாரிச்சபோது உங்க பேரையும் உங்க மனைவியோட பேரையும் சொன்னான். அதை கன்ஃபார்ம் பண்ணிக்கத்தான் கேட்டேன்.''

''திலகனுக்கு ரியல் எஸ்டேட் பிசினஸ். சொந்த ஊர் காரைக்குடி. மஞ்சரியைப் பார்க்க மாசத்துல ஒரு தடவை வருவான்.''

யோகானந்த் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கமிஷனர் சர்ட் பாக்கெட்டில் இருந்த அவருடைய செல்போன் கூப்பிட்டது.

''எக்ஸ்க்யூஸ்மீ...'' சொல்லிவிட்டு செல்போனை எடுத்துக் காதுக்குப் பொருத்திக் கொண்டு அறையினின்றும் வெளியேறி வராந்தாவில் போய் நின்றார்.

''ஹலோ...'' குரல் கொடுத்தார். மறுமுனை கரகரத்தது. ''ஸார்.. நான் இன்ஸ்பெக்டர் லட்சுமணன்..''

''சொல்லுங்க... என்ன விஷயம்?''

''ஸார்! மருதாசலம்கிற ஒரு ஆட்டோ டிரைவர் ஸ்டேஷனுக்கு வந்து, 'திலகன் - மஞ்சரி' கொலை சம்பந்தமா ஒரு புதுத் தகவலைச் சொல்றான்..''

''புதுத் தகவலா?''

''ஆமா ஸார்... கொலையாளி ஒரு பெண்ணாம். பேர் திரிவேணியாம்..!''

''அந்த ஆட்டோ டிரைவர் இப்போ எங்கே?''

''எனக்கு முன்னாடிதான் உட்கார்ந்துட்டிருக்கான் ஸார்.''



''டிரைவர் அங்கேயே இருக்கட்டும். நான் அரை மணி நேரத்துக்குள்ளே ஸ்டேஷனுக்கு வர்றேன்.''

## 19

அண்ணா நகர், கிழக்கு போலீஸ் ஸ்டேஷன்.

போலீஸ் கமிஷனர் நவநீதகிருஷ்ணனைப் பார்த்ததும், டிரைவர் மருதாசலம் பெஞ்சை விட்டு பவ்யமாய் எழுந்து நின்று விஷ் செய்தான்.

''வணக்கம் ஸார். பேப்பர்ல நியூஸ் பார்த்துவிட்டு வந்தேன் ஸார்.''

''உட்காரு..''

மருதாசலம் தயக்கமாய் உட்கார... கமிஷனர் அவனுக்கு எதிரே யிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

''சொல்லு..! யாரந்த திரிவேணி?''

''ஸார்..! அந்தப் பொண்ணு யார்னு எனக்குத் தெரியாது ஸார். நேத்து ராத்திரி எட்டு மணி சுமார்க்கு அமிஞ்சிக்கரை லட்சுமி தியேட்டர் பஸ் ஸ்டாப்புல நின்னுட்டிருந்தது. அந்தப் பக்கமாப் போன என்னோட ஆட்டோவை நிறுத்தி ஏறிகிச்சு. ஏ.ஜே. கிராஸ் ரோட்டுக்குப் போகச் சொல்லிச்சு. போனேன். டாக்டர் யோகானந்த் வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளி ஆட்டோவை நிறுத்திகிட்டு வீட்டுக்குள்ளே போச்சு. கொஞ்ச நேரத்துல திரும்பி வந்தது. நந்தனம் லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போகணும்ன்னு சொன்னது. ஹாஸ்டல் வாசல்ல கொண்டு போய் ட்ராப் பண்ணினேன். நூறு ரூபாய் என் கையில்

கொடுத்துட்டு பாக்கி சில்லறையைக் கூட எதிர்பார்க்காம உள்ளே போயிடுச்சு சார்.."

நவநீதகிருஷ்ணன் மருதாசலத்தையே பார்த்துக் கொண்டிருக்க, அவன் தொடர்ந்தான்.

"அதுக்கப்புறம் ஒரு அரை மணி நேரம் கழிச்சு டிபன் சாப்பிடப் பொன்னம்மா இட்லிக் கடைக்குப் போனேன் ஸார். அங்கே திலகன் வந்து என்னைப் பார்த்தார். அந்தப் பொண்ணு திரிவேணியை எங்கே இறக்கி விட்டேன்னு கேட்டார். நான் மொதல்ல சொல்ல மாட்டேன்னு சொன்னேன். அதுக்கப்புறம் திலகன், திரிவேணி தன் சொந்தக்காரப் பொண்ணுன்னு சொன்னதைக் கேட்டு நந்தனம் லேடீஸ் ஹாஸ்டல்ல ட்ராப் பண்ணியதைச் சொல்லிட்டேன். அவர் உடனே அந்த ஹாஸ்டலுக்குப் போய் திரிவேணியைத் தேடியிருக்கார். திரிவேணி அங்கே இல்லையாம். மறுபடியும் திலகன் என்னைத் தேடி வந்தார். விஷயத்தைச் சொன்னார். எனக்கும் அதிர்ச்சி. நான் திலகனோட போன் நெம்பரை வாங்கிட்டு அந்தப் பொண்ணு திரிவேணியை எப்படியும் சிட்டிக்குள்ளே பார்ப்பேன். பார்த்தா உடனே உங்களுக்கு போன் பண்றேன்னு சொன்னேன். திலகன் போய்ட்டார். இன்னிக்கு சாயந்தரம் டீக்கடையில் சாயந்தர பேப்பர் பார்த்தேன். 'திலகன் மஞ்சரி கொலையான செய்தியைப் படிச்சுட்டு ஆடிப் போய்ட்டேன். எனக்குத் தெரிஞ்ச விஷயங்களை போலீஸ்ல சொல்லிடணும்னு என்னோட மனசுக்குப் பட்டது. உடனே ஸ்டேஷனுக்கு வந்து இன்ஸ்பெக்டர் கிட்டே எல்லா விஷயத்தையும் சொல்லிட்டேன், ஸார்.."

"அந்தத் திரிவேணி எப்படியிருந்தா?"



"வயசு இருபத்தஞ்சுக்குள்ளேதான் இருக்கும் ஸார். ரொம்ப அழகுன்னு சொல்ல முடியாது. சுமாரான அழகு. தோள்ல ஜோல்னா பை மாதிரி ஒரு பை மாட்டியிருந்தா. கையில் செல்போன் இருந்தது."

"மறுபடியும் அவளைப் பார்த்தா அடையாளம் கண்டு பிடிச்சுடுவியா?"

'கண்டிப்பா..! என் மனசுக்குள்ளே அவ மூஞ்சி பெவிகால் மாதிரி ஒட்டியிருக்கு ஸார்.."

"திரிவேணி தன் சொந்தக்காரப் பொண்ணுன்னு திலகன் சொன்னானா?"

"ஆமா... ஸார்."

கமிஷனர் எழுந்து வந்து புன்னகையோடு மருதாசலத்தின் தோள் மேல் கையை வைத்தார்.

"நீ தைரியமா ஸ்டேஷனுக்கு வந்து தகவல்களைக் கொடுத்ததுக்கு நன்றி. நீ இன்னொரு உதவியையும் செய்யணும்."

"சொல்லுங்க சார்.."

"திரிவேணி விஷயத்தை மத்த ஆட்டோ டிரைவர்கள் கிட்டே சொல்லிட்டியா?"

"நான் யார்கிட்டேயும் எதுவும் சொல்லலை ஸார். பேப்பர்ல நியூஸ் பார்த்ததும் நேரா ஸ்டேஷனுக்குத்தான் வந்தேன்."

"சரி.. இனியும் சொல்லாதே! அந்த திரிவேணியைப் பிடிக்கிற வரைக்கும் விஷயம் நமக்குள்ளேயே இருக்கட்டும்."

"நீங்க சொல்லிட்டீங்க ஸார். இனி விஷயம் வெளியே போகாது. இந்த திரிவேணியை எங்கே பார்த்தாலும் உடனே

மடக்கிப் பக்கத்தில் இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிடறேன் ஸார்.."

"செய்..." என்றார் நவநீதகிருஷ்ணன்.

## 20

**வா**ரம் ஒன்று கரைந்து போயிருக்க - அன்றைக்கு டி.ஜி.பி. தலைமையில் போலீஸ் அதிகாரிகளின் கூட்டம் ரகசிய செல்லில் கூடியிருந்தது.

டி.ஜி.பி. ராகவ் பொரிந்து கொண்டிருந்தார்.

"சயன்டிஸ்ட் கௌரிசங்கர் கடத்தப்பட்டு இன்றைக்கு எட்டாவது நாள். அவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இதுவரைக்கும் ஒரு ஃப்ருட்ஃபுல் க்ளு கூட கிடைக்கவில்லை. இது தவிர டாக்டர் யோகானந்த்தின் மனைவி மஞ்சரியும் திலகன் என்பவனும் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் ஒரு துப்பும் கிடைக்கவில்லை... குற்றவாளிகளை நோக்கி நாம் சரியான பாதையில்தான் சென்று கொண்டு இருக்கிறோமா என்பதே சந்தேகமாக இருக்கிறது.."

"ஸார்.." போலீஸ் கமிஷனர் நவநீதகிருஷ்ணன் எழுந்தார்.

"சொல்லுங்க.."

"சயன்டிஸ்ட் கௌரிசங்கர் கடத்தப்பட்ட சம்பவத்துக்கும் மஞ்சரி - திலகன் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும் காரணமானவள் ஒரு பெண். அந்தப் பெண்ணின் பெயர் திரிவேணி. அந்த திரிவேணியைப் பார்த்த ஒரே நபர் ஆட்டோ டிரைவர் மருதாசலம். மருதாசலத்தைத் துணைக்கு வைத்துக் கொண்டு போலீஸின் தனிப் படை அவளை மும்முரமாய்த்



தேடிக் கொண்டிருக்கிறது. அவள் பிடிபட்டு விட்டால் எல்லா உண்மைகளும் வெளியே வந்துவிடும் ஸார்.."

"அவள் எப்போது பிடிபடுவது...? டெல்லி சுகாதாரத்துறை அமைச்சகத்திலிருந்து அமைச்சரின் பிரதமச் செயலாளர் இதுவரைக்கும் மூன்று தடவை எனக்கு போன் செய்து பேசிவிட்டார். மூன்றாவது தடவை பேசும் போது அவருடைய குரலில் கோபம். கௌரிசங்கர் கடத்திக் கொண்டு போகப்பட்ட திசையையாவது கண்டுபிடித்தீர்களா இல்லையா என்று கிண்டலாய்க் கேட்கிறார். இன்னும் இரண்டு நாட்களில் உருப்படியான தகவலைச் சொல்ல வேண்டும் என்று எச்சரிக்கையும் விடுத்து இருக்கிறார்."

எஸ்.பி. ஒருவர் எழுந்தார்.

"ஸார்.. என்னுடைய யூகமெல்லாம் சயன்டிஸ்ட் கௌரி சங்கரும் அவரைக் கடத்தியவர்களும் இப்போது சென்னையிலேயே இல்லை என்பதுதான். அவர்கள் கௌரிசங்கரைப் பக்கத்து மாநிலமான ஆந்திராவுக்குக் கொண்டு போயிருக்கலாம்."

"உங்கள் யூகத்திற்கு என்ன காரணம்?"

"ஆந்திராவில்தான் நக்ஸலைட்டுகளும், தீவிரவாதிகளும் அதிகம். இந்தியாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கும் விஞ்ஞானிகள் யார் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்களைத் தீர்த்துக் கட்டுவதுதான் அந்த இயக்கங்களின் நோக்கம். கௌரிசங்கர் கடத்தப்பட்டு இன்றைக்கு ஒருவார காலமாகிறது. இப்போது அவர் உயிரோடு இருப்பாரா என்பதே சந்தேகம். இந்த விஷயத்தில் நாம் மேலும் தாமதம் காட்டாமல் ஆந்திர போலீஸாரின் உதவியை நாட வேண்டும்.

இது ஒன்றுதான் இப்போதைக்கு வழி. ஆட்டோ டிரைவர் மருதாசலத்தை நம்பிக் கொண்டிருந்தால் சயன்டிஸ்ட் கௌரி சங்கரை நாம் இழக்க வேண்டியதுதான்.''

கமிஷனரை ஏறிட்டார் டி.ஜி.பி.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள், மிஸ்டர் நவநீத கிருஷ்ணன்?''

''இது ஆந்திர நக்ஸலைட்டுகளின் வேலையாக எனக்குத் தெரியவில்லை ஸார். ஏனென்றால் நக்ஸலைட்டுகள் முரட்டுத் தனமாகத் செயல்படுபவர்கள். இவ்வளவு 'வெல்பிளான்'டாகத் திட்டம் போட்டு எதையும் செய்ய மாட்டார்கள். அதுவு மில்லாமல் சயன்டிஸ்ட் கௌரிசங்கரை அவர் கலந்து கொண்ட செமினாரில் வைத்தே விஷம் கலந்த மினரல் வாட்டர் கொடுத்துக் கொலை செய்ய எதிரிகள் திட்டமிட்டு இருக்கிறார்கள். உடனடியாக அவர் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போகப்பட்டதால் உயிர் பிழைத்தார். அதற்குப் பிறகுதான் எதிரிகள் ஐ.ஸி. யூனிட்டில் இருக்கும் கௌரி சங்கரைக் கடத்தத் திட்டம் போட்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள்.''

டி.ஜி.பி. நவநீதகிருஷ்ணனைக் கோபமாகப் பார்த்தார்.

''மிஸ்டர் கமிஷனர்!... எதிரிகளுக்குப் பாராட்டுப் பத்திரம் படிப்பதற்காக நாம் இந்தக் கூட்டத்தைக் கூட்டவில்லை. எனக்கு வேண்டியது ரிசல்ட். கௌரிசங்கர் எப்போது மீட்கப்படுவார்?''

''ஸா.. ஸார்.. அது வந்து..''

''உங்களுக்கு நாற்பத்தெட்டு மணி நேரம் அவகாசம். நடுவில் நான் உங்களைத் தொடர்பு கொள்ள மாட்டேன். நீங்கள்தான் என்னைத் தொடர்பு கொள்ள வேண்டும். அப்படித்



தொடர்பு கொள்ளும் போது எனக்கு நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும்.''

''எஸ்..ஸார்..'' டி.ஜி.பி.க்கு சல்யூட் வைத்த கமிஷனரின் கை விரல்கள் மெலிதான ஒரு நடுக்கத்துக்கு உட்பட்டன.

## 21

''அப்பா..!''

மகள் யமுனாவின் குரல் கேட்டுத் தன் வீட்டு சிட் அவுட் சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்திருந்த டாக்டர் யோகானந்த் நிமிர்ந்தார். தாடையில் பத்து நாள் நரை ரோமம் முள் முள்ளாய்த் தெரிந்தது. கண்களுக்குக் கீழே மெலிதான கரு வளையங்கள்.

''என்னம்மா..?'' ஈனஸ்வரக் குரலில் கேட்டார்.

''நான் காலேஜுக்குப் போய்ட்டு வர்றேன்..''

''இனிமே எதுக்கும்மா காலேஜ் எல்லாம்... பேசாமே வீட்லேயே இரு...''

''அப்பா! சித்தியோட இழப்பினால இப்படி வெக்ஸாகிப் பேசறீங்க... இது எனக்கு லாஸ்ட் செமஸ்டர்.. காலேஜ இனி மூணு மாசம்தான்.''

''நான் சொன்னா.. நீ கேக்கவா போறே.. போய்ட்டு வாம்மா..''

''அப்பா! நடந்த சம்பவங்கள் மனசுக்குக் கசப்பா இருந்தாலும் அதையே நினைச்சு இடிஞ்சு போய்ச் சாய்வு

நாற்காலியில் சாஞ்சுக்கிறது கொஞ்சமும் சரியில்லை. நீங்களும் கூட வீட்ல இருக்காமே ஹாஸ்பிடலுக்குப் போகலாம்.."

"என்னால முடியல்லேம்மா.. உன்னோட சித்தி.."

"சரி.. சரி.. சித்தியைப் பத்தி பேச ஆரம்பிச்சா இனி அழுதுடுவீங்க... நான் கிளம்பறேன்.." யமுனா கால்களுக்கு ஸ்லிப்பரை மாட்டிக் கொண்டாள்.

"மத்தியானம் சாப்பாட்டுக்கு..?"

"வந்துடறேன்.."

யமுனா கிளம்பிப் போனதும் கதவைத் தாழிட்டுக் கொண்டு ஹால் சோபாவுக்கு வந்து சாய்ந்தார் யோகானந்த். எதிர்ச் சுவரில் மஞ்சரியின் போட்டோ வாடிய ரோஜா மாலைக்கு நடுவில் தெரிந்தது.

போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்தவரின் காதுகளில் அந்த நடைச் சத்தம் கேட்டது.

சட்டென்று திரும்பிப் பார்த்தார்.

அந்தப் பெண் நின்றிருந்தாள். தோளில் ஜோல்னாப் பை. உதட்டில் புன்னகை.

"நமஸ்காரம், டாக்டர்.."

யோகானந்த் திடுக்கிட்டார்.

"நீ... நீ...?"

"திரிவேணி டாக்டர்.."



## 22

யோகானந்த் குரல் குழறக் கேட்டார்.

"போலீஸ் தேடிக்கிட்டு இருக்கிற திரிவேணியா நீ?"

"அதே.. அதே.. !"

"எ.. எதுக்கா.. இ.. இங்கே.."

"வந்தேன்னு கேக்கறீங்களா..? உங்ககிட்டே கொஞ்சம் பேசிட்டுப் போகலாம்னுதான்.. நாலு நாளா முயற்சி பண்றேன்.. முடியலை.. இன்னிக்குத்தான் முடிஞ்சது.. பின் பக்க காம்பெளண்ட் சுவர் குட்டையா கட்டினதுக்கு நன்றி.. பொண்ணு காலேஜுக்குப் போயிருக்கு போலிருக்கு.."

யோகானந்த் தீர்க்கமாய் அவளைப் பார்த்தார். பின் குரலை உயர்த்திக் கேட்டார்.

"என்கிட்டே என்ன பேசணும்?"

"வேற என்ன பேசப் போறேன்... நீங்க பண்ணின ரெண்டு கொலைகளைப் பத்தித்தான்.."

யோகானந்த் முகம் இருண்டார்.

"என்ன உளர்றே?"

"இது உளறல் கிடையாது டாக்டர். உண்மை. உங்க மனைவி மஞ்சரியையும் அவளுடைய கள்ளக் காதலன் திலகனையும் கொலை பண்ணினது நீங்கதான்னு எனக்கு நல்லாத் தெரியும்."

"முட்டாள்தனமா பேசாதே...! மஞ்சரியும் திலகனும் கொலை செய்யப்பட்ட நேரத்துல நான் சாலையோரப் பூங்காவில் மயக்கமாய்க் கிடந்தேன்."

"நீங்க மயக்கமாகிக் கிடந்தது உண்மைதான். அது ரெண்டு கொலைகளையும் பண்ணினதுக்குப் பின்னாடி..."

யோகானந்த் திகைக்க - திரிவேணி ஒரு புன்னகையுடன் தொடர்ந்தாள். "டாக்டர்..! நீங்க போலீஸையும் மத்தவங்களையும் ஏமாத்தலாம். ஆனா என்னை ஏமாத்த முடியாது. பாம்பின் கால் பாம்பறியும்ன்னு சொல்லுவாங்க.. இந்த விஷயத்துல நீங்களும் ஒரு பாம்பு. நானும் ஒரு பாம்பு.."

யோகானந்த் விழிகள் சிவந்து உஷ்ணமானார்..

'ஏய்.. நீ.. நீ..?"

"தெரியும்.. உங்க அடுத்த கேள்வி என்னான்னு எனக்கு நல்லாவே தெரியும். நான் கொலைகளைப் பண்ணினதை நீ பார்த்தியான்னு கேட்கப் போறீங்க... ஆமா.. நான் பார்த்தேன். போட்டோவும் எடுத்திருக்கேன்.. போட்டோஸ் பார்க்கிறீங்களா?"

திரிவேணி தன்னுடைய ஜோல்னாப் பைக்குள் கை விட்டு நான்கைந்து போஸ்ட் கார்டு சைஸ் போட்டோக்களை எடுத்தாள். யோகானந்திடம் நீட்டினாள்.

"ம்... பாருங்க.. டாக்டர்..! ஃப்ளாஷோட உதவியில்லாம நைட் எஃபெக்ட் மோஷன் காமிராவில் எடுத்த போட்டோஸ் இது. 'க்ளிக்' பண்ற சத்தம் கூட வெளியே கேட்காது. க்ளிக் பண்ணும் போது டேட்டும் டைமும் அந்த போட்டோவில் பதிவாயிடும்."

யோகானந்த் அந்த போட்டோக்களை வாங்கிப் பார்த்தார். உடனே நெற்றி வியர்த்தார்.

முதல் போட்டோவில் யோகானந்த் காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறார்.



போட்டோவின் வலது பக்க மூலையில் கொலைகள் நடந்த தேதியான அன்றைய தேதியும், காமிரா க்ளிக் செய்யப்பட்ட நேரமான 11.35 நேரமும் பதிவாகியிருந்தது.

இரண்டாவது போட்டோவில் யோகானந்த் இடது கையில் துப்பாக்கியைத் தயாராக வைத்துக் கொண்டு வாசல் கதவின் காலிங் பெல் பட்டனின் மேல் விரலை வைத்து இருக்கிறார். நேரம் 11.37

மூன்றாவது போட்டோ ஜன்னல் கம்பிகளுக்கு அப்பாலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. யோகானந்த் துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருக்க எதிரில் மரண பயம் அப்பிய முகங்களோடு மஞ்சரியும் திலகனும் நின்றிருந்தார்கள். நேரம் 11.40.

நான்காவது போட்டோவில் மஞ்சரியும் திலகனும் கீழே விழுந்து கிடக்க... கையில் துப்பாக்கியோடு யோகானந்த் வெளியேறிக் கொண்டிருக்கிறார். நேரம் 11.42

ஐந்தாவது போட்டோ சாலையோரப் பூங்காவில் எடுக்கப்பட்டிருந்தது. யோகானந்த் பூங்கா சிமெண்ட் திட்டில் உட்கார்ந்தபடி தன்னுடைய இடது தோள்ப் பட்டையில் தானே இஞ்செக்ஷன் போட்டுக் கொள்கிறார். நேரம் 12.15

யோகானந்த் சொதசொதவென்று வியர்த்துப் போய்த் திரிவேணியைப் பார்த்தார். படபடத்தார். குரல் திக்கியது.

"நீ.. நீ.. யா.. யாரு..? எதுக்காக இப்படியெல்லாம் போட்டோ எடுத்து.."

திரிவேணி அவரைக் கையமர்த்தினாள்.

"பயப்படாதீங்க டாக்டர்... நான் போலீஸ்க்கெல்லாம் போயிட மாட்டேன். உங்ககிட்டே நான் வெளிப்படையாவே

பேசிடறேன்.. இது எனக்கு ஒரு பிசினஸ். பெரிய பெரிய இடங்களில் நடக்கிற கள்ளத் தொடர்புகளைக் கண்டுபிடிச்சு அதை வெச்சு பிளாக்மெயில் பண்ணிச் சம்பாதிக்கிறதுதான் என்னோட வேலை. எனக்கு உறவுன்னு சொல்லிக்க யாரும் கிடையாது. படிச்சேன். படிப்புக்கேற்ற வேலையும் கிடைக்கலை. நான் கொஞ்சம் வசதியாய் வாழ நினைக்கிற டைப். உடம்பை மூலதனமா வெச்சு பணம் சம்பாதிக்கிறதைக் காட்டிலும் மூளையை மூலதனமா வெச்சு பணம் சம்பாதிக்க நினைச்சேன்."

அவளையே யோகானந்த் முறைத்தார். அவள் சிரித்தாள்.

"என்ன டாக்டர் கோபம் வருதா...? கோபம் வரத்தான் செய்யும். உங்க மனைவி மஞ்சரியை ப்ளாக்மெயில் பண்ணி சில லட்சங்களைப் பார்த்துடலாம்னு நினைச்சேன். அவ தீர்க்க சுமங்கலியா போய்ச் சேர்ந்துட்டா. இப்ப நீங்க மாட்டிக்கிட் டீங்க.. சயன்டிஸ்ட் கௌரி சங்கர் கடத்தப்பட்டதுக்கும் நீங்கதான் உதவி பண்ணியிருக்கீங்க போலிருக்கு... முத்துராஜும் அஞ்சலையும் உங்களுக்கு மயக்க மருந்து ஊசி போடற மாதிரி பாவ்லா பண்ணி சாலையோரப் பூங்கா சிமெண்ட் சீட்டில் படுக்க வெச்சுட்டுப் போயிட்டாங்கன்னு நினைக்கிறேன். என்னோட நினைப்பு சரியா?"

யோகானந்த் தன் இடது கை சுட்டுவிரலை உயர்த்தினார்.

"இதோபார்..! அதெல்லாம் உனக்குத் தேவையில்லாத விஷயம்... இந்த போட்டோக்களுக்கும் நெகடிவ்களுக்கும் ஒரு விலை ஃபிக்ஸ் பண்ணியிருப்பியே.. அந்த விலையைச் சொல்லு. பேரத்தை முடிச்சுக்குவோம்.."



"அதுவும் சரிதான்... கௌரிசங்கர் விவகாரம் வேண்டாத ஒண்ணு! அதுல மூக்கை நுழைக்க நான் விரும்பலை. என்னோட ரேட்டைச் சொல்லட்டுமா டாக்டர்.."

"சொல்லு.."

"பத்து லட்சம்..."

"இது அதிகம்."

"போலீஸ் கைக்கு இந்த போட்டோக்கள் போயிட்டா உங்களுக்குக் கிடைக்கப் போகிற தண்டனையும் அதிகம்."

"அஞ்சு லட்சம் வாங்கிக்க.."

"பாதி நெகடிவ்கள் மட்டும் தருவேன். பரவாயில்லையா?"

யோகானந்த் முறைக்க... திரிவேணி சிரித்தாள்.

"டாக்டர்! இது பேரம் பேசுகிற நேரம் இல்லை. நீங்க எப்பேர்ப்பட்ட ஆபத்துல இருக்கீங்கன்னு உங்களுக்குப் புரியலை. கௌரிசங்கர் கடத்தப்பட்ட விவகாரத்தை நான் என்னோட பிசினஸில் சேர்த்துக்கவேயில்லை. அதையும் சேர்த்திருந்தா என்னோட ரேட் இருபது லட்சம்."

சில விநாடிகள் திரிவேணியையைப் பார்த்துக் கொண்டிருந்த யோகானந்த் ஒரு பெருமூச்சு வெளியேற்றிவிட்டுச் சொன்னார்.

"சரி.. நாளைக்குக் காலையிலே இதே நேரம் போட்டோக் களையும் நெகடிவ்களையும் கொண்டு வந்துடு. பணம் ரெடியாய் இருக்கும்.."

"டாக்டர்! இந்த பிசினஸில் ரெண்டு பக்கமும் நியாயமா நடந்துக்கணும். நீங்க என்னை ஏமாத்த நினைச்சா அதனோட

விளைவுகளை நீங்க கண்டிப்பா அனுபவிக்க வேண்டியிருக்கும். ஏன்னா நான் முழு நேர கிரிமினல். நீங்க பார்ட் டைம் கிரிமினல்.. ஏமாத்தற வேலையெல்லாம் வேண்டாம்..''

''இதுல பாதிக்கப்பட்டவன் நான்தான். என்னை நீ ஏமாத்தாம இருந்தா போதும்.''

''எனக்கு வேண்டியது பணம். அது என் கைக்கு ஒழுங்கா வந்தா போதும்.. ஒரு நெகடிவ் போட்டோ பாக்கியில்லாமே உங்க கைக்கு வந்துவிடும். நாளைக்கு இதே நேரத்துக்குப் பார்க்கலாம்.'' திரிவேணி சொல்லிக் கொண்டு வாசல் கதவை நோக்கிப் போனாள். கதவை நெருங்கித் தாழ்ப்பாளை விலக்கி இழுத்தாள்.

திகைத்தாள்.

''கதவு வெளிப் பக்கம் பூட்டியிருக்கு.''

''இருக்காதே.!''

வேகவேகமாய் வந்து இழுத்துப் பார்த்தார்.

முகம் மாறியது.

''யாரோ வெளிப்புறம் பூட்டியிருக்காங்க.''

திரிவேணி பதட்டமாகி வீட்டின் பின்பக்கக் கதவை நோக்கி ஓடினாள். கதவின் தாழ்ப்பாளை விலக்கி இழுத்தாள். கண்கள் பீதியில் உறைந்து போயிற்று.

பின்பக்கக் கதவும் வெளிப்பக்கமாய்ப் பூட்டப்பட்டிருந்தது.

திரிவேணி கத்தினாள்.

''டாக்டர்! என்ன இது.. கதவை வெளிப்பக்கமாகப் பூட்டினது யாரு..,?''



''தெரியலையே..''

''நான் இப்ப வெளியே போகணும்! ஏதாவது பண்ணிக் கதவைத் திறங்க..''

''ஸாரி, திரிவேணி...! நீயும் வெளியே போக முடியாது. என்னோட அப்பாவும் வெளியே போக முடியாது.''

ஜன்னலுக்குப் பக்கத்தில் குரல் கேட்டு இருவரும் தலைகளை உயர்த்தினார்கள்.

யமுனா ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னால் தெரிந்தாள். திரிவேணியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''நீ பின் பக்கச் சுவரேறிக் குதிக்கும் போதே நான் பார்த்துட்டேன். காலேஜுக்குப் போறதை ட்ராப் பண்ணிட்டு நானும் சுவர் ஏறிக் குதிச்சு உள்ளே வந்தேன். நீங்க ரெண்டு பேரும் பேசினதை யெல்லாம் கேட்டேன்.''

யோகானந்த் பதட்டமானார்.

''அம்மா யமுனா...! இந்த விஷயம் போலீஸுக்குப் போயிடக் கூடாதும்மா! கதவைத் திறந்து விடம்மா.. இவளுக்கு நாளைக்குக் காலையில் பணத்தை செட்டில் பண்ணிடலாம்.''

''ஸாரிப்பா..! நான் என்னோட செல்போன் மூலமா போலீஸ் கமிஷனர்க்கு போன் பண்ணி அஞ்சு நிமிஷமாச்சு. போலீஸ் இந்நேரம் வந்துகிட்டு இருப்பாங்க. பணத்தால பாவங்களைக் கரைக்க முடியாது. சட்டம் கொடுக்கிற தண்டனையை ஏத்துக்கிறதுதான் சரியான பரிகாரம்!''

யமுனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே போலீஸ் ஜீப்களின் சைரன் சத்தம் கேட்டது.

## 23

போலீஸ் கமிஷனர் நவநீதகிருஷ்ணன் பத்திரிகை நிருபர்களுக்கு நடுவில் வியர்த்து வழிந்து கொண்டிருந்தார்.

கேள்விகள் சரமாரியாய் வந்தன.

''ஸார்.. கௌரிசங்கர் மீட்கப்பட்டு விடுவாரா?''

''டாக்டர் யோகானந்த்தை போலீஸ் கஸ்டடியில் வைத்து இரண்டு மணி நேரம் விசாரித்த பிறகே எல்லா உண்மைகளும் வெளியே வந்தது. சென்னைப் புறநகர்ப் பகுதியில் ஒரு பங்களாவில் அடைக்கப்பட்டிருந்த அவரை அரை மணி நேரத்துக்கு முன்புதான் மீட்டோம்.''

''சயன்டிஸ்ட் கௌரிசங்கர் எதற்காகக் கடத்தப்பட்டார்?''

''அந்த விபரமும் யோகானந்த் மூலமாகவே கிடைத்தது. புதிது புதிதான மருந்து வகைகளின் ஃபார்முலாக்களை வடிவமைப்பதில் வல்லவரான கௌரிசங்கரைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள ஒரு வெளிநாட்டு பார்மஸூடிகல் கம்பெனி எடுத்த முயற்சிக்கு டாக்டர் யோகானந்த் உதவியிருக்கிறார். இதில் கோடிக்கணக்கான பணம் லஞ்சமாகப் பெறப்பட்டுள்ளது. தன் மேல் எந்தச் சந்தேகமும் வந்துவிடக் கூடாது என்பதற்காக அவரையே பிணையக் கைதியாக வைத்துத் திட்டம் போட்டுள்ளார் டாக்டர் யோகனாந்த். இதே திட்டத்துக்குள் தனக்குத் துரோகம் செய்த மனைவியையும் தீர்த்துக் கட்டத் திட்டம் போட்டு, அதையும் துல்லியமாய்ச் செய்து இருக்கிறார்..''

''அதாவது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்..''



''அதேதான்..''

''டி.ஜி.பி. சொன்னதுபோல் 48 மணி நேர அவகாசத்துக்குள் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விட்டீர்கள்.''

நவநீதகிருஷ்ணன் சிரித்தார்.

''இதில் போலீஸ் பங்கு ஒன்றுமே யில்லை. குற்றவாளி தன்னுடைய அப்பா என்று தெரிந்த பிறகும் சட்டத்துக்கு மதிப்புக் கொடுத்து எனக்கு டெலிபோன் செய்து தகவல் சொன்ன யமுனாவுக்குத்தான் இந்த போலீஸ் துறை கடமைப் பட்டுள்ளது. யமுனாவின் இந்தக் கடமை உணர்ச்சியைப் பாராட்டி ஜனாதிபதியும், பிரதமரும் ஃபேக்ஸில் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.''

நிருபர்கள் கூட்டம் கைதட்டி மகிழ்ந்தது.

★

★ ★

# சொர்க்கத்தின் சாவி

## 1

"அம்மா...!"

வி.சி.டி.யில் பத்மா சுப்ரமணியத்தின் நாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சமுத்ரா வேலைக்காரியின் குரல் கேட்டுக் கலைந்தாள்.

"என்ன பொன்னி..?"

"உங்களைப் பார்த்துப் பேசறதுக்காக போலீஸிலிருந்து ஒருத்தர் வந்து இருக்கார்ம்மா... பெரிசா மீசையெல்லாம் வெச்சுகிட்டு பார்க்கிறதுக்கே பயமாயிருக்கம்மா.."

சமுத்ரா வி.சி.டி.யை அணைத்து விட்டு எழுந்தாள். இருபத்து மூன்று வயது. ஒடிசலான உடம்பு வாகு. பெரிய கண்கள். அடர்த்தியான தலைமுடி. ஒற்றை ஜடையாக மாறிப் பின் பக்கம் ஒரு கறுப்பு அருவியாய் வழிந்து ரம்யமாய் அசைந்தது. சமுத்ரா கடந்த இரண்டு வருஷ காலமாய் எல்லா நாளிதழ்களிலும், டி.வி. சானல்களிலும் தன்னுடைய பரத நாட்டியத் திறமைக்காக ஒரு நிரந்தர இடம் பிடித்து இருந்தாள். சமீபத்தில் ஜனாதிபதி கையால் வாங்கிய பட்டம் 'பரத நாட்டியப் பொக்கிஷம்'. அடுத்த வருடம் கண்டிப்பாய் ஒரு



'பத்மஸ்ரீ' உண்டு என்பது கலை இலக்கிய விமர்சகர்களின் அசாத்திய நம்பிக்கை.

சமுத்ரா தன் அறையினின்றும் வெளிப்பட்டு மாடி வராந்தாவில் நடந்து சிவப்பு கார்ப்பெட் போர்த்தியிருந்த மாடிப் படிகளில் இறங்கி ஹாலுக்குள் நுழைந்தபோது சோபாவில் அந்த போலீஸ் அதிகாரி ஒரு வார இதழைப் புரட்டியபடி தெரிந்தார்.

சமுத்ராவைப் பார்த்ததும் புன்னகையுடன் எழுந்தார்.

"ஸாரி...! ஓய்வாக இருக்கிற நேரத்தில் வந்து உங்களுக்குத் தொல்லை கொடுத்துட்டேன்.."

சமுத்ராவும் புன்னகைத்தாள்.

"காரணம் இல்லாமே வர மாட்டீங்களே.. டிபார்ட்மெண்ட் சார்பா ஏதாவது கலை நிகழ்ச்சியா?"

"அதெல்லாம் இல்லை... உங்ககிட்டே ஒரு அஞ்சு நிமிஷம் தனியாப் பேசணும்.."

"தாராளமாகப் பேசலாம்... இந்த பங்களாவில் என்னையும் வேலைக்காரியையும் தவிர வேறு யாரும் கிடையாது. நீங்க எதைப் பேசறதாயிருந்தாலும் இங்கேயே பேசலாம்.."

"நான் அஸிஸ்டண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ். என்னோட பேர் வகுளாம்பரன். உங்களைப் பார்க்கச் சொல்லி கமிஷனரோட உத்தரவு.."

"உங்களுக்குச் சொந்த ஊர் கும்பகோணமா?"

"ஆமா.. எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

''நீங்க பேசற தமிழ்..! எனக்கும் பூர்வீகம் கும்ப கோணம்தான்.. சரி.! என்ன விஷயமா வந்திருக்கீங்க.. சொல்லுங்க..''

அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் வகுளாம்பரன் தன் காக்கிச் சட்டையின் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து ஒரு கடிதக் கவரை எடுத்துச் சமுத்ராவின் கையில் கொடுத்தார்.

''இந்த லெட்டரைக் கொஞ்சம் படிச்சுப் பாருங்க..''

சமுத்ரா குழப்பமாய் அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தாள். கடிதம் முதல் பத்து வரிகள் உருது மொழியிலும், அதற்குக் கீழே உள்ள பத்து வரிகள் ஆங்கில மொழியிலும் எழுதப்பட்டு இருந்தது. சமுத்ரா ஆங்கில வாக்கியங்களைப் படித்தாள்.

தமிழக போலீஸ் துறைக்கு எங்கள் இயக்கத்தின் சார்பாக வேண்டுகோள்கள் சில.. இந்த வேண்டுகோள்கள் என்கிற வார்த்தையை நீங்கள் எச்சரிக்கைகள் என்று எடுத்துக் கொண்டாலும் தப்பில்லை.

வேண்டுகோள் - 1: 'லிட்டில் டெவில்ஸ்' என்கிற எங்கள் புனித இயக்கத்தைச் சேர்ந்த மூன்று பேர் சென்னை 'க்யூ பிராஞ்ச்' போலீசாரால் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை இன்னும் 24 மணி நேரத்துக்குள் விடுதலை செய்யா விட்டால் உங்கள் போலீஸ் துறையைச் சேர்ந்த மூணு பேர் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள். இது விளையாட்டான மிரட்டல் இல்லை. விபரீதம் வேண்டாம் என்று நினைத்தால் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை விடுதலை செய்யவும்.

வேண்டுகோள் - 2: 'லிட்டில் டெவில்ஸ்' என்கிற எங்களுடைய புனித இயக்கத்தைத் தீவிரவாதிகளின் இயக்கம் என்று போலீஸ் கமிஷனர் பத்திரிகைகளுக்குப் பேட்டி



கொடுத்து இருக்கிறார். அந்த வார்த்தைகளை அவர் வாபஸ் பெறவேண்டும். இதற்கும் 24 மணி நேரக் கெடு. அவர் வாபஸ் வாங்கவில்லை என்றால் அவருடைய குடும்பம் அவர்க்காகக் கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கும்.

வேண்டுகோள் - 3: அடுத்த மாதம் பதினாலாம் தேதி பாகிஸ்தானில் கராச்சியில் இண்டர்நேஷனல் கல்சுரல் ப்ரோக்ராம் ஒன்று நடக்க உள்ளது. மொத்தம் 50 நாடுகள் பங்கு கொள்ளும் அந்த சர்வதேசக் கலை விழாவில் உங்கள் நாடான இந்தியாவும் கலந்து கொள்கிறது. பாகிஸ்தான் அரசு இதை அனுமதித்தாலும் நாங்கள் இதை அனுமதிக்கத் தயாராக இல்லை. எனவே அந்தக் கலை விழாவில் பரத நாட்டியம் ஆடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நாட்டியப் பெண் சமுத்ரா கராச்சியில் காலடி எடுத்து வைக்கக் கூடாது. மீறிக் காலடி எடுத்து வைத்தால் இரண்டு கால்களையும் இழந்து, சமுத்ரா, சக்கர நாற்காலியில், ஊர் திரும்ப வேண்டியிருக்கும்.

இப்படிக்கு

புனித இயக்கம், லிட்டில் டெவில்ஸ்.

லெட்டரைப் படிக்கப் படிக்கவே சமுத்ராவின் அழகான சிறிய நெற்றியில் நீர்த் திவலைகளாய் வியர்வை. உலர்ந்து போன உதடுகளோடு நிமிர்ந்த வகுளாம்பரனைப் பார்த்தாள் சமுத்ரா.

''என்ன ஸார்.. இப்படி எழுதியிருக்காங்க...''

''தீவிரவாதிகளோட கடிதம் இப்படித்தான் இருக்கும்..''

சமுத்ராவின் வியர்வை அதிகமாயிற்று. வகுளாம்பரன் புன்னகைத்தார். ''என்ன மிஸ் சமுத்ரா! பயந்துட்டீங்களா?''

"பின்னே பயம் இல்லாமே இருக்குமா..? கராச்சியில் காலடி எடுத்து வெச்சா என்னோட ரெண்டு கால்களையும் இழந்து சக்கர நாற்காலியில் திரும்பி வர வேண்டியிருக்கும்னு லெட்டர் எழுதியிருக்காங்களே."

"இது மாதிரியான லெட்டர்ஸ் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு நிறைய வரும். எங்களைப் பொறுத்தவரைக்கும் இது வேஸ்ட் பேப்பர். எங்களுக்கு மட்டும் மிரட்டல் வந்திருந்தால்.. இந்நேரம் இந்த லெட்டர் குப்பைக் கூடைக்குள் ஒரு உருண்டைக் காகிதமாய் மாறியிருக்கும். ஆனா இந்த லெட்டர்ல உங்களைப் பற்றியும் ஒரு எச்சரிக்கை இருந்ததினால லெட்டரை உங்ககிட்டே காட்ட வேண்டிய கட்டாயம். அதனால்தான் வந்தேன். லெட்டர்ல இருக்கிற எச்சரிக்கையைப் பொருட்படுத்தறதும் படுத்தாததும் உங்க விருப்பம்.. நீங்க விரும்பினால் கராச்சியில் நடக்கிற இன்டர்நேஷனல் கல்சர் ப்ரோக்ராமுக்குப் போகலாம். இல்லேன்னா கான்ஸல் பண்ணிடலாம்.."

"என்னது? கான்ஸல் பண்றதா..?"

"ஆமா.. நீங்கதானே பயமாயிருக்குன்னு சொன்னீங்க!"

"எதுக்காக அப்படிச் சொன்னேன், தெரியுமா ஸார்?"

"சொல்லுங்க.."

"நான் உயிர்க்குப் பயந்துட்டு அப்படிச் சொல்லலை. என்னோட கால்களை மட்டும் வெட்டிட்டான்னா அதுக்கப்புறம் என்னால டான்ஸ் ஆட முடியாம சக்கர நாற்காலிக்குள்ளேயே முடங்கிப் போய்விடுவோமோ என்கிற பயம்தான். மற்றப்படி நான் கோழை கிடையாது. என்னோட தாத்தா மாணிக்க வேலர் அந்தக் காலத்துச் சுதந்திரப் போராட்டத் தியாகி. போலீஸ் தடியடியில் இடுப்பெலும்பு நொறுங்கிப் பத்து வருஷம் படுக்கையே உலகம்ன்னு நினைச்சு வாழ்ந்தவர். உயிரை விடும்போது கூட 'வெள்ளையனே, வெளியேறு!'ன்னு சொன்னவர்.. அவரோட பேத்தி நான். இந்த பேப்பர் மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படுவேனா என்ன..?"



"அப்படீன்னா நீங்க கராச்சிக்குப் போறீங்க?"

"ஒரு பர்சன்ட் கூடச் சந்தேகம் வேண்டாம்."

வகுளாம்பரன் எழுந்தார். "நீங்க இப்படிப் பேசறதைக் கேட்கும்போது மனசுக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருக்கு.. 'லிட்டில் டெவில்ஸ்' என்கிற இந்த தீவிரவாத இயக்கத்துக்குப் பயந்துட்டு நீங்க டான்ஸ் ப்ரோக்ராமை கான்சல் பண்ணி யிருந்தா அது நம்ம தேசத்துக்கு ஒரு பெரிய தலைகுனிவாய் மாறியிருக்கும்!" அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே யூனிஃபார்மின் பாக்கெட்டுக்குள் இருந்த செல்போன் குரல் கொடுத்தது. எடுத்துக் காதுக்கு ஒற்றினார். மறுமுனையில் கமிஷனர் பாலசிங்கம் பேசினார்.

"வகுளாம்பரன்.."

"ஸார்.."

"மிஸ் சமுத்ராகிட்டே லெட்டரைக் காட்டினீங்களா?"

"காட்டினேன் ஸார்."

"சமுத்ராவோட ரியாக்ஷன் என்ன?"

"அவங்க கொஞ்சம் கூடப் பயப்படலை ஸார்.. கராச்சி ட்ரிப்பை கான்ஸல் பண்ணப் போறதில்லைன்னு சொல்லிட்டாங்க."

''ரொம்ப சந்தோஷம்.. செல்லை அவங்ககிட்டே கொடுங்க.''

வகுளாம்பரன் தன் கையில் இருந்த செல்போனைச் சமுத்ராவிடம் கொடுக்க, அவள் வாங்கிப் பேசினாள்.

''குட் ஈவினிங் ஸார்.''

''நன்றி, மிஸ் சமுத்ரா!''

''எதுக்கு நன்றி?''

''கராச்சி ட்ரிப்பை கான்ஸல் பண்ணாததுக்கு..''

''ஸார்.. நான் பொறந்தது இந்தியாவில். அதுவும் தமிழ் நாட்டில். என்னைப் பெத்தவங்களும் கோழை கிடையாது. நானும் கோழை கிடையாது. அந்த லெட்டரை நீங்க எனக்குக் காட்டியிருக்க வேண்டியதே இல்லை. கசக்கிக் குப்பைக் கூடைக்குள்ளே வீசியிருக்கலாம்..''

''அது முறை கிடையாது.. உங்களை மாதிரியான வி.ஐ.பி.க்களுக்கு மிரட்டல்கள் வரும்போது அதை இக்னோர் பண்ணாமே அவங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியது முறை... அவர்கள் வெளியே போகும் போது எச்சரிக்கை உணர்வோடு இருந்து கொள்ள முடியும் அல்லவா..?''

''யூ ஆர் கரெக்ட் ஸார்..''

''நீங்க கராச்சிக்கு எப்போ புறப்படறீங்க, சமுத்ரா?''

''கல்சுரல் ப்ரோக்கிராம் தொடங்கறதுக்கு நாலு நாளைக்கு முந்தி..! அதாவது பத்தாம் தேதி.''

''அதுவரைக்கும் உங்க பாதுகாப்புக்கு ரெண்டு செண்ட்ரி காப்ஸை அனுப்பி வைக்கட்டுமா?''



''வேண்டாம் ஸார்... என்னோட பங்களாவிலேயே செண்ட்ரி இருக்காங்க.. அவங்க கேர் எடுத்துக்குவாங்க.. தேவைப்பட்டா நானே போன் பண்றேன். நீங்க காப்ஸை அனுப்பி வையுங்க.''

''ஓ.கே..''

சமுத்ரா மேலும் இரண்டு நிமிஷங்களுக்குப் பேசிக் கொண்டிருந்துவிட்டு செல்போனை வகுளாம்பரனிடம் கொடுக்க, அவர் அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு, சமுத்ராவிடம் விடை பெற்று வெளியே வந்தார். காத்திருந்த பைக்கில் பரவி செண்ட்ரிகள் திறந்து வைத்த கேட்டினின்றும் வெளிப்பட்டுச் சாலையில் போக்குவரத்தில் கலந்தார்.

இரண்டு நிமிஷப் புயல் வேகப் பயணம்.

பைக் ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு கிளைச் சாலைக்குள் நுழைந்து ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்துக்கு முன்பாய் நின்றது.

பைக்கை ஸ்டாண்ட் இட்டு நிறுத்திய வகுளாம்பரன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பூத்துக்குள் நுழைந்து ஒரு ரூபாய் நாணயத்தைக் கையில் தயாராய் வைத்துக் கொண்டு சில எண்களை டயலில் தட்டினார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டு ஒரு கரகரப்பான 'ஹலோ' குரல் கேட்டதும், ரூபாய் நாணயத்தைப் போட்டு லைனை உயிர்ப்பித்துக் கொண்டார்.

'நிஷார்! நான் வகுளா..''

''சொல்லுங்க ஏ.ஸி. ஸார்..''

''நம்ம லெட்டர்க்கு சமுத்ரா பயப்படலை. அவ கராச்சிக்குப் போய் கல்சுரல் ப்ரோக்ராமில் கலந்துக்கப் போறா.''

மறுமுனையில் நிஷார் சிரித்தான்.

''அவ பயப்பட மாட்டாள்னு நான் சொல்லலை..''

''சரி..! இப்ப என்ன பண்ணலாம்.''

''இதோ பாருங்க ஏ.ஸி. சார்.. இந்தியாவை அவமானப் படுத்தணும்ங்கிறது கராச்சி ஹெட் க்வார்ட்டர்ஸின் நோக்கம். எல்லா நாடுகளும் கலந்துக்கிற அந்த கல்சுரல் ப்ரோக்ராம் மேடையில் இந்தியாவின் சார்பாய் நடக்கப் போகிற சமுத்ராவின் பரத நாட்டிய நிகழ்ச்சிக்குப் பார்வையாளர் களிடையே பெரிய வரவேற்பு இருக்கு. அந்த வரவேற்பு இந்தியாவுக்குக் கிடைக்கக் கூடாது. இந்தியாவே அந்த நிகழ்ச்சியை ரத்து செய்யணும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தறதுக்காக ஹெட் குவார்ட்டர்ஸிலிருந்து கைநீட்டி நிறையப் பணத்தையும் வாங்கிட்டோம். ஸோ.. அட் எனி காஸ்ட்.. சமுத்ரா டான்ஸ் பண்ண கராச்சி போகக் கூடாது..''

''அவளைத் தடுக்க முடியாது போலிருக்கே..''

''இந்தப் பதிலை ஹெட்குவார்ட்டர்ஸுக்கு நாம சொல்ல முடியாது.. ஏ.ஸி.. ஸார்..''

''என்ன பண்ணலாம்..?''

''ஒரு மோசமான நாளா பார்த்து சமுத்ராவோட ரெண்டு கால்களையும் முழங்கால்களுக்குக் கீழே வெட்டி எடுத்துட வேண்டியதுதான்.''

''நீயே நாள் குறி.''

''குறிச்சுட்டேன்.! வர்ற இருபத்தெட்டாம் தேதி..''

''கைங்கரியத்தைப் பண்ணப் போறது யாரு?''



''ரேஷ்மி..''

''அவளால முடியுமா..?''

''அவளாலதான் முடியும்.''

''எப்படி?''

''திட்டம் கைவசம் இருக்கு ஏ.ஸி. சார். இன்னிக்கு ராத்திரி பதினோரு மணிக்கு ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டில் உள்ள திருவிடந்தை முகாமுக்கு வந்துருங்க..''

''ரேஷ்மி பக்கத்துல இருக்காளா?''

''ம்.. இருக்கா. ரெண்டு பாட்டில் பீரை உள்ளே தள்ளிட்டு விண்வெளியில் சஞ்சாரம் பண்ணிக்கிட்டு இருக்கா.. அவ கிட்டே பேசணுமா?''

''ஆமா...''

சில விநாடிகளுக்குப் பின் ரேஷ்மியின் பீர் கலந்த குரல் குழறலாய்க் கேட்டது. ''வ. வகுள்..! என்னடா கண்ணா... இந்த ரேஷ்மியை மறந்துட்டே போலிருக்கு!''

''சேச்சே.. மறக்க முடியுமா.. உன்னை..? நான் உன்னை மறந்துட்டா இந்த வகுள் உயிரோடு இல்லைன்னு அர்த்தம்..''

''போன தடவை முட்டுக்காட்டு முகாமில் உன்னைப் பார்த்தது. அதுக்கப்புறம் பார்க்கவே முடியலை.. உன்கிட்டே முத்தம் வாங்கி ரொம்ப நாளாச்சுடா..''

''இன்னிக்கு ராத்திரி திருவிடந்தை முகாமுக்கு வர்றேன்.. அப்ப வாங்கிக்க..''

''கண்டிப்பா வரணும்..''

''வர்றேன்.. வர்றேன்.''

''வரும்போது லஸ் கார்னர்ல இருக்கிற லாலா கடையில் ஒரு கிலோ ஸ்வீட் வாங்கிட்டு வந்துடு.''

''எதுக்கு..?''

''எதுக்கா.. சரியாப் போச்சு.. உன் புள்ளை இப்ப என் வயத்துல..! வெற்றிகரமான அறுபதாவது நாள்.''

''அடிப் பாவி..! போன மாசம் மாத்திரை வாங்கிக் கொடுத்தேனே.. சாப்பிடலையா?''

''சாப்பிட்டேன்.. உன்னை மாதிரியே உன்னோட புள்ளையும் ஸ்ட்ராங்.. அசையலே..''

''வேண்டாம் ரேஷ்மி... நம்ம இயக்கத்துக்கு இது எல்லாம் எக்ஸ்ட்ரா லக்கேஜ். பேசாமே ஒரு நல்ல டாக்டர்கிட்டே போய் டி அண்ட் ஸி பண்ணிக்க.''

''நோ.. நோ. எனக்கு உன்னை மாதிரியே ஒரு பையன் வேணும்..! குழந்தையைப் பெத்துக்க ஹெட் க்வார்ட்டர்ஸிலிருந்து பர்மிஷன் வாங்கிட்டேன்.''

''...''

''என்னடா பேச்சைக் காணோம்..! பயந்துட்டியா... பயப்படாதே..! போன மாசம் நீ வாங்கிக் கொடுத்த மாத்திரையைச் சாப்பிட்டதுமே எல்லாம் சுத்தம் ஆயிடுச்சு.. சும்மா ஒரு உதார் காட்டினேன்... வேர்த்து ஒழுகியிருப்பியே..!''

''நேர்ல வந்து உன்னைப் பேசிக்கிறேன்.''



''வாடா.. வாடா...'' மறுமுனையில் ரேஷ்மி பலமாய்ச் சிரித்துக் கொண்டு இருக்கும் போதே, ரிஸீவரை வைத்துவிட்டு பூத்திலிருந்து வெளிப்பட்டார் வகுளாம்பரன். பைக்கை நெருங்கி அதை உதைக்க முயன்ற விநாடி - அவருடைய செல்போன் குரல் கொடுத்தது.

எடுத்தார்.

மறுமுனையில் அவருடைய மனைவி அபிராமியின் குரல். குரலில் லேசாய்ப் பதட்டம்.

''என்னங்க.. நீங்க இப்போ எங்கே இருக்கீங்க?''

''அடையார்ல.. ஏன்?''

''உடனே புறப்பட்டு வீட்டுக்கு வாங்க.. லேட் பண்ணாம வாங்க.''

''ஏன்.. என்ன விஷயம்?''

''போன்ல எதுவும் வேண்டாம்..! நே.. நேர்ல வாங்க.. சொல்றேன்...'' அபிராமி போனின் ரிஸீவரை வைத்து விட, வகுளாம்பரன் செல்லை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு பைக்கை வேகமாய் உதைத்தார். அது உயிர் பிடித்துக் கொண்டதும் தாவி ஏறிப் பறந்தார்.

## 2

இரவு நேரப் புதுடெல்லி.

பனிப் புகைக்குள் கட்டிடங்கள்.

இந்த இரண்டாவது அத்தியாயத்தில் நமக்கு வேண்டிய ஏர்போர்ஸ் ஹெட்க்வார்ட்டர்ஸ் கட்டிடம் சில்வேனியா

மரங்களுக்கு மத்தியில் எட்டிப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தது. கட்டிட மையத்தின் உள்ளே ஹீட்டர்கள் பொருத்தப்பட்ட 'இன் காமிரா' என்று சொல்லப்படும் ரகசிய அறை கொஞ்சம் பதட்டத்தோடு இருந்தது. அறைக்குள்ளே சிவப்பு வெல்வெட் வேய்ந்த நாற்காலிகளில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த அதிகாரிகள் முகம் நிறைய கவலைகளோடு தெரிந்தார்கள். ஏர் வைஸ் மார்ஷல் வினோத் ஷர்மா, ஏர் கமேண்டர் ப்ரசன்னா, க்ருப் காப்டன் ரஞ்சித்குமார், விங் கமேண்டர் சோப்ரா... இந்த முக்கியமான அதிகாரிகளைத் தவிர நான்கு ஸ்க்வாட்ரன் லீடர்கள். ஐந்து ஃப்ளைட் லெப்டினென்ட்கள், இரண்டு ஃப்ளையிங் ஆபீஸர்கள் நாற்காலிகளில் நேர்கோடுகள் மாதிரி உட்கார்ந்திருந்தார்கள்.

ஏர் வைஸ் மார்ஷல் வினோத் ஷர்மா தனக்கு முன்பாய் உட்கார்ந்திருந்த எல்லா அதிகாரிகளையும் ஒரு கவலைப் பார்வை பார்த்துவிட்டு மெல்லப் பேச்சைத் தொடர்ந்தார்.

''இந்த முன்னிரவு நேரத்தில் நாம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசுவதற்காகக் கூடியிருக்கிறோம். ஒரு மணி நேரத்துக்கு முன்பு ராணுவ உளவுத் துறையிலிருந்து எனக்கு ஒரு செய்தி ரகசியமாய் அனுப்பி வைக்கப்பட்டது. அந்தச் செய்தியை இப்போது நாம் பகிர்ந்து கொள்ளப் போகிறோம்...'' சொன்ன வினோத் ஷர்மா தன் கையோடு கொண்டு போயிருந்த ப்ரீப்கேஸைத் திறந்து அரக்கு சீல் வைத்த ஒரு கவரை எடுத்தார். பிரித்தார். அந்த ஃபேக்ஸ் கடிதம் வெளிப்பட்டது.

எல்லா அதிகாரிகளையும் ஒரு முறை பார்த்துவிட்டு ஆங்கிலத்தில் இருந்த அந்தக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.



''ஒரு வல்லரசு நாடு தயாரித்து இருக்கும் 'பேரடைஸ் கீ' என்ற அதி நவீனப் பயங்கரக் குண்டு இந்தியா - பாகிஸ்தான் போரில் பயன்படுத்தலாம் என்பது உளவுத் துறைக்குக் கிடைத்துள்ள செய்திகளில் முக்கியமானது. இதனால் இந்தியாவுக்குப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்கு நட்பு நாடாக விளங்கும் அந்த வல்லரசு 'பேரடைஸ் கீ' என்று சொல்லப்படும் நவீனப் பயங்கரக் குண்டுகள் சிலவற்றை ஒரு கப்பலில் வைத்து அனுப்பியுள்ளது. அந்தக் கப்பல் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கும் இடைப்பட்ட 'பே ஆஃப் ஸாகர்' என்ற கடற்பகுதியில் நிலை நிறுத்தப்படும். போர் மூண்டால அந்த வெடி குண்டுகள் 'டோமாஹாக்' ஏவுகணைகள் மூலம் இந்திய நகரங்களின் மேல் வீசப்படும். இந்த வகையான வெடிகுண்டுகள் அணு குண்டுகளை விட வீரியம் மிகுந்தவை. பெரிய அளவில் நாசம் விளைவிப்பவை. மனித உயிர்கள் லட்சக் கணக்கில் பலியாவதைத் தடுக்க முடியாது.''

வினோத் ஷர்மா கடிதத்தினின்றும் நிமிர்ந்து எல்லா அதிகாரிகளையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தொடர்ந்தார்.

''இந்த 'பேரடைஸ் கீ' எனப்படும் வெடிகுண்டுகளைப் பற்றிய தொழில் நுட்ப உண்மைகள் இப்போது கிடைத்துள்ளன. நவீனமயமான ஹைடெக் போர்க்களத்தில் வெற்றி பெறப் புதிய புதிய கருவிகள், ஆயுதங்கள், வெடிகுண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய புதிய கண்டுபிடிப்பு களில் ஒன்றுதான் இந்த 'பேரடைஸ் கீ'. இதன் மற்றப் பெயர்கள் 'லைட்னிங் பாம்', 'மற்றும் 'இ-பாம்'. யுத்த களத்தில் எதிரியுடன் நேருக்கு நேர் நின்று போர் புரிந்தது அந்தக் கால நிகழ்ச்சியாகி விட்டது. ஏர்கண்டிஷன் அறையில் இருந்து

கொண்டே தேநீர் பருகியபடி கம்ப்யூட்டர் மற்றும் செயற்கைக் கோள்களின் உதவியுடன் ஏவுகணைகளை வீசிப் போர் புரியும் நவீன காலமாக இந்தக் காலம் உள்ளது. ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்கள் கம்ப்யூட்டர்கள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன. எனவே ஆயுதங்களை இயக்கும் கருவியாகச் செயல்படும் கம்ப்யூட்டர் இணைப்பை அழிக்கும் ஆயுதமாக இந்த 'பேரடைஸ் கீ' எனப்படும் லைட்னிங் பாம் வல்லரசு நாடால் தயாரிக்கப்பட்டுப் பாகிஸ்தான் நாட்டுக்கு சப்ளை செய்யப்பட்டுள்ளது.''

விமானப் படை அதிகாரிகள் திகைத்த முகங்களோடு வினோத் ஷர்மாவைப் பார்க்க, அவர் சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டுப் பேச்சைத் தொடர்ந்தார். ''இந்த 'பேரடைஸ் கீ' எனப்படும் லைட்னிங் பாம் வெடிக்கும் போது அதில் இருந்து அதிக சக்தி வாய்ந்த 'மைக்ரோ வேவ்' ஒளிக் கற்றைகள் வெளிப்படும். இந்த மைக்ரோ வேவ் ஒளிக் கற்றைகள் சுமார் 20 லட்சம் வாட்ஸ் மின்சக்தி கொண்டதாக இருக்கும். ஒரு லைட்னிங் பாம் சக்தி வாய்ந்த பத்து அணுகுண்டுகளுக்குச் சமமானது. இந்த பாம் வெடிக்கும் போது அதன் சத்தத்தையோ அது வெளியிடும் வெப்பத்தையோ நம்மால் உணர முடியாது. லைட்னிங் பாம் வெடித்ததும் அதே விநாடி பல கிலோ மீட்டர் தூரத்துக்கு அதனுடைய சக்தி வாய்ந்த மைக்ரோ வேவ் அலைகள் பரவி அந்த இடத்தில் உள்ள எல்லா எலக்ட்ரானிக் சிஸ்டங்களையும் செயலற்றதாக்கி விடும். இந்த மைக்ரோ வேவ் அலைகள் செல்லும் பாதையில் மனிதர்கள் இருந்தால் அவர்களின் உடம்புகளிலும் மின்சாரத்தைப் பாய வைத்து மரணத்தை உண்டாக்கி உடம்புகளைக் கரிக்கட்டைகளாக மாற்றிவிடும்.''



க்ரூப் காப்டன் ரஞ்சித்குமார் முகத்தில் வெள்ளமாய் வியர்வை.

''இப்படியும் ஒரு நாசகாரக் குண்டா?''

''வல்லரசு நாடுகளிடம் பணமும் இருக்கிறது. சிறந்த அறிவியல் நுட்பமும் இருக்கிறது. இப்படிப்பட்ட நாசகாரக் குண்டுகளைத் தயாரிக்க என்ன தடை.. நம்மிடம் அணுகுண்டுகள் இருக்கிறது. 500 கிலோ மீட்டரிலிருந்து 2500 கிலோ மீட்டர் தூரம் வரை எதிரிகளின் இலக்குகளைப் பறந்து சென்று தாக்கும் ஏவுகணைகள் உள்ளன. இருந்தாலும் நான்கைந்து லைட்னிங் பாம்ப் இந்தியாவுக்குள் போடப்பட்டு அவை வெடிக்குமானால் நம்முடைய எல்லா ராணுவக் கேந்திரங்களும் முடமாகிப் போகும். ஏவுகணைகளை இயக்கும் கம்ப்யூட்டர் கருவிகளும், அணுகுண்டுகளை வெடிக்க வைக்கும் கம்ப்யூட்டர்களும் ஊமையாகிப் போகும்.''

விமானப்படை அதிகாரிகள் சிலைகளாய்ச் சமைந்து போய் இறுகிய முகங்களோடு உட்கார்ந்திருக்க, வினோத் ஷர்மா தன் கழுத்து டையை இறுக்கி விட்டுக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தார்.

''லைட்னிங் பாம்கள் கம்ப்யூட்டர் கருவிகள் மட்டுமின்றி இருதய நோயாளிகள் உடலில் பொருத்தப்பட்டுள்ள பேஸ் மேக்கர் கருவி ஆஸ்பத்திரிகளில் பயன்படுத்தப்படும் அறுவைச் சிகிச்சைக்கான எலக்ட்ரானிக் உபகரணங்கள் போன்றவற்றையும் சேதப்படுத்தி விடும். அதே போல் லைட்னிங் பாமிலிருந்து வெளிப்பட்ட ஒரு மைக்ரோ வேவ் கதிர் பறந்து கொண்டிருக்கும் ஒரு விமானத்தைத் தாக்கினால் விமானத்தில் உள்ள எல்லாக் கருவிகளும் முடமாக்கப்பட்டு விமானம் கட்டுப்பாட்டை இழந்து ஒரு பொம்மை விமானமாக மாறித் தரையில் விழுந்து நொறுங்கும் அபாயமும் உண்டு.''

ஏர் கமாண்டர் பிரசன்னா, வினோத் ஷர்மாவின் பேச்சில் குறுக்கிட்டார்.

''இதுமாதிரித் தயாரிக்கப்படும் குண்டுகள் போர் விதி முறைகளுக்கு எதிரானவை அல்லவா?''

''நிச்சயமாய்..''

''அப்படியானால் இந்த லைட்னிங் பாம் என்று சொல்லப்படும் 'பேரடைஸ் கீ'யைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டு போகலாமே!''

''கொண்டு போகலாம்... ஆனால் அதை வல்லரசு நாடு மறுக்கும். அப்படியொரு வெடிகுண்டை நாங்கள் தயார் செய்யவே இல்லை யென்று சாதித்து ஐ.நா. சபையின் வாயை அடைத்துவிடுவார்கள். சோதனை போடவும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இன்றைக்கு ஐ.நா. சபை என்பது வெறும் விவாத அரங்கு. கிராமங்களில் உள்ள ஆலமரத்தடிப் பஞ்சாயத்து அமைப்பைப் போன்றது. வல்லரசு நாடுகளால் அதனுடைய பற்கள் பிடுங்கப்பட்டுப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. வல்லரசு நாடுகள் எதைச் சொல்கிறதோ அதற்குத் தலையாட்டும் தஞ்சாவூர்ப் பொம்மைதான் ஐ.நா. சபை..''

விங் கமேண்டர் சோப்ரா ஆவேசக் குரலில் இடைமறித்தார்.

''ஐ.நா. சபையை நம்பிப் பயனில்லை என்று சொல்லி விட்டீர்கள்.. சரி! போர் மூண்டு விட்டால் 'பேரடைஸ் கீ' எனப்படும் லைட்னிங் பாமிலிருந்து இந்தியாவை நாம் எப்படிக் காப்பாற்றப் போகிறோம்..''

''அதற்கும் ஒரு வழி இருக்கிறது. அதைப்பற்றிப் பேசத்தான் இப்போது நாம் இங்கே கூடியிருக்கிறோம்.''



எல்லா அதிகாரிகளும் நிமிர்ந்தார்கள்.

''என்ன வழி...?''

''முதலில் இந்த வீடியோ காட்சியைப் பாருங்கள்.''

சொன்ன வினோத் ஷர்மா அறையின் மூலைக்குப் போய் ஒரு ஸ்விட்சைத் தட்டி வெளிச்சத்தைக் காணாமல் போக்கிவிட்டு, மேஜையின் மேல் இருந்த அந்தச் சிறிய புரொஜக்டரை இயக்கினார். அது 'ர்ர்ர்'ரென்று சுழன்றது. அடுத்த சில விநாடிகளில் எதிரில் இருந்த திரையில் அந்தப் படம் விழுந்தது.

முதலில் சிறியதாய் விழுந்து அது ஜூம் லென்ஸின் உதவியால் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பெரிதாகி அந்த வீடியோ திரையை அடைத்துக் கொண்டது.

வினோத் ஷர்மா சொன்னார்.

''இதுதான் 'பேரடைஸ் கீ' என்று சொல்லப்படுகிற லைட்னிங் பாம். இது தயாரிக்கப்பட்ட ஆண்டு 1999. டெக்னிகல் விபரங்கள் சரியாகத் தெரியவில்லை. இதை உருவாக்கிய விஞ்ஞானிகள் இரண்டு பேர். அவர்கள் யார் என்பதும் ரகசியமாய் வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த 'பேரடைஸ் கீ' லைட்னிங் பாம்களை உருவாக்கிக் கொடுத்த அந்த இரண்டு விஞ்ஞானிகளுக்கும் தலா நூறு கோடி டாலர் பணம் பரிசாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், அவர்களுக்கு அமெரிக்காவின் கிரீட் லேண்ட் பகுதியில் உள்ள இரண்டு தீவுகள் உரிமையாக்கப்பட்டுள்ளன. அந்த தீவுகளின் பெயர்கள் என்ன என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் நமது ராணுவ உளவுத் துறை முழு மூச்சாய் ஈடுபட்டுள்ளது.''

க்ரூப் காப்டன் மறுபடியும் குறுக்கிட்டார்.

"ஸார்..! நான் ஒரு கருத்தைச் சொல்லலாமா?"

"சொல்லுங்கள்."

"இந்த 'லைட்னிங் பாம்' விஷயம் ஒரு கப்ஸாவாய் ஏன் இருக்கக் கூடாது?"

"கப்ஸா..?"

"எஸ்..."

"இப்படியொரு பொய்யைச் சொல்வதால் யார்க்கு என்ன லாபம்?"

"அந்த வல்லரசும் பாகிஸ்தானும் நம்மைப் பயப்படுத்துவதற்காக இப்படியொரு வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கலாமே!"

"இது வதந்தி கிடையாது என்பதை ராணுவ உளவுத் துறை தீர்மானமாய்ச் சொல்கிறது... பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானத்துக்கும் இடைப்பட்ட கடல் பரப்பான பே ஆஃப் சாகரில் அடுத்த வாரம் ஒரு கப்பல் நிலை நிறுத்தப்படுமாம். பார்வைக்குப் பயணிகள் கப்பல் போல் காட்சியளிக்கும் அது உண்மையிலேயே ஒரு போர்க் கப்பல். அந்தக் கப்பலின் பெயர் ஸீ - ரோஸ். அந்த ஸீ-ரோஸ் கப்பலில்தான் லைட்னிங் பாம்களைத் தாங்கிய ஏவுகணைகள் இந்திய நகரங்களை நோக்கிப் பாயப் போகிறது. இந்த செய்தி நூறு சதவீத உண்மை. இதை அலட்சியப்படுத்தினால் போரில் நமக்கு வெற்றி கிடைப்பது சிரமம் என்று அடித்துச் சொல்லியிருக்கிறது உளவுத் துறை.



வினோத் ஷர்மா சொல்லி முடித்ததும் அதிகாரிகள் நடுவில் இரண்டு நிமிஷங்களுக்கு மௌனம் நிலவியது.

ப்ரசன்னா கேட்டார்.

"சரி..! போர் மூண்டால் இந்தியாவை லைட்னிங் பாம்களிலிருந்து காப்பாற்ற ஒரு வழி இருக்கிறது என்று சொன்னீர்கள் ஸார்."

"எஸ்.."

"அது என்ன வழி?"

"கொஞ்சம் அபாயகரமான வழி!" சொன்ன வினோத் ஷர்மா அறையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். எல்லா அதிகாரிகளையும் பார்த்துக் கொண்டே மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

## 3

வகுளாம்பரன் பைக்கில் ஒரு புயலாய்ப் பயணித்து வீடு போய்ச் சேர்ந்தபோது அவருடைய மனைவி அபிராமி வாசல் படிகளில் பரிதவிப்போடு நின்றிருந்தாள். அவளுடைய பெரிய கண்களில் மஹா கலவரம். முகமும் கழுத்தும் வியர்வையில் இருந்தது. பைக்கை அவசர அவசரமாய் ஸ்டேண்டிற்கு நிறுத்திவிட்டு மனைவியை நெருங்கினார்.

"என்ன அபிராமி..?"

அபிராமி சேலைத் தலைப்பால் வியர்வையை ஒற்றிக் கொண்டு கணவனை ஏறிட்டபடி குரலைத் தாழ்த்திக் கொண்டாள்.

''என்னங்க.. நான் சமையல் கட்டுக்குள்ளே வேலையாய் இருந்தபோது மாடியில் இருக்கிற உங்க அறையிலிருந்து ஏதோ சத்தம் கேட்டது. நான் சமையல் வேலையை அப்படியே போட்டுட்டு மாடிக்குப் போனேன். சத்தம் வராமே மெல்ல நடந்து போய் உங்க அறையை எட்டிப் பார்த்தேன். எனக்கு உடம்பே ஆடிப் போச்சு. ரூமுக்குள்ளே ஒரு பொண்ணு உங்க பர்சனல் பீரோவைத் திறந்து வெச்சுக்கிட்டு எதையோ தேடிக்கிட்டு இருந்தா.. நான் உடனே கோபமாகி, 'ஏய்... யார் நீ?'ன்னு கத்திக்கிட்டு அவளுக்குப் பக்கத்தில் போனேன். அவ மின்னல் வேகத்துல திரும்பி என் கழுத்துப் பக்கமா தன்னோட கையை வீசினாள். தலைக்குள் ஏதோ பிரளயம் நடந்த மாதிரியான உணர்வு. அப்படியே சுவரோரமாக மயங்கி விழுந்துட்டேன். மறுபடியும் எனக்குச் சுய நினைவு வந்து கண் விழிச்ச போது அந்தப் பொண்ணு அறைக்குள்ளே இல்லை. பீரோ அலமாரியெல்லாம் திறந்து கிடந்தது. பீரோவுக்குள்ளே இருந்த எல்லாத்தையும் வெளியே எடுத்துப் போட்டிருந்தா..''

''மை குட்னஸ்..'' வகுளாம்பரன் நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தவராய் வீட்டுக்குள்ளே ஓடினார். மாடிப்படிகளில் தாவி ஏறி வராந்தாவில் ஓடித் தன்னுடைய அறைக்குள் நுழைந்தார்.

பீரோ அகலமாய்த் திறந்து வைக்கப்பட்டு இருக்க... துணிமணிகளும் ஃபைல்களும் அறை பூராவும் இறைந்து கிடந்தன. அலமாரியில் இருந்த புத்தகங்கள் பாதி விரிந்த நிலையில் குப்புற விழுந்து கிடந்தன. அவருக்குப் பின்னாலேயே ஓடி வந்த அபிராமி சொன்னாள்.

''பணம், நகையெல்லாம் அப்படியே இருக்குங்க. அந்தப் பொண்ணு எதை எடுத்துட்டுப் போறதுக்காக வீட்டுக்கு வந்தான்னு தெரியலை.''



''அந்தப் பொண்ணு எப்படி யிருந்தா?''

''பார்க்க காலேஜ் பொண்ணு மாதிரி இருந்தா. மஞ்சள் கலர் சுடிதார்..''

''ஏதாவது அடையாளம்?''

''அவளைச் சரியா பார்க்கறதுக்குள்ளே என் கழுத்துல விழுந்த அடியால அப்படியே சுருண்டு விழுந்துட்டேன்.''

''வேலைக்காரி இன்னிக்கு வரலையா?''

''ரெண்டு நாள் அவ லீவு.''

''எவளோ ஒருத்தி வீட்டுக்குள்ளே நுழைஞ்சு மாடியில் இருக்கிற என்னோட ரூமுக்குப் போகிறவரைக்கும் நீ என்ன பண்ணிட்டிருந்தே?''

''சமையல் கட்டுல வேலையிருந்தது. வாசல் கதவைத் தாழ் போடாமே விட்டது என்னோட தப்புத்தான்.''

''உனக்குக் கொஞ்சம் கூடப் பொறுப்பே கிடையாது. வாசல் கதவை உள் பக்கமா தாழ் போட்டு வைக்க வேண்டாம்..?''

''தப்புதாங்க.. நல்ல வேளையா பணமோ நகையோ காணாமே போகலை.''

வகுளாம்பரன் பீரோவுக்குப் பக்கத்தில் வந்தார். பீரோவின் கைப்பிடியோடு சேர்த்து லாக்கர் லீவர் உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே ஒரு பொருள் கூட இல்லை. எல்லாம் கீழே இறைக்கப் பட்டிருந்தது. வகுளாம்பரன் அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து தாறுமாறாய்க் கிடந்த பொருள்களைக் கலைத்து எதையோ தேட ஆரம்பித்தார். அபிராமி கேட்டாள்.

''எதைத் தேடறீங்க?''

"என்னோட டைரியை.."

"பச்சைக் கலர்ல இருக்குமே... அந்த டைரியையா?"

"ஆமா.."

அபிராமியும் சேர்ந்து தேட ஆரம்பித்தாள். ஏதேதோ கைக்குக் கிடைத்தது. அந்தப் பச்சை நிற டைரி கிடைக்கவில்லை.

இருவரும் களைத்துப் போய் நிமிர்ந்தார்கள்.

"அது ரொம்பவும் முக்கியமான டைரியாங்க?"

"ஆமா.. டிபார்ட்மெண்ட் டைரி.. சில முக்கியமான விஷயங்களை அதுல நோட் பண்ணி வெச்சிருந்தேன்."

"அந்தப் பொண்ணுதான் டைரியை எடுத்துக்கிட்டுப் போயிருக்கணும்..! இப்ப என்னங்க பண்றது.. போலீஸ் நாயை வரவழைச்சு ஸ்மெல் பண்ணி ஓட வெச்சா ஏதாவது பலன் கிடைக்கலாங்க.. மொதல்ல ஃபாரன்ஸிக் டிபார்ட்மெண்டுக்கும் டாக் ட்ரெய்னர்க்கும் போன் பண்ணுங்க.. பீரோவை உடைச்சிருக்கா.. ஃபிங்கர் பிரிண்ட்ஸ் கிடைக்கலாம்.."

வகுளாம்பரன் தலையை ஆட்டினார்.

"வேண்டாம் அபிராமி."

"என்ன வேண்டாம்..?"

"போலீஸ் நடவடிக்கைகள் எதுவும் வேண்டாம்."

அபிராமி முகம் மாறினாள்.

"என்னங்க இது..! நீங்களே ஒரு போலீஸ் மேன். பட்டப் பகல்ல ஒரு பெண் தைரியமா நம்ம வீட்டுக்குள்ளே நுழைஞ்சு



பீரோவை உடைச்சு என்னையும் தாக்கிட்டு உங்க டிபார்ட்மெண்ட் சம்பந்தப்பட்ட டைரியை எடுத்துக்கிட்டுப் போயிருக்கா. போலீஸ் நடவடிக்கைகள் வேண்டாம்னு சொல்றீங்க.. அந்தப் பொண்ணு யார்னு தெரிய வேண்டாமா...?"

"இதோ பார் அபிராமி..! அந்தப் பெண் எடுத்துக்கிட்டுப் போயிருக்கிற டைரி ஒரு முக்கியமான டைரி. அதை யாரோ எடுத்துட்டுப் போயிட்டாங்கன்னு டிபார்ட்மெண்ட்டுக்குத் தெரிஞ்சா என்னோட சர்வீஸ் ரிக்கார்ட்ஸ்ல ஒரு ப்ளாக் மார்க் வெச்சுடுவாங்க.. போலீஸ் டிபார்ட்மெண்ட்ல ஒரு ப்ளாக் மார்க் வாங்கினால் பிரமோஷன் அஞ்சு வருஷம் தள்ளிப் போகும்.."

"சரி! அந்தப் பொண்ணை எப்படிக் கண்டு பிடிக்கப் போறீங்க?"

"தனிப்பட்ட முறையில் நானே முயற்சி எடுத்துக் கண்டு பிடிக்கப் போறேன். இப்போதைக்கு இந்த விஷயம் நமக்குள்ளே இருக்கட்டும். வெளியே வேற யார்க்கும் தெரிய வேண்டாம்.."

வகுளாம்பரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வீட்டு வாசலில் அந்த வாகன இரைச்சல் கேட்டது. இருவரும் குழப்ப முகங்களோடு வேக வேகமாய் மாடி ஜன்னலை நெருங்கி வீட்டு வாசலை எட்டிப் பார்த்தார்கள்.

ஒரு போலீஸ் ஜீப் நின்றிருந்தது.

"என்னங்க ஜீப் வந்திருக்கு...? நீங்க எந்த போலீஸ் அதிகாரியையாவது வரச் சொல்லியிருந்தீங்களா?"

"இல்லையே.."

இருவரும் திகைத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஜீப்பிலிருந்து ஒரு இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் இறங்கி போர்டிகோ படிகளில் ஏறி உள்ளே வந்து கொண்டிருந்தார்கள். வகுளாம்பரன் அறையை விட்டு வெளியேறிப் படிகளில் வேகமாய் இறங்கி அந்த இன்ஸ்பெக்டரை எதிர் கொண்டார். அவருடைய சட்டையில் குத்தியிருந்த நேம் பேட்ச் அவரை ராம்குமார் என்றது.

வகுளாம்பரன் அந்த ராம்குமாரை ஏறிட்டார்.

''எஸ்...''

ராம்குமார் அட்டென்ஷனுக்கு வந்து சல்யூட் ஒன்றைப் போட்டுவிட்டு மெல்லிய குரலில் சொன்னார்:

''ஸார்....! உங்க வீட்ல திருட்டுப் போயிட்டதாக போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து எனக்குத் தகவல் வந்தது. அதுதான் உடனே புறப்பட்டு வந்தேன்.''

வகுளாம்பரன் முகம் மாறியது.

''கண்ட்ரோல் ரூமிலிருந்து உங்களுக்குத் தகவல் வந்ததா?''

''ஆமா ஸார்..''

''தகவல் கொடுத்தது யாரு..?''

''ஏ.சி.ஓ. ஜார்ஜ் ஸார்..''

வகுளாம்பரன் உடனே தன்னிடமிருந்த செல்போனை உயிர்ப்பித்து கண்ட்ரோல் ரூமைத் தொடர்பு கொண்டார்.

''மிஸ்டர் ஜார்ஜ்..''

''ஸார்..''



''என் வீட்ல திருட்டுப் போயிட்டதா உங்களுக்குத் தகவல் கொடுத்தது யாரு?''

''ஒரு போன் வந்தது சார்..''

''போன்ல பேசினது யாரு?''

''ஒரு பெண் ஸார்.. பேரு துர்கா பரமேஸ்வரி. உங்களுக்குப் பக்கத்து வீட்டுப் பெண்ணாமே..''

''பேர் என்ன சொன்னீங்க..? துர்கா பரமேஸ்வரியா?''

''ஆமா... ஸார்..''

''பக்கத்து வீட்ல அப்படி யாரும் கிடையாதே..''

''அப்படீன்னா உங்க வீட்ல திருட்டு ஏதும் நடக்கலையா ஸார்?''

''இல்லை... அப்படித் திருட்டு நடந்திருந்தா நானே நம்ம டிபார்ட்மெண்ட்டுக்குத் தகவல் கொடுத்து இருப்பேனே..''

''ஸாரி ஸார்... யாரோ விளையாடியிருக்காங்க..''

''இந்தப் பிரச்சனையை நான் ஹேண்டில் பண்ணிக்கறேன்.. இனிமே ஏதாவது போன் வந்தா என்னை காண்டாக்ட் பண்ணுங்க ஜார்ஜ்.''

''எஸ்..ஸார்..''

வகுளாம்பரன் செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு எதிரில் நின்றிருந்த இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

''இங்கே எந்த திருட்டும் நடக்கலை. யாரோ கண்ட்ரோல் ரூமுக்குப் பொய்த் தகவல் கொடுத்து இருக்காங்க.. நீங்க புறப்படுங்க.''

ராம்குமார் சல்யூட் அடித்துவிட்டுக் கிளம்பிப் போய்விட, அபிராமி கலக்கமாய்ப் பக்கத்தில் வந்து நின்றாள்.

''யார்ங்க அந்த துர்கா பரமேஸ்வரி?''

வகுளாம்பரன் கோபமாய்த் தன் தாடையைத் தேய்த்தார்.

''கண்டுபிடிக்கிறேன்..! இன்னும் 24 மணி நேரத்துக்குள்ளே அவ யார்ங்கிறதைக் கண்டுபிடிக்கிறேன்!''

## 4

வினோத் ஷர்மா விமானப் படை அதிகாரிகளைப் பார்த்தபடி மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர் மூண்டால் இந்தியாவை 'பேரடைஸ் கீ' எனப்படும் லைட்னிங் பாம்களிடமிருந்து காப்பாற்ற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது அபாயகரமான வழி என்றாலும் அதை விட்டால் வேறு வழி கிடையாது.''

எல்லோரும் வைத்த கண் எடுக்காமல் அவரையே பார்க்க, வினோத் ஷர்மா தொடர்ந்தார்.

''போர் மூண்டு பாகிஸ்தான் அந்த லைட்னிங் பாம்களை இந்திய நகரங்களை நோக்கிப் பிரயோகிக்கும் முன்பாக அவைகளை நாம் பே ஆஃப் சாகர் கடல் பகுதிக்குள்ளேயே அழித்துவிட வேண்டும்.''

''எ... எப்படி?''

''ஆறு மனித வெடிகுண்டுகளை அனுப்பி..''



''எஸ்.. இந்தியாவின் மீது வெறித்தனமாய்ப் பாசம் கொண்ட நிறைய வீரர்கள் இந்திய விமானப் படையின் பேரா ட்ரூப் ஸ்க்வாடில் உண்டு. நாட்டுக்காக உயிரைக் கொடுக்கத் தயாரா என்று நாம் கேட்டு அந்தப் பேச்சை முடிப்பதற்கு முன்பே உயிரைக் கொடுக்கக் கூடியவர்கள் அவர்கள். அவர்களில் ஆறு பேரை மட்டும் தேர்ந்து எடுத்து ஏரோஸ்கை விமானத்தில் பே ஆஃப் சாகர் கடல் பகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விமானம் அந்த ஸீரோஸ் கப்பலின் மேல் பறக்கும் போது ஆறு வீரர்களும் ஆறு மூட்டைகளாய் மாறிக் கப்பலில் விழுந்து வெடித்துச் சிதற வேண்டும். பாகிஸ்தான் இந்த விஷயத்தை வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தாது. ஏனென்றால் பே ஆஃப் சாகரில் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிற ஸீ-ரோஸ் கப்பலும் அதற்குள் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பேரடைஸ் கீ லைட்னிங் பாம்களும் போர் விதிகளுக்கு எதிரானவை. எந்த ஒரு நாடும் நாசகார ஆயுதங்களை வைத்துக் கொண்டு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ போர் புரியக் கூடாது என்பது சர்வ தேசப் பாதுகாப்பு கவுன்ஸில் விதி. மீறி அப்படிப்பட்ட ஆயுதங்களை உபயோகித்தால் அந்த நாட்டின் மேல் கடுமையான பொருளாதாரக் கட்டுப்பாடுகள் வரும். எனவே திருடனுக்குத் தேள் கொட்டியது போல் கப்பலோடு அழிந்து போய்விட்ட லைட்னிங் பாம்களைப் பற்றிப் பாகிஸ்தான் மூச்சு விடாது.''

''ஒரு சந்தேகம்..'' க்ரூப் காப்டன் கையை உயர்த்தினார்.

''என்ன..?''

''நம் மனித வெடிகுண்டுகள் பயணம் செய்யும் 'ஏரோஸ்கை' விமானம் பாகிஸ்தானின் ராணுவ ரேடார்களுக்குச் சிக்காதா?''

"சிக்காது. 'ஏரோ ஸ்கை' விமானங்கள் எல்லாமே ரேடார் டி-ஆக்டிவேஷன் பெயிண்ட் பூச்சில் உருவானது. மணிக்கு 1500 மைல் வேகத்தில் பறக்கும் ஏரோ ஸ்கை விமானம் நம் இந்திய எல்லையில் இருக்கும் 'மூராங்க்' ஏர்போர்ட்டிலிருந்து கிளம்பி நாற்பது நிமிஷ நேரத்துக்குள் பே ஆஃப் சாகரைத் தொட்டு லீ ரோஸ் கப்பலின் மீது மனித வெடிகுண்டுகளை உதிர்த்து விட்டு மூராங்க் ஏர்போர்ட்டுக்குப் பத்திரமாய்த் திரும்பி விடும்."

ப்ரசன்னா குறுக்கிட்டார்.

"லைட்னிங் பாம்கள் கப்பலோடு சேர்ந்து அழிக்கப்பட்டதை பாகிஸ்தான் வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தாது என்று சொன்னீர்கள் ஸார்..."

"ஆமாம்.."

"ஆனால் கப்பலோடு சேர்ந்து லைட்னிங் பாம்கள் வெடிக்கும் போது பாகிஸ்தான் அழிந்து போய்விடும் அபாயம் இல்லையா?"

"இல்லை."

"எப்படி?"

"லைட்னிங் பாம்கள் கடல் பகுதியில் வெடிக்கும்போது அதிலிருந்து வெளிப்படும் மைக்ரோ வேவ் ஒளிக் கற்றைகளை வலுவில்லாமல் செய்து விடும். லைட்னிங் பாம்களை நிலப் பரப்பில் வைத்து இருப்பதை விட நீர்ப்பரப்பில் வைத்து இருப்பதுதான் பாதுகாப்பானது. எனவே நம் மனித வெடி குண்டுகள் லைட்னிங் பாம்களை அழித்தால் பாகிஸ்தானுக்கோ, அங்கே வாழ்கின்ற மக்களுக்கோ எந்தப் பாதிப்பும் நேராது."



"இந்த திட்டம் சாத்தியம்தானா?"

"சாத்தியம்தான்.."

"திட்டம் என்றைக்கு நடைபெற உள்ளது?"

"இன்னும் இரண்டு வார காலத்துக்குள். அதாவது அடுத்த மாதம் பத்தாம் தேதி இரவு."

"தேசத்தின் மேல் என்னதான் பாசமும் வெறியும் இருந்தாலும் மனித வெடிகுண்டுகளாக மாற யார்க்குமே தயக்கம் இருக்கும். ஆறு பேர் கிடைப்பார்களா?"

வினோத் ஷர்மா புன்னகைத்தபடி மேஜையின் மேல் இருந்த கம்ப்யூட்டரை உயிர்ப்புக்குக் கொண்டு வந்து கீ போர்டில் சில பட்டன்களைத் தட்டினார். சொன்னார்.

"எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் மனித வெடி குண்டுகளாக மாறத் தயாராக இருக்கிறோம்' என்று 'பேரா' ட்ரூப்பைச் சேர்ந்த 22 பேர் உறுதி மொழி கொடுத்து இருக்கிறார்கள். அவர்களில் ஆறு பேரை நான் ஏற்கெனவே தேர்ந்து எடுத்து விட்டேன். அந்த ஆறு பேர் யார் யார் என்பதை இந்தக் கம்ப்யூட்டரின் மானிட்டர் திரை உங்களுக்கு இப்போது காட்டும்."

எல்லோரும் கம்ப்யூட்டரின் மானிட்டர் திரையையே பார்த்துக் கொண்டிருக்க - முதலில் ஒரு சீக்கிய இளைஞனின் முகம் உற்பத்தியாயிற்று. பக்கத்திலேயே அவனைப் பற்றிய விபரங்கள் வரி வரியாய்ப் பிறந்தது.

1. பெயர் : ஜோத் சிங். வயது: 23. உத்ராஞ்சல் மாநிலம். பேரா ட்ரூப்பில் A ஸ்க்வாட் லீடர். ஒரு அரசு விழாவின் போது அமைச்சர் ஒருவர் தேசிய கீதம் பாடலின் போது தன்னுடைய

முதுகைச் சொறிந்து கொண்டார் என்பதற்காக நிகழ்ச்சி முடிந்ததும் அவரைப் போய்த் திட்டியவன். அமைச்சர் கோபப்படாமல் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது ஹைலைட்.

ஜோத்சிங்கின் முகம் மறைந்ததும் இன்னொரு இளை ஞனின் முகம் கம்ப்யூட்டர் திரையில் ஜனித்தது.

2. பெயர்: ஹரி கிருஷ்ணன். வயது 24. கர்நாடக மாநிலம். பேரா ட்ரூபின் B ஸ்க்வாட் லெப்டினன்ட். கல்லூரியில் படிக்கும் போதே 'பாரத மாதா' என்ற தலைப்பில் ஒரு கவிதைப் புத்தகம் எழுதி சாகித்ய அகாடமி பரிசு வாங்கியவன். ராணுவத்தில் சேர வேண்டும் என்பதற்காகக் கிடைத்த வேறு ஒரு அரசு வேலையை வேண்டாம் என்று சொன்னவன். ஹரிகிருஷ்ணன் மறைந்ததும் தலை முடியை ஒட்ட வெட்டிய இளைஞனின் முகம் பார்வைக்குக் கிடைத்தது.

3. பெயர்: அரவிந்தமேனன். வயது: 24. கேரள மாநிலம். பேரா ட்ரூப்பின் D ஸ்க்வாட் லீடர். சிறந்த அத்லெடிக் வீரர். காஷ்மீர் - டு - கன்யாகுமரி வரை உள்ள இரண்டாயிரத்துச் சொச்ச கிலோ மீட்டர் தூரத்தைக் கால்களில் ஷூ அணியாமல் ஓடியவன். தேசிய கீதம் பாடினாலே இவனுடைய உடம்பில் உள்ள நரம்புகள் முறுக்கேறிக் கொள்ளும்.

அரவிந்த மேனனின் முகம் காணாமல் போனதும் சதைப் பிடிப்பான முகத்தோடு இன்னொரு இளைஞன் கம்ப்யூட்டர் திரையில் தெரிந்தான்.

4. பெயர்: அல்போன்ஸ் டேவிட். வயது 25. மஹாராஷ்டிர மாநிலம். பேரா ட்ரூப்பின் F ஸ்க்வாட் லீடர். பரம்பரை பரம்பரையாய் ராணுவக் குடும்பம். தாத்தா மேஜராய் இருந்தவர். அப்பா பிரிகேடியர்.



அல்போன்ஸ் டேவிட்டுக்குப் பிறகு கம்ப்யூட்டர் திரையில் இன்னொரு இளைஞனின் சிரித்த முகம் தெரிந்தது.

5. பெயர்: கருப்புசாமி. வயது: 27. தமிழ்நாடு. பேரா ட்ரூப்பின் G ஸ்க்வாட் சீனியர் லீடர். அதிகம் படிக்காத கிராமத்து இளைஞன். மார்பிலும் முதுகிலும் பெரிய அளவில் தேசியக் கொடியைப் பச்சை குத்தியிருப்பவன். ஜனகன மன பாடலை ஒழுங்காகப் பாடாத ஒவ்வொரு இந்தியனுக்கும் மூன்று மாதம் ஜெயில் தண்டனை விதிக்க வேண்டும் என்று கோர்ட்டில் வழக்குப் போட்டவன்.

கடைசியில் கம்ப்யூட்டரில் தோன்றிய இளைஞன் சல்யூட் அடித்தபடி தெரிந்தான்.

6. பெயர்: சைலேஷ்குமார். வயது 25. டெல்லி மருத்துவப் படிப்பு படிக்க ஆரம்பித்து இடையில் அது பிடிக்காமல் ராணுவ விமானப் படையில் சேர்ந்தவன். இந்த நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று துடித்துக் கொண்டு இருப்பவன்.

ஏர் வைஸ் மார்ஷல் வினோத் ஷர்மா கம்ப்யூட்டரை அணைத்துவிட்டுத் தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த எல்லா அதிகாரிகளையும் பார்த்தார்.

"இப்போது நீங்கள் பார்த்த இந்த ஆறு பேரும்தான் வருகிற பத்தாம் தேதி மனித வெடிகுண்டுகளாக மாறி பே ஆஃப் சாகர்க்குப் பறந்து போய் ஸீ-ரோஸ் கப்பலையும் அதில் நிர்மாணித்து வைக்கப்பட்டு இருக்கும் லைட்னிங் பாம் களையும் தகர்க்கப் போகிறார்கள்."

க்ரூப் காப்டன் ரஞ்சித்குமார் தயக்கமாய் எழுந்து நின்றார். "ஸார்..! நான் ஒரு கருத்தைச் சொல்லலாமா?"

''தாராளமாய்..! நம்முடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளத்தானே முக்கியமான அதிகாரிகளாகிய நாம் கூடியிருக்கிறோம். சொல்லுங்கள்.''

ரஞ்சித்குமார் சில விநாடிகள் தயங்கி விட்டுத் தொடர்ந்தார். 'லைட்னிங் பாம்களை அழிக்க நீங்கள் தயாரித்து இருக்கும் திட்டம் அற்புதமானதுதான். மனித வெடிகுண்டுத் தேர்வும் பொருத்தமானதுதான். 'ஏரோ ஸ்கை' விமானம் எதிரிகளின் ரோடர் திரைக்குக் கிடைக்காது என்பதும் உண்மைதான். இருந்தாலும்...''

வினோத் ஷர்மா புன்னகைத்தார். ''நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. 'பேரா ட்ரூப்பில் இருக்கும் வீரம் மிக்க ஆறு ஆட்கள் இல்லாத விமானம் ஒன்றை ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கிக் கப்பலில் விழ வைக்க முடியாதா என்பதுதானே உங்கள் எண்ணம்?''

''ஆமாம்.''

''அது சாத்தியம் இல்லை, ரஞ்சித்குமார்.''

''ஏன் ஸார்..?''

''நம்மிடம் உள்ள ஆட்டோ விமானங்கள் சமீப காலமாய் நம் இந்திய எல்லை வரைக்கும் ஒழுங்காய்ப் பறக்கின்றன. பாகிஸ்தானின் எல்லைக்குள் போனதும் சில சமயம் விமானம் நமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது இல்லை. இரண்டு முறை உளவு பார்க்க அனுப்பிய விமானங்கள் ஒழுங்காக அந்த வேலையைச் செய்யவில்லை. நம்முடைய ஆட்டோ விமானங்களைக் கட்டுப்படுத்தப் பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் டி ஆக்டிவேட்டர்கள் இருக்கலாம் என்பது உளவுப் பிரிவின் கருத்து. மனித வெடிகுண்டுகளாய்ச் செயல் புரிந்து



உயிரை இழக்கப் போகும் ஆறு இளைஞர்கள் குறித்து என் மனம் மட்டும் வருத்தப்படாமல் இல்லை. லைட்னிங் பாம்கள் இந்திய நகரங்களின் மேல் போடப்பட்டால் இறக்கப் போகும் இந்திய மக்களின் தொகை பத்துக் கோடியைத் தாண்டும். இப்போது இந்த ஆறு பேரை நினைத்துப் பாருங்கள். அவர்களின் உயிர்த் தியாகம் நியாயமானதாகப்படும். ஆறு பேர்களின் மரணம் பத்துக் கோடி மக்களைக் காப்பாற்றப் போகிறது. பத்துக் கோடி மக்களைக் காப்பாற்றப் போகிற அவர்கள் மகோன்னதமானவர்கள்.''

''ஐ.. அக்ரி வித் யூ.. ஸார்..'' ரஞ்சித்குமார் சொல்லிவிட்டு அமர்ந்து கொள்ள, வினோத் ஷர்மா மற்ற அதிகாரிகளைப் பார்த்தார்.

''இனி ஏதாவது சந்தேகம் உண்டா?''

அவர்கள் மௌனம் சாதித்தார்கள்.

''கலையலாமா?''

தலையசைத்தார்கள்.

வினோத் ஷர்மா எல்லோரிடமும் கை குலுக்கி விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தார். அதுவரைக்கும் அணைத்து வைத்து இருந்த செல்போனுக்கு உயிர் கொடுத்தார்.

உயிர் கொடுத்த மறு வினாடியே செல்போன் கூப்பிட்டது. எடுத்துக் காதுக்கு ஒற்றினார். புதுக்குரல். ஆண் குரல். ஹிந்தியில் பேசினான்.

''வணக்கம்... வினோத் ஷர்மா..''

''நீங்கள்..?''

"ஒரு எஸ்.டி.டி. பூத்திலிருந்து பேசிக் கொண்டிருக்கும் ஒரு வேண்டாத நபர்."

வினோத் ஷர்மா உஷாரானார்.

"உனக்கு என்ன வேண்டும்?"

"உங்களிடம் ஒரு இரண்டு நிமிடம் பேச வேண்டும்."

"பேசு.."

"உங்களுடைய 'இன் காமிரா செல்' மீட்டிங் முடிந்ததா?"

எல்லாம் தெரிந்து வைத்து இருக்கிறான்.

"என்ன ஷர்மா ஸார்... பேச்சையே காணோம்?" கேட்டவன் சிரித்தான். "உங்களுடைய விமானப்படை அதிகாரிகளின் இன் காமிரா செல் மீட்டிங் எனக்கு எப்படித் தெரிந்தது என்று நீங்கள் ஆச்சர்யப்படலாம். உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்லட்டுமா.. நான் கடவுள் மாதிரி.."

"..."

அவன் தொடர்ந்தான். "எனக்குத் தெரியும். நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் உண்மை இதுதான். நான் கடவுளைப் போல் முக்காலமும் உணர்ந்தவன். நேற்று நடந்ததும் எனக்குத் தெரியும். இன்று நடந்ததும் எனக்குத் தெரியும். நாளைக்கு என்ன நடக்கப் போகிறது என்றும் தெரியும். லைட்னிங் பாம்களை நீங்கள் அழிக்க நினைப்பது வெறும் பகல் கனவு. உங்களுக்கு ஒரு ஜோதிடம் சொல்லட்டுமா..? நீங்கள் மனிதக் குண்டுகளாகத் தேர்ந்து எடுத்துள்ள அந்த ஆறு பேரும் நாளைக்குக் காலையில் உயிரோடு இருக்க மாட்டார்கள்."

"எ.. என்ன?" வினோத் ஷர்மா திகைத்துத் திணறி வியர்த்துக் கொண்டிருக்கும் போதே மறுமுனையில்



டெலிபோன் ரிஸீவர் சத்தத்தோடு கவிழ்ந்து படுத்துக் கொண்டது.

வினோத் ஷர்மாவுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த மற்ற விமானப் படை அதிகாரிகள் நின்று அவரைக் குழப்பமாய்ப் பார்த்தார்கள்.

"ஸார்! செல்போனில் ஏதாவது கெட்ட செய்தியா...? உங்களுக்கு முகமெல்லாம் இப்படி வியர்த்துக் கொட்டுகிறதே..."

"எஸ்..! செல்போனில் மிகவும் மோசமான செய்திதான்."

"என்ன ஸார்..?"

வினோத் ஷர்மா விபரம் சொல்ல... மற்றவர்கள் அதிர்ந்தார்கள். "நாம் இப்போதுதான் இன் காமிரா செல் மீட்டிங்கை முடித்துக் கொண்டு வெளியே வந்து இருக்கிறோம். அதற்குள் எப்படி நாம் பேசிய விஷயங்கள் வெளியே வந்து இருக்கும்.."

"தகவல்கள் உடனுக்குடன் பரிமாறப்பட்டு இருக்கிறது."

"ஜோத்சிங், ஹரிகிருஷ்ணன், அரவிந்த மேனன், அல்போன்ஸ் டேவிட், கருப்புசாமி, சைலேஷ்குமார் என்ற ஆறு பேரும் மனித வெடிகுண்டுகளாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு செய்தி வேறு யார்க்கோ உடனே தெரிந்து இருக்கிறது. நாம் அறையை விட்டு வெளியே வந்ததும் எஸ்.டி.டி. பூத்திலிருந்து என்னுடைய செல்லுக்கு ஒருவன் போன் செய்து மிரட்டுகிறான். நம்முடைய ரகசியமான கட்டுப்பாட்டு அமைப்பில் எங்கோ ஒரு ஓட்டை இருக்கிறது. அந்த ஓட்டை அடைக்கப்படாதவரை நாம் 'இன்காமிரா செல்' மீட்டிங்குகள் நடத்துவதில் அர்த்தம் இல்லை. நாம் மீட்டிங் நடத்திய 'இன்காமிரா செல்' அறையில்

மைக்ரோ ரிஸீவர் பக்ஸ் பொருத்தப்பட்டு இருக்கலாம் என்று நினைக்கிறேன், ப்ரசன்னா...!"

"ஸார்.."

"ஸெக்யூரிட்டி ஸ்க்வாடுக்குத் தகவல் கொடுத்து உடனே இன் காமிரா செல் அறையைச் சோதனை போடச் சொல்லுங்கள்."

"எஸ்..ஸார்..." என்று சொன்ன ப்ரசன்னா தன் கையில் இருந்த வாக்கி டாக்கியை உயிர்ப்பித்தார். செக்யூரிட்டிக்குத் தகவல் கொடுக்க, அடுத்த இரண்டாவது நிமிடம் சீப் செக்யூரிட்டி ஆபீஸர் உட்பட ஐந்து பேர் கொண்ட ஒரு ஸ்க்வாட் கனமான பூட்ஸ் சத்தங்களோடு வந்தது. வினோத் ஷர்மா அவர்களிடம் விபரம் சொல்ல... கைகளில் வைத்து இருந்த டிடெக்டர் கருவிகளோடு அந்த செக்யூரிட்டி ஸ்க்வாட் அறைக்குள் நுழைந்தது.

வினோத் ஷர்மா விங் கமேண்டர் சோப்ராவிடம் திரும்பினார்.

"மிஸ்டர் சோப்ரா.."

"ஸார்."

"மனித வெடிகுண்டுகளாக நாம் தேர்ந்து எடுத்துள்ள ஆறு பேரையும் ஒரு பத்திரமான இடத்துக்குக் கொண்டு போய்ப் பாதுகாப்பாய் வைத்து இருக்க வேண்டியது உங்கள் கடமை. அவர்களுடைய உயிர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடக் கூடாது."

"எஸ்..ஸார்.."



"இப்போதே பேரா ட்ரூப்ஸ் க்வார்ட்டர்ஸுக்கு போன் செய்து அங்கே விடுதிகளில் தங்கியுள்ள அந்த ஆறு பேர்க்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லுங்கள்."

சோப்ரா தலையைசைத்து விட்டுத் தன்னிடம் இருந்த செல்போனில் டிஃபென்ஸ் காலனிக்குப் பக்கத்தில் இருந்த பேரா ட்ரூப்ஸ் க்வார்ட்டர்ஸைத் தொடர்பு கொண்டார்.

"பேரா ட்ரூப்ஸ் க்வார்ட்டர்ஸ்?"

"எஸ்.."

"நான் சோப்ரா, விங் கமேண்டர்."

"சொல்லுங்கள் ஸார்.. நான் திவாரி."

"மிஸ்டர் திவாரி... ஒரு முக்கியமான விஷயம். நான் சொல்கிற இந்தப் பெயர்களை முதலில் குறித்துக் கொள்ளுங்கள். ஜோத்சிங், ஹரிகிருஷ்ணன், அரவிந்த மேனன், அல்போன்ஸ் டேவிட், கருப்புசாமி, சைலேஷ்குமார் இவர்கள் ஆறு பேர்க்கும் உடனடியாகச் சிறந்த பாதுகாப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். வைஸ் ஏர் மார்ஷலின் அனுமதி இல்லாமல் அந்த ஆறு பேர்களையும் யாரும் சந்தித்துப் பேசக் கூடாது. அவர்களுடைய உயிர்க்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதால் ... இந்த.."

திவாரியின் குரல் அவசரமாய்க் குறுக்கிட்டது.

"ஸார்.."

"என்ன..?"

"நீங்க சொன்ன அந்த ஆறு பேரும் ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் ஒரே ஜீப்பில் டிரெய்னிங் ஸ்பாட்டுக்குப் போனார்கள்.."

## 5

**போ**லீஸ் கமிஷனர் பாலசிங்கத்துக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தாள் சமுத்ரா. காலை பதினோரு மணி. மேஜையின் மேல் இருந்த பீங்கான் கோப்பைகளில் டீ மெல்லத் தன் ஆவியை விட்டுக் கொண்டிருந்தது.

கமிஷனர் தன் பெரிய மீசைக்குக் கீழே சிரித்தார்.

''மிஸ் சமுத்ரா..! பாகிஸ்தானின் கராச்சியில் நடக்க இருக்கிற இன்டர்நேஷனல் கல்சுரல் ப்ரோக்ராமில் கலந்துக்க நீங்க தைரியமா முடிவு எடுத்ததில், அரசுத் தரப்புக்கு ரொம்ப சந்தோஷம். இப்படிப்பட்ட துணிச்சலான பெண்கள்தான் நாட்டுக்குத் தேவைன்னு டெல்லி பாதுகாப்பு அமைச்சகம் சொல்லியிருக்கு..''

சமுத்ரா புன்னகைத்தாள்.

''ஸார்.. மீன் குஞ்சு முட்டையிலிருந்து வெளியே வந்ததுமே நீச்சலடிக்கும். அதைப் பார்த்து யார்க்கும் ஆச்சர்யம் வராது. அதே மாதிரிதான் நான் எடுத்த முடிவைப் பார்த்து யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. என்னோட தாத்தா மாணிக்க வேலர் அந்தக் காலத்துச் சுதந்திரப் போராட்ட வீரர். பயம்ன்னா என்னான்னே தெரியாது. பயம்ங்கிற வார்த்தையை எப்படி எழுதறதுன்னே எனக்குத் தெரியாது. நான் கல்சுரல் ப்ரோக்ராமில் கலந்துக்கக் கூடாது. மீறிக் கலந்துக்கிட்டா என்னோட கால்கள் ரெண்டையும் துண்டாக்கப் போறதாகத் தீவிரவாதிகள் சொல்லியிருக்கிறது எனக்குச் சந்தோஷமா யிருக்கு.''

''என்னது.. சந்தோஷமா?''



''ம்.. சந்தோஷம்தான்..! ஒரு வி.ஐ.பி.க்குத்தானே இப்படிப்பட்ட மரியாதையெல்லாம் கிடைக்கும்..''

''மிஸ் சமுத்ரா...! நீங்க இப்படித் துணிச்சலா பேசறது ஒரு வகையில் சந்தோஷமாயிருந்தாலும் இன்னொரு வகையில் பயமாவும் இருக்கு.''

''எதுக்குப் பயம்?''

''உங்க பாதுகாப்பு விஷயத்தில் நீங்கள் கேர்லஸ்ஸா இருக்கக் கூடாது. கராச்சிக்கு வெற்றிகரமாய்ப் போய் கல்சுரல் ப்ரோக்ராமில் கலந்துகிட்டு எந்த விதமான பிரச்னையும் இல்லாமே பத்திரமா இந்தியா திரும்பணும். தீவிரவாதிகள் இந்த விஷயத்துல தோத்துப் போகணும்.. நாம ஜெயிக்கணும்.''

''ஸார்..! இதை நான் என்னோட உயிர்ப் போராட்டமாய்.. நினைக்கலை, இந்த தேசத்தோட மானப் போராட்டமா நினைக்கிறேன். என்னை மிரட்டியிருக்கிற அந்த 'லிட்டில் டெவில்ஸ்' என்கிற தீவிரவாத அமைப்புகளின் முகத்தில் கரியை அள்ளிப் பூசணும்.. அதுக்காக நான் ஒரு..''

கமிஷனரின் அறைக்குள் யாரோ நுழைவதைப் பார்த்துப் பேச்சை நிறுத்தினாள் சமுத்ரா.

உள்ளே நுழைந்தது அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் வகுளாம்பரன். போலீஸ் கமிஷனர்க்கு சல்யூட் ஒன்றைக் கொடுத்த வகுளாம்பரன் சமுத்ராவைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''வணக்கம் மேடம்.''

''வணக்கம் ஏ.ஸி. சார்..''

''நாங்க உங்க வீட்டுக்குக் கொடுத்து இருக்கிற பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏதாவது குறையிருக்கா மேடம்..?''

''குறையா...! சரியாப் போச்சு... எனக்குப் பாதுகாப்பே வேண்டாம்ன்னு சொன்னேன். நீங்களும் கமிஷனரும்தான் கேட்கலை. ஏதோ மினிஸ்டர் வீட்டுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிற மாதிரி கொடுத்துட்டீங்க.. ஒரு பூக்காரி உள்ளே வரமுடியலை.. பால்காரன் உள்ளே வர முடியலை. நான் வெளியே சுதந்தரமா போய் வர முடியலை.. பெரிய அவஸ்தை ஸார்.''

''தீவிரவாதிகளோட ஹிட் லிஸ்ட்ல நீங்க இருக்கீங்க மேடம்.. அதுதான் இவ்வளவு கெடுபிடி. அந்த தீவிரவாதக் கும்பல் கைக்குக் கிடைக்கிற வரைக்கும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொறுத்துக்கத்தான் வேணும்.''

''என்னை மிரட்டியிருக்கிற 'லிட்டில் டெவில்ஸ்' என்கிற தீவிரவாத அமைப்போட முகத்தில் கரியை அள்ளிப் பூசிட்டு கராச்சி கல்சுரல் ப்ரோக்ராமை வெற்றிகரமா அட்டெண்ட் பண்ணிட்டு வரணும். அதுக்காக நான் ஒரு திட்டம் போட்டிருக்கேன். அந்தத் திட்டத்தைப் பத்தி டிஸ்கஸ் பண்ணத்தான் கமிஷனர் ஆபீஸுக்கு வந்தேன். நீங்களும் உட்கார்ங்க ஏ.ஸி. ஸார்... பேசலாம்.''

வகுளாம்பரன் கமிஷனரைப் பார்க்க, அவர் தன் இடப் பக்கம் இருந்த நாற்காலியைக் காட்டினார்.

''உட்கார்ங்க.. வகுளாம்பரன்... மிஸ் சமுத்ரா என்ன சொல்றாங்கன்னு கேட்போம்.''

வகுளாம்பரன் உட்கார்ந்ததும் சமுத்ரா மெல்லப் பேச்சை ஆரம்பித்தாள். ''அடுத்த மாதம் பத்தாம் தேதி நான் கராச்சி



போக ஏர் டிக்கெட் ஏற்பாடு பண்ணியிருக்கு. அதாவது பத்தாம் தேதி காலை டெல்லிக்குப் போய் அங்கிருந்து சாயந்தர ஃப்ளைட்டில் கராச்சி போகணும். இந்தப் பயணத் திட்டத்தில் நான் இப்போ மாறுதல் பண்ணப் போறேன்.''

''என்ன மாறுதல்?''

''நான் ஒரு வாரத்துக்கு முன்னாடியே அதாவது அடுத்த மாதம் மூணாம் தேதியே சென்னையிலிருந்து யார்க்கும் தெரியாமே ரெயில் மூலமா கிளம்பி மும்பை போயிடப் போறேன். மும்பையிலிருந்து பத்தாம் தேதி காலையிலேயே விமானம் மூலமா கராச்சி போயிடப் போறேன். மூணாம் தேதியிலிருந்து பத்தாம் தேதி வரைக்கும் நான் சென்னை யிலேயே இருக்கிற மாதிரி ஒரு செட் அப் பண்ண வேண்டியது செக்யூரிட்டி போலீஸாரோட வேலை.''

''அதாவது நீங்க வீட்லயே இருக்கிற மாதிரி.''

''ஆமா..! நான் சென்னையில்தான் இருக்கேன்னு தீவிரவாதிகள் நினைச்சுட்டு இருக்கும் போதே நான் மும்பையில் பாதுகாப்பான இடத்துல இருப்பேன். பத்தாம் தேதி காலையில் ஏர்லி மார்னிங் ஃபோர் ஓ க்ளாக் கராச்சி ஃப்ளைட்டில் நான் பறந்துகிட்டு இருக்கும்போது தீவிரவாதிகள் சென்னை ஏர்போர்ட்டில் நான் டெல்லிக்குப் புறப்பட்டுப் போகிறேனா என்பதைப் பார்க்கக் கண்டிப்பாக வருவாங்க.. வந்து பார்த்துட்டு ஏமாந்து போவாங்க.. இதுதான் என்னோட ப்ளான்.''

கமிஷனர் பாலசிங்கம் தன் தாடையைத் தடவிக் கொண்டு வகுளாம்பரனைப் பார்த்தார்.

''கொஞ்சம் சிரமம்தான் ஸார்... பட் அதிகப்படியான முயற்சி எடுத்துக்கிட்டா நீட்டா பண்ணிடலாம்.''

''எப்படி பண்ணலாம்... சொல்லுங்க.''

''முதலில் மிஸ் சமுத்ராவுக்கு நாம் போட்டிருக்கிற செக்யூரிட்டி ஸ்க்வாடை மாற்றி நம்முடைய நம்பிக்கைக்கு உரிய நபர்களைப் போட வேண்டும். வீட்டில் சமுத்ரா இல்லா விட்டாலும் இருப்பது போன்ற உணர்வை உண்டாக்க வேலைக்காரர்களும், பூக்காரி, பால்காரன் போன்றவர்களும் வழக்கமாய் வந்து போக வேண்டும்.''

சமுத்ரா குறுக்கிட்டாள்.

''என் வீட்டு வேலைக்காரர்கள் எனக்கு விசுவாச மானவர்கள். என்ன சொன்னாலும் கேட்பார்கள். எப்படி நடிக்கச் சொன்னாலும் நடிப்பார்கள். பூக்காரி வேலாயியும் பால்காரன் வடிவேலுவும்தான் எந்தளவுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பார் கள்னு தெரியலை..''

''அந்த ரெண்டு பேர்களையும் நாங்க பார்த்துக்கிறோம்.''

வகுளாம்பரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருடைய சட்டைப் பையில் இடம் பிடித்து இருந்த செல்போன் கூப்பிட்டது.

''எக்ஸ்க்யூஸ் மீ ஸார்...'' கமிஷனரிடம் சொல்லிக் கொண்டு செல் போனை எடுத்துக் காதுக்குக் கொடுத்தார்.

''எஸ்.''

ஒரு பெண் குரல் கேட்டது. ''அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் வகுளாம்பரன்..?''



''ஹோல்டிங்.''

''நான் யார்ன்னு தெரியுதா?''

''தெரியலையே..''

''துர்கா பரமேஸ்வரி..''

''...''

''என்ன... பேச்சைக் காணோம்?''

''ஸாரி.. ராங் நம்பர்..''

''என்னது ராங் நம்பரா.. ? நீயே ஒரு ராங் மெம்பர்தானே..''

''ஸாரி... நீங்க பேச விரும்பற வகுளாம்பரன் நான் கிடையாது. செல்போன் என்கொய்ரி சர்வீஸில் வெரி∴பை பண்ணிக்குங்க..''

''என்ன .. எதிர்ல கமிஷனர் இருக்காரா?''

''நோ.. நோ.. இதுக்கெல்லாம் ஏன் ஸாரி சொல்லிகிட்டு.. நோ ப்ராப்ளம்...'' செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டார் வகுளாம்பரன்.

## 6

விங் கமேண்டர் சோப்ரா உச்சபட்ச அதிர்ச்சியில் உறைந்து போய் செல்போனில் கத்தினார்.

''திவாரி! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்..? அந்த ஆறுபேரும் ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் ஒரே ஜீப்பில் ட்ரெய்னிங் ஸ்பாட்டுக்குப் புறப்பட்டுப் போனார்களா?''

''ஆமாம்..''

''இந்த இரவு நேரத்தில் ட்ரெய்னிங் ஸ்பாட்டில் அந்த ஆறு பேர்க்கும் என்ன வேலை..?''

''ஸாரி ஸார்.. எனக்குத் தெரியாது. ப்ரோக்ராம் சார்ட்டர் மிஸ்டர் விஸ்வாவைக் கேட்டால் விபரம் தெரியும். அவர்க்கு உங்க லைன் கனெக்ட் செய்யட்டுமா?''

''ப்ளீஸ்..''

சோப்ரா அரை நிமிஷம் தவிப்பாய்க் காத்திருக்க ப்ரோக்கிராம் சார்ட்டர் விஸ்வாவின் குரல் கேட்டது.

''ஸார்! நான் விஸ்வா...''

''விஸ்வா! திவாரி விஷயத்தைச் சொன்னாரா?''

''சொன்னார் ஸார்! ஜோத்சிங், ஹரிகிருஷ்ணன், அரவிந்த மேனன், அல்போன்ஸ் டேவிட், கருப்புசாமி, சைலேஷ்குமார் இந்த ஆறு பேரும் ஒரு மணி நேரத்துக்கு முன்பு ட்ரெய்னிங் ஸ்பாட்டுக்குப் புறப்பட்டுப் போனார்கள். ராத்திரி நேர பாராசூட் ஜம்பிங்கிற்காக..''

''இது யாருடைய இன்ஸ்ட்ரக்ஷன்?''

''பேரா ட்ரூப் சீஃப் கமாண்டர் குப்தா தாஸ் ஒரு ஃபேக்ஸ் அனுப்பி அதன் மூலம் அந்த ஆறு பேர்களையும் ட்ரெய்னிங் ஸ்பாட்டுக்கு வரச் சொல்லி இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து இருந்தார். நான் உடனே அந்த ஆறு பேர்களுக்கும் தகவல் கொடுத்தேன். அவர்களும் ஒரு மணி நேரத்துக்கு முன்பு புறப்பட்டுப் போய்விட்டார்கள். ஏன் ஸார்.. ஏதாவது பிரச்னையா?''



''பிரச்னைதான்! அந்த ஃபேக்ஸ் செய்தி உண்மைதானா என்பதை க்ராஸ் செக் செய்து பார்த்தீர்களா?''

''இல்லை ஸார்..''

''முதலில் அதை க்ராஸ் செக் செய்து ஃபேக்ஸ் செய்தியை அனுப்பியது குப்தாதாஸ்தானா என்பதை உறுதி செய்யுங்கள்..''

''ஒரு நிமிஷம் லைனிலேயே இருங்கள் ஸார். குப்தா தாஸிடம் பேசிவிட்டு உங்களைத் தொடர்பு கொள்கிறேன்.''

சோப்ரா நெற்றியில் மின்னும் வியர்வையோடு காத்திருக்க... இரண்டு நிமிஷ நேரம் கழித்து விஸ்வாஸின் குரல் கலக்கமாய்க் கேட்டது.

''ஸா.. ஸார்..''

''என்ன..?''

''அந்த ஃபேக்ஸ் செய்தியைக் குப்தாதாஸ் தான் அனுப்பவில்லை என்று சொல்கிறார்.''

''பார்த்தீர்களா...? ஏதோ விபரீதம்..''

''இப்போது என்ன ஸார் செய்ய..?''

''ட்ரெய்னிங் ஸ்பாட்டில் யார் இப்போது செக்யூரிட்டி இன்சார்ஜ்?''

''கௌதம் ஸார்..''

''அவருடைய காண்டாக்ட் நம்பர் என்ன?''

''ட்ரிபிள் த்ரீ ஸார்..''

சோப்ரா விஸ்வாவோடு இருந்த இணைப்பைத் துண்டித்து விட்டு ட்ரெய்னிங் ஸ்பாட்டில் இருந்த செக்யூரிட்டி இன்சார்ஜ் கௌதமை உடனே தொடர்பு கொண்டார்.

"கௌதம்...! ட்ரெய்னிங் ஸ்பாட்டில் இப்போது பாராசூட் ஜம்பிங் ப்ராக்டீஸ் ஏதாவது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறதா?"

"இல்லை.. ஸார்.. மாலை ஏழு மணியோடு எல்லா ப்ராக்டீஸும் முடிந்து விட்டது."

"ட்ரெய்னிங் ஸ்பாட்டில் இப்போது யாரும் இல்லையா?"

"இல்லை ஸார்.." என்று சொன்ன கௌதம் மெல்லக் கேட்டார். "ஸார்! உங்கள் குரலில் கவலை தெரிகிறது. ஏதாவது மோசமான செய்தியா?"

"ஆமாம்... பேரா ட்ரூப்பைச் சேர்ந்த ஆறு பேர் ஒரு மணி நேரத்துக்கு முன்பாக குவார்ட்டர்ஸிலிருந்து ஒரு ஜீப்பில் ட்ரெய்னிங் ஸ்பாட்டுக்குப் புறப்பட்டுப் போனதாகத் தகவல்.."

"ஆறு பேரா..?"

"எஸ்..." என்று சொன்ன சோப்ரா அந்த ஆறு பேர்களின் பெயர்களையும் சொல்ல, செக்யூரிட்டி இன்சார்ஜ் கௌதம் பதட்டப்பட்டார்.

"நீங்கள் குறிப்பிட்ட அந்த ஆறு பேரும் இந்த ட்ரெய்னிங் ஸ்பாட்டுக்கு வரவில்லையே ஸார்.."

"செக் செய்து பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்.."

"ஸாரி ஸார்... இந்த ட்ரெய்னிங் ஸ்பாட் இப்பொழுது ஆட்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிப் போன நிலையில் இருக்கிறது. யாரும் இங்கே இருப்பதற்கான அறிகுறியே இல்லை.. நீங்கள் குறிப்பிட்ட அந்த ஆறு பேரும் வேறு ஏதாவது ட்ரெய்னிங் ஸ்பாட்டுக்குப் போயிருக்கலாம்.."



"தேங்க்யூ... நான் விசாரித்துக் கொள்கிறேன்." சோப்ரா பேச்சை முடித்துக் கொண்டு செல்போனை அணைத்தார். பக்கத்தில் நின்றிருந்த வினோத் ஷர்மாவைக் கனமான கவலைக் கண்களால் பார்த்தார்.

"ஸார்..! அந்த ஆறு பேரும் பேரா ட்ரூப் ட்ரெய்னிங் ஸ்பாட்டில் இல்லை."

வினோத் ஷர்மா பதில் சொல்வதற்குள் இன் காமிரா செல் அறையிலிருந்து சீஃப் செக்யூரிட்டி ஆபீசர் வேகமாய் வெளிப்பட்டு அவரை நெருங்கினார். கையில் ஒரு கர்ச்சீஃப். அதில் கறுப்பாய் பட்டன் சைஸில் இரண்டு பொருள்கள்.

"ஸார்.. இந்த இரண்டு மைக்ரோ ரிஸீவர் 'பக்'களும் பாலிமர் மேஜையின் அடிப்புறத்தில் செல் டேப்பின் உதவியோடு ஒட்ட வைக்கப்பட்டிருந்தது. இவை இரண்டும் சக்தி வாய்ந்த மைக்ரோ ரிஸீவர்கள். அறைக்குள் ஒரு குண்டூசி விழுந்தாலும் சரி... அந்த சத்தம் உடனடியாக எதிரிகளின் வயர்லஸ் கருவிக்குப் போய்விடும். இதனுடைய செயல் திறன் ஒரு வருஷத்துக்குக் குறைவில்லாமல் இருக்கும்."

வினோத் ஷர்மா கைக்குட்டையில் வைக்கப்பட்டிருந்த அந்த இரண்டு மைக்ரோ ரிஸீவர்களையும் கையில் எடுத்துப் பார்த்தார். பின் கோபமாய் அதிகாரிகளிடம் நிமிர்ந்தார். வயிறு எக்கிக் கத்தினார்.

"நமக்கு எதிரி பாகிஸ்தான் கிடையாது. இந்தியாதான் இந்தியாவுக்கு எதிரி. இந்திய ராணுவத்தில் இருக்கும் கறுப்பு ஆடுகளை நாம் அடையாளம் கண்டு கொள்ளாதவரை நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைப்பது கஷ்டம். இன் காமிரா அறையில் நாம் பேசிய எல்லாப் பேச்சுக்களும்

எதிரிகளின் காதுகளுக்குப் போய் விட்டன. இனி அந்த லைட்னிங் பாம்களை அழிக்க நாம் வேறு யுக்திகளைத்தான் நாட வேண்டும். அதற்கு முன்பாக பேரா ட்ரூப் விங்கிலிருந்து காணாமல் போன அந்த ஆறு பேர்களையும் விடிவதற்குள் கண்டுபிடிக்க வேண்டும். உயிரோடு மீட்க வேண்டும்.''

## 7

சென்னை புறநகர் பகுதியில் பைக்கை வேகமாய் விரட்டிய வகுளாம்பரன் ரேடியம் மின்னும் தன் மணிக்கட்டு வாட்சைப் பார்த்தார்.

மணி 10.15

ரோட்டின் இரண்டு பக்கமும் இருட்டு ஒரே சீராய்ப் பரவியிருக்க கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் ஒரு சின்ன வெளிச்சச் சிதறல் கூடப் பார்வைக்குக் கிடைக்கவில்லை. எதிரே வரும் வாகனங்கள் மட்டும் சில விநாடிநேரத்துக்கு வெளிச்சக் கற்றைகளை வீசி விட்டுப் போயிற்று.

பதினைந்து நிமிடப் புயல் வேகப் பயணத்துக்குப் பிறகு பைக் மெயின் ரோட்டை விட்டு விலகி, முட் செடிகளுக்கு மத்தியில் ரகசியமாய் உற்பத்தியாகியிருந்த ஒற்றையடிப் பாதைக்குள் நுழைந்தது. சில விநாடிப் பயணம். அம்பாரமாய்க் குவித்து வைக்கப்பட்டிருந்த வைக்கோல் போர் அருகே பைக் போய் நின்றது. பைக்கை ஸ்டாண்ட் இட்டு நிறுத்திய வகுளாம்பரன் வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு இருட்டில் மெல்ல நடந்து அந்த ஓட்டு வீட்டை நோக்கிப் போனார். காற்றில் சோளப் பயிர் மணத்தது.



வகுளாம்பரன் அந்த ஓட்டு வீட்டை நெருங்கிக் கதவை மெல்லத் தட்டினார். உள்ளேயிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''யாரது?''

''ரேஷ்மி... நான்தான் வகுளா..'' ஹஸ்கி வாய்ஸில் குரல் கொடுத்தார் வகுளாம்பரன்.

சில விநாடிகளுக்குப் பிறகு கதவு ரகசியம் பேசுகிற தினுசில் திறந்து கொள்ள... அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் அந்தப் பெண் தெரிந்தாள். கொசுவம் வைத்த கைத்தறிச் சேலை. ஜாக்கெட் அணியாத தோள்ப் பட்டைகள் எண்ணெய் பூசியதுபோல் மினுமினுத்தன. நெற்றியில் பெரிதாய் குங்குமப் பொட்டு. கழுத்தில் கருகமணி மாலை. வகுளாம்பரனைப் பார்த்ததும் தன் பல் வரிசையைக் காட்டி மலர்ந்தாள். உள்ளே திரும்பிப் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

''நிஷார்..! யாரு வந்து இருக்காங்கன்னு பார்த்தியா..?''

''யாரு..?''

''வந்து பாரு..''

வேஷ்டியும் கை வைத்த பனியனும் அணிந்து ஒரு விவசாயியின் கெட்டப்பில் இருந்த அந்த இளைஞன் போதையுடன் நடந்து வந்து வகுளாம்பரனைப் பார்த்ததும் 'ப்பர்ர்ர்'ரென்று சிரித்து, ''அட.. ஏ.ஸி.ஸார்... வாங்க.. உள்ளே வாங்க..'' என்றான்.

வகுளாம்பரன் உள்ளே நுழைய, ரேஷ்மி உடனே கதவைச் சாத்தித் தாழிட்டாள். அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் வீட்டுக்குள் இருந்த பொருள்கள் மங்கலாய்ப் பார்வைக்குக் கிடைத்தன.

''என்ன ஏ.சி.ஸார்... இந்த ராத்திரி நேரத்துல?''

''ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி பேசறதுக்காக வந்தேன்.''

''வரப் போறதா தகவல் கூடச் சொல்லலை.. சரி.. என்ன விஷயம்.. சொல்லுங்க..''

வகுளாம்பரன் அங்கே கிடந்த ஒரு நெல் மூட்டையின் மேல் உட்கார்ந்தார். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொள்ள, நிஷார் கேட்டான். ''ப்ளாக் அண்ட் டபிள்யூ இருக்கு. ஒரு பெக் ஊத்தி தரட்டுமா?''

''வேண்டாம்..''

''ஏ.ஸி. ஸார் ஏதோ டென்ஷன்ல இருக்கார்ன்னு நினைக்கிறேன்.''

''டென்ஷன்தான்..! நீயும் ரேஷ்மியும் இந்த விவசாய செட் - அப்பைக் கலைச்சுப் போட்டுட்டு வேற ஒரு செட் அப்புக்குள்ளே நுழைய வேண்டிய கட்டாயம் வந்தாச்சு.''

ரேஷ்மி கவலையாய் வகுளாம்பரனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். ''என்ன.. ஏதாவது ப்ராப்ளமா?''

''பெரிய ப்ராப்ளம்.. நான் வீட்ல இல்லாத நேரத்துல யாரோ ஒரு பெண் என்னோட அறைக்குள்ளே நுழைஞ்சு சோதனை போட முயற்சி பண்ணியிருக்கா... அதைப் பார்த்துட்டுத் தடுக்க வந்த என் ஒய்ஃப் அபிராமியை அவ தாக்க - அபிராமி மயக்கமா கீழே விழுந்துட்டா. மறுபடியும் அவளுக்குச் சுய நினைவு வந்து பார்த்தபோது பீரோ உடைபட்டு எல்லாப் பொருள்களும், வெளியே வந்து விழுந்து இருக்கு. நகையும் பணமும் அப்படியே இருந்து இருக்கு.. ஆனா என்னோட பர்சனல் டைரியை மட்டும் காணோம்..''



''என்னது! டைரியைக் காணோமா?''

''ம்..''

''அந்த டைரியில் ஏதாவது எழுதியிருந்தீங்களா?''

''நம்ம 'லிட்டில் டெவில்' இயக்கம் சம்பந்தப்பட்ட சில சங்கேத வார்த்தைகள் மட்டும் எழுதி வெச்சிருந்தேன்.''

''யாரோ உங்களை ஸ்மெல் பண்ணிட்டாங்கன்னு நினைக்கிறேன்.''

''எனக்கும் அந்த சந்தேகம்தான்..''

''உங்களுக்கு யார் மேல சந்தேகம்..?''

''என்னோட மனைவி சொல்ற அடையாளங்களை வெச்சுப் பார்க்கும் போது எனக்கு அவ அவ்வளவு பரிச்சயமாத் தெரியலை. எனக்கு போன் பண்ணிப் பேசும் போது தன்னோட பேரைத் துர்கா பரமேஸ்வரின்னு சொன்னா...''

''என்ன ஏ.ஸி. ஸார்... வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைஞ்ச கதையா நம்ம இயக்கம் இங்கே கால் ஊன்றப் போகப் போகிற நேரத்துல இப்படியொரு பிரச்னை..''

''பிரச்னைகளை மீட் பண்ணாமே எந்த ஒரு இயக்கமும் இல்லை.''

''சரி.. இப்ப என்ன பண்றது?''

''நிஷார்! நீயும் ரேஷ்மியும் உடனே வேற செட்டப்புக்கு மாறணும்.. இந்தச் சென்னையை விட்டு வெளியே போய்த் தங்கணும்.''

''இந்த நிலத்தையும் வீட்டையும் ரெண்டு வருஷ காலத்துக்கு குத்தகைக்கு எடுத்து இருக்கிறோம்..! ஆறு மாசம்தான்

முடிஞ்சிருக்கு.. இன்னும் ஒன்றரை வருஷம் பாக்கியிருக்கே..?"

"அதை யெல்லாம் பார்த்தா முடியுமா... ? லேண்ட் ஓனர்கிட்டே ஏதாவது காரணம் சொல்லிச் சமாதானம் பண்ணி அவர் தர்ற பணத்தை வாங்கிட்டு கிளம்ப வேண்டியதுதான்..."

"அவர் பணத்தைத் தர மாட்டார்.."

"தரலைன்னா விட்டுட்டுக் கிளம்ப வேண்டியதுதான்."

"எதுக்கும் தலைமையை ஒரு வார்த்தை கேட்டுக்கலாமா?"

"ம்.. கேட்டுக்கோ..."

நிஷார் எழுந்து அறையின் மூலையில் இருந்த அந்தப் பெரிய நெற்குதிரை நோக்கிப் போனான். ஒரு சிறிய ஏணியைப் போட்டு அதன் மேல் ஏறிக் குதிர்க்குள் இறங்கி அங்கேயிருந்த வயர்லஸ்ஸை உசுப்பினான்.

ரேஷ்மி வகுளாம்பரனை இடித்துக் கொண்டு உட்கார்ந்தாள். தன்னுடைய இடது கை ஆட்காட்டி விரலால் அவருடைய முகத்தில் கோடு போட்டாள்.

"வகுளா.."

"ம்.."

"இன்னிக்கு ராத்திரி இங்கேயே தங்கிடு."

"எதுக்கு.?"

"எதுக்கா..? அதைச் சொல்லணுமாக்கும்?"

"இதோ பார் ரேஷ்மி.. எனக்கு இப்போ ரொமான்ஸ் மூடு கிடையாது. உனக்கும் அந்த ரொமான்ஸ் மூடு இருக்கக் கூடாது.



நம்முடைய தலைமை சென்னையில் இருக்கிற இந்த இயக்கம் வளர்றதுக்காக லட்சக்கணக்கில் பணத்தைச் செலவு பண்றாங்க.. அதுக்கு நன்றியுள்ளவர்களாய் நாம் நடந்துக்க வேண்டாமா?"

ரேஷ்மி தன்னுடைய இரண்டு கைகளையும் அவனுடைய கழுத்தில் மாலையாய்ப் போட்டாள்.

"உனக்கொரு உண்மையைச் சொல்லட்டுமா வகுளா?"

"என்ன..?"

"உன்னோட வீட்டுக்கு வந்து.. உன்னோட மனைவியைத் தாக்கியது.. பீரோவை உடைச்சது... உன்னோட டைரியை எடுத்துட்டு வந்தது.. யார்.. தெரியுமா?"

"யார்..?"

"நான்தான்.."

வகுளாம்பரனின் விழிகள் நிலைத்தன.

"எ.. என்னது.. நீயா?"

"நானே! நானே அந்த துர்கா பரமேஸ்வரி..." ரேஷ்மி தன் வலது கையைக் குவித்து முஷ்டியாக்கி வகுளாம்பரனின் வயிற்றில் செல்லமாய் ஒரு குத்துக் குத்தினாள்.

"நி.. நிஜமாவா.. எ.. எ.. என்னால நம்ப முடியலை.."

"நம்பு ராஜா.. நம்பு.. அந்த துர்கா பரமேஸ்வரி விவகாரம் முழுக்க முழுக்க என்னோட திருவிளையாடல்தான்."

"எ.. எதுக்கு இதெல்லாம்..?"

"மேலிடத்துக் கட்டளை.."

"நிஷார்க்கு இது தெரியுமா?"

"தெரியுமாவது... நிஷார்தான் இதுக்கு திரைக்கதை வசனம் டைரக்‌ஷன். மேலிடத்துக்கு லேசா உன்மேல சந்தேகம் வகுளா.. உரசிப் பார்க்கச் சொன்னாங்க.. உரசிப் பார்த்துட்டோம்.. உன்னோட பர்சனல் டைரி இப்போ கராச்சியில் இருக்கிற மேலிடத்தின் கையில்.."

வகுளாம்பரன் லேசாய்க் கோபப்பட்டார். "மேலிடத்துக்கு என்மேல எதுக்காக சந்தேகம் வந்தது?"

"நீ ஒரு போலீஸ் ஆபீஸர்... கடைசி நேரத்துல தேசம்தான் பெரிசுன்னு கட்சி மாறிட்டியானா என்ன பண்றது.. உண்மையிலேயே இந்த இயக்கத்துக்கு நீ விசுவாசமா இருப்பியா மாட்டியான்னு தெரிஞ்சுக்க தலைமையகம் ஆசைப்பட்டாங்க. உன்னோட பர்சனல் டைரி கிடைக்குமான்னு கேட்டாங்க. நீ இல்லாத நேரத்துல உன்னோட வீட்டுக்குப் போனேன். என்னைப் பார்த்துட்டுச் சத்தம் போட முயற்சி பண்ணின உன்னோட ஒய்ஃப் அபிராமியை ஒரு தட்டுத் தட்டினேன். மயக்கமா விழுந்தவளை ஓரமா இழுத்துப் போட்டுட்டு லேசர் பிஸ்டலாலே பீரோ லாக்கை ஓப்பன் பண்ணி உன்னோட பர்சனல் டைரியைக் கொண்டு வந்தேன். அந்த டைரியை மொதல்ல படிச்சது நான்தான். சும்மா சொல்லக் கூடாது. இந்தியாவுக்கு எதிரான உன்னோட கோபத்தைச் சின்னச் சின்னக் கவிதை வரிகள்ல நல்லாவே காட்டியிருந்தே... குறிப்பாய் ஒரு கவிதையைப் பத்தி சொல்லியாகணும்.

இந்த இந்தியா
எனக்குக் கற்றுக் கொடுத்ததெல்லாம்
கடன் வாங்குவது எப்படி
என்கிற
கலையைத்தான்!



ரேஷ்மி கவிதையைச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கும் போதே நெற்குதிர்க்குள்ளிருந்து நிஷார் வெளிப்பட்டான். கையில் உடைக்கப்படாத புதிய பீர் பாட்டில்.

"ஏய்.. ரேஸ்மி.. அவசரக் குடுக்கை! ஏ.ஸி. ஸார்கிட்டே அதுக்குள்ளே எல்லாத்தையும் சொல்லிட்டியா..! இன்னும் கொஞ்சம் விளையாடிப் பார்த்து இருக்கலாமே?"

தன் இடது கை விரல்களால் நெற்றியைப் பிடித்துக் கொண்ட வகுளாம்பரன் ரேஷ்மியையும் நிஷாரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"என்ன வகுளா கோபமா?"

"பின்னே..! மேலிடம் என்னை உரசிப் பார்த்தது எனக்கு அவமானமாயிருக்கு.."

"இதுல எந்த ஒரு அவமானமும் இல்லை. நானும் நிஷாரும் இருக்கிற இந்த இயக்கம் பாகிஸ்தானுக்கு ஆதரவாய்ச் செயல்படுகிற ஒரு இயக்கம். இந்த இயக்கத்தில் சேர்ந்து இருக்கிற முதல் இந்தியன் நீதான். உனக்கு உன்னோட தேசத்து மேல் இருக்கிற கோபம், உண்மையா பொய்யான்னு எங்களுக்குத் தெரிய வேண்டாமா..? இது ஒரு பரீட்சை. அவ்வளவுதான். உண்மையாய் இருக்கிறவங்க இந்தப் பரீட்சையில பாஸ் பண்ணுவாங்க... தப்பானவங்க பெயிலாயிடுவாங்க.. நீ உண்மையாயிருந்ததால பாஸ் பண்ணியிருக்கே.."

"ரேஷ்மி! என்னோட பத்தாவது வயசிலேயே இந்த தேசத்தை நான் வெறுக்க ஆரம்பிச்சுட்டேன். அன்னிக்கு என் மனசுக்குள்ளே பத்திக் கிட்ட நெருப்புதான் இன்னும் அணையவே யில்லை."

"அடடே...! உங்க பத்தாவது வயசுல அப்படி என்னதான் நடந்தது ஏ.ஸி. ஸார்..! அந்த சூடான ஃப்ளாஷ் பேக்கைக் கொஞ்சம் சொல்லுங்களேன்."

"என் வீட்டுக்குப் பக்கத்துல ஒரு ஃப்ரீடம் ஃபைட்டர் இருந்தார். அவர் ஒரு ரிடையர்டு ஹெட்மாஸ்டர். அந்தக் காலத்தில் வெள்ளைக்காரன்கிட்டே வேலை பார்த்துக்கிட்டே தேசத்தோட சுதந்திரத்துக்காக அண்டர் கிரௌண்டில் போராட்டம் நடத்தினவர். தன்னோட வீடு, வாசல், நிலம் எல்லாத்தையும் தேசத்துக்காகக் கொடுத்தவர். இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைச்ச பிறகு அவர்க்கு கஷ்ட காலம் ஆரம்ப மாகியது. கல்யாணம் பண்ணிக்காததால் எந்த உறவும் இல்லாத அவர்க்குத் தன்னோட முதுமைக் காலத்தில் வாழ்நாட்களை நகர்த்தறது பெரிய பாடாக இருந்தது. சுதந்திரப் போராட்டக் கால வீரர்களுக்கு பென்ஷன் கொடுக்கப் போறதா அறிவிப்பு வெளி வந்ததுமே அவர் அப்ளை பண்ணினார். இன்னிக்கு வா.. நாளைக்கு வான்னு அலைக்கழிச்சு பென்ஷன் பணத்தை அவர்க்குக் கொடுக்காமலேயே சாகடிச்சது இந்த தேசம்.. ஒரு எம்.எல்.ஏ.வோ ஒரு எம்.பி.யோ கொஞ்சம் முயற்சி எடுத்து இருந்தாலும் அவர்க்கு பென்ஷன் கிடைச்சிருக்கும். ஆனா யாரும் முயற்சி எடுத்துக்கலை. அந்தப் பெரியவர் பட்டினி கிடந்து கிடந்து உடல் வற்றியே செத்துப் போனார். அவரோட உடம்பை ரோட்டோரமா போட்டு பணம் வசூல் பண்ணித்தான் அடக்கம் பண்ண வேண்டியிருந்தது."

"ஏ.ஸி.ஸார்! உங்க கோபம் நியாயமானதுதான். ஃப்ளாஷ் பேக்கை நினைச்சுப் பார்த்ததுல ரொம்பவும் சூடாயிட்டீங்க... இந்தாங்க சில்லு பீர்! வயிற்றை ரொப்பி முதல்ல கூல் பண்ணுங்க.. சிக்கனும் சப்பாத்தியும் ரெடியாயிருக்கு. சாப்பிடலாம்... ரேஷ்மி! எடுத்து வை.."



வகுளாம்பரன் நிஷாரின் கையிலிருந்த பீர் பாட்டிலை வாங்கிக் கொண்டார்.

"இந்த தேசத்துல பொறந்துட்டேங்கிற காரணத்துக்காக நான் இந்த தேசத்தைக் காதலிச்சேயாகணுங்கற கட்டாயம் இருக்கா என்ன? தேசம் மக்களுக்கு நல்லது பண்ணணும். அப்பத்தான் மக்களுக்குத் தேசத்துமேலே பாசம் வரும்.. மோசம் பண்ணினா யார்க்கு காதல் வரும்.."

"ஏ.ஸி. ஸார்.. நீங்க பேசற ஒவ்வொரு பாய்ண்ட்டும் நறுக்.. நறுக்..! உங்க கருத்துக்களை நீங்க பகிரங்கமா பேச ஆரம்பிச்சா உங்க பின்னாடி ஒரு இளைஞர் படையே வரும்."

வகுளாம்பரன் பீர் பாட்டிலை ஒரே மூச்சில் காலி செய்து விட்டு பாட்டிலைக் கீழே உருட்டி விட்டார்.

"ரேஷ்மிதான் அந்த துர்கா பரமேஸ்வரின்னு தெரிஞ்ச நிமிஷத்திலிருந்து மனசுக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருக்கு. இனி சமுத்ராவைத் தீர்த்துக் கட்றதுல எந்த பிரச்னையும் இருக்காது. நிஷார்..! அந்த சமுத்ரா தன்னோட கராச்சி பயணத்தில் ஒரு மாறுதல் பண்ணியிருக்கா..! அடுத்த மாதம் பத்தாம் தேதிக்குப் பதிலா மூணாம் தேதி சென்னையிலிருந்து யார்க்கும் தெரியாமே ரெயில் மூலமா கிளம்பி மும்பை போயிடப் போறா. மும்பையில் ஒரு வாரம் தங்கியிருந்து விட்டுப் பத்தாம் தேதி காலையில் விமானம் மூலமா கராச்சி போறதா திட்டம். மூணாம் தேதியிலிருந்து பத்தாம் தேதி வரைக்கும் சமுத்ரா சென்னையில் இருக்கிற மாதிரி செக்யூரிடி போலீசார் 'செட்-அப்' பண்ணப் போறாங்களாம். கமிஷனரும் சமுத்ராவும் என்னையும் உட்கார்த்தி வெச்சுகிட்டே இத்தனை பேச்சும் பேசினாங்க.."

''சரி... சமுத்ராவோட உயிர்க்கு எந்த ஊர்ல விடை கொடுக்கலாம்.. சென்னையா.. மும்பையா... கராச்சியா?''

ரேஷ்மி சிக்கன் பிளேட்டுகளோடு வந்தாள். ''நான் சொல்லட்டுமா?''

''சொல்லு.''

''சமுத்ரா சென்னையிலிருந்து மும்பைக்கு ரயிலில்தானே போறா..?''

''ஆமா..''

''ரயிலிலேயே அவளுடைய கதை முடியட்டும்..''

''அவ கதையை முடிக்கப் போறது யாரு.. நீயா இல்லை நிஷாரா?''

''நான்தான்! அதே ரயிலில் நானும் பயணம் பண்ணப் போறேன்.. சமயம் பார்த்துச் சமுத்ராவின் கதையை முடிக்கப் போறேன்.

''ஒரு தடவைக்கு ரெண்டு தடவை நல்லா யோசனை பண்ணிக்க ரேஷ்மி... சமுத்ரா நீ நினைக்கிற மாதிரி சாதாரணப் பெண் கிடையாது. படிச்சவ. புத்திசாலியும் கூட. அவளை முடிக்கப் போய் நீ மாட்டிக்காதே!''

ரேஷ்மி சிரித்தாள். ''கராச்சி ட்ரெய்னிங் கேம்பில் நூத்து எண்பது நாள் பயிற்சி எடுத்து இருக்கேன். கராத்தேயிலும் வர்மக் கலையிலும் டாப் ஸ்டார் பட்டம் வாங்கியிருக்கேன். சென்னையிலிருந்து மும்பை 24 மணி நேரப் பயணம். 24 மணி நேரத்துக்கு 864000 விநாடிகள். இந்த 864000 விநாடிகளில் ஒரு பத்து விநாடி எனக்குக் கிடைச்சா போதும். வர்மக் கலையை உபயோகப்படுத்தி சமுத்ராவோட பின்னங் கழுத்தில்



ஒரு டெத் ஸ்ட்ரோக்கை பிரயோகம் பண்ணினா போதும்.. ரெண்டு கண்ணும், நாக்கும் வெளியே அரையங்குலத்துக்குத் துருத்திகிட்டு வந்துடும்.''

ரேஷ்மி சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

நெற் குதிர்க்குள்ளிருந்து 'பீப்.. பீப்' சவுண்ட் கேட்டது.

வயர்லஸ் அழைப்பு.

நிஷார் ஓடிப் போய் ஏணியின் மேல் ஏறி வேக வேகமாய் நெற்குதிர்க்குள் இறங்கினான். மெல்லிய இருட்டில் குத்துக் காலிட்டு உட்கார்ந்து ஹெட் போனைத் தலையில் மாட்டிக் கொண்டான். ரிஸீவரைக் காதுக்குப் பொருத்திக் கொண்டு வாய்க்கு முன்பு நீட்டிக் கொண்டிருந்த மைக்கில் ஹிந்தி மொழியில் பேசினான்.

''நான் நிஷார்..''

''இது தலைமையகம், கோட் வேர்ட்..?''

''காஷ்மீர் ஆப்பிள்.. '' அவன் சொன்னதும் சில விநாடி கழித்துப் பேச்சுத் தொடர்ந்தது.

''நிஷார்..! ரேஷ்மி உனக்குப் பக்கத்தில் இருக்கிறாளா?''

''ஆமாம்.''

''அவளைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?''

''அஸிஸ்டண்ட் கமிஷனர் வகுளாம்பரன்.''

''ஏதாவது முக்கியமான விவாதமா?''

''ஆமாம்..''

"எதைப் பற்றி.."

"சமுத்ராவின் கதையை முடிப்பது பற்றி.."

"என்ன முடிவு எடுத்தீர்கள்...? அவளை எப்படி முடிக்கப் போகிறீர்கள்?"

"சமுத்ரா அடுத்த மாதம் மூன்றாம் தேதி சென்னையிலிருந்து மும்பைக்கு ரயிலில் பயணம் மேற்கொள்ள இருக்கிறாள். ரயில் சென்னையிலிருந்து மும்பை போய்ச் சேர்வதற்குள் அவளுடைய கதையை முடிக்கத் திட்டம்."

"அவளுடைய கதையை முடிக்கப் போவது யார்?"

"ரேஷ்மி.."

"அவள் முடிப்பாளா?"

"ரேஷ்மியால் முடியாத காரியம் ஒன்று உண்டா?"

"நீங்கள் மூன்று பேரும் பேசி வைத்து இருக்கிற திட்டம் நிச்சயம் நடக்கப் போவது இல்லை."

"எ..எ.. எப்படிச் சொல்கிறீர்கள்?"

"முட்டாள்களே! சமுத்ரா இப்போது சென்னையில் இல்லை."

"என்னது..? சென்னையில் இல்லையா?"

"இல்லை.."

"பின்னே..?"

"டெல்லியில்.."

"டெல்லியா.. எப்படி?"



"சென்னையிலிருந்து இன்று மாலை ஆறரை மணி ஃப்ளைட் பிடித்து ஒன்பது மணிக்கெல்லாம் டெல்லி வந்து சேர்ந்து விட்டாள். ஆனால் டெல்லியில் எந்த இடத்தில் இருக்கிறாள் என்பது மட்டும் தெரியவில்லை. அவள் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க நம் உளவுத் துறை தீவிரமாய் முயற்சி செய்து வருகிறது..."

"நாங்கள் எப்படியோ ஏமாந்து விட்டோம்."

"உதவாக்கரைகள்!"

"மன்னிக்க வேண்டும்... சமுத்ரா இப்படி ஏமாற்றி விட்டுச் செல்வாள் என்று நாங்கள் நினைக்கவில்லை. நாங்கள் உடனே டெல்லி புறப்பட்டு வரட்டுமா?"

"வேண்டாம்.. சமுத்ராவை டெல்லியில் வைத்து முடிக்க வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டது. சென்னையில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட இன்னொரு வேலை எப்போது முடியும்?"

"நம் இயக்கத்தைச் சேர்ந்த மூன்று பேர் சென்னை க்யூ பிராஞ்ச் போலீஸாரால் கைது செய்யப்பட்டு மத்திய சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருக்கிற விஷயம்தானே?"

"ஆமாம்.."

"அவர்களை விடுவிக்க போலீஸார்க்கு 24 மணி நேரம் கெடு விதித்து இருக்கிறோம்."

"விடுதலை செய்யா விட்டால்?"

"போலீஸ் துறையைச் சேர்ந்த மூன்று பேர் வெட்டிச் சாய்க்கப்படுவார்கள் என்று எச்சரிக்கை விடுத்து இருக்கிறோம்."

"அது வெறும் எச்சரிக்கை மட்டும்தானா?"

"இல்லை...! நம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் விடுவிக்கப் படாவிட்டால் போலீஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த மூன்று பேரைத் தீர்த்துக் கட்டுவது என்று முடிவு செய்து விட்டோம்."

"இந்தக் காரியத்தையாவது ஒழுங்காகச் செய்யுங்கள்... நமது ஆட்களைக் கண்டிப்பாய் விடுதலை செய்ய மாட்டார்கள். எனவே எச்சரிக்கை செய்தபடி மூன்று அதிகாரிகள் தீர்க்கப்பட வேண்டும்.."

"தலைமையகத்துக்குச் சந்தேகமே வேண்டாம். மூன்று அதிகாரிகள் சாய்ந்த பிறகு வயர்லெஸ்ஸில் உங்களுக்குத் தகவல் வரும்."

## 8

டெல்லி சோம்பலாய் விடிந்து கொண்டிருந்த அந்த வைகறை வேளையில் வினோத் ஷர்மா தூக்கம் கெட்ட கண்களோடு கையில் செல்போனை வைத்துக் கொண்டு முன்னறையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் சாய்ந் திருந்தார். உல்லன் சால்வையைப் போர்த்திக் கொண்டு அவருடைய மனைவி தர்ஷிணி உள்ளேயிருந்து வந்தாள்.

"பேரா ட்ரூப்பைச் சேர்ந்த அந்த ஆறு பேர்களைப் பற்றி ஏதாவது தகவல் வந்துச்சா..?"

"இல்லை.."

"அவங்க ஆறு பேரும் உயிரோடு இருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா?"

"கண்டிப்பாக இருப்பாங்க."



"எனக்கு நம்பிக்கையில்லீங்க.."

"இதோ பார் தர்ஷிணி! என்னைக் காட்டிலும் உனக்குக் கடவுள் பக்தி அதிகம். உன்னோட வாயிலிருந்து அவங்க உயிரோடு இருக்க மாட்டாங்க என்கிற மாதிரியா வார்த்தைகள் வரக் கூடாது. அந்த ஆறு பேரும் உயிரோடு வரணும்ன்னு ப்ரே பண்ணிக்க.."

தர்ஷிணி ஏதோ பதில் சொல்ல வாயைத் திறந்த விநாடி பங்களாவின் காம்பௌண்ட் கேட் அருகே ஒரு டாக்ஸி வந்து சத்தமில்லாமல் நின்றது.

"தர்ஷிணி! யாரோ நம்ம வீட்டுக்கு வர்றாங்க... நீ போய் யார்னு பாரு.."

தர்ஷிணி சால்வையைச் சரியாகப் போர்த்திக் கொண்டு காம்பௌண்ட் கேட்டை நோக்கிப் போனாள். வினோத் ஷர்மா ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்று திரைச் சீலையைத் தள்ளி டாக்ஸியிலிருந்து இறங்கப் போகிற நபர் யார் என்று பார்த்தார்.

ஒரு பெண் சூட்கேஸோடு இறங்குவது தெரிந்தது. பணம் பெற்றுக் கொண்ட ட்ரைவர் டாக்ஸியை விரட்டிக் கொண்டு போய்விட, அந்தப் பெண் காம்பௌண்ட் கேட்டைத் திறந்தபடி உள்ளே நுழைந்தாள். தர்ஷினி எதிர் கொண்டாள்.

"யார் வேணும்..?"

"மிஸ்டர் வினோத் ஷர்மாவைப் பார்க்கணும்.."

"நீ யாரம்மா?"

"என் பேர் சமுத்ரா.."

தர்ஷிணி அவளை உற்றுப் பார்த்துவிட்டுக் கேட்டாள். "உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே?"

சமுத்ரா புன்னகைத்தாள்.

"நான் ஒரு டான்ஸர்..."

"பரத நாட்டியம்?"

"அதே.."

"உள்ளே வாம்மா..! டி.வி.யில் ஒரு தடவை உன்னோட டான்ஸ் ப்ரோக்ராமைப் பார்த்தேன். வெரி நைஸ்."

தர்ஷிணி சமுத்ராவை உள்ளே கூட்டிப் போக, வினோத் ஷர்மா எதிர் கொண்டார்.

"வாம்மா, சமுத்ரா.."

"சமுத்ராவை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?"

"தெரியும்.. தர்ஷிணி! மெட்ராஸ் ஏர் கிளப் கண்டக்ட் பண்ணிய ஒரு விழாவில் சமுத்ராவைப் பார்த்து இருக்கேன்."

சமுத்ரா வினோத் ஷர்மாவின் கால்களில் விழுந்து வணங்கினாள். "நல்லா யிரும்மா!" அவர் தலையைத் தொட்டதும் எழுந்தாள்.

"அங்கிள்.. அடுத்த மாதம் பத்தாம் தேதி வரைக்கும் உங்க வீட்லதான் நான் டேரா.."

"தாராளமா.. தாராளமா.."

"ஆன்ட்டி..! உங்களுக்கு ஏதாவது அப்ஜெக்ஷன்?"

தர்ஷிணி சிரித்தாள்.

"ஒரு அப்ஜெக்ஷனும் கிடையாது. எங்களுக்கு என்ன குழந்தையா குட்டியா...? இவ்வளவு பெரிய வீட்ல நானும் இவரும் மட்டும்தான் இருக்கோம்... நீ இப்ப என்ன சாப்பிடறே... காபியா.. டீயா?"



"ஒண்ணும் வேண்டாம், ஆன்ட்டி.."

"டீ கொண்டு வர்றேன்... சாப்பிடு.." நகர முயன்ற மனைவியை நிறுத்தினார் வினோத் ஷர்மா..

"தர்ஷிணி! ஒரு நிமிஷம் நில்லு."

"என்னங்க?"

"உன்கிட்டே சொல்ல வேண்டிய ஒரு முக்கியமான விஷயத்தை இப்பவே சொல்லிடறேன். சமுத்ரா அடுத்த மாதம் பதினஞ்சாம் தேதி கராச்சியில் நடக்க இருக்கிற இன்டர் நேஷனல் கல்சுரல் ப்ரோக்ராமில் கலந்துக்க இருக்கா! பட்.. இந்தியாவைச் சேர்ந்த யாரும் அந்த ப்ரோக்ராமில் கலந்துக்கக் கூடாது, மீறிக் கலந்துக்கிட்டா கராச்சியிலிருந்து அவங்க உயிரோடு திரும்பிப் போக மாட்டாங்கன்னு 'லிட்டில் டெவில்ஸ்' என்கிற இயக்கத்தைச் சேர்ந்தவங்க மிரட்டல் விடுத்து இருக்காங்க... அந்த தீவிரவாதிகளோட மிரட்டலுக்குச் சமுத்ரா பயப்படவில்லை. கராச்சியில் நடக்கப் போகிற கல்சுரல் ப்ரோக்ராமில் கலந்துகிட்டு வெற்றிகரமா டான்ஸ் பண்ணிட்டு தாயகம் திரும்பணுங்கிறது சமுத்ராவோட லட்சியம்."

"அதாவது தீவிரவாதிகளோட முகத்துல கரியைப் பூசணும்?"

"ஆமா..! சமுத்ரா கராச்சிக்குப் புறப்பட்டுப் போறதும் கராச்சியிலிருந்து திரும்ப வர்றதும் ரகசியமான முறையில வைக்கப்பட்டு இருக்கு. டெல்லியில் சமுத்ரா தங்க நம்ம வீட்டைக் காட்டிலும் பாதுகாப்பான இடம் வேற எதுவும்

இல்லை. சமுத்ராவை நம்ம வீட்டுக்குக் கூப்பிட்டதே நான்தான்.''

தர்ஷிணியின் முகத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் மாறி மாறித் தெரிந்தது.

''நிஜமாவா... இதை நீங்க முதலிலேயே என்கிட்டே ஏன் சொல்லலை?''

''சமுத்ரா வந்த பிறகு சொல்லிக்கலாம்னு இருந்துட்டேன்...'' வினோத் ஷர்மா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மறுபடியும் அவருடைய செல்போன் கூப்பிட்டது. எடுத்துக் காதுக்கு ஒற்றினார்.

''ஹலோ..''

''ஸார்.. நான் ரஞ்சித் குமார்..''

''சொல்லுங்கள், ரஞ்சித்குமார்... உங்களுடைய போனுக் காகத்தான் காத்துக் கொண்டு இருக்கிறேன்..''

''ஸார்.. நீங்கள் உடனே புறப்பட்டு டிஃபென்ஸ் காலனிக் குப் பக்கத்தில் இருக்கும் பழைய வனவியல் பூங்காவுக்கு வாருங்கள்...''

''என்ன விஷயம்..?''

''அந்த ஆறு பேரும் கிடைத்து விட்டார்கள்.''

''தேங்க் காட்..''

''இது சந்தோஷப்பட்டுக் கொள்ளக் கூடிய விஷயம் இல்லை ஸார்..''

''என்ன சொல்கிறீர்கள்... ரஞ்சித்குமார்? பேரா ட்ரூப்பைச் சேர்ந்த அந்த ஆறு பேரும் கிடைத்து விட்டார்கள்தானே..?''



''கிடைத்து விட்டார்கள் ஸார்.. ஆனால் உயிரோடு அல்ல...''

## 9

காலை பதினோரு மணி.

போலீஸ் கமிஷனர் அலுவலகம்.

கமிஷனர் பாலசிங்கம் ஒரு கேஸ் ஹிஸ்ட்ரி ஃபைலை மும்முரமாகப் படித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது வகுளாம்பரன் உள்ளே நுழைந்து சல்யூட் அடித்துத் தளர்ந்தார்.

''கூப்பிட்டீங்களா ஸார்?''

''உட்காருங்க, வகுளாம்பரன்.''

வகுளாம்பரன் உட்கார்ந்தார். பாலசிங்கம் ஃபைலினின்றும் பார்வையை எடுக்காமல் பேசினார்.

''இப்ப உங்களுக்கு முக்கியமான வேலை ஏதாவது இருக்கா, வகுளாம்பரன்?''

''சமுத்ராவுக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்பைப் பத்தி டிஸ்கஸ் பண்றதுக்காக செக்யூரிட்டி ஸ்க்வாட் லீடர் பன்னீர் செல்வத்தை வரச் சொல்லியிருந்தேன்.''

ஃபைலை மூடி வைத்தார் பாலசிங்கம். ஒரு சின்னப் புன்னகையோடு வகுளாம்பரனை ஏறிட்டார்.

''இனி சமுத்ராவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளை நாம பண்ண வேண்டியது இல்லை.''

வரவழைத்துக் கொண்ட அதிர்ச்சியோடு வகுளாம்பரன் நிமிர்ந்தார்.

''என்ன ஸார் சொல்றீங்க?''

''வெளியே யார்க்கும் இது தெரிய வேண்டாம்.. சமுத்ரா நேற்றைக்குச் சாயந்தர ஃப்ளைட் மூலமா டெல்லி கிளம்பிப் போயாச்சு.''

''ஸார், அவங்க ட்ரெய்ன்ல போறதா திட்டம் போட்டு இருந்தாங்களே..''

''உண்மைதான்! ட்ரெய்ன்ல போற திட்டத்தை ட்ராப் பண்ணிட்டு நேத்து சாயந்தரம் டெல்லி கிளம்பிப் போயிட்டாங்க.. டெல்லி போய்ச் சேர்ந்ததும் எனக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னாங்க.''

''டெல்லியில் அவங்க இப்போ எங்கே இருக்காங்க ஸார்..?''

''சொல்லலை..''

''எதுக்காக ஸார்.. இந்த திடீர்ப் பயணம்?''

''கேட்டேன்.. 'இந்திய உளவுத்துறை சென்னையில் இருக்க வேண்டாம், டெல்லிக்குப் புறப்பட்டுப் போய்டுங்க'ன்னு சொன்னாங்களாம்.''

வகுளாம்பரன் இறுகிய முகத்தோடு மௌனிக்க - கமிஷனர் தொடர்ந்தார். ''உளவுத் துறை நம்ம போலீஸ் டிபார்ட் மெண்ட்டுக்கு ஒரு ஃபேக்ஸ் நியூஸ் கொடுத்து இருக்காங்க.. அதைப் பத்திப் பேசத்தான் உங்களைக் கூப்பிட்டேன்.''

''ஃபேக்ஸ்ல என்ன செய்தி ஸார்?''

பாலசிங்கம் மேஜையின் இழுப்பறையைத் திறந்து அந்த ஃபேக்ஸ் செய்தியை எடுத்துக் கொடுத்தார்.



வகுளாம்பரன் வாங்கிப் பார்த்தார். ஆங்கிலத்தில் இருந்த அந்த ஃபேக்ஸ் செய்தியின் தமிழாக்கம் மனசுக்குள் ஓடியது.

''சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான ஆதம்பாக்கம் பகுதியில் தீவிரவாதக் கும்பலைச் சேர்ந்தவர்கள் விவசாயக் குடும்பம் போன்ற 'செட் அப்பில்' இருப்பதாகத் தகவல். குறிப்பாக ஆதம் பாக்கம் மெயின் ரோட்டில் 27 ஆவது கிலோ மீட்டரில் ஒரு ஆணும் பெண்ணும் விவசாய நிலம் ஒன்றைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அதில் ஒரு குடிசையையும் போட்டுக் கொண்டு விவசாயம் செய்கிற மாதிரி பாவ்லா செய்து தீவிர வாதத்தை வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களை உடனே அதிரடியாகக் கைது செய்து லாக்கப்புக்குக் கொண்டு வந்து விட்டால் பல உண்மைகளை வெளியே கொண்டு வந்து விடலாம்.''

ஃபேக்ஸ் செய்தியைப் படிக்கப் படிக்க வகுளாம்பரனுக்கு ரத்த ஓட்டம் அதிகரித்தது. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு மெல்ல கமிஷனரை ஏறிட்டார்.

''இந்தச் செய்தி உண்மையாய் இருக்குமானால்..?''

''உளவுத் துறை கொடுக்கிற செய்திகளில் பாதி 'காஸிப்' பாகத்தான் இருக்கும். எதுக்கும் ஆதம்பாக்கம் போய் அந்த ரெண்டு பேரையும் உரசிப் பார்த்துட வேண்டியதுதான்..''

வகுளாம்பரனுக்கு உள்ளங்கைகள் வியர்த்தன.

''எ.. எப்ப கிளம்பலாம் ஸார்?''

''இப்பவே..! பட் நீங்களும் நானும் போலீஸ் யூனிஃபார்மில் போகப் போறதில்லை.. சிவில் ட்ரஸ்..''

''போலீஸ் ஸ்க்வாட்..?''

"வேண்டாம்.. நீங்களும் நானும் மட்டும் அந்த ஆதம் பாக்கம் ஸ்பாட்டுக்குப் போறோம். நிலம் வாங்க வந்தவங்க மாதிரி நடிக்கறோம்.."

"....."

"என்ன வகுளாம்பரன்...! பேச்சையே காணோம்?"

"ச.. ச.. சரி.. ஸா.. ஸார்."

"என்ன பயப்படறீங்களா?"

"பயமில்ல ஸார்."

"பின்னே..?"

"ரிஸ்க் எடுக்க வேண்டாமேன்னு பார்க்கிறேன்.."

பாலசிங்கம் சிரித்தார். "போலீஸ் யூனிஃபார்மை என்னிக்கு போட்டுக்கிட்டோமோ அன்னியிலிருந்து ரிஸ்க்தான்.. நாம கைவீசிட்டுப் போகப் போறதில்லை. பிஸ்டலையும் எடுத்துக்கிறோம்... சூழ்நிலைகள் நமக்குப் பாதகமா மாறும் போது பிஸ்டலை உபயோகப்படுத்த வேண்டியதுதான். நீங்க உங்க அறைக்குப் போய் ட்ரஸ் சேஞ்ச் பண்ணிகிட்டு ஃப்ரண்ட் கேட்டுக்கு வாங்க.. ஒரு 'கால் டாக்ஸி' பிடிச்சு ஸ்பாட்டுக்குப் போயிடலாம்."

"எ..எ.. எஸ்..ஸார்." வகுளாம்பரன் எழுந்து கமிஷனர்க்கு மறுபடியும் ஒரு சல்யூட்டைக் கொடுத்துவிட்டு அறையி னின்றும் வெளிப்பட்டார். இதயத் துடிப்பு அதிகரித்தது.

'உளவுத் துறை எப்படியோ நிஷாரையும், ரேஷ்மியையும் மோப்பம் பிடித்து விட்டார்கள்..!'



'கமிஷனரும் நானும் ஸ்பாட்டுக்குப் போய்ச் சேர்வதற்குள் 'நிஷார் - ரேஷ்மி'க்கு விஷயத்தைத் தெரியப்படுத்தி விட வேண்டும்.'

வகுளாம்பரன் வேக வேகமாய் நடந்து அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் இருந்த தன்னுடைய அறையை நோக்கிப் போனார். அறைக்குள் டைப் அடித்துக் கொண்டிருந்த தன்னுடைய உதவியாளரை டீ வாங்கி வரச் சொல்லி அனுப்பிவிட்டு அட்டாச்ட் பாத் ரூமுக்குள் நுழைந்து தன்னுடைய செல்போனை எடுத்துக் கொண்டார். நிஷாரின் செல்போனுக்கு எண்களைத் தட்டினார்.

உடனே ரிக்கார்டட் வாய்ஸ் கேட்டது. 'நீங்கள் டயல் செய்த எண்ணுள்ள இந்த செல்போன் சந்தாதாரரை இப்போது தொடர்பு கொள்ள முடியாது.. சிறிது நேரம் கழித்துத் தொடர்பு கொள்ளவும்."

வகுளாம்பரனுக்கு எரிச்சலாய் வந்தது. அந்தக் குடிகார நிஷார் நன்றாய்க் குடித்து விட்டு செல்போனையும் அணைத்துவிட்டுத் தூங்கிக் கொண்டிருப்பான்.. ரேஷ்மி வயல் வெளியில் இருக்கலாம்.

நான்கைந்து தடவை செல்லில் முயற்சி செய்து பார்த்து விட்டுக் குளியலறையை விட்டு வெளியே வந்தார். யூனிஃபார்மைக் களைந்துவிட்டு வெள்ளை பேண்ட் வெள்ளை சார்ட்டுக்கு மாறி மறுபடியும் ஒரு தடவை செல்லில் நிஷாரைப் பிடிக்க முயன்றார்.

அதே ரிக்கார்டட் வாய்ஸ்தான் கேட்டது. 'இந்த செல்போன் சந்தாதாரரை இப்போது தொடர்பு கொள்ள முடியாது.'

உதவியாளர் டீ கோப்பையோடு வந்தார்.

''ஸார்.. டீ.''

''எனக்கு வேண்டாம்..''

''கேட்டீங்களே ஸார்?''

''அப்ப கேட்டேன். இப்ப வேண்டாம்.. நீயே குடி..''

வகுளாம்பரன் எரிச்சலாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும் போது இண்டர்காம் கிணுகிணுத்துக் கூப்பிட்டது. ரிஸீவரை எடுத்தார்.

காதுக்குக் கொடுத்தார்.

மறுமுனையில் கமிஷனர் பாலசிங்கம்.

''என்ன வகுளாம்பரன்! ரெடியாயிட்டீங்களா?''

''வந்துட்டே இருக்கேன் ஸார்..''

'வாங்க! நாம எதுக்காக வெளியே போறோம்ன்னு யார்கிட்டேயும் சொல்லாதீங்க...''

''எனக்குத் தெரியாதா ஸார்?''

''வாங்க.. ஃப்ரன்ட் கேட்ல வெயிட் பண்றேன்.''

கமிஷனர் ரிஸீவரை வைத்துவிட வகுளாம்பரனும் ரிஸீவரை வைத்து விட்டு படிகளில் வேகமாய் இறங்கி அலுவலகத்தின் ஃப்ரன்ட் கேட்டுக்கு வந்தார். 'அரோமா கால் டாக்ஸி' காத்திருந்தது. பக்கத்திலேயே பாலசிங்கம், வேஷ்டியும் சட்டையும் அணிந்து பவர் கிளாஸ் ஸ்பெக்ஸோடு வித்தியாசமாய்த் தெரிந்தார்.

இருவரும் டாக்ஸியின் பின் சீட்டில் ஏறிக் கொள்ள ட்ரைவர் டாக்ஸியை நகர்த்தினார். டாக்ஸி நூறு மீட்டர் தூரம்



நகர்ந்திருந்த போது வகுளாம்பரனின் செல்போன் எலக்ட்ரானிக் முனகலை வெளியிட்டது.

மனசுக்குள் ஒரு திடுக்!

'அழைப்பது யார்?'

'ஒருவேளை நிஷாரோ?'

செல்போன் எடுத்து டிஸ்ப்ளேயில் எண்களைப் பார்த்தார் வகுளாம்பரன்.

அழைத்தது நிஷார்தான்!

## 10

டெல்லியின் அந்த விடிந்தும் விடியாத வைகறை வேளையில் ராணுவ ஜீப்பில் புயலாய்ப் பயணித்துக் கொண்டிருந்தார் வினோத் ஷர்மா. பக்கத்தில் ஏர் கமேண்டர் ப்ரசன்னா.

செல்போனில் ரஞ்சித்குமார் சொன்ன வார்த்தைகள் ஷர்மா மனசுக்குள் ரணமாய் வலித்துக் கொண்டிருந்தது.

''ஆறு பேரும் கிடைத்து விட்டார்கள் ஸார். ஆனால் உயிரோடு அல்ல!''

ப்ரசன்னா புலம்பிக் கொண்டே வந்தார்.

''ஸார்..! பேரா ட்ரூப்பைச் சேர்ந்த ஆறு பேரைப் பாகிஸ்தான் தீவிரவாதம் பலி கொண்டது நமக்குக் கிடைத்த பெரிய தோல்வி.''

வினோத் ஷர்மா பெருமூச்சு விட்டார். "எவ்வளவோ ஜாக்கிரதையாகச் செயல்படுகிறோம். தீவிரவாதிகள் நம்மைக் காட்டிலும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். இந்திய மண்ணை உயிர்க்கு உயிராய் நேசித்த ஆறு இளைஞர்கள் இப்போது உயிரோடு இல்லை."

"ஸார்! இந்த விபரீதத்துக்கெல்லாம் காரணம் என்ன என்பதை உங்களால் கெஸ் ஒர்க் பண்ண முடிகிறதா?"

"ஓரளவுக்கு.."

"என்ன காரணம் ஸார்..?"

"நம் ராணுவத்திலும் அரசியல் நுழைந்து விட்டது. ராணுவத்தின் உயர் மட்ட அதிகாரிகள் பலரிடம் நாட்டுப் பற்று என்பது மருந்துக்குக் கூட கிடையாது. மது அருந்திவிட்டுக் கேளிக்கைகளில் ஈடுபடும் போது லட்சக்கணக்கில் கிடைக்கும் டாலர்களுக்கு ஆசைப்பட்டு ராணுவ ரகசியங்களை மற்ற நாடுகளுக்குத் தாரை வார்த்து விடுகிறார்கள்."

"இதைத் தடுக்க என்ன ஸார் வழி?"

"தெரியவில்லை. என்ன செய்வது என்று புரியவில்லை. நம் நாட்டைத் தீவிரவாதத்திலிருந்து காப்பாற்ற நாம் நிறைய கஷ்டப்பட வேண்டியிருக்கும்."

"ஸார்.. பாகிஸ்தானின் பே ஆஃப் சாகர் கடலில் 'பேரடைஸ் கீ' எனப்படும் லைட்னிங் பாம்களைக் கர்ப்பம் தாங்கியிருக்கும் கப்பலை அழிக்க நாம் மேற்கொண்டு என்ன செய்யப் போகிறோம்?"

"ராணுவ ரீதியாய் நாம் எதைச் செய்தாலும் அந்த நிமிஷமே அந்த எதிரிகளின் காதுகளுக்குப் போய் விடுகிறது.



பாகிஸ்தானிடம் இருக்கும் லைட்னிங் பாம்களை இப்போதைக்கு அழிக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம்... ராணுவ மந்திரியோடு கலந்து பேசிவிட்டுத்தான் வேறு ஒரு முடிவு எடுக்க வேண்டும்.."

ராணுவ ஜீப் தன் புயல் வேகப் பயணத்தை முடித்துக் கொண்டு டிஃபென்ஸ் காலனிக்குப் பின்பக்கம் இருந்த பழைய வனவியல் பூங்காவுக்குள் நுழைந்து நின்றது. ப்ளட் லைட் வெளிச்சத்தில் அந்தப் பூங்கா நிரம்பியிருக்க ராணுவ அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் சமமாய்க் கலந்து பார்வைக்குக் கிடைத்தார்கள். வினோத் ஷர்மாவைப் பார்த்ததும் பேசிக் கொண்டிருந்தவர்கள் பேச்சை நிறுத்த... திடும்மென்று ஒரு அசாதாரண அமைதி நிலவியது.

ரஞ்சித்குமார் வியர்வை பூத்த முகமாய் எதிர்கொண்டார்.

"ப்ளீஸ்... கம் திஸ் சைட் ஸார்." இரண்டடி முன்னால் நடந்து கூட்டிப்போனார். பூங்கா சிதிலமாய் இருந்தது. அநேகமாய்க் காய்ந்த செடிகள், பட்டுப் போன மரங்கள்..

வினோத் ஷர்மா உடைந்த குரலில் தொண்டை அடைத்துக் கொள்ளக் கேட்டார்.

"ஆறு பேரும் எப்படிக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்? துப்பாக்கியா?"

"இல்லை ஸார்.."

"பின்னே கத்தியால் குத்தப்பட்டா..?"

"இல்லை ஸார்.." சொல்லிக் கொண்டே ரஞ்சித்குமார் அந்தப் பெரிய ஆலமரத்துக்கு முன்பாய்க் கொண்டு போய் நிறுத்தினார். வலது கையை உயர்த்திக் காட்டினார்.

''பாருங்கள் ஸார்..''

வினோத் ஷர்மா தலையை உயர்த்தினார்.

இருதயத்தின் மையத்தில் பூகம்பம் நிகழ்ந்த உணர்வு. ஆலமரத்தின் கிளைகளில் அந்த ஆறு பேர்களின் உடல்களும் சலனமில்லாமல் தொங்கிக் கொண்டிருந்தன. கைகளும் கண்களும் பின்பக்கம் கட்டப்பட்டிருக்க, தலைகள் மொட்டையடிக்கப்பட்டுத் தெரிந்தன.

'ஹாரிபிள்!' என்று பற்களைக் கடித்துக் கண்களை மூடிக் கொண்டார் வினோத் ஷர்மா.

தன் இடது உள்ளங்கையைக் குவித்து வலது உள்ளங்கையில் ஆத்திரத்தோடு குத்திக் கொண்டார். அப்படியே சில விநாடிகள் நின்றார்.

''ஸார்!'' ரஞ்சித்குமாரின் குரல் கேட்டதும், கண்களைத் திறந்தார். அவருடைய கையில் ஒரு கடிதம் இருந்தது.

''என்ன..?''

''இது 'லிட்டில் டெவில்ஸ்' தீவிரவாதிகளின் கடிதம் ஸார். தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கும் அல்போன்ஸ் டேவிட் காலின் பெரு விரலில் இந்தக் கடிதம் கட்டப்பட்டிருந்தது ஸார்.''

வினோத் ஷர்மா அந்தக் கடிதத்தை வாங்கினார். ஹிந்தியும் உருதுவும் கலந்த மொழியில் ஒரு பத்து வரிகள் கிறுக்கப்பட்டிருந்தன.

நாங்கள் கடவுளுக்கு நெருக்கமானவர்கள்.

எனவே சொன்னதைச் சொன்னபடி செய்து

முடித்து இருக்கிறோம். இது உங்களுக்குப்

போராட்டம். எங்களுக்கு இது புனிதப் போர்.



இந்தப் புனிதப் போரில் வெல்லப் போகிற

எங்களோடு தோற்றுப் போகப் போகிற நீங்கள்

பணிந்து போய் விடுவது நல்லது. இல்லையேல்

இந்திய ராணுவத்தில் இருக்கிற ஒவ்வொருவரும்

இப்படி மரங்களில் தொங்க வேண்டியிருக்கும்.

- லிட்டில் டெவில்ஸ்

கடிதத்தை இரண்டு தடவை படித்த வினோத் ஷர்மா கண்கள் சிவந்தார். கடைவாய்ப் பற்கள் கோபமாய் அரைபட்டன.

''ரஞ்சித்குமார்.''

''ஸார்..!''

''இந்த 'லிட்டில் பிளவர்' ஸுக்கு நாம் பாடம் கற்பித்தேயாக வேண்டும். இயக்கத்தின் ஆணி வேர் டெல்லியின் எந்தப் பாகத்தில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டிய வேலை உங்களுடையது.''

''எஸ்..ஸார்..''

''இனி நாம் கையைக் கட்டிக் கொண்டு சும்மாயிருக்க முடியாது. விஸ்வரூபம் எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு வந்துவிட்டோம். புனிதப் போர் என்ற பெயரில் அவர்கள் நடத்தும் ரௌடிஸத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தேயாக வேண்டும்...!'' வினோத் ஷர்மா ஆவேசமாய் -ஆக்ரோஷமாய்ப் பேசிக் கொண்டு இருக்கும் போதே -

ஆறு பேர்களின் உடல்கள் போலீஸாரால் மரக்கிளைகளிலிருந்து மெதுவாய்க் கீழே கிடத்தப்பட்டன. மொட்டை அடிக்கப்பட்ட தலைகளில் சிவப்பு பெயிண்ட்டால் எழுதப்

பட்ட எழுத்துக்கள் 'பளிச்' சென்று தெரிந்தன. வினோத் ஷர்மா பக்கத்தில் போய்ப் படித்தார். உதடுகளும் இதயமும் நடுங்கின.

ஒரு இந்தியனாய்ப் பிறந்து விட்டதுக்காக
நான் வெட்கப்படுகிறேன்.
அடுத்த மொட்டைத் தலையில்-
பாவங்களில் பெரிய பாவம்
இந்தியனாய்ப் பிறப்பது.
மூன்றாவது மொட்டைத் தலையில்-
இந்த மரணம் எனக்கு வேண்டியதுதான்.
நான்காவது தலையில் -
புனிதப் போர் தொடரும்.
ஐந்தாவது தலையில் -
இந்தியாவை நசுக்குவோம்.
ஆறாவது தலையில் -
ஒவ்வொரு இந்தியனும் எங்களுக்கு எதிரி.

வாசகங்களைப் படிக்கப் படிக்க வினோத் ஷர்மாவின் விழிகளில் சிவப்பேறியது.

## 11

சென்னை-

'கால் டாக்ஸி' போய்க் கொண்டிருக்க - வகுளாம்பரன் யோசித்தார்.

'என்ன செய்யலாம்... நிஷாரோடு பேசலாமா வேண்டாமா..?'

பக்கத்தில் உட்கார்ந்திருந்த கமிஷனர் பாலசிங்கம் கேட்டார். ''என்ன யோசனை வகுளாம்பரன்...? செல்போன்ல யாரோ



கூப்பிடறாங்க... பேசுங்க..! டிஸ்பிளேயில் டிபார்ட்மெண்ட் காலான்னு பாருங்க.''

''இல்லை.. ஸார்.. இது என்னோட ப்ரண்ட்...''

''பேசுங்க.. கார்ல இன்னும் அரை மணி நேரம் ஜர்னி இருக்கே..?''

வகுளாம்பரன் தயங்கிக் கொண்டே செல்போனைக் காதுக்குக் கொடுத்தார். ''ஹலோ.''

மறுமுனையில் மவுனம்.

''ஹலோ.''

மௌனம்.

ஒரு நிமிஷ நேரம் குரல் கொடுத்துப் பார்த்துவிட்டு செல்போனை அணைத்தார் வகுளாம்பரன்.

''என்னாச்சு வகுளாம்பரன்..?''

''லைன் கட்டாயிடுச்சு ஸார்..''

''வெயிட் பண்ணுங்க.. மறுபடியும் கால் வரும்..''

வகுளாம்பரன் செல்போனை இடது உள்ளங் கையில் அதக்கியபடி வைத்துக் காத்திருக்க டாக்ஸி இப்போது கடற்கரை சாலைக்கு வந்து காற்றைக் காயப்படுத்திக் கொண்டு ஓடியது.

ஒரு நிமிஷம்.

இரண்டு நிமிஷம்.. ஐந்து.. பத்து... பதினைந்து.

மறுபடியும் நிஷாரிடமிருந்து போன் வரவில்லை.

வகுளாம்பரனுக்குக் குழப்பமாய் இருந்தது.

''எனக்கு போன் செய்த நிஷார் ஏன் பேசவில்லை...? லைன் கட்டாகியிருந்தால் மறுபடியும் போன் செய்து இருக்கலாமே!'

வகுளாம்பரன் குழப்பத்தில் இருக்கும் போதே ஆதம் பாக்கம் வந்தது.

டிரைவர் திரும்பிப் பார்த்துக் கேட்டார்.

''எந்த இடம் ஸார்..?''

''ஊரைத் தாண்டி அவுட்டர்க்குப் போகணும். அவுட்டரில் மெயின் ரோட்டோரமாய் சென்னை 27 கி.மீ.ன்னு எழுதப்பட்ட ஒரு மைல் கல் இருக்கும். அங்கே டாக்ஸியை நிறுத்திக்க..''

''சரி..ஸார்..''

டிரைவர் டாக்ஸியை விரட்ட அடுத்த பத்தாவது நிமிடம் ரோட்டோரப் புளியமரத்துக்குக் கீழே சென்னை 27 கி.மீ. என்று எழுதப்பட்ட மைல் கல் தெரிந்தது. டாக்ஸி புளிய மர நிழலில் போய் நின்று நிசப்தமாக, கமிஷனர் பாலசிங்கமும் வகுளாம்பரனும் இறங்கினார்கள்.

ரோட்டோரமாய் மெல்ல நடந்தார்கள். பாலசிங்கம் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு கொஞ்சம் தள்ளி வயலின் மையத்தில் இருந்த அந்த வீட்டைச் சுட்டிக் காட்டினார்.

''அந்த வீடாகத்தான் இருக்கும்னு நினைக்கிறேன்.''

வகுளாம்பரனுக்குள் இருதயம் உதைத்துக் கொண்டது. பிடரியில் வியர்த்தது.

நிஷாரும் ரேஷ்மியும் வீட்டுக்குள் இருப்பார்களா? இல்லை... வெளியே போயிருப்பார்களா?

வெளியே போயிருந்தால் பரவாயில்லை. இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொண்டு விடலாம்!

''என்ன வகுளாம்பரன்! சைலன்டாகவே வர்றீங்க... உடம்புக்கு ஏதாவது முடியலையா?''



''அதெல்லாம் ஒண்ணுமில்லை ஸார்..''

''நோ.. நோ.. நீங்க கொஞ்சம் அப்செட்டான மூடில் இருக்கீங்க... எனி ப்ராப்ளம்?''

''ஒரு ப்ராப்ளமும் இல்லை ஸார்..''

''ஆர்.. யூ.. ஷ்யூர்?''

''ஷ்யூர்.. ஸார்..''

ரோட்டைக் கடந்தார்கள். ரோட்டையொட்டி முட்செடி களுக்கு நடுவில் ஒற்றையடிப் பாதையொன்று பிறந்து உள்ளே போயிற்று. நுழைந்தார்கள். சூழ்நிலை அமைதியாய் இருந்தது. தொழுவத்தில் கட்டிப் போட்டிருந்த மாடு ஒன்று அவர்களையே இமைக்காமல் பார்த்தது. கோழிகள் மேய்ந்து கொண்டிருக்க... பாலசிங்கம் குவித்து வைக்கப்பட்டிருந்த வைக்கோல் போரையொட்டி நடந்து போய் அந்த ஓட்டு வீட்டுக்கு முன்பாய் நின்றார்.

கதவு சாத்தியிருந்தது.

வகுளாம்பரன் இயல்பாய் இருக்க முயற்சித்தாலும், உடம்புக்குள் பரவியிருந்த பதட்டம் அவரை வியர்க்க வைத்தது. என்றைக்கும் நினைத்துப் பார்த்திராத கடவுளை வேண்டிக் கொண்டார்.

'கடவுளே! வீட்டுக்குள் நிஷாரும் ரேஷ்மியும் இருக்கக் கூடாது. அவர்கள் வெளியே போயிருக்க வேண்டும்..!'

பாலசிங்கம் குரல் கொடுத்தார்.

''வீட்ல யாரு..?''

உள்ளேயிருந்து பதில் வருவதற்காகக் காத்திருந்தார். அரை நிமிஷ நேரம் அவகாசம் கொடுத்துவிட்டுத் தட்டுவதற்காகக்

கதவின் மேல் கையை வைத்தார். கதவு அப்படியே பின் வாங்கிக் கொண்டது.

கமிஷனர் எட்டிப் பார்த்தார். கொஞ்சம் பலமாய்க் குரல் கொடுத்தார். ''உள்ளே யாரு..?''

வீட்டுக்குள் கனத்த மௌனம் நிலவவே - வகுளாம்பரனின் மனத்துக்குள் ப்ளாட்டிங் பேப்பரில் பட்டுவிட்ட மைத் துளியாய் மகிழ்ச்சி பரவியது. நிஷாரும் ரேஷ்மியும் வெளியே போயிருக்கிறார்கள். இனிக் கவலையில்லை. தப்பித்து விடலாம்!

பாலசிங்கம் மேவாயைத் தடவினார்.

''வீட்டுக்குள்ளே யாரும் இல்லே போலிருக்கே?''

''உள்ளே போய்ப் பார்க்கட்டுமா ஸார்..?''

''வாங்க.. ரெண்டு பேருமே உள்ளே போவோம்... எதுக்கும் பிஸ்டலை அலெர்ட்ல வையுங்க.''

இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அந்தப் பகல் நேரத்திலும் வீட்டுக்குள் மெலிதாய் ஒரு இருட்டுப் பரவியிருந்தது. ஜன்னல்கள் சாத்தப்பட்டிருக்க மேற் கூரையிலிருந்து கிடைத்த ஒரு இடைவெளி வழியாகச் சூரியக் கதிர் ஒன்று பாய்ந்து தரையைத் தொட்டிருந்தது. வீட்டின் மையத்துக்குப் போய் நின்று கொண்ட கமிஷனர் பார்வையை எல்லாப் பக்கமும் துரத்தி விட்டுக் கொஞ்சம் தள்ளித் தெரிந்த சமையலறையை நோக்கி நடந்தார்.

கால்களில் எதுவோ பட்டு உருண்டது.

''கட.. கட... கட...''

கையில் எடுத்தார்.



காலியான பீர் பாட்டில்.

கமிஷனரின் உதட்டில் புன்னகை அரும்பியது.

''பார்த்தீங்களா..வகுளாம்பரன்! நாம சந்தேகப்பட்டது சரியாயிடுச்சு. இது உண்மையிலேயே விவசாயக் குடும்பம் கிடையாது. உளவுத் துறை கொடுத்த ரிப்போர்ட் சரிதான் போலிருக்கு. சம்திங் ராங்.. வீட்டை தரோவா செக் பண்ணிட வேண்டியதுதான்...'' சொல்லிக் கொண்டே சமையலறைக்குப் போய் மெல்ல எட்டிப் பார்த்தார். கண்கள் திக்கித்துப் போயிற்று.

''வ.. வ.. வகுளாம்பரன்..''

''ஸா..ஸார்..''

''இ.. இ.. இங்கே வந்து பாருங்க..''

வேகமாய்ப் போய்ச் சமையலறையை எட்டிப் பார்த்தார் வகுளாம்பரன்.

நிஷாரும் ரேஷ்மியும் ரத்த வெள்ளத்தில் மல்லாந்து கிடந்தார்கள். உருண்டு கிடந்த பாத்திரங்களில் ரத்தம் புள்ளி புள்ளியாய்த் தெறித்து இருந்தது.

## 12

டெல்லி

அந்த நள்ளிவு நேரத்தில் வினோத் ஷர்மாவின் கார் ராணுவ அமைச்சரின் பங்களவுக்குள் நுழைந்தது.

நிசப்தமான பங்களா. செக்யூரிட்டி ஆபீஸர் ஒருவர் காரின் கதவைத் திறந்து விட்டு சல்யூட் வைத்தார். வினோத் ஷர்மா கீழே இறங்கினார். செக்யூரிட்டி அதிகாரி பவ்யமாய்க் குனிந்து, ''ப்ளீஸ் ஃபாலோ மீ.. ஸார்...'' என்று சொல்லி பங்களாவுக்குள் கூட்டிப் போனார்.

மெலிதான வெளிச்சம் பரவியிருந்த இருட்டான ஹாலில் நடந்து -ஹாலின் மையத்தில் இருந்து பிரிந்து போன மாடிப் படிகளில் ஏறினார்கள். ஒரு நிமிஷ நடைக்குப் பின் அகலமான தேக்குக் கதவுக்கு முன்பாய் நின்றார் செக்யூரிட்டி ஆபீஸர்.

''அமைச்சர் உள்ளே இருக்கிறார். நீங்கள் உள்ளே போய்ச் சந்திக்கலாம்.''

சொல்லிவிட்டு அவர் நகர்ந்து விட - வினோத் ஷர்மா கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்.

மிதமான வெளிச்ச அறையில் ராணுவ அமைச்சர் மகாவீர் சச்சிதானந்த் நைட் கவுன் அணிந்து சோபாவுக்குச் சாய்ந்து தெரிந்தார். 60 வயது. வழுக்கைத் தலை.

ராணுவ முறைப்படி சல்யூட் தெரிவித்த வினோத் ஷர்மா வைப் புன்னகையோடு பார்த்தார் மகாவீர். கையசைத்தார்.

''உட்காருங்கள் ஷர்மா..''

வினோத் ஷர்மா எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார். மகாவீர் கேட்டார்: ''ஏதாவது சாப்பிடுகிறீர்களா?''

''இந்த அகால நேரத்தில் எதுவும் சாப்பிடும் வழக்கம் இல்லை.''

''நல்லது...'' என்ற மகாவீர் அதே புன்னகையோடு தொடர்ந்தார். ''மிஸ்டர் ஷர்மா...! ஒரு ராணுவ விமானப் படையில் தற்போது நடந்து கொண்டிருக்கிற சம்பவங்களைப் பற்றியும், இனிமேல் நடக்கப் போகிற சம்பவங்களைப் பற்றியும் நம் ஏர் மார்ஷல் மால்கம் ஆதிகேசவ் என்னிடம் சொன்னதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டுப் போனேன். அதற்கான திட்டங்களையெல்லாம் நீங்கள்தான் தயாரித்தீர்களாமே..?''

''ஆமாம் ஸார்..''



''பேராட்ரூப்பைச் சேர்ந்த ஆறு பேர்களான ஜோத்சிங், ஹரி கிருஷ்ணன், அரவிந்த மேனன், அல்போன்ஸ் டேவிட், கருப்புசாமி, சைலேஷ் குமார் இவர்கள் உண்மையில் இந்தியர்கள் கிடையாது என்கிற உண்மையும், பத்து வயதி லேயே இந்தியாவுக்குள் நுழைந்து இந்தியப் பெயர்களையும் போலிச் சான்றிதழ்களையும் வைத்துக்கொண்டு ரகசியமாகப் பாகிஸ்தான் தீவிரவாதிகளிடம் பயிற்சி பெற்று இந்திய ராணுவத்தில் சேர்ந்தவர்கள் என்கிற உண்மையும் உங்களுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது..?''

'அந்த உண்மை வெளிப்படக் காரணம் சமுத்ரா ஸார்..'

''யூ.. மீன் அந்தப் பரத நாட்டிய டான்ஸர்?''

''எஸ்.. ஸார்..''

வினோத் ஷர்மா தொண்டையைச் செருமிக் கொண்டு தொடர்ந்தார்.

''ஸார்..! அந்த ஆறு பேர்களில் ஒருவனான சைலேஷ்குமார்க்கும் டான்ஸர் சமுத்ராவுக்கும் இடையில் காதல் இருந்தது. ஆழமான காதல். இன்னும் ஒரு வருடம் கழித்து இருவரும் திருமணம் செய்து கொள்ளவும் இருந்தார்கள். சென்னையில் இருக்கும் சமுத்ரா நடன நிகழ்ச்சிகளுக்காக அடிக்கடி டெல்லி வரும்போது இருவரும் சந்தித்துக் கொள்வார்கள். அந்த நெருக்கமான பழக்கத்தின் காரணமாகச் சமுத்ராவுக்கு சைலேஷ்குமாரிடம் சில நெருடல்கள் ஏற்பட்டது. இந்தியாவை உயிர்க்கு உயிராய் நேசிப்பதாய் சைலேஷ்குமார் வெளியே கூறிக் கொண்டாலும் அவனுடைய உள் மனசில் இந்தியாவின் மேல் தீராத வெறுப்பு இருப்பதைப் பழகிய ஆறு மாதத்துக்குள்ளேயே சமுத்ரா கண்டு பிடித்துவிட்டாள். ஒரு தடவை இருவரும் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த போது அறையில் ஒன்றாய் உட்கார்ந்து டி.வி.யில்

கிரிக்கெட் மேட்ச் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மேட்ச் நடந்து கொண்டிருந்தது. மேட்ச்சில் இந்தியா வெற்றி பெறும் வாய்ப்போடு முன்னேறிக் கொண்டிருக்க - சைலேஷ்குமார் வெளியே புன்னகைத்துக் கொண்டிருந்தாலும் உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருந்திருக்கிறான். அதைக் கவனித்த சமுத்ரா சைலேஷ்குமாரின் உண்மையான சுயரூபத்தைத் தெரிந்து கொள்வதற்காகக் குளிக்கப் போவதாகச் சொல்லி விட்டு பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு சாவித் துவாரத்தின் வழியாக சைலேஷ்குமாரின் ரியாக்ஷனைக் கவனித்து இருக்கிறாள். இந்தியா ரன்களைக் குவிக்கக் குவிக்க சைலேஷ் குமரர் முகம் சிவந்து போய் வெறி பிடித்தவன் போல் நகம் கடித்துத் துப்பியிருக்கிறான். மேட்ச் முடிந்தது. இந்தியா வெற்றி பெற்றபோது, ஆத்திரம் தாளாமல் எழுந்து போய் டி.வி.யைத் தூக்கிப் போட்டு உடைத்து இருக்கிறான். சமுத்ரா வெளியே வந்து டி.வி. எப்படி உடைந்தது என்றுகேட்க - நடக்கும் போது தெரியாமல் போய் மோதி விட்டேன் என்று பொய் சொல்லி ஹோட்டலில் பதினைந்தாயிரம் ரூபாயை டி.வி. உடைத்ததற்காகக் கொடுத்து இருக்கிறான். இந்த சம்பவத்துக்குப் பிறகு சமுத்ரா சைலேஷ்குமாரிடம் அதிகமாக நெருங்காமல் பழகி வந்து இருக்கிறாள். இந்திய விமானப் படையில் வேலை செய்யும் சைலேஷ் குமார்க்கு இந்திய துவேஷம் இருப்பது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று உணர்ந்த சமுத்ரா, நான் ஒரு தடவை சென்னையில் இருந்தபோது என்னை ரகசியமாய்ச் சந்தித்து சைலேஷ் குமாரைப் பற்றி சொன்னாள். நான் உடனே உஷாரானேன். இந்த விஷயத்தை வேறு யார்க்கும் தெரியப்படுத்தாமல் நானே அவனைக் கண்காணிக்க ஆரம்பித்தேன். கிட்டத்தட்ட மூன்று மாதக் கண்காணிப்புக்குப் பிறகு சைலேஷ் குமார் போலவே



இன்னும் ஐந்து பேர் பேரா ட்ரூப்பில் இருப்பதைக் கண்டுபிடித்தேன். ஜோத்சிங், ஹரிகிருஷ்ணன், அரவிந்த மேனன், அல்போன்ஸ் டேவிட், கருப்புசாமி என்கிற ஐந்து பேரும் சைலேஷ்குமாரோடு சேர்ந்து கொண்டு இந்திய விமானப் படையில் வேலை பார்த்துக் கொண்டே இந்திய உணவைச் சாப்பிட்டுக் கொண்டே பல சதித் திட்டங்களைத் தீட்டி வைத்து இருந்தனர். ராணுவ பேரக்ஸ்களில் உள்ள குடிநீர்த் தொட்டிகளில் விஷத்தைக் கலப்பது, ராணுவ உயர் அதிகாரிகளை விபத்து என்கிற போர்வையில் கொலை செய்வது, குடியரசு தினக் கொண்டாட்டங்களின் போது வெடிகுண்டு வைப்பது, வன்முறையைத் தூண்டி விடுவது, எல்லாவற்றுக்கும் மேலாக ராணுவ அமைச்சராக உள்ள உங்களைக் கொல்வது.''

விணோத் ஷர்மா சொல்லச் சொல்ல -

மகாவீர் உறைந்து போக - ஷர்மா தொடர்ந்தார்.

''இப்படிப்பட்ட சதித்திட்டங்களோடு விமானப் படைக்குள் ஊடுருவி விட்ட இவர்களை உடனடியாய்க் கைது செய்து ராணுவ கோர்ட்டில் கொண்டு போய் நிறுத்த நினைத்தேன். ஆனால் இவர்களை 'ஷேடோ அப்ஸர்விங்' செய்தபோது கராச்சியில் உள்ள 'லிட்டில் டெவில்ஸ்' என்ற தீவிரவாத அமைப்புக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. அவர்களுடைய வயர்லஸ் பேச்சுக்களை வழிமறித்துக் கேட்டதில் பாகிஸ்தானிடம் லைட்னிங் பாம்கள் இருப்பதும் அவை 'பே ஆஃப் சாகர்' கடல் பகுதியில் உள்ள 'ஸீ-ரோஸ்' என்னும் கப்பலில் மறைத்து வைக்கப்பட்டு இருப்பதும் தெரிய வந்தது. நமக்கு வேண்டிய எல்லா விஷயங்களும் கிடைத்த பிறகு இனி இந்த ஆறு பேரும் தேவையில்லை என்கிற முடிவுக்கு வந்தேன். இவர்களுடைய மரணம் பாகிஸ்தான் ராணுவத்துக்கும் 'லிட்டில் டெவில்ஸ்' தீவிரவாத

அமைப்புக்கும் அதிர்ச்சி அளிக்க வேண்டும் என்பதற்காகவே லைட்னிங் பாம்களை அழிப்பதற்காக 'மனித வெடிகுண்டுகள்' என்கிற நாடகத்தைப் போட்டேன். அந்த ஆறுபேரையும் நான் மனித வெடிகுண்டுகளாகத் தேர்ந்து எடுத்ததும் அவர்கள் சந்தோஷப்படுவதைப் போல் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் பெரிய அதிர்ச்சி. போலி மகிழ்ச்சியோடு, 'பாரத அன்னைக்கு எங்களுடைய உயிரை யும் கொடுப்போம்!' என்று சொன்னார்கள். அந்த ஆறு நச்சுப் பாம்புகளையும் தீர்த்துக் கட்டும் பொறுப்பை என்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான இரண்டு முக்கிய அதிகாரிகளிடம் கொடுத்தேன். அவர்கள் அந்த ஆறு பேர்க்கும் துல்லியமாய் மரண தண்டனைகளை நிறைவேற்றினார்கள். மொட்டை யடித்தார்கள். இந்தியாவுக்கு எதிரான வாசகங்களைச் சிவப்பு பெயின்ட்டால் அந்த மொட்டைத் தலைகளில் எழுதி வைத்தார்கள்.''

''இந்தக் கொலைகளை நாங்கள் செய்யவில்லை என்று 'லிட்டில் டெவில்ஸ்' இயக்கம் சொல்லியிருக்கிறதே..?''

''யார் நம்பப் போகிறார்கள்..? திருடனுக்குத் தேள் கொட்டியது போல் இறந்து போன ஆறு பேரும் எங்களுடைய ஆட்கள் என்று அவர்களால் சொல்ல முடியாதே..!''

''மிஸ்டர் வினோத் ஷர்மா..! இதே 'லிட்டில் டெவில்ஸ்' இயக்கத்தைச் சேர்ந்த நிஷார், ரேஷ்மி என்கிற இரண்டு பேர் சென்னையில் புறநகர்ப் பகுதியில் இருந்த ஒரு வீட்டில் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததாகத் தகவல் வந்துள்ளது. அந்த இரண்டு பேர்களின் மரணங்களுக்கும் நாம்தான் காரணமா..?''

''கிடையாது. . அந்த இரண்டு கொலைகளுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது புலன் விசாரணைக்குப் பின் தெரிய வர வாய்ப்பு உள்ளது ஸார்..''



''மிஸ்டர் ஷர்மா! உங்களுடைய அடுத்த கட்டத் திட்டம் என்ன..?''

''நம் இந்திய ராணுவத்துக்குள் இன்னும் சில விஷப் பாம்புகள் இருக்கின்றன ஸார். அந்தப் பாம்புகளை ஒழித்துக் கட்டினாலே போதும் - வெளியிலிருந்து நமக்குத் தொல்லை கொடுக்கும் தீவிரவாத இயக்கங்கள் காணாமல் போய்விடும்.''

''சரி.. பாகிஸ்தானிடம் உள்ள லைட்னிங் பாம்களை எப்படி அழிக்கப் போகிறோம்?''

வினோத் ஷர்மா புன்னகைத்தார்.

''பாகிஸ்தானிடம் அந்த லைட்னிங் பாம்கள் இருந்தால் தானே அதை நாம் அழிக்க வேண்டும்...?''

மகாவீர் அதிர்ந்தார்.

''அந்த பாம்கள் இருப்பதாக நீங்கள்தானே சொன்னீர்கள்?''

''சொன்னது உண்மைதான். ஆனால் நான் அப்படிச் சொன்னது பாகிஸ்தானைச் சோதித்துப் பார்ப்பதற்காக..''

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை ஷர்மா?''

''ஸார்..! பாகிஸ்தானிடம் லைட்னிங் பாம்கள் இருக்கக் கூடும் என்கிற சந்தேகம் எனக்கு இருந்தது. அந்த சந்தேகம் உண்மையா பொய்யா என்று தெரிந்து கொள்வதற்காக அதைப்பற்றி நம் அதிகாரிகளிடமும் இறந்து போன ஆறு பேர்களிடமும் சொன்னேன். பாகிஸ்தானிடம் லைட்னிங் பாம்கள் இருப்பதாக நான் சொன்னதுமே அந்தச் செய்தி அந்த ஆறு பேர்களின் மூலம் வயர்லெஸ் வழியாகக் கராச்சி போய் விட்டது. அந்த வயர்லெஸ் செய்தியை நம் உளவுத்துறை மூலம் வழிமறித்துக் கேட்டபோது கராச்சி தலைமையகத்துக்கும் இந்த ஆறு பேர்களுக்கும் இடையில் நடந்த கிண்டலான பேச்சு வார்த்தை இது.''

சொன்ன வினோத் ஷர்மா தன் கையோடு கொண்டு போயிருந்த ப்ரீப் கேஸைத் திறந்து அந்த சிறிய மைக்ரோ டேப் ரிக்கார்டரை எடுத்தார். ஒரு பட்டனைத் தட்டி ஆன் செய்தார்.

கரகரப்போடு கூடிய அந்த சம்பாஷணை கேட்டது.

''தலைமையகத்துக்கு ஒரு வேடிக்கையான செய்தி.''

''சொல்லுங்கள். சிரிப்போம்..''

''இந்தியா இப்போது கதி கலங்கிப் போயிருக்கிறது..''

'எதனால்?''

''நம்மிடம் லைட்னிங் பாம்கள் இருப்பதாக எந்த நாட்டு உளவுத் துறையோ சொல்லப் போக - இந்தியாவுக்கு இப்போது அஸ்தியில் ஜுரம். நம்மிடம் உள்ள லைட்னிங் பாம்களை அழிக்க ராத்திரியும், பகலுமாய் உட்கார்ந்து திட்டம் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்..''

''அடப்பாவமே! இந்திய ராணுவ அதிகாரிகளுக்குப் பைத்தியம் பிடித்து விடப் போகிறது. லைட்னிங் பாம்களை வாங்கும் அளவுக்குப் பாகிஸ்தானுக்குப் பண பலம் இருந் திருந்தால் அது என்றைக்கோ ஒரு வல்லரசு நாடாக மாறி இருக்குமே..! இந்த அடிப்படை அறிவுகூட இந்தியாவுக்கு இல்லை என்று நினைக்கும் போது சாவகாசமாய் உட்கார்ந்து சிரிக்க வேண்டும் போல் உள்ளது.''

''நம்மிடம் லைட்னிங் பாம் இருப்பதாக நினைத்துக் கொண்டு இந்தியா அதே பயத்தோடு இருக்கட்டும்.. அந்த பயம் நமக்கு நல்லது..''

சிரிப்போடு சம்பாஷணை முடிய - மைக்ரோ டேப் ரிக்கார்டரை அணைத்தார் வினோத் ஷர்மா. மகாவீர் புன்னகைத்தார்.



''பாகிஸ்தானிடம் லைட்னிங் பாம்கள் இல்லை என்பது ஊர்ஜிதமானதில் பெரிய நிம்மதி.''

''ஸார்.. நம் நாட்டுக்கு எதிராகக் கிளம்பிய ஒரு பெரிய சதிக் கூட்டம் இன்றைக்குக் காணாமல் போயிருக்கிறது என்றால் அதற்கு முழுக் காரணம் பரத நாட்டிய டான்ஸர் சமுத்ராதான். நாட்டைக் காப்பாற்றத் தன் காதலைப் பலி கொடுத்த அந்தப் பெண்ணை நாம் மறக்கக் கூடாது..''

''என்ன செய்யலாம்... சொல்லுங்கள்.''

''உயர்ந்த விருது ஒன்றைக் கொடுத்துக் கௌரவிக்க வேண்டும்.''

''கண்டிப்பாய்..''

''பிறகு.. இன்னொரு விஷயம் ஸார்..''

''சொல்லுங்கள்..''

''அடுத்த மாதம் கராச்சியில் நடக்கும் இன்டர்நேஷனல் கல்சுரல் ப்ரோக்ராமில் சமுத்ரா கலந்து கொண்டு பரத நாட்டியம் பண்ணுவதாக இருந்தது. கராச்சி புறப்பட்டுப் போவதற்காகச் சமுத்ரா இப்போது என்னுடைய வீட்டில்தான் தங்கியி ருக்கிறாள். இப்போது சமுத்ராவிடம் ஒரு மனமாற்றம் ஸார்..''

''என்ன..?''

''தீவிரவாதத்தைப் பல்வேறு வழிகளில் வளர்த்து வரும் பாகிஸ்தானின் ரத்தக் கறை படிந்த மண்ணில் நான் பரத நாட்டியம் ஆட விரும்பவில்லை!' என்று சமுத்ரா சொல்லி விட்டாள். அதே தேதியில் டெல்லியில் ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து வருகிறாள்..''

''வெல்டன்..'' என்று சொல்லிச் சத்தம் வராமல் மெதுவாய்க் கையைத் தட்டிய மகாவீர் எழுந்தார்.

''மிஸ்டர் வினோத் ஷர்மா..! போர்க் களத்தில் காணும் வெற்றியை விட, திரைமறைவு நாச காரியங்களை ஒழித்துப் பெறும் வெற்றிதான் உயர்வானது. அத்தகைய ஒரு வெற்றியைப் பெற்ற உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.''

மகாவீர், வினோத் ஷர்மாவின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, பலமாய்க் குலுக்கினார்.

## 13

சென்னை.

இரவு மணி பத்து.

வகுளாம்பரன் பைக்கை வீட்டுக்கு வெளியே நிறுத்தி விட்டு களைத்த உடம்போடு உள்ளே நுழைந்தார். யூனிஃபார்ம் வியர்த்திருந்தது.

அபிராமி எதிர்ப்பட்டாள்.

''என்னங்க இவ்வளவு லேட்டு.. ஒரு போன் பண்ணிச் சொல்லக் கூடாதா..?''

வகுளாம்பரன் யூனிஃபார்மைக் கழற்றக் கூடத் தோன்றாமல் டைனிங் டேபிளில் போய் உட்கார்ந்தார்.

''போன் பண்ண அவகாசம் இருந்திருந்தா போன் பண்ணியிருக்க மாட்டேனா?''

''ஆதம்பாக்கத்து வீட்டில் செத்துப் போன அந்த ரெண்டு தீவிரவாதிகள் கேஸ்தானே?''

''ஆமா..''

''செத்துப் போனவங்க யார்ன்னு தெரிஞ்சுதா?''



''கண்டு பிடிக்க முடியலை. பட் வீட்டுக்குள்ளே நிறைய தடயங்கள் இருந்தது. வயர்லஸ், மைக்ரோ ரிஸீவர்ஸ், வெடி மருந்துப் பொருட்கள், கையெறி குண்டுகள், பைப் பாம்கள், ஆசிட் பாட்டில்கள் இப்படி ஒரு பெரிய லிஸ்ட்டைச் சொல்லிக் கிட்டே போலாம்.''

''அக்கம் பக்கத்தில் இருக்கிறவங்களுக்குச் சந்தேகம் ஏதும் வரலையா?''

''அக்கம் பக்கத்துல வீடுகள் இருந்தால்தானே?''

''திட்டம் போட்டுத்தான் தங்கியிருக்காங்க..''

''சரி.. அபிரமி..! சாப்பிட என்ன இருக்கு? டிஃபனா... இல்லை சாப்பாடா..? நான் சாப்பிட்டு உடனே கமிஷனர் ஆபீஸுக்குப் போகணும்.''

''என்னங்க இது..! இப்பத்தான் வந்தீங்க. இன்னும் யூனிஃபார்ம் கூட கழட்டலை.. சாப்பிட்டுக் கிளம்பறேன்னு சொன்னா என்ன அர்த்தம்?''

''கமிஷனர் வரச் சொல்லி யிருக்கார். இன்னிக்கு சென்னையில் விடிய விடிய எல்லா லாட்ஜ்களையும் அதிரடி சோதனை பண்ணி தீவிரவாதிகள் யாராவது தங்கி இருக்காங்களான்னு செக் பண்ணப் போறோம். இதுக்காக பத்து ஸ்க்வாட்கள் போட்டிருக்கு..''

''அப்படீன்னா இன்னிக்கு ராத்திரி பூராவும் நீங்க வர மாட்டீங்களா?''

''காலையில் ஆறு மணிக்குத்தான் வீட்டுக்குத் திரும்புவேன்.''

''சரி.. பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க.. சப்பாத்தி போட்டுக் குடுத்துடறேன்..''

''லேட்டாகும்னா சொல்லிடு..நான் போற வழியில ஹோட்டல்ல சாப்பிட்டுக்கறேன்.''

''எதுக்கு ஹோட்டல்...? சப்பாத்தி மாவு ரெடியாயிருக்கு... நீங்க ஒரு பத்து நிமிஷம் டி.வி. பார்த்துட்டிருங்க... ரெடி பண்ணிடறேன்...'' சொன்ன அபிராமி சேலையைச் சற்றே தூக்கி இடுப்பில் செருகிக் கொண்டு சமையல் கட்டை நோக்கிப் போனாள். வகுளாம்பரன் களைப்போடு நாற்காலிக்குச் சாய்ந்தார். மனசுக்குள் ஒரு நிம்மதி பரவியிருந்தது.

'நல்ல வேளை! நிஷாரும் ரேஷ்மியும் கொலை செய்யப் பட்டு விட்டார்கள். அவர்கள் உயிரோடு கிடைத்து இருந்தால் போலீஸ் அடியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் என்னைக் காட்டிக் கொடுத்து இருப்பார்கள்..!

'இனி கொஞ்ச நாட்களுக்குப் பணத்துக்கு ஆசைப்பட்டு எந்த ஒரு தீவிரவாத இயக்கத்தோடும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. ஒழுங்காய் போலீஸ் வேலையைப் பார்த்து அடுத்த இரண்டு வருஷங்களுக்குள் கமிஷனராகிவிட வேண்டும்!'

செல்போன் கூப்பிட்டது.

எடுத்தார்.

''ஹலோ..''

மறுமுனையில் கமிஷனர் பாலசிங்கம் பேசினார்.

''வகுளாம்பரன்! இப்போ எங்கே இருக்கீங்க?''

''வீட்ல ஸார்..''

''அந்த ஆதம்பாக்கத்து வீட்ல கொலையுண்டு கிடந்த ஆணும் பெண்ணும் யார்ன்னு தெரிஞ்சுடுச்சு வகுளாம்பரன்..''

வகுளாம்பரனுக்கு வாய் உலர்ந்தது.



''யா.. யார்.. ஸார் அவங்க?''

''அந்தப் பொண்ணு பேரு ரேஷ்மி... அவன் பேர் நிஷார். 'லிட்டில் டெவில்ஸ்' தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவங்க..''

''எ.. எப்படி ஸார்... தெரிஞ்சுது..?''

''கோயம்பேடு பஸ் நிலையத்துக்குப் பக்கத்துல ஒரு மணி நேரத்துக்கு முந்தி ஒருத்தன் சூட்கேஸ் திருட்டுல மாட்டியிருக்கான். அவனோட பேண்ட் சட்டையைச் சோதனை போட்டபோது அவன் வெச்சிருந்த பர்ஸுக்குள்ளே ஒரு பெண்ணோட போட்டோ இருந்தது. அந்த போட்டோவில் இருந்த பெண்ணும் ஆதம்பாக்கத்து வீட்ல கொலை செய்யப்பட்ட பெண்ணும் பார்க்க ஒரே மாதிரி இருந்ததால பிடிபட்ட ஆசாமியிடம் விசாரணை நடத்தியபோது, அந்தப் பெண்ணோட பேர் ரேஷ்மின்னு தெரிஞ்சுது.. தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் கொலையுண்டவனின் பெயர் நிஷார் என்கிற உண்மையும், அவங்க ரெண்டு பேரும் 'லிட்டில் டெவில்ஸ்' இயக்கத்தைச் சேர்ந்தவங்க என்கிற உண்மையும் வெளியே வந்தது.''

''பிடிபட்ட ஆளோட பேர் என்ன ஸார்..?''

''அவன் நிமிஷத்துக்கு ஒரு பேர் சொல்றான். உமர், பாபு, அமீர், சங்கர், மோகன்தாஸ் இப்படி எத்தனையோ பேரைச் சொல்லிட்டான். ரேஷ்மியும், நிஷாரும் கொலை செய்யப் பட்டதுக்குக் காரணம் அந்த 'லிட்டில் டெவில்ஸ்' இயக்கத் துக்குள்ளே ரெண்டு பிரிவு இருக்கிறது. ஆப்போசிட் பிரிவு இந்தக் கொலைகளைச் செய்து இருக்கலாம்னு பிடிபட்ட ஆள் சொல்லியிருக்கான். மேற்கொண்டு அவன்கிட்டே விசாரணை நடத்தினா பல உண்மைகள் வெளியே வரலாம்னு நினைக்கிறேன். நீங்க இன்னும் ஒரு மணி நேரத்துல புறப்பட்டு எ..ப் 2 ஸ்டேஷனுக்கு வாங்க..''

''வ..வ.. வர்றேன்.. ஸார்.. '' வகுளாம்பரன் வியர்த்துக் கொண்டே செல்போனை அணைத்தார்.

'இது என்ன பூதம்..?'

சமையல்கட்டிலிருந்து அபிராமியின் குரல் கேட்டது.

''என்னங்க! ஒரு நிமிஷம் இங்கே வர்றீங்களா..?''

வகுளாம்பரன் எழுந்து போனார். சமையல் கட்டுக்குள் நுழையும் போதே கேஸ் ஸிலிண்டரிலிருந்து வெளிப்பட்ட எல்.பி.ஜி.யின் நெடி.

''அபிராமி என்ன இது..! கேஸ் வெளியே போயிட்டிருக்கு..!''

''அதுதாங்க எப்படின்னு புரியலை.. புது கேஸ் சிலிண்டர். கொஞ்சம் ஃபோர்ஸா ஓப்பன் பண்ணிட்டேன் போலிருக்கு.''

வகுளாம்பரன் தன்னுடைய கர்ச்சீப்பை எடுத்து மூக்கையும் வாயையும் பொத்திக் கொண்டு கேஸ் சிலிண்டரை நெருங்கி அதன் வால்வை அடைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

''ப்ளக்'' என்ற சத்தம்.

வகுளாம்பரன் திரும்பிப் பார்த்தார். அபிராமி சமையலறைக் கதவைச் சாத்தித் தாழ் போட்டுக் கொண்டிருந்தாள்.

''ஏ.. ஏய்.. அபிராமி! என்ன பண்றே.. கேஸ் லீக்காகிக் கிட்டு இருக்கும்போது கதவை எதுக்காக லாக் பண்றே?''

கதவைத் தாழ் போட்டு விட்டுத் திரும்பிய அபிராமியின் கையில் இப்போது தீப்பெட்டி. உதட்டில் ஒரு அலட்சியப் புன்னகை.

''என்ன அசிஸ்டண்ட் கமிஷனர் ஸார்! உங்க மனைவி அபிராமியை இப்படி ஒரு கோலத்தில் பார்க்க ஆச்சர்யமா



யிருக்கா? கொலையும் செய்வாள் பத்தினின்னு கேள்விப் பட்டிருக்கீங்களா? அந்தப் பத்தினிதான் நான்..!''

''அ.. அ.. அபிராமி..! எதுக்காக.. இப்படி..?''

''வீட்டுக்குத் துரோகம் பண்றவங்களை மன்னிக்கலாம். நாட்டுக்குத் துரோகம் பண்றவங்களை மன்னிக்கலாமா..? உங்களுக்கும் அந்த தீவிரவாதக் கும்பலுக்கும் இருந்த உறவைப் போன வாரமே ஸ்மெல் பண்ணிட்டேன். நீங்க காதும் காதும் வெச்ச மாதிரி காரியங்களைப் பண்ணிட்டிருக்கிற மாதிரி நானும் இன்னிக்குக் காலையில் ஒரு அதிரடிக் காரியத்தில் இறங்கினேன். அது என்னான்னு கேக்கறீங்களா... வீட்ல பாதுகாப்புக்காக வெச்சிருந்த துப்பாக்கியை எடுத்துக்கிட்டு ஆதம்பாக்கம் போனேன். அந்த ரேஷ்மியையும், நிஷாரையும் சுட்டுத் தள்ளினேன். நிஷாரோட செல்போனை எடுத்து அங்கிருந்த உங்களுக்கு போன் பண்ணி என்னோட ஆத்திரத்தையெல்லாம் கொட்ட நினைத்தேன். உங்களுக்கு டயல் பண்ணிட்டு இருந்தபோது யாரோ வர்ற சத்தம் கேட்டதால செல்போனைத் தூக்கிக் கிணத்துல வீசிட்டு வந்துட்டேன்... காலையிலிருந்து உங்களுக்காகத்தான் காத்திட்டிருக்கேன். இந்த நாட்டுக்குத் துரோகம் பண்ணின நீங்க உயிரோடு இருக்கக் கூடாது. ஒரு மகாபாவியின் கையால் தாலி கட்டிக்கிட்ட நானும் உயிரோடு இருக்க விரும்பலை.''

வகுளாம்பரன் வீறிட்டார்.

''வே.. வேண்டாம் அபிராமி.. நான் பண்ணினது தப்புதான்! இப்போ திருந்திட்டேன்... அந்த தீப்பெட்டியைக் கீழேபோடு..''

அபிராமி சிரித்தாள்.

''என்னது...? திருந்திட்டீங்களா..? நீங்க திருந்தறதுக்கு இது ஒண்ணும் பிக்பாக்கெட் அடிச்ச குற்றம் கிடையாதுங்க.. தேசத்

துரோகக் குற்றம். இந்தக் குற்றம் இப்போதைக்கு வெளியே வராம இருக்கலாம்.. ஆனால் என்னிக்காவது ஒருநாள் வெளி வரும். அப்போ உங்க கைகளுக்கு விலங்கு ஏறும். அந்த அவமானம் தேவையா..? அப்படியொரு அவமானத்தைச் சுமக்கிறதுக்குப் பதிலாக கேஸ் ஸிலிண்டர் வெடிச்சு விபத்து என்கிற போர்வையில் மரியாதையாய்ச் செத்துப் போய் விடலாமே!''

கேஸ் நெடி இப்போது அதிகமாயிற்று. வகுளாம்பரன் மூச்சுத் திணறி இருமிக் கொண்டே கத்தினார். ''வே.. வேண்டாம் அபிராமி... நான் சொல்றதைக் கேள்.. தீப்பெட்டியைக் கீழே போடு.''

அபிராமி அவருடைய கத்தலைக் காதில் போட்டுக் கொள்ளாமல் தீப்பெட்டியின் வாயைத் திறந்தாள்.

ஒரு குச்சியை உருவினாள்.

''அ.. அபிராமி... வேண்.. டாம்..'' என்று சொல்வதற்குள் தீக்குச்சி உரசியது. ஒரு தீ ஜுவாலையைப் பெற்று எடுத்தது.

''டொம்ம்ம்..''

அந்தப் பத்தடி அறை கிச்சனுக்குள் ஒரு பிரளயம் நடந்தது.